




## உள்ளே...

| | | |
|---|---|---|
| 1. | மார்கழிப் பூவே | 5 |
| 2. | என் உயிர் பிரபா | 127 |
| 3. | மறக்கத்தான் நினைக்கிறேன் | 195 |

# மார்கழிப் பூவே

## 1

'ரவிக்குமார் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்' என்ற ஆங்கில எழுத்துக்கள், கருப்பு கிரானைட் கட்டிடத்தின் மேல் தங்கப் பூச்சகளோடு மூன்று மணி சூரியக் கதிர்களோடு போராடிக் கொண்டு, பார்ப்பவர் கண்களைக் கூசவைத்து சுருக்கியது.

ரிசப்ஷனிஸ்ட் வித்யா முன்பு, கலர்கலரான - வகை வகையான டெலிபோன்கள்.. அவற்றில் எது சிணுங்கினாலும், மென்மையாய் காதுகளை வருடின. சந்தன கலரில் இருந்த அந்த போன் தன்னை எடுக்கச் சொல்லி வித்யாவிடம்

கெஞ்சியது. அலட்சியமாக இடது கையால் ரிஸீவரைத் தூக்கி காதில் பொருத்தினாள்.

"குட் ஆஃப்டர் நூன்... ரவிக்குமார் லிமிடெட்" என்றாள்.

"........."

"எஸ்.. சொல்லுங்க..."

"........."

"ப்ளீஸ் ஜஸ்ட் எ மினிட்" என்றவள் ரிசீவரை சாய்வாக வைத்து விட்டு... கம்ப்யூட்டர் அறை நோக்கி ஓடினாள். கதவைத் திறக்கும்போது ஏ.ஸி. முகத்தில் மோதியது. அதை கம்ப்யூட்டர் ஹால் என்றுதான் கூறவேண்டும். 25 கம்ப்யூட்டர்கள் நீலமாகவும், பச்சையாகவும், ஆரஞ்சாகவும் ஒளிர்ந்து கொண்டு இருந்தது. ஒவ்வொரு கம்ப்யூட்டருக்கு முன்பும் அமர்ந்து இருந்தவர்கள் கீ போர்ட் மேல் தங்கள் விரல் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் தனித்தனி கேபின் வசதி செய்யப்பட்டு இருந்தது. உள்ளே நுழைந்த வித்யா.. துர்காவின் கேபினுக்குள் நுழைந்து... அவளின் தோளைத் தொட்டு.....

"கால் பார் யூ" என்றாள்.

கீ போர்ட் மேல் இருந்த தன் விரல்களை எடுத்துவிட்டு, சாய்ந்து உட்கார்ந்து வித்யாவைப் பார்த்து சிரித்தாள் துர்கா. அமர்ந்து இருப்பவளுக்கு சரியாக குனிந்த வித்யா...

"அடிக்கடி இப்படிச் சிரிக்காதே... நைட்ல தூங்கவே முடியல தெரியுமா?"

மறுபடியும் சிரித்தாள் துர்கா.

"ஆனாலும் நீ ரொம்ப மோசம். ஒரே ஒரு சிரிப்பிலேயே ஆளை அசத்துற. நான் மட்டும் ஆம்பளையாக இருந்தால்,



இதுக்காகவே உன் பின்னால சுத்துவேன். யார்க்காவது போன் வந்தா நான் எழுந்து வருவேனா..? ம்கூம்... எம்.டி.யாக இருந்தாலும் மாட்டேன். இண்டர்காம் பட்டனைத் தட்டிடுவேன். ஆனா, நீ மட்டும் எக்ஸெப்ஷன்... ஏன்னு தெரியுமா? தெரியலை.. தேங்க்ஸ்னு சிரிப்பியே அதுக்காக..."

"ஓ.கே.. யார் போன்லன்னு தெரியுமா?"

"கேக்கலை.. இம்.. ஐ திங் உன்னோட சிஸ்டர்ன்னு நினைக்கிறேன்."

"அக்காவா?" மின்னல் வேகத்தில் ஒரு சுறுசுறுப்பு வந்து ஒட்டிக் கொண்டது. உடனே தன் இண்டர்காமை எடுக்க போனவளை வித்யா தடுத்தாள்.

"உங்ககிட்டே இருக்கிற போன்ல பேசமுடியாது. வேற லைன்ல வந்திருக்கு. சீக்கிரம் வா லைன் கட்டாயிடப் போவுது" துரிதப்படுத்தினாள்.

"எந்த போன்ல" அவசரமானாள்.

"சந்தன கலர் போன்.. ரிஸீவரை எடுத்து வச்சிருப்பேன். நீ போ கொஞ்ச நேரம் ஏஸியில் இருந்துட்டு வரேன்..." என்றபடி கழுத்தை சுற்றி இறுக்கி இருந்த துப்பட்டாவை தளர்த்தி விட்டாள்.

துர்கா போனை எடுத்தாள்.

"ஹலோ! துர்கா ஸ்பீக்கிங்."

"துர்கா! நான் அக்காடி" எதிர்முனையில் அக்கா மகாலஷ்மியின் குரல் கேட்டது.

"என்னக்கா! திடீர்னு போன்?"

"காரணம் சொல்லிகிட்டு இருக்க நேரம் இல்லை.. லீவ் போட்டுட்டு உடனே புறப்பட்டு வா" மகாலஷ்மியின் குரல் படபடத்தது.



"என்னக்கா! என்னாச்சு! ஏதாவது பிரச்சனையா? உடம்பேதாவது உனக்கு சரியில்லையா?" துர்கா பதறினாள்.

"தொணதொணன்னு பேசாதே! நான் கல்லுகுண்டு மாதிரி நல்லாதான் இருக்கேன்... நீ புறப்பட்டு வாடி..."

"உடனே வா.. இப்போ மணி 3.10... 5.00 மணிக்கெல்லாம் ஆபீஸ் முடிஞ்சிடும்."

"அது எனக்கும் தெரியும்."

"ஐயோ அக்கா! எனக்கும் நிறைய வேலை இருக்கு."

"நீ ரெண்டு மணி நேரம் பர்மிஷன் போட்றதுனால... உங்க கம்பெனியை இழுத்து மூடிட மாட்டாங்க... இன்னும் 10 நிமிஷத்துல கம்பெனியை விட்டு வெளியே வர.. உன் டூவீலரை எடுத்துகிட்டு.. அடுத்த 20-வது நிமிடம் நம்ம வீட்டுல இருக்க."

"அக்கா!"

"சொன்னதைச் செய்டி" எதிர்முனையில் போன் வைக்கப்படும் சத்தம் கேட்டது.

'என்னாச்சு இந்த அக்காவிற்கு... ஹூஸ் மாதிரிப் பேசுறா!' தனக்குத்தானே குழம்பியவள் உடனே பர்மிஷனையும் வாங்கிக் கொண்டு, என்ன விஷயம்? என்று கேட்டவர்களிடம் தெரியலை என்று பதிலளித்து வெளியே வந்து... தன் டூவீலரை வெளியே கொண்டு வருவதற்குள் 5 நிமிடங்களுக்கு மேலாயிற்று... கேட் அருகே தள்ளிக் கொண்டு வந்து கிளம்பினாள்.

வெறிச்சோடிப் போய் இருந்த சாலையில், அடிக்கடி நெற்றியைச் சுரண்டிக் கொண்டு.. பேலன்ஸ் தவறாமல் வந்து கொண்டு இருக்கும் துர்காவிற்கு யாரையும் உதாரணமாக



காட்ட முடியாது. ஒருவருக்கு கண்கள் அழகாக இருக்கும். மற்றொருவருக்கு இதழ்கள் அழகாக இருக்கும். இன்னொருவருக்கு நாசி அழகாக இருக்கும். இப்படி எல்லாம் துர்காவிடம் பிரித்துக் கூற முடியாது. இவளிடம் எல்லாமே அழகு.. அழகான முகம், அன்பான குணம், அளவான உயரம், அடர்ந்த கூந்தல், அசத்தும் அறிவு, அருமையான கலர், அதரங்களுக்கு கீழே ஒரு அமைப்பான மச்சம். மொத்தத்தில் சுடர்விடும் பொலிவு.

சிறிது வேகமாக வந்து கொண்டிருந்தவளை ரெட் சிக்னல் தடுத்து நிறுத்தியது. க்ரீன் சிக்னலுக்காக காத்திருந்தவள், குழம்பிப் போய் இருந்தாள் என்றுமே மகாலஷ்மி இப்படி பாதி வேலையில் அழைத்ததே இல்லை... அவளுக்கு உடல்நிலை சரியில்லாதபோதே.. காலையில் கம்பெனிக்கு போகும் போதே.. சீக்கிரம் வா என்று கூறுவாளே தவிர.. இன்றுபோல் போன் பண்ணி, அவசரமாக அழைத்தது இல்லை. பலவாறு குழம்பியபடி பொட்டு பொட்டாய் முகத்தில் ஊறிய வேர்வைத் துளிகளை கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்ட போது.. பச்சை விளக்கு மின்னியது.

தங்கள் தெருவில் நுழைந்ததுமே கவனித்தாள் வீட்டு வாசலில் கைகளைப் பிசைந்தபடி மகாலஷ்மி நின்று கொண்டிருப்பதை...

"என்னவாயிற்று?" சிறியதாக இருந்த வினா, பெரியதாக மாறி கொக்கி போட்டது. வண்டியை நிறுத்தி ஆஃப் செய்த உடனே துர்காவின் கைகளைப் பற்றிய மகாலஷ்மி,

"நான் உள்ளே கொண்டு போய் நிறுத்திக்கிறேன். நீ பின்கட்டு வழியா உள்ள போ" என்றாள்.

"என்னக்கா"

"அப்புறமா பேசிக்கலாம்... போ."

மண்டையை உடைத்துக் கொள்ளாத குறைதான் துர்காவிற்கு. பின்கட்டு வழியாக உள்ளே நுழையும்போதே.. அவள் செவிகளுக்கு கூடத்தில் யாரோ நாலைந்து நபர்கள் உட்கார்ந்து கொண்டு.. அவர்களுக்குள் பேசிக் கொண்டிருப்பது விழுந்தது. எட்டிப்பார்க்கலாம் என்று நினைத்து அவள் கூடத்துப் பக்கம் திரும்பும்போது, அவளை எட்டிப் பார்க்க விடாமல் உள்ளே இழுத்துக் கொண்டு வந்த மகாலஷ்மியின் கைகளில் மஞ்சள் கலரில் அரக்கு கலர் பார்டர் கொண்ட பட்டுப்புடவை ஒன்று இருந்தது.

"இந்தா, இதை முதல்ல கட்டிக்க" துர்காவின் கைகளில் திணித்தாள்.

"என்ன விளையாடுறியா? எதுக்கு இது?" காரணம் தெரியாத கோபம் வார்த்தையிலேயே வெடித்து சிதறியது.

"உன்னைப் பெண் பார்க்க வந்து இருக்காங்க."

அதைக் கேட்டதுமே வெகுண்டு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, எலிப்பொறியில் சிக்கிக் கொண்ட எலியின் தவிப்போடு, தன் அக்காவைப் பார்த்தாள்.

"யாரைக் கேட்டு வரச் சொன்ன?"

"உன்னை கேக்கணும்ங்கற அவசியம் இல்லடி."

"அக்கா நீ அதிகமாப் பேசற.. என்னை ஒரு வார்த்தை கேட்டு இருக்கணும்... உன் வார்த்தையை நான் தட்டமாட்டேங்கறதை நீ மிஸ்யூஸ் பண்ற" முகத்தை வேகமாக திருப்பிக் கொண்டாள்.

தங்கையின் முகத்தை வலுக்கட்டாயமாக தன்புறம் திருப்பிய மகாலஷ்மி "தப்பா பயன்படுத்துறேனா... ஆமாம்.. அப்படித்தான். இன்னைக்கு உன் வயசு என்னன்னு தெரியுமா? இருபத்தி எட்டு. என் வயசு என்ன தெரியுமா? முப்பத்தி



ஒன்பது. உனக்கு நான் அக்காவாக இருந்த நாட்களைவிட அம்மாவாக இருந்த வருஷங்கள் தான்டி அதிகம். 14 வருஷத்துக்கு முந்தி நீயும் நானும் யாரும் இல்லாத அனாதையா நடுத்தெருவில் நின்னோம். ஏதோ நான் படிச்ச படிப்பு, வயித்தை நிறைக்க உதவுச்சி.. மாத்திக் கட்டிக்க கூட சேலை இல்லாம நீ சாப்பிட்டா போதும்னு.. பசி தண்ணிய நான் குடிச்சபோது உன்னைக் கேக்கலை.. நீ படிக்க போதும்னு முடிவெடுத்தபோதும் உன்னைக் கேக்கலை நானாத் தான்டி முடிவெடுத்தேன். இன்னைக்கு இந்தப் பெரிய மனுஷியை கேக்கணுமோ?" என கோபமாக மகாலஷ்மி பேசினாலும், துர்காவின் கேள்வி அவள் இதயத்தைக் கீறிவிட்டது என்பதை காட்ட கண்களில் நீர் கொப்பளிக்கத் துவங்கியது.

மகாலஷ்மியின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் துர்கா.

"இப்படி எல்லாம் பேசாதக்கா. உன் கையாலே நீ விஷத்தைக் கொடுத்தாக்கூட கண்ணை மூடிக்கிட்டு குடிக்கத் தயாராக இருக்கேன். எனக்கு கல்யாணம் வேண்டாங்கா."

"............"

"என்னைப் பத்தி எல்லாம் தெரிந்த நீயே.. இந்த முடிவிற்கு வரலாமா? இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, எக்காரணம் கொண்டும் என்னை வற்புறுத்த மாட்டேன்னு சத்தியம் பண்ணி இருக்கியே மறந்துட்டியா?"

"மறக்கல துர்கா... நான் எதையுமே மறக்கல, உன் வாழ்க்கைக்கு நான் பண்ணிக் கொடுத்த சத்தியம் தொந்தரவாகத்தான் இருக்கும்."

"உன் சத்தியம் எனக்குத் தொந்தரவு இல்லை. உனக்குத்தான் தொந்தரவு. இருபத்தி எட்டு வயசாவுதே இன்னமும் இவ இங்கே இருக்கணுமான்னு நீதான் நினைக்க.. எங்கா



உனக்கும் மாமாவிற்கும் நான் இடைஞ்சலா இருக்கேனா?"

அதைக் கேட்டதுமே அறைய கை ஓங்கிய மகாலஷ்மி.. நிலைமையை அனுசரித்து நிதானித்து.. கைகளை இறுக்கிக் கொண்டாள்.

"வாய மூடடி - புடவையைக் கட்டிகிட்டு போயி நிப்பியா? நிக்கமாட்டியா?" பற்களைக் கடித்துக் கொண்டாள்.

"ஓ.. பேஷா போய் ஷோகேஷ் பொம்மை மாதிரி நிக்கிறேன். பட், என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது" என்று உறுதியாகக் கூறிய துர்காவை சலனம் இல்லாமல் பார்த்தாள் மகாலஷ்மி.

"என்னோட நெத்தியில் காசு வச்சி பார்க்கிற தைரியம் உனக்கிருந்தா.. உன்னோட இஷ்டப்படி நடந்துக்க."

"அக்கா!"

"இங்க பாருடி.. ரொம்ப நாளைக்கு உன்னோட என்னால இருக்க முடியாது. கொஞ்ச நாளாவே மனசுக்குள்ள ஒரு பயம். என் முடிவு நெருங்கிட்ட மாதிரி ஒரு உணர்வு. இந்த மோசமான உலகத்துல உன்னைத் தனியா விட்டுட்டுப் போக எனக்கு இஷ்டம் இல்லை..."

"அக்கா!"

"உனக்காக என்ன செய்யப் போறேனோன்னு, அடிக்கடி சொல்லுவியே.. எனக்காக கல்யாணம் பண்ணிக்கோ..."

"என்னக்கா இது. மாமாகூட வீட்ல இல்ல, இந்த நேரத்துல?" தட்டிக் கழிக்க ஏதாவது வாய்ப்பு கிடைக்காதா என்ற ரீதியில் பேசினாள்.



"இப்படி ஒரு நேரம் வராதான்னுதான் காத்திருந்தேன். உன் மாமாவோட ஒரு பக்கம்தான் உனக்குத் தெரியும். இன்னொரு பக்கம் விகாரமானது, அருவெறுப்பானது. அதை என் வாயால நானே சொல்லக் கூடாது."

துர்காவின் ஒவ்வொரு கேள்விக்கும், மகாலஷ்மியிடம் தயாராக பதில்கள் காத்துக் கிடந்தன.. வேறு வழி இல்லாமல், சமையல் அறைக்கு பக்கத்தில் இருந்த ஸ்டோர் ரூமிற்கு பட்டுப்புடவையோடு நுழைந்தாள் துர்கா. கதவைத் தாழிட்டு உள்ளே சென்றவளுக்கு வெளியே வர பத்து நிமிடங்கள் ஆயிற்று. அதற்குள் ஐந்து டம்ளர்களில் நுரைபொங்க காபி கலந்து வைத்து இருந்தாள் மகாலஷ்மி. அதற்குள் ஹாலில் இருந்த தரகரின் குரல் மகாலஷ்மியை அழைத்தது.

"கொஞ்சம் இரு வந்துடறேன்" என்றபடி முகத்தை துடைத்துக்கொண்டு ஹாலுக்கு ஓடினாள்.

"பொண்ணு வந்துடுச்சாம்மா?" மாப்பிள்ளையின் தாய் தான் கேட்டாள்.

"வந்துட்டா..சேலை மாத்திகிட்டு இருக்கா.. இப்போ வந்திடுவா" மகாலஷ்மி பதட்டத்தோடு கூறியதைப் பார்த்த மாப்பிள்ளையின் தாய்...

"திடீர்ன்னு லட்டர்கூட போடாம வந்தது எங்க தப்புதான். முன்னப்பின்ன நேரம் ஆனாலும் பரவாயில்லை" என்றாள்.

ஒரு அசட்டு சிரிப்பை சிந்தி வைத்தாள் மகாலஷ்மி.

"உங்க வீட்டுக்காரர் என்னைக்குமா வருவாரு?" மாப்பிள்ளையின் தகப்பனார் கேட்டார்.

"இன்னும் ரெண்டு நாள்ல வந்திடுவார்."

"அவரையும் கேட்டுகிட்டுதானே நீங்க முடிவு சொல்லணும்" அவர் மகாலஷ்மியை உள்ளே போக விடுவதாக இல்லை.

"ஆமாங்க.. ஆனாலும் துர்காவுக்கு சம்மதம்னா எங்களுக்கும் சம்மதம் தாங்க."

"இங்க பாருங்கம்மா.. எங்களுக்கு இந்த ஜாதி, ஜாதகம் இதிலெல்லாம் கொஞ்சம்கூட நம்பிக்கை கிடையாது... கண்ணுக்கு லட்சணமான பண்பான பொண்ணா இருந்தா போதும்.. வரதட்சணை அப்படின்னு ஒரு ரூபாய்கூட தேவையில்லை. நாங்க பணக்காரங்க கிடையாது.. அதேசமயம் ஏழையும் இல்லை.. கைநிறைய எம்பிள்ளை சம்பாரிக்கிறான்... எனக்கும் ரிட்டையர் ஆக இன்னும் மூன்று வருடம் இருக்கிறது. பெண்ணிற்கும் பையனுக்கும் பிடித்து விட்டால், எளிமையாக ஒரு கோயில்ல, முக்கியமான சொந்தக்காரங்களை மட்டும் அழைத்து கல்யாணத்தை முடிச்சிடலாம்" என்று கூறியவரை, பெருமையோடு, ஆச்சர்யத்தோடு மிகுந்த சந்தோஷத்தோடு பார்த்தாள் மகாலஷ்மி. சந்தோஷத்தில் 'கடக்' என முத்தாய் விழுந்த நீர் துளிகளை தன் முந்தானையில் துடைத்துக் கொண்டு, துர்காவை அழைத்துவர உள்ளே வந்தாள். ஐந்து டம்ளர் காபியையும் ஏந்திக் கொண்டு தயாராக நின்றாள் துர்கா.

தங்கையின் முகத்தை தடவிக் கொடுத்தவள்.

"அவர் பேசினதை எல்லாம் கேட்டுகிட்டுதானே இருந்த... இப்படி ஒரு குடும்பம் கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும். மாப்பிள்ளைப் பையனும் லட்சணமாக இருக்கான். எல்லா விதத்திலேயும் உனக்குப் பொருத்தமானவனாக இருப்பான். அந்த அம்மாவைப் பார்த்தால் கை எடுத்து கும்பிடணும் போல் இருக்கு... சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன்"



என்றவளை சிரித்தபடி ஒதுக்கி விட்டு ஹாலுக்கு வந்தாள் துர்கா.

தரகர், மாப்பிள்ளையின் தாய், தந்தை, தாய்மாமன், மாப்பிள்ளை என்று ஐந்து பேரும் அமர்ந்து இருந்தார்கள். மாப்பிள்ளை தனியாக ஒரு சேரில் அமர்ந்து இருந்தான்.

அங்கிருந்த அத்தனை பேர் கண்களுக்கும் துர்கா தேவதையாகத் தெரிந்தாள். வந்திருந்த பெண்மணி முகத்தில் பரம திருப்தி.. எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்க சந்தோஷமாக எல்லோர் முகத்திலும் திருப்தி.

எல்லோரிடமும் ட்ரேயை நீட்டிக் கொண்டே வந்தாள். அவர் அவராகவே எடுத்துக் கொண்டார்கள். மாப்பிள்ளையின் தாயிடம் கொடுப்பதற்காக கடைசியாய் அதிகமாய் குனிந்தபோது...

அவள் மார்பில் ஒளிந்து இருந்த திருமாங்கல்யம் நழுவி வெளியே வந்து விழுந்தது.

## 2

வீடு வெறிச்சோடி இருந்தது. வந்திருந்த அத்தனை பேரும் போய் விட்டிருந்தார்கள். மெல்ல தன் அக்காவின் அருகில் அமர்ந்து, சில நிமிடங்கள் யோசித்து, தன் கைகளைப் பிசைந்து கொண்டு, நெற்றியைத் தேய்த்துக் கொண்டு, சுரக்காத உமிழ் நீரை காற்றோடு விழுங்கிக் கொண்டு, தயக்கமாக தோளைத் தொட்டாள் துர்கா.

மகாலஷ்மியிடம் எந்த மாற்றமும் இல்லை.



"அக்கா" அழுத்தமாகத் தொட்டாள்.

அப்போதும் மகாலஷ்மியிடம் எந்தவித சலனமும் இல்லை.

"அக்கா... ஆ..." பிடித்து உலுக்கினாள்.

தன் உடல் குலுங்கி அதிர்ந்ததும்... வடிந்து போன குளம் போல்... வற்றிப்போய் இருந்த கண்களில் ஜீவன் இல்லாத ஒரு பார்வையைத் துர்கா மேல் படரவிட்டு.. தோள் மேல் கிடந்த தங்கையின் கைகளை மெதுவாக எடுத்துக் கீழேவிட்டு.. எழ முயன்றாள்.

"இப்போ எதுக்கு எந்திரிக்கிற..." என்றபடி இழுத்துப் பிடித்து உட்கார வைத்தாள்.

துர்காவின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்து தோற்றுப் போனாள் மகாலஷ்மி.

"என்னை ஏன் பார்க்கமாட்டேங்கிற?" கண்களை நேருக்கு நேர் சந்தித்தாள்.

"........"

"ஓங்கி அறையணும்னு தோணுதா?"

"........"

"முகத்தப் பாத்து காறி துப்பணும்னு தோணுதா?"

"........"

"ஓ.கே. எங்கிட்டே பேசமாட்ட.. சரி. ஆனா, நான் பேசறதை நீ கேக்கலாமில்ல?"

"........"

"நீ கூடவா இந்தத் தாலியைப் பார்த்து நம்பிட்ட... நான் கல்யாணம் பண்ணிகிட்டா சந்தோஷப்படற 'முதல் ஆள்



நீதான். அப்படிப்பட்ட உன்கிட்டே சொல்லாமலா நான் கல்யாணம் பண்ணிக்குவேன்?"

கேள்வி கேட்டவளை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் இந்தத் தாலி எப்படி வந்தது? என்ற கேள்வியும் எழுதி ஒட்டப்பட்டு இருந்தது. உள்ளே கிடந்த தாலியை வெளியே இழுத்துக் காட்டினாள் துர்கா.

"நல்லா பார்... இது உன் தாலி. சீட்டு கட்டின பணத்தை வைத்து எனக்கு ஏதாவது செய்யணும்னு பேசினபோது.. மாமா விருப்பப்படி அது உனக்கு தாலிகொடியாக மாறுச்சே நினைவு இருக்கா? தங்கத் தாலியைக் கழுத்துல போட்டுகிட்டு.. மஞ்சள் தாலியை கழற்றி நீ சாமி ரூம்ல வச்சிருக்கணும்.. ஸ்டோர் ரூம்லயா வப்ப.. ஊக்கு தேடப்போய்.. இது கைல மாட்டுச்சி.. யோசிச்சி பார்த்தேன். உன்கிட்டே வேண்டான்னு சொல்றதைவிட.. வந்தவங்ககிட்டே தாலியைக் காட்டினால் போதும்னு தோணிச்சி.. அதான் எனக்கு கல்யாணம் ஆயிடுச்சின்னு ஒரு பொய். இனிமேல் அந்தத் தரகர் நம் வீட்டு பக்கம் தலைவச்சி கூடப் படுக்க மாட்டார்" என்றபடி மிக அநாயசமாக தன் கழுத்தில் கிடந்த கயிற்றை கழற்றி.. அக்காவின் கைகளில் திணித்து..

"பத்திரமா வச்சிக்கோ" என்றாள்.

மகாலஷ்மியின் கண்களில் தீ ஜுவாலை கொழுந்துவிட்டு எரிந்தது. தங்கையின் கூந்தலைப் பிடித்து இறுக்கினாள். அவள் இறுக்கிய இறுக்கத்தில் துர்காவின் தலையில் 'சுரீர்' என்று தெறித்து ஓடிய வலி.. உள்ளங்கால் வரை பரவி நின்றது.

"இஷ்டமில்லைன்னா... எனக்கு இந்தக் கல்யாணத்துல விருப்பம் இல்லை. நான் ஒருத்தனை லவ் பண்றேன்னு சொல்லி நிறுத்தி இருக்க வேண்டியது தானேடி..."

வலி அதிகமானதும்.. வெடுக்கென மகாலஷ்மியின் கைகளை எடுத்து விட்டாள்.

"இப்போ எதுக்கு அலர்ற?" கோபமாகக் கத்தினாள்.

"தாலியை எடுத்து எதுக்குடி கட்டிகிட்ட? தாலின்னா உனக்கு அவ்வளவு இளக்காரமாப் போச்சா?" என்றபடி மீண்டும் கோபத்தோடு நெருங்கியவளை விலக்கிக் கொண்டு.. கலைந்து போன முடியை இழுத்துக் கொண்டையாகப் போட்டுக் கொண்டு.... சோபாவில் போய் அமர்ந்து...

"உன் செண்டிமெண்டல் பேச்செல்லாம் எங்கிட்டே வேண்டாம். தாலியோட மதிப்பே அதைக் கட்ற கையையும்.. வாங்கிக்கற கழுத்தையும் பொறுத்த விஷயம். சாகணும்னு முடிவு பண்ணினவளுக்கு சயனைய்டும் ஒண்ணுதான் வைரமும் ஒண்ணுதான். எனக்கு என் கல்யாணப் பேச்சை நிறுத்த காரணம் வேண்டும்.. அவ்வளவுதான். காரணம் எதுவா இருந்தா என்ன?" என்றபடி டீபாய் மேல் கற்புகெடாமல் இருந்த காபி டம்ளர் ஒன்றை எடுத்து.. சூடு இருக்கிறதா? என தொட்டுப் பார்த்து... வாய் அருகே கொண்டு சென்றவள்...

"கொஞ்சம் இந்த காபி டம்ளரைத் தொட்டு பார்த்து தறியா?"

ஏன் என்று கேட்காமலேயே முறைத்தாள் மகாலஷ்மி...

"போதும்.. போதும்.. காபி சூடு கம்மியா இருந்தது.. நீதான் வோல்டேஜ் கணக்காக எகிறிகிட்டு இருக்கியே.. காபி டம்ளரைத் தொட்டால் போதும்னு கேட்டேன். ஆனா, இப்ப பார்த்த பார்வையிலேயே காபி கொதிக்க ஆரம்பிச்சுடுச்சி.. தேங்க்ஸ்" என்றபடி காபியை உறியத் துவங்கினாள்.

வேகமாக துர்காவிடம் நெருங்கி வந்த மகாலஷ்மி.

"புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பா?" என வெடித்தாள்.



"அப்படித் தோணுதா?" உள்ளுக்குள் துர்கா சிரிப்பதை முகம் வெளிக்காட்டியது.

"பேச்சை மாத்தாதடி.. வைரம், சயனைய்ட்டுன்னு எங்கிட்டேயே டயலாக் பேசறியா.. சயனைட் சாப்டா டேஸ்டே என்னன்னு தெரியங்காட்டியும் பொட்டுன்னு போயிடுவ.. வைரத்தை தின்னா.. வகை வகையா உன் வயித்துக்குள்ளே இருக்கிற குடலெல்லாம் அறுந்து கிழிபட்டு, துடிதுடிச்சி மூக்கிலும் வாயிலும் ரத்தம் கக்கி, நரகம்னா என்னன்னு பூலோகத்திலேயே பாத்துட்டு தான் போவ, நீ பண்ணின காரியம், வைரத்தை முழுங்கின காரியம்... முட்டாள் தனமாக உன் தலையிலேயே மண் அள்ளிப் போட்டுட்டு, சப்பக்கட்டா கட்டுற... இது சாதாரணமாக எனக்கு படலடி... இது எந்த ரூபத்துல எப்படி உனக்கு அவஸ்தை கொடுக்கப் போவுதோ.. கடவுளே!" என்று கத்திவிட்டு, தன் கையில் இருந்த தாலி கயிறை கண்களில் ஒற்றியபடி மண்டியிட்டு உட்கார்ந்து உதடு துடிக்க மனமார உருகத் துவங்கினாள்.

மகாலஷ்மி பூஜை ரூமில் தன்னை அடைத்துக் கொண்டதுமே, அமைதியாக எழுந்த துர்கா, பட்டுப்புடவையில் இருந்து, நைட்டிக்குள் தன்னை நுழைத்துக் கொண்டு, வெளி வாசலின் முதல்படியில் உட்கார்ந்து துளிர்விடாத நகங்களை கடித்துத் துப்பத் துவங்கினாள்

'அவசரப்பட்டு விட்டேனோ, தாலியை எடுத்து மாட்டி இருக்கக் கூடாதோ...? வேறு வழியில் இந்தப் பெண்பார்க்கும் படலத்தை நிறுத்தி இருக்கலாமோ? இல்லை நல்லபடியாக அவர்கள் பார்த்துவிட்டுச் சென்ற பின்னால் ஒரு கடிதம் எழுதி போட்டு நிறுத்தியிருக்கலாமோ, இன்னும் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினால் என் கண்ணீரைக் கண்டு அக்காவே நிறுத்தியிருப்பாளோ, இதனால் பின்னால் பிரச்சனை ஏற்படுமோ... என்ன பிரச்சனை வரும்? கம்பெனியில் இருப்பவர்களுக்கு



விஷயம் தெரிந்தால் என் கௌரவம் பாதிக்கப்படுமோ?' யோசிக்க யோசிக்க மண்டைக்குள் ஒரு பிரளயமே நடந்தது. பத்து நிமிடத்திற்கு முன்பு தைரியமாக சண்டையிட்டாள். யோசிக்க ஆரம்பித்ததுமே தடுமாறத் துவங்கினாள்.

ஒவ்வொரு நிமிடமாக கரையக் கரைய மண்டைக்குள் இடி இடித்தது.. மின்னல் போல் கண்ணுக்குள்ளும், நெற்றியிலும் வலி மின்னி மின்னி மறைந்தன. சுத்தியல் எடுத்து தட்டி கபாலத்தை தனியே எடுத்து, தூக்கி எறிந்து விடலாம் என்னுமளவு கொடுமையாக வலியின் வீரியம் இருந்தது. இரு கைகளாலும் நெற்றியின் இருபக்கமும் அழுத்தி இறுக்கிக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை. சமையல் அறையில் இருந்து வேகமாய் வெளிவந்து நாசியைத் தாக்கிய தாளிப்பு மணத்தினால், குழப்பம் கலைந்து எட்டி உள்ளே பார்த்தாள். ஹாலில் விளக்கு பளிச்சென எரிந்து கொண்டு இருந்து... சமையல் அறையில் இருந்து பாத்திரங்கள் நகரும் சப்தமும் கேட்டது. பூஜை ரூமில் புலம்பலை முடித்து விட்டு, சமையலில் இறங்கி விட்டாளா? இவ்வளவு நேரமாகவும் இப்படியேவா உட்கார்ந்து இருக்கின்றேன்... என்று நினைத்தபடி கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு, ஆகாயத்தைப் பார்த்தாள்...

மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்கள் கண் சிமிட்டின. வழக்கம் போல் நட்சத்திரத்தை உள்ளத்தில் எண்ணத் துவங்கினாள்...

அப்போதே மனம் வேறு கணக்குப் போடத் துவங்கியது.

'நட்சத்திரத்தை எண்ணினால் மறதி அதிகமாகும்னு சொல்வாங்களே... நானும் தினமுந்தான் எண்ணிப் பார்க்கிறேன்...' நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் பசுமையா நெஞ்சில் டென்ட்



கட்டி உட்கார்ந்து இருக்கே ஒழிய, சின்ன சம்பவத்தைக் கூட மறக்க முடியலையே.. ஏன்.. நான் செஞ்ச பாவமா?'

அவள் மனவோட்டம் சட்டென எதிரே வந்து நிற்கின்ற மகாலஷ்மியைப் பார்த்து ப்ரேக் போட்டு நின்றது. பார்வையை உயர்த்தினாள்.

"இந்தா!" சூடான காபி டம்ளரை நீட்டினாள் மகாலஷ்மி.

ஒன்றும் பேசாமல் பார்த்தபடியே இருந்தாள் துர்கா.

தங்கையின் நெற்றியையும், கழுத்தையும் தொட்டுப் பார்த்தவள்.

"நினைச்சேன்... அரைமணி நேரம், ஒரே இடத்துல உட்கார்ந்து நீ மோட்டு வளையை வெறிச்சிப் பார்த்தாலே தலை வலி வந்திடும். மணிக்கணக்காக இப்படி உட்கார்ந்து இருக்காளே.. உடம்பு எப்படி இருக்கோன்னு... காபியோடையும் மாத்திரையோடையும் வந்ததும் சரியா இருக்கு.. இம் பிடி" என்றபடி காபி டம்ளரை துர்காவின் கைகளில் கொடுத்துவிட்டு... உடன் கொண்டு வந்திருந்த மாத்திரையையும் பிரித்து, ஒன்றாக நீட்டினாள்.

வாங்கிப் போட்டுக் கொண்டு.. காபியை குடிக்கத் தொடங்கியவளின் அருகில் உட்கார்ந்து, ஆதுரமாக பார்த்தாள் மகாலஷ்மி. காலி டம்ளரைத் தானே வலிய வாங்கி நிலைப்படியின் மேல் வைத்துவிட்டு.. தன் முந்தானையை இரண்டு முறை உதறிவிட்டு.. அந்த சேலைத் தலைப்பால் துர்காவின் முகத்தை துடைத்துவிட்டு.. நீர் தளும்பும் விழிகளோடு...

"வலிக்குதா?"

"எதுக்கா?" தெரியாததுபோல் குழந்தைத்தனமாகக் கேட்டாள்.

''முடியை இறுக்கி பிடிச்சேனே... ரொம்ப வலிச்சிருக்குமே...''

''இல்லக்கா, நீ அடிச்ச பூமாலை எம்மேல மோதுற மாதிரி... வலிக்காதுக்கா.''

''இல்லடா... நீ பொய் சொல்ற, எனக்காகப் பொய் பேசுற... நீ துடிச்சிப் போனதை நான்தான் பார்த்தேனே...என்னை மன்னிச்சிடுடா. இப்போல்லாம் அடிக்கடி எனக்கு கோவம் வருது...''

''உன்னோட கோபம் நியாயமானதுக்கா.. என் உடம்பு வலிக்குதோன்னு நீ பதற... ஆனா, உன் மனசு ரணமா துடிச்சிட்டு இருக்கிறதை நான்தான் புரிஞ்சிக்காம போய்ட்டேன்...''

''இல்லடா.. இல்லடா.. உன் நிலைமை அப்படி'' என்றபடி தங்கையை மார்போடு இறுக்கிக் கொண்டாள்.

''சரி வா.. மாத்திரை போட்டு இருக்க... வயிற்றை புரட்டும்... ஒரு வாய் சாப்பிட்டுப் படுத்துக்க'' சொல்லி முடிக்கும் முன்பே...

'க்ரீச்.. ச்.. ச்...' என காம்பவுண்ட் கேட் திறக்கும் சத்தம் கேட்டது. வெளியே லைட் போடாமல் இருவரும் உட்கார்ந்து இருந்ததால்... நெடிய உருவம் ஒன்று உள்ளே வருவது தெரிந்தது. மகாலஷ்மியின் மடியில் இருந்து தலையைத் தூக்கிய துர்கா...

''மாமா மாதிரி தெரியுது.''

''மாமாவா இருக்காது.. அவர் திங்கட்கிழமைதானே வருவேன்னு சொன்னார்.''

''லைட் கூட போடாம.. அக்காவுக்கும் தங்கைக்கும் என்ன டிஸ்கஷன்...? அடுத்த பிரைம் மினிஸ்டர் யாருன்னா?''



கேட்டபடி பேனாக் கவர் அரிஸ்டோகிராட் சூட்கேஸை மகாலஷ்மியிடம் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தான் பத்மநாபன். பின்னாலேயே இருவரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள். துர்கா கதவை சாத்தி தாளிட்டாள். சோபாவில் போய் தளர்ந்து உட்கார்ந்து சட்டை பட்டன்களை கழற்றிக் கொண்டிருக்கும் பத்மநாபனுக்கு 41 வயது ஆகிறது... ஆனால் ஐந்தாறு வயதுகள் குறைத்துக் காட்டும் உருவம்.. ஆறடிக்கு கொஞ்சமும் குறையாத உயரம்... சிவந்த நிறம்... அழகான முகம். ஒரு பிரபலமான கம்பெனியில் சேல்ஸ் ரெப்ரசென்டேட்டிவாக இருக்கின்றான்.

பத்மநாபன் கொடுத்த சட்டையையும் வாங்கிக் கொண்ட மகாலஷ்மி...

''என்னங்க! திங்கட்கிழமைதான் வருவேன்னீங்க?''

''போன வேலை சீக்கிரம் முடிஞ்சிடுச்சிம்மா...''

''சாப்பாடு எடுத்து வைக்கட்டா.''

''சீக்கிரம் வை.. செம பசி'' என்றவன் எழுந்து இடுப்பில் இருந்த பேண்டை உருவிக்கொண்டே பெட்ரூமில் நுழைந்தவன். படுக்கை மேல் போடப்பட்டு இருந்த பட்டுப்புடவையைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

''மகாலஷ்மி!'' சத்தமாகவே அழைத்தான்.

''என்னங்க'' சாப்பாட்டுத் தட்டுக்களை எடுத்து வைத்துக் கொண்டே... சமையல் அறையில் இருந்தே பதிலுக்கு குரல் கொடுத்தாள்.

''பட்டுப்புடவை பிரிச்சி கிடக்கு.. ஏதாவது விசேஷமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல... இன்னைக்கு வெள்ளிக் கிழமையில்லையா... துர்காவை பட்டுப் புடவை கட்டிகிட்டு கோவிலுக்கு போய்ட்டு வரச் சொன்னேன்.''



அதைக்கேட்டு அதிர்ச்சியாக திரும்பிப் பார்த்த துர்காவை... தன் உதட்டில் ஆள்காட்டி விரலை வைத்து, தலையாட்டி.. மூச்சுவிடாதே என்று சைகையால் எச்சரித்தாள்.

சாப்பிட்டு முடித்து.. தன் அறைக்குள் சென்று... தொப்பென படுக்கையில் போய் விழுந்தாள். ∴பேன் மெதுவாக சுழன்று கொண்டு இருந்தது. அதையே படுத்தபடி வெறித்துப் பார்த்தாள். இந்த வீட்டிற்குள் என்னவோ நடக்கிறது.. அக்கா எதுக்காக எல்லாத்தையும் மாமாகிட்டே மறைக்கிறா? என்னாலதான் அவளுக்கு என்ன கஷ்டம்? ஒரு வினாடிகூட மனமார சிரிக்க முடியாமல் என்னால்தான் அவளுக்கு எவ்வளவு பிரச்சனை? நான் உயிரோட இருக்கிறவரை பிரச்சனை ஓயப் போவது இல்லை... யாருக்காக... எதுக்காக நான் வாழணும்? திரும்பத் திரும்ப மனசாட்சி அதே கேள்வியைக் கேட்டதால், விருட்டென எழுந்து.. பீரோவைத் திறந்து.. எல்லாவற்றையும் களைந்து போட்டு.. மகாலஷ்மியின் கண்களில் படாமல் கிட்டத்தட்ட ஒன்னரை வருடமாக மறைத்து வைத்திருந்த தூக்க மாத்திரைப்பாட்டிலைக் கையில் எடுத்தாள்.

## 3

கைகளில் எடுத்த பாட்டிலை இரண்டு நிமிடங்கள் அமைதியாய், விழிகளை உருட்டாமல் பார்த்தாள் துர்கா. பின் தன் அறைக்கதவை தாழிட்டு விட்டு, படுக்கையில் வந்து சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டாள். வாய் நிறைய தண்ணீர் ஊற்றிக் கொண்டு ஒரு மாத்திரையைக் கையில் எடுத்து கொண்டு வாயைத் திறந்து, இரண்டு இதழ்களுக்கு நடுவில்



கம்பீரமாய் நுழைய விரல்களின் உதவியோடு மாத்திரையைப் போட எத்தனித்தபோதுதான்...

'நீயா துர்கா இந்த முடிவிற்கு வந்துட்ட?' அவளுக்குள்ளேயே குரல் வந்தது.

'நீ சாகணும்னா மூன்று வருடத்திற்கு முன்னாலேயே செத்து இருக்கலாம்... அப்போதெல்லாம் தைரியமாக இருந்துட்டு... இப்பவா சாகப்போற...? சாக சுயநலமும் தைரியமும் வேணும். உங்கிட்டே சுயநலம் இல்லை வாழ்ந்து காட்ட கொஞ்சம் தைரியம் போதும்.. சாகவே துணிந்த உன்னால வாழவா முடியாது.. உன்னையே உலகம்னு நம்பியிருக்கற உன் அக்காவைப் பற்றி கொஞ்சம் யோசிச்சியா...? இதுநாள் வரை அவள் சந்தோஷப்படும் அளவிற்கு ஒரு காரியமாவது பண்ணியிருப்பியா...? நீ சாவதினால் கொஞ்சம் நஞ்சம் ஒட்டியிருக்கிற அவள் நிம்மதியும் சேர்ந்து அல்லவா சாகும்.''

இடது கையால் நெற்றியை இறுக்கிக் கொண்டவள் கையில் இருந்த மாத்திரையை வலது மூலைப்பக்கம் வீசி எறிந்து - அதுவரை தொண்டைக்குள் இறங்கக் காத்திருந்த நீரை உடனே விழுங்கி வைத்தாள். அதன்பிறகு சொம்பில் இருந்து பாதித் தண்ணீரை வேகவேகமாய் குடித்து, தன்னை ஆசுவாசப்படுத்த முயற்சித்தாள். சில நிமிடங்களுக்கு பிறகு.

படுக்கையில் பரவிக் கிடந்த மாத்திரைகளைப் பொறுக்கி முதலில் எறிய வேண்டும் என்று தோன்றியது. அவசர அவசரமாகப் பொறுக்கினாள்.

பாதி பொறுக்கும்போதே...

''தட்... தட்...'' கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

தட்டப்படும் கதவை பயத்தோடு பார்த்தவள் மேலும் அவசர அவசரமாக மாத்திரைகளை அள்ளினாள்.

மேலும் வேகமாக கதவு தட்டப்பட்டது.

''யாரு?'' மாத்திரைகளை வேகவேகமாய் தலையணைக்கு கீழே தள்ளி விட்டு மறைத்தாள்.

''கதவை திறம்மா'' மகாலஷ்மியின் குரல் கேட்டது.

''வந்திட்டேங்கா'' படுக்கையில் எல்லாவற்றையும் சரிசெய்துகொண்டு, பின் கதவு திறந்தாள்.

உள்ளே நுழைந்த மகாலஷ்மி, தன் முந்தானையால் தன் முகத்தை அழுந்தி துடைத்துக் கொண்டு, கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

''கதவை சாத்தி தாழ் போடு துர்கா.''

சொன்னதை அப்படியே செய்தாள்.

''பக்கத்தில் வந்து உட்கார்'' குரலில் ஏதோ விரக்தி, ஏக்கம்.

''என்னக்கா!'' அருகில் வந்து அமர்ந்தாள். தலையணை பக்கம் அடிக்கடி பார்வை சுழன்றது.

துர்காவின் நைட்டியை சரிசெய்தபடி.. கழண்டுவிட முயற்சித்த கொக்கியைப் போட்டுவிட்டு.. தோளை இறுக்கிப் பிடித்துவிட்டு.. கழுத்தையும், தலையையும் கைவைத்து தொட்டுப் பார்த்து...

''எப்படி இருக்கு?''

''ஒண்ணும் இல்லை.. எல்லாம் சரியாயிடுச்சி.''

''......'' கண்களில் லேசான கண்ணீரோடு பார்த்தாள் மகாலஷ்மி.

''மாமா தூங்கிட்டாரா?''

''இம்.. படுத்துட்டார்.''



''நீ படுக்கலை.''

''படுத்தா மட்டும் தூங்கவா போறேன்.''

எங்கே தலையணையை எடுத்துப் பார்த்து விடுவாளோ என்ற பயத்தில், அவளை நகரவிடாமல் தடுக்க... மடிமேல் தலைவைத்து தன் உடம்பைச் சுருக்கிக் கொண்டாள் துர்கா.

தங்கையின் தலையைத் தடவிக் கொண்டே...

''துர்கா!'' என்றாள்.

''சொல்லுக்கா!''

''என்னை நம்புறியா?''

''இந்த உலகத்துல உன்னை மட்டும்தான் நம்புறேன்.''

''அப்புறம் ஏண்டா என் பேச்சைக் கேட்க மாட்டேங்குற?''

''கல்யாணத்தை தவிர வேறு எதை வேண்டுமானாலும் சொல்.. கண்களை மூடிக்கொண்டு செய்கிறேன்.''

''......''

''என்னக்கா மௌனமாயிட்ட?''

''தூங்கறவனை எழுப்பலாம். ஆனா, தூங்கற மாதிரி நடிக்கிறவனை எப்படி எழுப்புறது?''

''என்னைப் பற்றி எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படி சொல்றது.. எனக்கு ஆச்சர்யமாக இருக்கு.''

''எல்லாம் தெரிஞ்சதினால்தான் இந்த முடிவு.''

''ஸாரிக்கா! நீ என்ன சொன்னாலும்.. என்னால முடியாது மனசார ஒரு ஆம்பிளையை ஏமாற்ற என் மனசாட்சி இடம் கொடுக்காது.''



''எத்தனை நாளைக்கு?''

''வாழ்நாள் முழுக்கத்தான். உண்மையைப் பேச... உண்மையைப் பேசன்னு சொல்லிக் கொடுத்துட்டு... யாரையும் ஏமாத்தக் கூடாதுன்னு மனதில் பதிய வச்சிட்டு.. இன்னைக்கு உன் விருப்பத்திற்காக மாறச் சொன்னால் எப்படிக்கா?''

''எது இந்த வாழ்க்கைக்குத் தேவையில்லையோ.. அதெல்லாந்தான் உனக்கு நான் சொல்லிக் கொடுத்து இருக்கேன். வாழத்தெரியாத வழியில.. அதாவது வாழ்க்கை காலம் முழுக்க தப்பான வழியில... இஷ்டம் இல்லாத வழியில உன்னைக் கூட்டிகிட்டு போக எனக்கு இஷ்டம் இல்லடா.. எனக்கு பின்னால உனக்குப் பாதுகாப்பு வேணும். அது உன் புருஷனாக இருந்தால் நன்றாக இருக்கும்.''

''அக்கா ப்ளீஸ்.. என்னை விட்டுடேன்'' கெஞ்சினாள்.

''விட்டுட்டு போயிடுவேனோ என்ற பயத்துலதான் சொல்றேன்.''

அதுவரை படுத்தபடியே பேசிக்கொண்டு இருந்தவள் எழுந்து உட்கார்ந்து மகாலஷ்மியின் கழுத்தில் தன் இரு கைகளாலும் விலங்கிட்டு... தோளில் சாய்ந்துக் கொண்டு.. மெலிதாக இறுக்கி அணைத்தாள்.

''இப்படியெல்லாம் பேசாதே.. உனக்கப்புறம் நான் உயிரோடு இருப்பேன்னு நினைக்கிறியா?'' வார்த்தைகள் கலங்கின.

சோகமாய் சிரித்தாள் மகாலஷ்மி.

''யாரும் யார் கூடேயும் போகப்போறது இல்லை... என் ஆத்மா நிம்மதியைப் பாக்கணும்னா உன் கழுத்து மாலையைப் பார்க்கணும்.. கல்யாண மாலையை.''

''ஆமாம்! ஏன் மாமாகிட்ட மறச்ச?'' என்றாள்.



''தெரிய வேண்டாம்னுதான்.''

''அதான் ஏன்?''

''உன் மாமனைப் பத்தி உனக்கு நல்ல அபிப்ராயம் இருக்கு. அதை நானே கெடுக்க விரும்பலை.''

''அக்கா! ஏன் இப்படி புதிர் போட்ற?''

''வேண்டாம்டி. உன் மாமாவோட.. இன்னொரு முகம் ரொம்ப அசிங்கமானது... அதை உன்னால ஜீரணிக்க முடியாது...''

''அதே மாதிரிதான் கல்யாணத்தை, அந்த வாழ்க்கையை என்னாலயும் நான் நேருக்கு நேரா சந்திக்க...''

''உன் பங்கிற்கு என் உணர்வுகளைக் கொல்ல ஆரம்பிச்சிட்ட... ரொம்ப சந்தோஷம். படுத்துத் தூங்கு...'' என்றபடி எழுந்தவளை.. எழ விடாமல் இழுத்துப்பிடித்தாள் துர்கா.

''என்ன நினைச்சுகிட்டுப் பேசுற?''

''..........''

''சொல்லுக்கா.. மனதில் நீ பாட்டுக்கு எதையாவது வைத்துக்கொண்டு உளறாதே.''

''.......''

''வெளிப்படையா இரு. அதுதான் மனதிற்கும் உடம்பிற்கும் நல்லது.''

''.......''

''என்னால முடியலக்கா. நான் ஏமாந்துட்டதினால.. நான் இன்னொருத்தரை ஏமாற்ற விரும்பலை.. எனக்கு அது புடிக்கலை.. போலியா ஒவ்வொரு நாளும் செத்து செத்து

என்னை வாழச் சொல்றியா? அப்படி ஒரு வாழ்க்கை எனக்குத் தேவையா? என்னைப் பற்றி முழுமையாகத் தெரிஞ்சா... சந்தோஷமாகக் கல்யாணம் பண்ணிக்க... யார் முன் வருவா...''

''முன்வந்துட்டா...'' நம்பிக்கையோடு கேட்டாள்.

கலகலவென சிரித்த துர்கா,

''வர வாய்ப்பு இல்லை... அப்படி வந்தா... என்னோட வெளி அழகிற்கும், என் சம்பாதனைக்கும்தான் இருக்கும்.''

''டேய்.. கண்ணா! நல்ல ஆம்பளையும் இந்த உலகத்தில் இருக்காங்க... நம்புடா...'' ஆதரவாகப் பேசினாள்.

''அப்போ என்னைப் பற்றி எல்லாம் சொல்றியா?''

அதிர்ச்சியாக மகாலஷ்மி பார்த்ததும்...

''ஏன் இப்படி முழிக்கிற.. உன்னால சொல்ல முடியாது.. அது நல்லா எனக்குத் தெரியும்... அதே நேரம் போலி வேஷம் போட நான் தயாராக இல்லை... ப்ளீஸ் அண்டர்ஸ்டேண்ட் மீ.''

''எனக்கு கடவுள் நம்பிக்கை ஜாஸ்திடி... எனக்காகவாவது உன் மனதை மாற்றி உன்னை அவர் வாழ வைப்பார்.''

''அப்படியா...? சரி.. உன் கடவுளே நேரில் வந்து எனக்கு தாலிகட்டி கூட்டிக்கொண்டு போனால்தான்'' சிரித்தாள்.

''சரி.. படு.. நாளைக்குப் பேசிக்கலாம்.''

''நாளைக்குப் பேசலாம்.. பட்... இதைப்பற்றி பேசவேண்டாம் ஓ.கே.?'' எதுவும் சொல்லாமல் வெளியேறினாள் மகாலஷ்மி.



நாட்கள் மிக வேகமாக நகரத் துவங்கியது. அதேபோல் அக்கா - தங்கை இருவருக்கும் இந்தப் பிரச்சனையும் வேகமாக சூடுபிடிக்கத் துவங்கியது. கொஞ்ச நாட்களாகவே மகாலஷ்மியின் கேள்விகளுக்கும், வாதத்திற்கும் ஈடுகொடுக்க முடியாமல் துர்கா தடுமாறத் துவங்கியிருந்தாள். பத்மநாபன் வீட்டில் இருக்கும் போது மட்டும் இந்த விஷயம் அடக்கி வாசிக்கப்பட்டது. மற்ற நேரங்களில் எல்லாம் இதே பேச்சு தான்.

வீட்டில் இருக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள... எம்.சி.ஏ.விற்கு அப்ளிகேஷன் வேறு போட்டு வைத்தாள் துர்கா.

அன்று காலை 9.00 மணிக்கெல்லாம் அவசர அவசரமாக புறப்பட்டு கொண்டிருந்தாள் துர்கா.

''வரேன்கா'' சிரித்தாள்.

''இரு இரு'' என்றபடி துர்காவின் கழுத்துப்புறத்தில் திட்டாய் ஒட்டி இருந்த பவுடரை சோபா மேல் கிடந்த துண்டால் துடைத்துவிட்டு.. உள்ளங்கால் முதல் மேலேறி உச்சிவரை தன் பார்வையை ஓடவிட்டாள்.

''பார்த்தாச்சா?''

''.........''

''எங்காவது குறை இருக்கா? எதாவது மாத்தணுமா?'' கிண்டலாய் சிரித்தாள்.

ஒன்றும் சொல்லாமல்.. நெற்றியில் இருந்த கருப்பு ஸ்டிக்கரை உரித்து எடுத்துவிட்டு.. தன் நெற்றியில் ஒட்டியிருந்த அரக்கு கலர் பொட்டை எடுத்து வைத்தாள்.

''என்னை மேக்கப் பண்ணிவிட்டது போதும். கொஞ்சம் தண்ணி கொடு'' என்றாள்.



''ஏய்... ஆபீஸ்க்கு தண்ணீர் பாட்டில் எடுத்துக்கிட்டாயா?''

''எடுத்துக்கிட்டேன்'' உள்ளே சென்று தண்ணீர் எடுத்து வந்து தங்கையிடம் கொடுத்த மகாலஷ்மி.. மீண்டும் அவள் உடைகளைச் சரிசெய்தாள்.. நெற்றியின் ஓரத்தில் விலகி இருந்த, அதிகப்பிரசங்கித்தனமாக இருந்த முடிகளைச் சரிசெய்து விட்டாள்.

''போதுங்கா.. நான் என்ன குழந்தையா?''

தங்கையை உற்றுப் பார்த்தவள்...

''நீ குழந்தை இல்லை என்பதைப் புரிந்து கொண்டால் சரி'' பேச்சிலேயே பொடி வைத்தாள்.

''அம்மா தாயே ஆளைவிடு'' வேகமாக விலகியவளின் கைகளைக் கெட்டியாய் பிடித்து நிறுத்தியவள்...

''இன்னும் இரண்டு நாளில் எனக்கு முடிவு தெரியணும்.''

''என்ன முடிவு?''

''உன் கல்யாணம்.''

''யோசிக்கிறேன்.''

''யோசிக்கிறியா...? இதுவரைக்கும் யோசிச்சது போதும்.. சம்மதத்தை சொல்....''

''சரி மாப்பிள்ளை ரெடியா?''

''அந்தக் கவலை உனக்குத் தேவையில்லே... தலையை மட்டும் குனி போதும்.''

''இங்க பாருக்கா.. இப்படியே மிரட்டிகிட்டு இருந்த... உன் மிரட்டலைப் பற்றி மாமா காதில் போட்டு வைத்து விடுவேன்'' விளையாட்டாக கூறிக் கொண்டே வெளிவந்து.. தன் வாகனத்தை உசுப்பி விட்டாள்.



அவள் சென்று வெகுநேரம் வரை மகாலஷ்மிக்கு எதுவும் புரியவில்லை... விவரம் தெரியாமல் ஏதாவது உளறி வைத்து விட்டால்.. போச்சு. சென்னையில் வெடித்த வெடிகுண்டு மாதிரி அல்லவா கதை கந்தலாகி விடும்... இந்தப் பைத்தியக்காரி சொன்னாலும் சொல்வாளே.. அதன்பிறகு வேறு வினையே வேண்டாம்...

'துர்காவிற்கு மாப்பிள்ளை பார்க்கின்றேன் என்றோ... அவளைப் பற்றி எல்லா விஷயமும் தெரிந்தால்... அவள்மேல் உள்ள பைத்தியத்தில் அவள் தூங்கும்போதுகூட... அவளுக்கும் எனக்கும் தெரியாமல் தாலி கட்டினாலும் கட்டி விடுவானே...

ம்கூம் இந்தப் பிரச்சனையை இத்தோடு விடக்கூடாது.. ஏதாவது ஒரு முடிவிற்கு வரணும்.' திடீர் என்று அந்த யோசனை தோன்றவும்.. அவசர அவசரமாக முகம் கழுவி... வேறு புடவை ஒன்றை உடுத்திக் கொண்டு.. வீட்டைப் பூட்டி விட்டு வெளியே கிளம்பினாள்.

ரவிக்குமார் இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்.

கன்னத்தில் கைவைத்தபடி ஜின்டுவைப் புரட்டிக்கொண்டு இருந்தாள் வித்யா...

கடைசிப் பக்கத்தைப் புரட்டும்போது...

''எக்ஸ்யூஸ் மீ''

குரல் கேட்டதும்.. இதழை ஈரப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள்.

முப்பது வயது மதிக்கத்தக்க ஓர் ஆண்மகன் எதிரே சிரித்தபடி!

''எஸ்...கேன் ஐ ஹெல்ப் யூ?''

அத்தனை பற்களும் தெரியும்படி அழகாய் சிரித்தாள்.

''ஐ'ம் நந்தா... மிஸ். துர்காவை பார்க்கணும்.''

''துர்காவா?'' கேள்வியோடு பார்வையில் தூண்டில் போட்டாள்.

''எஸ்''

''கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... வருவாங்க'' என்றபடி ரிஷப்ஷனில் இருந்த இருக்கை ஒன்றைக் காட்டினாள்.

''தேங்க்யூ'' கூறிவிட்டு தளர்வாய் தன்னை இருத்திக் கொண்டான்.

முதன் முறையாக துர்காவை நேரில் சென்று அழைக்காமல்.. இன்டர்காமிலேயே நந்தாவின் பெயர் கூறாமல் அழைத்தாள்.

அடுத்த மூன்றாவது நிமிடம் ரிஷப்ஷன் வந்த துர்கா... யார் என்று கேட்க வித்யாவை நெருங்கும் முன்...

''துர்கா!'' என்றபடி எழுந்து நின்றான் நந்தா.

அஸ்திவாரமே ஆட்டம் கண்டு.. வெடித்துச் சிதறுவது போல்.. இரத்த நாளங்கள் வெடிக்க... நரம்புகள் செயல் இழக்க.. கண்களில் கருகருவென கண்ணீர் சுரக்க.. இவனா...? திணறியபடி.. கீழே விழாமல் இருக்க... ரிஷப்ஸன் டேபிள் முனையையும் வித்யாவின் கைகளையும் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.



# 4

கண்களில் சூடாய் கொப்பளித்த நீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாள். இறுக்கமாய் பற்றிக் கொண்ட வித்யாவின் கைகளையும் அவளால் விட முடியவில்லை. நந்தாவிற்கு இவளின் அதிர்ச்சி பிரமிப்பை ஏற்படுத்தவில்லை. எதிர்பார்த்து வந்து இருப்பான் போல் தோன்றியது. சங்கடமாய் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

நாசியிலும் நீர் ஊற... கைகளை விடுவித்துக் கொண்டு, வித்யாவின் கர்சிப்பாலேயே கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டு, நாசியை உறிஞ்சிக் கொண்டு...

''என்ன வேண்டும்?'' என்றாள்.. குரல் கரகரத்தது.

நிமிர்ந்து பார்த்தவன்.. பேச நா எழாமல் தவித்தான்.

''இங்கே பாருங்க சார்.. எனக்கு நிறைய வேலை இருக்கு.. என்னோட.. நேரத்தை வீணாக்க நான் விரும்பலை.. என்னன்னு சொல்லுறீங்களா?'' அவன் முகத்தை தீ கக்கும் விழிகளோடு பார்த்தாள்.

அவள் விழிகளை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல் தலை தாழ்த்திக் கொண்டான்.

''ப்ளீஸ் டெல் மீ.''

''ஐ'ம் ஸாரி... து...ர்...கா...'' தடுமாறினான்.

''ஓ.கே. உங்க ஸாரியை அக்செப்ட் பண்ணியாச்சு. புறப்படுறீங்களா?''



''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்!''

''பேசறதெல்லாம் நிறைய பேசியாச்சு.. இன்னும் என்ன இருக்கு.. எனக்கு அதுக்கெல்லாம் நேரம் இல்லை...'' என்றபடி திரும்பியவள்...

வித்யாவைப் பார்த்து...

''வித்யா! சின்ன ரிக்வெஸ்ட்... எனக்கு போன் கால் வந்தாலும்... நேரில் யாராவது வந்தாலும்... யார்? என்னன்னு கேட்டு இன்பார்ம் பண்ணு. இல்லன்னா இப்படித்தான் டைம் வேஸ்ட் ஆகும்.''

துர்காவின் கோபத்தை முதல் முதலாய் சந்தித்த அதிர்ச்சியில்... பேசத் தோன்றாமல் தலையாட்டி வைத்தாள் வித்யா... வந்த வேகத்தில் உள்ளே சென்றும் மறைந்தாள். நந்தா எதுவும் பேசாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். வித்யாவிற்குக்கூட அவனைப் பார்க்க பயமாகவும், பரிதாபமாகவும் இருந்தது.

''ஸார்!'' அழைத்தாள்.

''........'' அப்படியே நின்று கொண்டு துர்கா சென்ற திசையையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

''ஸார்!'' கொஞ்சம் சத்தத்தைக் கூட்டினாள்.

விழிகளைத் திருப்பி வித்யாவைப் பார்த்தான்.

''நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா நான் ஒன்று கேட்கட்டுமா?''

தலையாட்டினான்.

''இந்த ஆபீஸ்க்கு நான் வந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் ஆகிறது. ஒரு நாள்கூட... எவ்வளவு வேலை



இருந்தாலும்... எவ்வளவு [illegible] இருந்தாலும் அந்த அழகான முகத்தில் [illegible] கோபம் வந்து போய் நான் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட... துர்கா உங்களைப் பார்த்து கோபப்பட்டாளா... [illegible] உங்களைப் பார்த்தாலும்... ஒரு தப்பான அபிப்ராயம் தோணலை... நீங்க யாரு துர்காவோட... [illegible]?'' நேரடியாகவே கேட்டாள்.

''............'' சலனம் இல்லாமல் பார்த்தான்.

''லவ் பண்ணி ஏமாற்றிட்டீங்களா?'' வித்யா விடுவதாக இல்லை.

''இல்லம்மா... நீங்க நினைக்கிற உறவு இல்லை.''

''துர்காவோட... அண்ணனா?''

''இல்ல.''

''தூரத்து சொந்தமா... இல்லை நெருங்கின சொந்தமா?''

''ப்ச்.. இரண்டுமே இல்லை'' உதட்டைப் பிதுக்கினான்.

''[illegible]?''

''ம்கூம்'' மறுத்தான்.

''அப்ப யாரு?''

''இம்... துரோகி'' ரொம்ப நேரம் யோசித்து பதில் கூறிவிட்டுப் போய் விட்டான்.

வித்யாவிற்கு அவன் பதில் புரியாமல் [illegible] போட்டது. அதற்குள் தன் கேபினில் வந்து அமர்ந்த துர்காவிற்கு கொஞ்சம்கூட படபடப்பு அடங்கவில்லை. இரண்டு கைகளையும் மாறி மாறி கிள்ளும் வரை [illegible] பார்த்தாள். ஏ.ஸி.யிலும் பொட்டு பொட்டாய் வேர்த்த [illegible] கெல்லாம்... கர்சீப்பை கொண்டு ஒற்றினாள். [illegible]

தன்னை இருக்கையில் இருத்திக் கொண்டாலும் மனமும், உடலும் சோர்ந்து தள்ளாடியது.

'இத்தனை நாட்கள் கழித்து எங்கிருந்து வந்தான்?'

'என்னைத் தேடி?'

'சிக்கலில் மாட்டிவிடவா? இல்லை, திரும்ப ஏமாற்றவா?'

'இல்லை... முன்போல் மனதையும், உடலையும் காயப் படுத்தவா?'

'என்னைத் தேடி எதற்கு வந்தான்?... பேச வேண்டுமாமே... இன்னும் பேச என்ன இருக்கிறது?'

கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறினாள். கீ போர்டில் கை வைத்தால் விரல்கள் எல்லாம் வேகமாக நடுங்கின. ஸ்கிரீனைப் பார்த்தால்... நந்தா சிரிப்பது போல் தோன்றியது. வெறுத்துப்போய் கம்ப்யூட்டரின் அத்தனை இணைப்புக்களையும் ஆஃப் செய்துவிட்டு... வேகமாய் பாத்ரூம் சென்று நல்ல குளிர்ந்த நீரில் முகம் கழுவித் துடைத்தாள். டவலோடு கழண்டு வந்த ஸ்டிக்கர் பொட்டை, திரும்ப நெற்றியில் வைத்து அழுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

அவள் கேபினில் நுழையும்போது...

"துர்கா!" கீதா அழைத்தாள்.

"என்ன கீதா?" வலுக்கட்டாயமாகச் சிரித்தாள்.

"எனி பிராப்ளம்?"

"நத்திங்யா."

"இல்ல... என்னைக்குமே உன் முகத்தை இவ்வளவு டென்ஷனாகப் பார்த்தது இல்லை."



"ஏய்... ஒண்ணுமில்லை... காலையில இருந்தே பயங்கர தலைவலி... தாங்க முடியலை."

"லீவ் போட்டுட்டு போகலாமில்ல?"

"போகலாம்... வேலை நிறைய இருக்கு" என்றவள், உட்கார்ந்து பேசலாம் என்றபடி கீதாவை இழுத்து உட்கார வைத்தாள்.

"துர்கா! தலைவலிக்கும்போது... ஸ்கிரீன் பார்த்தால் இன்னும்தானே அதிகமாகும்... நான் பார்த்துக்கறேன். நீ ரெஸ்ட் எடு!"

என்றபடி எழுந்து துர்காவை எழவைத்து கம்ப்யூட்டர் முன் அமர்ந்து... எல்லா பட்டனையும் தட்டி... ஸ்கிரீனுக்கு உயிர் கொடுத்தாள்.

அப்போது இண்டர்காம் சிணுங்கியது.

மனதில் லேசான திகிலோடு கையில் எடுத்தாள்.

"எஸ்!" என்றாள் மிக மெதுவாக.

"துர்கா லைன்ல எம்.டி." வித்யா படபடப்பாய் கூறினாள்.

"சரி... சரி... லைன் கொடு..."

சில விநாடிகளுக்குப் பின்... எம்.டி. லைனிற்கு வந்ததும்.

"குட்மார்னிங்... ஸார்" குரலில் என்னவோ ஏதோ என்ற பயம் இருந்தது.

"வெரிகுட்மார்னிங்... துர்கா! ப்ளீஸ் கம் வித் மை ரூம்."

"ஓ.கே. ஸார்."

இண்டர்காமை வைத்துவிட்டு எழுந்தாள்.



"யாரு எம்.டி.யா?"

"இம்."

"நீ போ... எல்லாவற்றையும் நான் எடுத்து வைக்கிறேன்."

"தேங்க்ஸ்." கீதாவின் கன்னத்தில் தட்டினாள்.

"வெல்கம்" என்றவள்... துர்காவின் துப்பட்டாவை பிடித்து இழுத்து...

"ஒரு நிமிடம்... அந்தக் கண்ணாடி அவ்வளவு சீக்கிரம் யாரையும் கூப்பிடாது... பாத்து" தலையாட்டியபடியே கம்ப்யூட்டர் ரூமைவிட்டு வெளியே வந்து... லிப்ட் நோக்கி வந்தாள். உள்ளே நுழைந்து நான்காவது மாடிக்கு பட்டனைத் தட்டி... கைகட்டிக் கொண்டு நின்றாள். சில விநாடிகளில் நான்காவது மாடிக்கு வரவும்... க்ரில்லை தள்ளி விட்டு வெளியே வந்தாள்.

ப்போர்த் ப்ளோரில் வேலை செய்யும்... அவளுக்குத் தெரிந்த அனைவரும்... ஸ்நேகமாய் இவளைப் பார்த்து கையாட்டி சிரித்தனர்.

"இங்கே எங்கே?" கேட்டவர்களிடம் சலித்துக் கொள்ளாமல்.

"எம்.டி. ரூமுக்கு" என்றாள்.

"குட்மார்னிங் மேடம்."

நிமிர்ந்து பார்த்து அந்த 40 வயது மதிக்கத்தக்க பெண்மணி...

"குட்மார்னிங்" என்றாள்.

"சாரைப் பார்க்கணும்."



எதற்கு என்று புருவத்தை உயர்த்தினாள் பி.ஏ. பெண்மணி.

"எதற்குன்னு தெரியாது. அவர்தான் வரச் சொன்னார்."

"ஜஸ்ட் எ மினிட்" என்றபடி எம்.டி.க்கு தன்னிடம் இருந்த போன் மூலம் தொடர்பு ஏற்படுத்தி...

"ஸார்... உங்களைப் பார்க்க துர்கா வந்து இருக்காங்க."

"..............."

"ஓ.கே. ஸார்... அனுப்பி வைக்கிறேன்" ரிசீவரை அதன் இடத்தில் பொருத்திவிட்டு...

"உங்களுக்காகத்தான் வெயிட் பண்றார்... போங்க."

"எனக்காக வெயிட் பண்றாரா?" கேள்வி பெரிதாக எழ, வாய்விட்டு முனகிக்கொண்டு கதவைத் தட்டிக் கொண்டு... உள்ளே நுழைந்து...

"மே ஐ கமின் ஸார்" என்றாள்.

"கமின்" அதிகாரத் தோரணையோடு குரல் ஒலித்தது.

அதிகமான ஏ.ஸி. உடலை ஒரு முறை குலுக்கிப் போட்டது.

எம்.டி. நிமிர்ந்து பார்த்தார்.

சரியாய் ஐம்பத்து ஆறு வயது. ப்ரவுன் கலரில் கோட் சூட்... தலையில் பாதி ஏரியா முடி இல்லாமல் வெட்ட வெளியாய் காய்ந்து போய் பளிச்சென்று இருந்தது. முகம் பார்க்கலாம் அத்தனை பளபளப்பு... மூக்கிற்குக் கீழும் மழிக்கப்பட்டு இருந்தது. கொஞ்சம் உற்றுப் பார்த்தால் தலையும் முகமும் ஒன்று போலவே இருந்தது.

பற்கள் எட்டிப் பார்க்காத ஒரு சிரிப்பை அவர் முகம் சுமந்து கொண்டு அவளைப் பார்த்தது.

"ப்ளீஸ் டேக் யுவர் சீட்" என்றார்.

"பரவாயில்லை ஸார்."

"உட்காரும்மா" திரும்பக் கூறினார்.

அவர் டேபிளுக்கு முன்பு போடப்பட்டு இருந்த நான்கு சேரில் இடது ஓரத்து நாற்காலியில் அதன் நுனியில்... சேர் முழுவதும் நெருஞ்சி முள் பரப்பி விட்டது போல் அமர்ந்தாள். அப்போதுதான் கவனித்தாள். வலது ஓரத்தில் ஒரு இளைஞன் குனிந்தபடி ஏதோ புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டு இருந்தான். குனிந்து கொண்டு இருந்ததாலும்.. இவள் புறம் திரும்பாததாலும்... யார் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை. ஒரு பக்க போஸோ எங்கோ பார்த்தது போல் இருந்தது. எம்.டி.க்கு வேண்டப்பட்டவனாக இருப்பான். இப்போது இந்த ஆராய்ச்சி தேவையா? திடீர் என்று ஞானோதயம் தோன்றியது.

சிறிது நேரம் துர்காவின் தவிப்பைக் கண் சிமிட்டாமல் பார்த்த எம்.டி. செருமிக் கொண்டு அவரே ஆரம்பித்தார்.

"ஓர்க் எல்லாம் எப்படி இருக்கும்மா?" ஏதாவது கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டார்.

"............" அதிர்ச்சியாய் பார்த்தாள். இதென்ன கேள்வி? நியூ அப்பாய்ன்மென்டிடம் கேட்பது போல்... புரியாமல் பார்த்தாள்.

"ஏன்மா டென்ஷனா இருக்கே?" அவளின் தவிப்பைப் பார்த்துக் கேட்டார்.

"இல்ல ஸார்."



"பின்ன ஏன் பதில் சொல்லலை?"

"அ...து... வ...ந்...து... ஓர்க் எல்லாம் நன்றாகப் போவுது ஸார்."

"சரி... பயப்படாதே.. இந்த வருடம் நம்ப கம்பெனியோட வெள்ளி விழா ஆண்டு உனக்குத் தெரியுமில்ல?"

"ஐ நோ ஸார்."

"குட்... ரொம்ப க்ரேண்டாக செலபரேட் பண்ணணும்."

"வித் ப்ளஷர் ஸார்."

"கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்ட்ஸ் எல்லாம் ஒன்றாக சேர்ந்து நல்ல புரொக்ராம் கொடுக்கணும்..."

"கண்டிப்பாக செய்றோம் ஸார்."

"அது மட்டும் இல்லை. நீ காம்பையராகவும் இருக்கணும்."

"ஓ.கே. ஸார்."

"லாஸ்ட் இயர்கூட நம்ப பங்ஷனுக்கு நீதானேம்மா காம்பையராக இருந்த?"

"எஸ். ஸார்.

"குட்!"

"தேங்க்யூ ஸார்."

"ஏம்மா!.. நீ ப்ராப்பர் மெட்ராஸா?"

"எஸ் ஸார்."

"அப்பா என்ன பண்றார்."

"அப்பா அம்மா ரெண்டு பேருமே இல்லை ஸார்."



"ஓ... ஐ'ம் ஸாரி... அப்ப ஹாஸ்டல்லயாம்மா தங்கியிருக்க?"

"இல்ல ஸார்... அக்கா இருக்காங்க.. எனக்கு எல்லாமே அவங்கதான்... அவங்ககூடத்தான் தங்கியிருக்கேன்..."

"வீடு எங்கம்மா இருக்கு."

'சர்டிபிகேட்டைப் பார்த்தாலே தெரிந்து விடுமே... எதற்காக வேண்டாத கேள்வி?' உள் மனம் எரிச்சல் பட்டாலும்... தன் எரிச்சலைக் காட்ட முடியாத இடம்.

வீட்டு முகவரியைச் சொன்னாள்.

அதுவரை புத்தகம் படிப்பது போல் பாவனை செய்தபடி அவள் கூறியதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இளைஞன் அவள் கூறிய முகவரியைப் புத்தகத்திற்கு நடுவில் தான் வைத்து இருந்த வெள்ளைத் தாளில் குறித்துக் கொண்டான்.

முகவரி எழுதப்பட்ட வெள்ளைத்தாளை நான்காய், எட்டாய் மடித்து தன் சர்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டு... எம்.டி.யை பார்த்து கண் சிமிட்டினான்.

"சரிம்மா... இதற்காகத்தான் அழைத்தேன்."

"ஓ.கே.... ஸார்" என்றபடி எழுந்தாள்.

அதற்குள் அவன் அவரைப் பார்த்து சைகை செய்தான். அவரும் புரிந்து கொண்டார் போல தலையாட்டி விட்டு...

"துர்கா!" என்றார்.

"ஸார்" போக எத்தனித்தவள் நின்றாள்.

"இவரை இன்ட்ரட்யூஸ் பண்ண மறந்துவிட்டேனே.. சார் யார்ன்னு தெரியுதா?" திரும்பி அவன் முகத்தைப் பார்த்தார். அவனும் இவள்புறம் திரும்பி சிரித்தான்.



"ஹலோ!" சிரிப்பு மாறாமல் கூறினான்.

"ஹலோ ஸார்" நாக்கு ஒட்டி உடலர்ந்தது... காண்பது கனவா நனவா என்று புரியவில்லை... அகில இந்திய ரீதியில் புகழ் பெற்ற நடிகன். ஒவ்வொரு பெண்ணின் கனவிலும் தவறாமல் ஆஜராகும் கனவு காதலன். அதே நேரம் நடிக்கும் ஒவ்வொரு நடிகையோடும் கிசுகிசுக்கப்படும் லீலை மன்னன். எல்லாவற்றிலும் டாப் ஹீரோ. மஞ்சள் பத்திரிகையின் நாயகன். பலான விஷயத்திற்காக கோர்ட் படி ஏறியவன்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்... ஏகப்பட்ட மைனஸ் பாய்ண்ட் அவனிடம் இருந்தாலும்... இளம் பெண்களுக்கு அவன் மேல் அப்படி ஒரு க்ரேஸ்... அப்படிப்பட்டவன் தன் முன்னே... நம்ப முடியாமல் தான் பார்த்தாள்.

"என்னம்மா... அப்படியே நின்னுட்ட? யாருன்னு தெரியுதா?"

"எப்படி ஸார் தெரியாம இருக்கும்... தி பேமஸ் ஸ்டார், தி க்ரேட் ஆக்டர் அவினாஷைத் தெரியாதவங்க யாராவது இருக்க முடியுமா?"

அவினாஷ் சிரித்தபடியே அமர்ந்து இருந்தான்.

"இவரும் நம்ப பங்ஷன்ல கலந்துக்கிறாரும்மா" எம்.டி. கூறியதும்

"ரொம்ப சந்தோஷம் ஸார்" என்றாள்... கிளம்ப நினைத்து விடைபெறலாம் என வாய் திறந்தபோது...

"ஜஸ்ட் எ மினிட்" என்றபடி பாத்ரூமிற்குள் தன்னை அடைத்துக் கொண்டதும் சங்கடமாய் திரும்ப அதே சேரில் அமர்ந்து கொண்டாள்.

அந்த நேரத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அவினாஷ்.

"எக்ஸ்க்யூஸ்மி மேடம்" என்றான்.

"ஸாரி!" திரும்பினாள்.

"உங்களை நான் பேர் சொல்லிக் கூப்பிடலாமா?" என்றான்.

"தாராளமாகக் கூப்பிடலாம் ஸார்" குழப்பத்தோடே கூறினாள்.

"மிஸ் துர்கா! என்னைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

அதைக் கேட்டதுமே... அப்படி ஒரு கோபம் வந்து எட்டிப் பார்த்தது.

"ஸாரி ஸார்... நோ ஐடியா."

"வெல்.. குட் ஆன்ஸர்... துர்கா! ஐ வான்ட் மேரி யூ?" கொஞ்சம்கூட உணர்வுகளைக் காட்டாமல் கேட்டான்.

நம்ப முடியாமல்... ஜீரணிக்க முடியாமல் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பாக்குறீங்க.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்."

"ஸார் இது விளையாட்டுப் பேச்சு இல்லை. இது சினிமாவும் இல்லை."

"நானும் அப்படிச் சொல்லலையே."

படக்கென்று எழுந்தவள் எம்.டி.யைப் பற்றிக் கவலைப் படாமல் கிளம்பினாள்.

"துர்கா! ப்ளீஸ் சீரியஸாக சொல்றேன்."

"இங்கே பாருங்க ஸார்... இந்த விளையாட்டு எங்கிட்டே வேண்டாம். ஒரு வினாடியில வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உங்களுக்கு... விலக அதைவிடக் கம்மியான நேரம்



போதும். இப்படிப்பட்ட ஆசாமி கடவுளாக இருந்தாலும் நடோண்ட் வாண்ட்."

"என்னை உங்களுக்குப் பிடிக்கலையா?"

"பிடிக்கலை."

"உங்களுக்குப் பிடிச்சாலும் பிடிக்கலைன்னாலும் துர்கா தான் என்னுடைய மனைவி" அதைக் கேட்டதும் வெகுண்டு எழுந்தாள்... காலையில் இருந்தே யாரையாவது கடித்துக் குதறலாமா என்று காத்துக் கிடந்தவளிடம் வகையாக மாட்டிக் கொண்டான்.

"உன்னை மாதிரி எத்தனையோ பேரைப் பார்த்தவள் நான். உன்னால முடிஞ்சதைப் பார்த்துக்கோ" சீறிவிட்டு வெளியேறினாள்.

'தன் கைவிரல் நகத்தில் பட்ட காற்று தன் மேல் படாதா என்று லட்சக் கணக்கான பெண்கள் துடித்துக் கொண்டிருக்கும் போது... வலியவே நான் பேசியும்... இப்படி ஒரு திமிரா இவளுக்கு... கட்டுறேன்டி, உன் கழுத்துலயே தாலி கட்றேன்.' கிளிசரின் இல்லாமலேயே அவன் கண்கள் சிவந்து துடித்தன.

5

**கா**லை எழும்போதே... தலை பாரமாய் கனத்தது. ஹாலுக்கு நேராக வந்து... டீபாய் மேல் கிடந்த அன்றைய தினசரியை எடுத்துக் கொண்டே... மற்றொரு கையால் ரிமோட் மூலம் டி.வி.க்கும் உயிர் கொடுத்தான்.



சன் மியூசிக்கில் அவினாஷ் தான் ஆடிக் கொண்டிருந்தான். சட்டென முகம் மாறி சேனலை மாற்றினான். எந்த சேனலிலும் திருப்தி இல்லாமல் டி.வி.யை ஆப் செய்து விட்டு பேப்பரைப் பிரித்துக் கொண்டே,

"அக்கா! காபி" என்றான் சமையல் அறை பக்கம் பார்த்து.

அதற்குள் குளியல் முடித்து தலையை துவட்டிக் கொண்டே ஹாலுக்கு வந்தான் பத்மநாபன். தலையைச் சிலுப்பி சின்னச் சின்ன நீர் திவலைகளை துர்காமேல் படச் செய்தான். ஜில்லென முத்தாய் நீர் வந்து விழுந்தது. நிமிர்ந்த துர்கா.. பத்மநாபனைப் பார்த்து...

"என்ன மாமா.. பச்ச தண்ணீர் குளியல் போல இருக்கு. ஆச்சர்யமா இருக்கு" என்றாள். பெருமூச்சு ஒன்றை இழுத்து வெளி விட்டவன்,

"எங்கே உங்க அக்கா வரவர என்னை கவனிக்கவே மாட்டேங்கிறா?" என்றான்.

"அக்காவை விட்டுத் தள்ளுங்க.. என்கிட்டே சொன்னா நான் செய்ய மாட்டேனா?"

"அதுக்குத்தான் காத்துகிட்டு இருக்கேன்."

"என்ன மாமா சொன்னீங்க" பேப்பரில் மூழ்கி இருந்ததால் சரியாக அவன் பேசியதைக் கேட்காமல் மீண்டும் கேட்டாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா. உனக்கேன்டா கஷ்டம்" என்றவளை இழுத்து தன் அருகில் உட்கார வைத்த துர்கா.. அவன் அருகில் நெருங்கி உட்கார்ந்து..

"மாமா எனக்கொரு சின்ன ஹெல்ப்... ப்ளீஸ்."

அவன் மூச்சுக்காற்றும் உடல் வாசனையும் ஏற்கெனவே எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவது போல் இருந்தது.



"எ..ன்..ன.. ஹெ..ல்..ப்" சந்தோஷமாய் தடுமாறினான்.

"என் உடம்பு என்னவோ போல் இருக்கு. எங்க ஆபீஸ்க்கு போன் பண்ணி எனக்கு லீவ் சொல்லிடறீங்களா?"

"என்னம்மா உடம்புக்கு?" பதற்றத்தை வலிய வரவழைத்துக் கொண்டு அவள் கழுத்தில் கை வைத்து... மெல்ல விரல்களைத் தன்னை மறந்து கீழே இறக்கும்போது...

காபியோடு வெளியே வந்தாள் மகாலக்ஷ்மி.

பட்டென கைகளை எடுத்துக் கொண்டான். அவன் கழுத்தில் கை வைத்ததைப் பற்றிக் கவலைப்படாமல் பேப்பரை புரட்டிக் கொண்டிருந்தது, அந்தப் பைத்தியம்.

"இந்தாடி காபி" டம்ளரை நீட்டினாள்.

பேப்பரைப் பார்த்தபடியே கை நீட்டி காபி டம்ளரைப் பெற்றுக் கொண்டு.. டம்ளர் விளிம்பில் இதழ் வைத்து உறிஞ்சி விட்டு... நிமிர்ந்து அக்காவைப் பார்க்காமல்..

"சர்க்கரை பத்தலை.. ஏன் இவ்வளவு டிக்காஷன் ஊத்தியிருக்கே?" என்றாள்.

"வாய்க்கு ருசியா வேணும்னா நீயே போட்டுக்க?"

நிமிர்ந்து அதிர்ச்சியாய் அக்காவைப் பார்த்தாள்.

"இப்போ என்ன நான் சொல்லிட்டேன். அதுக்கு ஏன் இப்படிச் சொல்ற?"

"இங்கே பாருடி.. முன்ன மாதிரி எல்லாம் என்னால எதுவும் செய்ய முடியலை.. அவங்க அவங்க இஷ்டத்துக்கு எல்லாம் என்னால ஆட முடியாது" கத்தினாள்.

"ஸாரிக்கா" அதற்கு மேல் துர்கா எதுவும் பேசவில்லை.

"என்னங்க நீங்க கிளம்பலையா? சீக்கிரம் போகணும் வீங்க?"

"இதோ கிளம்பிட்டேம்மா" வேகமாய் எழுந்து தன் அறைக்குச் சென்றான். துர்காவின் கழுத்தில் கை வைத்ததைப் பார்த்து இருப்பாளோ... அதற்காகத்தான் அவள் மேல் எரிந்து விழுகின்றாளோ... உள்ளுக்குள் நெருடியது. அவன் கிளம்பி வெளியே செல்லும்போது..

"மாமா மறந்திடாம போன் பண்ணுங்க" என்றாள் துர்கா.

"பண்ணிட்றேம்மா.. எத்தனை நாளைக்கு லீவ்?"

"இன்னைக்கு மட்டும் போதும்.. நாளைக்குத்தான் சன்டே வாச்சே."

"சரி சொல்லிடறேன்."

"சரிம்மா... துர்கா.. ஹாஸ்பிடல் கூட்டிகிட்டு போக ணுமா?"

"இல்ல மாமா.. ஒன்னுமில்லை ரெஸ்ட் எடுத்தா சரியா யிடும்."

"சரி.. பேப்பர்.. டி.வி. எல்லாம் பார்க்காம சாப்பிட் டுட்டுப் போய் படுத்துக்க.."

"இம்."

"வரேன் மகாலஷ்மி" கூறிவிட்டு வெளியேறினான்... அவன் தலை அந்தத் தெருமுனை வரை சென்று மறைந்ததும்.. உள்ளே வந்த மகாலஷ்மி.. துர்காவின் கையில் இருந்த பேப்பரைப் பிடுங்கினாள்.

"உடம்புக்கு என்ன?"



"நல்லாத்தானே இருக்கு?"

"விளையாடாதே.. மூன்று நாளாவே உன்னை கவனிச் சிட்டுதான் இருக்கேன். நீயா சொல்லுவ நீயா சொல்லுவன்னு பார்த்தால்... வாயத் திறக்காம இருக்க.. என்னாச்சி உடம்புக்கு உன் மாமனிடம் சொல்றதை என்னிடம் சொல்லக் கூடாதா.. அந்தளவுக்கு உனக்கு நான் துரோகியாயிட்டேனா?"

"ஐயோ! ஏங்க்கா இப்படி மாறி போயிட்ட.. ஒண்ணுமில் லாத விசயத்தை எல்லாம் ஏன் இப்படி பூதக் கண்ணாடி வச்சி பார்க்கிற? காபில சர்க்கரை பத்தலைன்னுதான் சொன்னேன்.. அதுக்கு ஏன் அப்படிக் கத்தறே.. சம்திங் ராங் வித் யூ."

"அப்படி என்ன ஒட்டி உரசிகிட்டு அவர்கிட்டே பேச்சு?"

"ஏன் பேசக்கூடாதா?... ஓ... பொசசிவ்வா?"

"எந்த மண்ணாங்கட்டியும் இல்லை."

"பின்னே?"

"அப்படி என்ன பேச்சு?"

"ஏன் பேசக்கூடாதா.. என்னோட மாமனிடம் நான் பேச றேன்."

"என்னதான் இருந்தாலும் அவர் வெளி ஆம்பளைடி."

"அது உனக்கு.. என்னைப் பொறுத்தவரை.. நீயும் மாமா வும் அம்மா அப்பா மாதிரி.. இந்த தொட்டு பேசக்கூடாது.. ஒட்டிப் பேசக்கூடாது என்பதை எல்லாம் ஏதாவது சரியான பட்டிக்காட்டில் போய் மைக் போட்டுக் கத்து.. அங்க கூட உன் பேச்சும் வாதமும் எடுபடாது. மனசில் கள்ளம் இல்லாத போது.. கடவுள் சிலையைக் கூட அன்போட பாசத்தோட எல்லார் முன்னிலையில் கட்டிப் பிடிக்கலாம்."



சத்தமாக சிரித்தாள் மகாலஷ்மி.

"அப்படியா.. அது கல்லாக இருக்கும் வரைதான் கட்டிப் பிடிக்கலாம். அதுக்குள்ளே ரத்தமும், சதையும், நரம்பும் இருந்தா.. பிரச்சனைதான்."

"தாயே ஆளை விடு.. பச்சையா கண்ணாடி மாட்டிகிட்டு.. வெள்ளைப் பேப்பரைப் பார்த்தாலும் பச்சையாதான் தெரி யும். அதுக்கு கண்ணாடியைத் தான் கழற்றிப் போடணும். பேப்பரைக் கிழிக்கக் கூடாது. குறை கூறவும் கூடாது. அப்படிச் சொன்னா அது உன்னோட முட்டாள் தனம்."

"சரி என்னோட முட்டாள் தனம் என்னோட போகட்டும்.. நீ ஏன் இரண்டு நாளாய் எதையோ பறி கொடுத்த மாதிரி இருக்க?"

"இனிமேல் பறிகொடுக்க என்னிடம் என்னக்கா இருக்கு?"

"வீணா எதையாவது பேசாதே."

"வீணாகப் பேசல. கொஞ்ச நாளாக சந்தோஷமாகத்தான் இருந்தேன். ஆனா இப்போ தப்பு பண்ணிட்டோமோங்ற பயம். வீணா உன்னையும் கஷ்டப்படுத்துறோமேன்னு என் மனசாட்சியே என்னைக் குத்துதுக்கா."

"டேய்! கண்ணா! என்னம்மா இது. தப்பு எதுவுமே உன் மேல் கிடையாது. கண்டதை எல்லாம் நினைச்சிதான் உடம்பைக் கெடுத்துக்கிறியா? வேண்டான்டா.. கல்யாணம் பண்ணிக்க. புது உறவுகள் உன் உணர்வுக்கும், ஆசைக்கும், கற்பனைக்கும் நிச்சயமாக வடிகாலா இருக்கும்."

"அது வடிகாலாக இருக்காது. வேதனையாத்தான் இருக் கும். முந்தாநாள் என்னை நந்தா பார்க்க வந்திருந்தார்."

"நந்தாவா?"



"இம்."

"எந்த நந்தா?"

"எந்த நந்தாவா.. எத்தனை நந்தாவை உனக்குத் தெரி யும்?"

"புரியலைடா."

"அவன்தான்.. அமெரிக்காவில் செட்டில் ஆகறதாகச் சொல்லி..." அதற்கு மேல் பேச விடாமல் தடுத்தாள் மகா லஷ்மி.

"வந்து என்ன சொன்னான்?"

"எதையும் நான் சொல்லவிடலை. வெளியே அனுப்பிட் டேன்."

"நல்ல காரியம் பண்ணின.. அதற்கு அப்புறமாவது பார்க்க வந்தானா?

"ம்கூம்."

"பயந்துட்டியா?"

"இல்லக்கா.. பயமெல்லாம் இல்லை. எதுக்காக பயப்பட ணும்? நான் மறக்கணும்னு நினைக்கும்போதெல்லாம் அந்த நினைப்பு இன்னும் அதிகமாகுது. அது மட்டும் இல்லாமல் இப்படி நேரடியாகவே வந்து நின்றால் நான் என்னக்கா பண்றது?"

"நீ ஒன்னும் பண்ண வேண்டாம். கம்முனு ரெஸ்ட் எடு. அதுக்குத்தானே லீவ் போட்ட.. நான் டிபன் பண்ணி எடுத்து கிட்டு வரும் வரைக்கும் சின்னதாக சோபாவிலேயே ஒரு தூக்கம் போடு" ஆறுதலாய் கூறி.. தலை கோதி விட்டு தோளைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

துர்காவும் ஒரு பக்கமாய் சோபாவில் சாய்ந்து படுத்தாள். மூட முடியாமல் கஷ்டப்பட்ட விழிகள்.. தங்களை உள்ளே செருகிக் கொண்டு.. இமைக் கதவையும் வலுக்கட்டாயமாக இழுத்து சாத்திக் கொண்டன.

எண்ணம் மூன்று வருடங்களுக்குப் பின்னோக்கி அசுர வேகத்தில் சென்றது. அப்போது அவள் வேலை பார்த்துக் கொண்டு இருந்தது.

மதுஸ்ரீ அட்வர்டைசிங் கம்பெனியில்..

லஞ்ச் முடிச்சதும் சும்மா இருக்க முடியாமல்.. அன்றைய தினசரிகள் எல்லாவற்றையும் புரட்ட அள்ளிக் கொண்டு தன் டேபிளுக்கு வந்தாள்.

தமிழ் தினசரி ஒன்றில் முதல் பக்கம் முக்கிய அறிவிப்பு என்று கட்டம் கட்டிய அந்த அறிவிப்பு அவள் கண்களை உறுத்தியது. மற்ற பக்கங்களையும், பேப்பர்களையும் அப்புறப் படுத்தி விட்டு... தன் சேரில் சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டு... அந்த அறிவிப்பு பேப்பரை மட்டும் நான்காய் மடித்து டேபிள் மேல் வைத்து, தன் தாடையை தன் இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு ஆர்வமாய் பார்த்தாள். அந்த விளம்பரத்திற்கு கொடுக்கப்பட்டு இருந்த தலைப்பே... அவள் உள்ளத்தைக் கொஞ்சம் உசுப்பித்தான் பார்த்தது.

**கடவுள் வாழும் உள்ளங்களுக்கு கண்ணீர் தளும்பும் விழிகளின் விண்ணப்பம்.**

**இதயத்தில் ஈரம் சுமந்தவர்களா நீங்கள் என்று ஆரம்பித்து இப்படிக்கு,**

**உதிரத்தோடு விளையாடும் விழிகள் நான்கு..**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**



**டாக்டர் மனோஜ்குமார்**

**மனோஜ்குமார் நர்ஸிங் ஹோம்**

**பெசன்ட் நகர், சென்னை - 90.**

ஒரு முறைக்கு பலமுறை படித்தாள். மீண்டும் மீண்டும் அந்த வரிகள் அவளைப் படிக்கத் தூண்டியது. இரத்தத்தையும் நரம்பையும் ஒன்றாய் சேர்த்துப் பிசைந்தது. என்னால் அவர்களுக்கு உதவ முடியுமா? அப்படி ஒரு வாய்ப்பை கடவுள் எனக்குக் கொடுப்பாரா?

எப்போது 5.30 ஆகும் என்று காத்திருந்து, வெளியே பறந்தாள்.

மருத்துவமனையின் உள்ளே நுழையும்போதே...

அதன் தரம் புருவம் உயர்த்த வைத்தது.

சுறுசுறுப்பாய் ஹாஸ்பிடல் இயங்கிக் கொண்டு இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே...

ரிசப்ஷன் அருகில் சென்று...

''எக்ஸ்க்யூஸ்மீ...'' என்றாள்.

''எஸ்.''

''டாக்டர் மனோஜ்குமாரைப் பார்க்கணும்.''

''அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா?''

''இல்லை.''

''ஸாரி மேடம். அவர் அப்பாயின்மெண்ட் இல்லாமல் யாரையும் பார்ப்பது இல்லை.''

தயக்கமாகப் பார்த்தாள்.



''எஸ்... மேடம்... அவரைப் பார்ப்பது ரொம்பக் கஷ்டம்... அடுத்த வருடம் ஜுன் வரை அவர் அப்பாயின்மெண்ட் கொடுத்து இருக்கிறார்.

''இல்லங்க... ரொம்ப அர்ஜெண்ட்'' என்றபடி தன் ஹேண்ட் பேக்கில் பத்திரமாய் எடுத்து வைத்திருந்த அந்த விளம்பர பேப்பரைக் காட்டினாள். அதை வாங்கிப் பார்த்த ரிசப்ஷனிஸ்ட்...

வியப்பாய் துர்காவைப் பார்த்து...

''எப்படி இருந்தாலும் டாக்டர் இப்போ ரவுண்ட்ஸ் போயிருப்பார்.''

''ப்ளீஸ் மேடம்... ட்ரை பண்ணிப் பாருங்க.''

''ஜஸ்ட் எ மினிட்.''

துர்காவின் துரதிர்ஷ்டம் மனோஜ்குமார் லைனில் அகப்பட்டார். விஷயம் அறிந்ததும் இன்னும் பத்து நிமிடங்களில் தான் ரூமில் இருப்பேன் என்றும் அந்தப் பெண்ணை தன் ரூமிற்கு அழைத்து வந்து வெயிட் பண்ணவும் சொன்னார்.

ஒரு நர்ஸை அழைத்து துர்காவைக் காட்டி...

''இவங்களை சீப் டாக்டர் ரூமிற்குக் கூட்டிகிட்டுப் போங்க'' என்றாள் ரிசப்ஷனிஸ்ட்...

''டாக்டர் ஸாரோட ரூம் இதான். நீங்க உள்ளே போய் வெயிட் பண்ணுங்க'' அறையைக் காட்டிவிட்டு நகர்ந்தாள்.

ஏறக்குறைய பாதி லேப்பை நிறைத்துக் கொள்ளும் விஞ்ஞான எக்யூப்மெண்ட்ஸ் அனைத்தும் அவருடைய ரூமில் நிறைந்து இருந்தது. உட்காராமல் ஐந்தாறு நிமிடங்கள் நின்ற



படியே அந்த அறை முழுவதும் நோட்டம் இட்டு, பிரமிப்பாய் விழிகளை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உட்கார்லேம்மா'' பின்னால் இருந்து குரல் வந்ததும்...

சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். காதில் இருந்த ஸ்டெத்தை கழற்றிக் கொண்டே வந்தார் டாக்டர் மனோஜ்குமார். 50ஐ தாண்டிய வயது. ஆனால் குறைவாய் வயது கணிக்கக்கூடிய கம்பீரம்... எலுமிச்சை கலர்... சிரிக்கும்போது பற்களும் எந்தவிதக் குறைகளும் இல்லாமல் ஆரோக்கியமாக இருந்தது. இன்னொரு முறை சிரிக்க மாட்டாரா என்று ஏக்கம் கொள்ளும் வகைச் சிரிப்பு. முகம் பார்த்தே பேசத் தோன்றும்.. கனிவான களையான முகம்.

''உட்காரும்மா'' என்றார்.

தலையாட்டிக் கொண்டே அமர்ந்தாள்.

''அட்வர்டைஸ்மெண்ட் பார்த்து வந்தியா?''

''ஆமாம் டாக்டர்.''

''என்ன விசயம்னு தெரியுமா?''

''தெரியாது... தெரிஞ்சா என்னால முடிஞ்சா கண்டிப்பா செய்வேன்.''

''கல்யாணம் ஆயிடுச்சா?''

''இல்ல டாக்டர்.''

''அப்போ வேண்டாம்மா... வேற யாரையவாது பார்த்துக்கிறோம்.''

''ஏன் டாக்டர்... கல்யாணம் ஆனவங்கதான் வேணுமா? அவங்களால தான் உங்களுக்கு உதவ முடியுமா?''

"அப்படி இல்லம்மா... ரிஸ்க் வேண்டாம்னு பார்க்கிறேன்... உன்னோட நல்லதிற்காகத்தான் உதவி பண்ற மனப்பான்மை உள்ள கல்யாணம் ஆன பொண்ணுங்களே... விஷயத்தை கேள்விப்பட்டதும் வந்த சுவடே தெரியாமல் போய்ட்டாங்க."

"எல்லாரும் எல்லார் மாதிரியும் இருந்திட மாட்டாங்க டாக்டர். என்னால முடிஞ்ச உதவியைச் செய்யணுங்கிறது என்னோட பாலிஸி. விஷயத்தை சொல்லுங்க டாக்டர்."

"இல்லம்மா வேண்டாம்."

"ப்ளீஸ்... இவ்வளவு தூரம் நான் வந்ததிற்காவது விஷயத்தை சொல்லலாமே."

"அதும்மா... ஒரு குழந்தையைப் பெத்துக் கொடுக்கணும்."

அதிர்ச்சி என்றால் சரியாக இருக்காது. மூச்சு காற்றே சில விநாடிகள் நின்று பிறகுதான் துர்காவிடம் இருந்து வெளி வந்தது.

# 6

டாக்டர் மனோஜ்குமார் வீட்டில் அவரின் பர்சனல் அறை. அவருக்கு எதிரே நந்தா... நந்தாவின் மனைவி சுபலா... துர்கா மூவரும் அமர்ந்து இருக்கின்றார்கள். துர்காவையே வைத்த கண் வாங்காமல் நந்தாவும் அவன் மனைவியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மௌனத்தை கலைக்க டாக்டரே பேசினார்.



"இங்க பாரும்மா துர்கா.. ஒரு முறைக்கு ஆயிரம் முறை யோசிச்சுக்கோ... இது சாதாரண விஷயம் இல்லை. அது மட்டும் இல்லாம உன்னைச் சார்ந்தவங்க யார் கிட்டேயும் கலந்து ஆலோசிக்காமல் தனிப்பட்ட முறையில் நீ எடுத்த முடிவு.

"இங்க பாரும்மா. நீ பேசறது எனக்கு வியப்பா இருக்கு... இப்படிக் கூட ஒரு பெண்ணால உதவி செய்ய முடியுமான்னு ஆச்சர்யமா இருக்கு... உன்னோட எதிர்கால வாழ்க்கை பத்தி உனக்குக் கவலை இல்லையா?"

"எதிர்கால வாழ்க்கைன்னு நீங்க எதைச் சொல்றீங்க?"

"கல்யாண வாழ்க்கை."

"சரி டாக்டர் அதுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"என்னம்மா நீ புரியாத மாதிரி பேசற... ஒரு குழந்தைக்குத் தாயான பொண்ணை யாரும்மா கல்யாணம் பண்ணிக்க முன் வருவா?"

"அப்படி ஒரு குறுகிய மனப்பான்மை உள்ளவர் என்னைக் கல்யாணமே பண்ணிக்க வேண்டாம் டாக்டர். மனசாலயும் சரி.. உடம்பாலயும் சரி நான் எந்தத் தப்பும் பண்ணப் போறது இல்லை. இதுநாள் வரை காதல்ங்கிற சின்ன சலனம்கூட எனக்குள் ஏற்பட்டது இல்லை. கிட்னி தானம் பண்ற மாதிரி... கண் தானம் பண்ற மாதிரி... என் கருப்பையில் இவரோட குழந்தையை சுமந்து கொடுக்கப் போறேன்... இதுல எந்தத் தப்பும் இருக்கிறதா எனக்குத் தோணலை."

"அதுக்கில்லம்மா" என்ற டாக்டரை அதற்கு மேல் பேச விடாமல் தடுத்தாள் சுபலா. "டாக்டர் இதுவரைக்கும் எத்தனை பேரை பார்த்தோம்.. எல்லாரும் பணத்துக்காக வந்தாங்க அப்படி வந்தவங்களும் பாதிப் பேருக்கு மேல் ஒத்துக்கலை...



ஒத்துகிட்டவங்களையோ எங்களுக்குப் பிடிக்கலை. என் நந்தாவோட உயிர்... ஒரு நல்ல பெண்ணோட கர்ப்பத்துல தான் குழந்தையாகணும்... ஆயிரம் நல்ல பொண்ணுங்களை ஒண்ணா சேர்த்தால்கூட துர்காவிற்கு ஈடாகாது ஸார்" அவள் பேச்சில் உணர்ச்சியின் வேகமும்... எங்கே இந்த டாக்டர் துர்காவைக் குழப்பி விடுவாரோ என்ற பயமும் இருந்தது.

சட்டென துர்காவின் கைகளைப் பற்றிக் கொண்டு... பலம் கொண்ட மட்டும் அழுத்தி தன் நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டாள். துர்காவிற்கு தர்ம சங்கடமாகப் போய் விட்டது... நாசுக்காக தன் கைகளை விடுவித்துக் கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நந்தா.. துர்காவைப் பார்த்து நீர் தளும்பும் விழிகளோடு கைகூப்பினான்.

"உங்களைப் பேர் சொல்லி கூப்பிடக் கூட எங்களுக்குத் தகுதியில்லை. இந்த அளவு நாங்க புண்ணியம் பண்ணி இருப்போம்னு நினைக்கவே இல்லை. வானத்து தேவதையையே கடவுள் அனுப்பி வச்ச மாதிரி இருக்கு. எங்க இரண்டு பேரையும் பற்றி நீங்களும் தெரிஞ்சிக்கணும், நாங்க ரெண்டு பேரும் கல்யாணத்துக்கு முன்னாலும் சரி... கல்யாணத்துக்குப் பின்னாலயும் சரி காதலர்கள்தான். ரொம்ப கஷ்டப்பட்டு.. எங்களோட பேரண்ட்ஸை சம்மதிக்க வச்சோம். எங்களுக்குக் கல்யாணம் ஆகி ஒரு வருடம்தான் ஆகுது. இவ்வளவு சீக்கிரம் குழந்தை வேண்டாம்னு தோணிச்சி... பெரியவங்க சும்மா இல்லை... ஏற்கெனவே வேண்டா வெறுப்பான மருமகள்... குழந்தை வேண்டும்னு அடம் புடிக்க ஆரம்பிச்சிட்டாங்க. அவங்களைவிட்டு விலகிப் போக எங்களுக்கு ஒரு நிமிடம் ஆகாது. ஆனா, அது எங்களால முடியாது. இன்று நான் அமெரிக்க சிஸ்டம் அனாலிஸ்டுன்னா... முழுக்க முழுக்க எங்கப்பா அம்மாதான் காரணம். அவங்களும்



சந்தோஷமா இருக்கணும். நாங்களும் சந்தோஷமா இருக்கணும். யோசிச்சுப் பார்த்து குழந்தை பெத்துக்கறதுங்கற முடிவிற்கும் வந்தோம். ஆனா, ரெண்டு மூன்று முறை சுபலாவிற்கு டி.என்.சி. ஆயிடுச்சி. அதுக்கு மேலேதான் செக்கப்பிற்கு வந்தோம். சுபலாவோட கர்ப்பப்பை ரொம்ப பலகீனமாக இருக்குன்னாங்க... அதுக்கு ஒரு குழந்தையைத் தாங்கிக்கற சக்தி இல்லன்னு தெரிஞ்சது.

"இது என்னோட அப்பா அம்மாவிற்குத் தெரிந்தால் பெரிய பிரச்னை ஆகும். குழந்தையைத் தத்தெடுக்க நிச்சயம் சம்மதிக்க மாட்டாங்க. இரண்டாவது திருமணத்தைப் பற்றி பேச்சு வரும். சுபலா இல்லாம நான் இல்லை. அதன் பிறகு ரெண்டு பேரும் யோசித்தபோது... இந்த முடிவுதான் சரின்னு தோணிச்சு..."

"ஏன் மிஸ்டர் நந்தா... இந்த விஷயத்திற்கு உங்கப்பா அம்மா... இவங்களோட அப்பா அம்மா சம்மதிப்பாங்களா?" தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

"அவங்க யாருக்குமே நாங்க இதைச் சொல்லப் போவது இல்லை. இன்னும் மூன்று மாதங்களில் இரண்டு பேருமே அமெரிக்கா போகிறோம். அங்கிருந்தே சுபலா கர்ப்பமாக இருப்பதாக இரண்டு வீட்டிற்கும் லெட்டர் போடப் போகிறோம். இவள் எப்படி இருக்கின்றாள் என்று யாரும் அங்கு வந்து பார்க்கப் போவது இல்லை. பத்தாவது மாதம் இரண்டு பேருமே மெட்ராஸ் வந்துவிடுவோம். வீட்டுக்குத் தெரியப் படுத்தப் போவதும் இல்லை... குழந்தை பிறந்ததும் குழந்தையோடு வீட்டில் நிற்கப் போகின்றோம். இதற்கிடையில் சுபலா கர்ப்பமாக இருப்பதுபோல் பல போட்டோஸ் எடுத்து வீட்டிற்கு அனுப்பிடுவோம். ஏன்னா எந்த சந்தேகமும் வரக்கூடாது பாருங்க" என்றான்.

"ஐடியா நல்லாதான் இருக்கு. இது நாம நினைச்சபடிதான் நடக்குமா?" என்றான் நந்தா.

"நடக்கணும்" உறுதியாய் கூறினாள் சுபா.

"உங்களுக்கு எதுவும் பிரச்னை இல்லையே."

"நான் பேஸ் பண்ண வேண்டிய ஒரே ஆள் என்னோட அக்காதான். அவளை என்னால் சமாளிக்க முடியும்."

"...அ...ப்...பு...ற...ம்... உங்களுக்குப் பணம்?" இழுத்தான் நந்தா.

"நிச்சயமா வேணும்... உங்க குழந்தை பூமிக்கு வரும். அத்தனை செலவையும் ஏத்துக்கப் போறீங்க. எனக்கு எவ்வளவு கொடுக்கணும்னு ஆசைப்பட்டீங்களோ... அந்தத் தொகையை... இந்த அனாதை ஆசிரமத்திற்கு ட்ராப்டா அனுப்பிடுங்க" என்று தான் கையோடு கொண்டு வந்த கண்ணிழந்த பிள்ளைகள் வாழும் ஆசிரமத்தின் விசிட்டிங் கார்டைக் கொடுத்தாள். அதை பிரமிப்பு நீங்காமல் வாங்கி தன் பர்சிற்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

டாக்டர் மனோஜ்குமார் எழுந்து நின்று, துர்காவைப் பார்த்து-

"என் பக்கத்துல வரியாடா?" என்றார்.

"இம்" எழுந்து அவருக்கு அருகில் போய் நின்றாள்.

அவளை மேலும் கீழும் பார்த்தவர், அவள் முகத்தை தன் கைகளுக்குள் சிறைப்படுத்தி உச்சி மோர்ந்து-

"நல்லா இருக்கணும்... வாழ்நாள் முழுக்க எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷத்தை மட்டுமே நீ பார்க்கணும்மா"



என்றார். சிறிது நேரம் அந்த சூழ்நிலை மௌனத்தை விடாப் பிடியாய் சுற்றிக் கொண்டது. யார் யாருக்கு நன்றி சொல்வது என்று தெரியாமல் கண்களால் மட்டுமே பேசினார்கள். துர்காவை நம்ப முடியாமலும், நம்பித்தான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சுய நினைவு இல்லாமல் பேசுகின்றாளா? குழப்பமாக இருந்தது. இதையும் மீறி துர்கா அவர்கள் மூன்று பேரின் இதயங்களிலும் குண்டூசி குத்தக்கூட இடம் இல்லாமல் நிறைந்து இருந்தாள்.

"மிஸ்டர் நந்தா நீங்களும் உங்க மனைவியும் ஹால்ல கொஞ்சம் வெயிட் பண்றீங்களா?"

"ஓ.கே. டாக்டர்" என்றபடி சுபாவோடு வெளியேறினான். வெளியே செல்லும்போது நன்றிப் பெருக்கோடு துர்காவின் தோளைத் தொட்டு அழுத்திவிட்டுத்தான் சென்றான்.

"துர்கா! நல்லா யோசிச்சிக்கம்மா."

"டாக்டர்... உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். சுயநினைவோடு நான் எடுத்த முடிவுதான்."

"பின்னால வருத்தப்பட மாட்டாயே."

"நான் முடிவு எடுத்துட்டா... பேஸ் பண்ணித்தான் பழக்கம்... வருத்தப்பட்டுப் பழக்கம் இல்லை. என் முடிவின் மேல் எனக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டு."

"இதுக்கு மேல நான் சொல்ல என்னம்மா இருக்கு?... உன்னோட முடிவினால்தான் நானே ஒத்துக்கிறேன். பர்ஸனலாக உன்னை இதில் ஈடுபடுத்துவதில் எனக்கு விருப்பம் இல்லம்மா... உன் வாழ்க்கை இதனால பாதிக்கப்படுமோங்கற அச்சம் இருக்கு."

"நீங்க எதுக்கும் பயப்படாதீங்க டாக்டர். என் கவலை எல்லாம் என் அக்காவை எப்படி சமாளிக்கப் போகின்றோம்



என்பதுதான். இவ்வளவு அன்னியோன்யமாக இருக்கிற தம்பதிகளுக்கு என்னால உதவ முடியறதை நினைத்து எனக்கு அதிக அளவு சந்தோஷம்தான்."

"என்னமோம்மா... உன் பேச்சு எல்லாமே சில நேரம் ஆச்சர்யமாவும்... வியப்பாவும்... பெருமையாவும்... எதார்த்தத்திற்கு புறம்பானதுமாக இருக்கு."

"அடுத்தவங்களுக்கு உதவி பண்ணணும்னு நினைப்பது எதார்த்தத்திற்கு புறம்பானதா? வேடிக்கையா இருக்கு டாக்டர்" சிரித்தாள்.

"சரிம்மா... உன் பீரியட் டைம் என்ன?"

"எதுக்கு டாக்டர்."

"ஏற்கெனவே நந்தாவோட உயிர் அணு இங்கே இருக்கு... உன் டேட்ஸ் தெரிஞ்சா அதற்கு ஏற்றாற்போல் அரேஞ் பண்ணலாம்."

"பீரியட் முடிஞ்சி நான்கு நாட்கள் ஆகுது டாக்டர்."

"அப்படியா.. சரிம்மா ஹாஸ்பிடலில் எல்லாவற்றையும் அரேஞ்ச் பண்ணிவிட்டு உனக்கு போன் பண்றேன்."

"டாக்டர் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்."

"சொல்லும்மா."

"காலையிலேயே நீங்க எல்லாம் ரெடிபண்ணிட்டா... மாலை வீட்டுக்குப் போயிடுவேன்.. என்னோட அக்காவிற்கு எந்த சந்தேகமும் வராது."

சங்கடமாய் "சரி" என்றார்.

அடுத்த இரண்டாவது நாள் மனோஜ்குமாரின் ஹாஸ்பிடலில்... விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாய்...



நந்தாவின் உயிர் அணு துர்காவின் கருப்பை முட்டையோடு ஊசி மூலம் சேர்க்கப்பட்டது. நன்றி சொல்ல வழி இல்லாமல் நந்தாவும் சுபாவும் கண்ணீரோடு வார்த்தைகள் வெளி வராமல் நின்றார்கள்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக நந்தாவின் குழந்தை துர்காவிற்குள் வளரத் துவங்கியது. இல்லாத காரணத்தைச் சொல்லி... டூ வீலரில் போவதைத் தவிர்த்தாள்... சரியாய் அந்த நாட்களில் தான் அப்படி இருப்பது போல் நடித்தாள்.. மகாலஷ்மிக்கு எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. எப்படி அவளுக்கு சந்தேகம் வரும்... தங்கையைத் தவிர இந்த உலகத்தில் இருப்பவர்கள் அனைவரும் அயோக்கியர்கள் என்று நம்பிக் கொண்டு இருப்பவள். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் முடியும் தருவாய்...

மேனியில் பளபளப்பு கூடியது. அதுவும் மகாலஷ்மியின் கண்களை உறுத்தவில்லை.

அன்று காலை 11.00 மணி இருக்கும். வழக்கம்போல் தன்னுடைய இரண்டாவது ரவுண்ட்ஸை முடித்துக் கொண்டு தன் அறைக்கு வந்தார் டாக்டர் மனோஜ்.

அவர் கண் முன்பு 16 என்ற தேதி பளிச்சிட்டது.

'ஓ இன்று துர்கா செக்கப்பிற்கு வரும் நாளாயிற்றே..' செய்தி நினைவுக்கு வந்தது. கண்களை மூடி ஓய்வு எடுக்கலாம் என நினைத்தபோது...

பர்சனல் போன் தன்னை எடுக்கச் சொல்லி அழுதது...

சலிப்பில் கையில் எடுத்தவர்... ரிசீவரை காதுக்கருகே கொண்டு சென்றார்.

"ஹலோ."

"சார் நான் நந்தா."

"என்னப்பா... துர்காவைப் பார்க்கணுமா?"

"இல்ல ஸார்... எனக்காக ஒரு ஹெல்ப் பண்ணுங்க ஸார்?"

"என்னப்பா?"

"என்னைத் தப்பா நினைக்காதீங்க ஸார்."

"சொல்லுப்பா."

"துர்காவோட வயிற்றில் வளரும் என்னோட குழந்தையை அழிச்சிடுங்க ஸார்" கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது டாக்டருக்கு.

## 7

தன் காதுகளையே நம்ப முடியாமல் உறைந்து போய் உட்கார்ந்து இருந்தாள் துர்கா. ஏகப்பட்ட எரிமலைகள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறியதில் வெளிப்பட்ட மாக்மா குழம்பில் தன்னை மட்டும் தூக்கிப் போட்டது போல் தவித்தாள். அதிர்ச்சியில் திறந்த வாயை மூடவே இல்லை.

மனோஜ்குமார் கூறிய செய்தி கேட்டு, தான் இன்னும் உயிரோடு இருக்கின்றோமோ என்றுகூட சந்தேகம் ஏற்பட்டது. காது சவ்வுக்குள் ஆயிரம் ஊசிகள் ஒன்றாய் உள்ளே நுழைந்தது போல் இருந்தது.

நிதானத்திற்கு வந்தவள்...



"டாக்டர் ஆர் யூ ஜோக்கிங்?" குரலில் ஜீவனே இல்லாமல் கேட்டாள். தன் சேர் விட்டு எழுந்து வந்தவர் துர்காவின் தோளைத் தொட்டு...

"இல்லம்மா... உண்மைதான். காலையில நந்தா சொன்னபோது உனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைவிட ஆயிரம் மடங்கு எனக்கு அதிகமாக இருந்தது."

"அவங்க ரெண்டு பேரையும் நான் நேர்ல பார்க்கணும் டாக்டர்."

சோகமாய் சிரித்தார்.

"நந்தா ஒரு கோழைம்மா.. உன்னோட நிழலைப் பார்க்கக் கூட அவங்களுக்கு தகுதி இல்லம்மா அப்படி இருக்கும் போது... உன்னை நேரில் சந்திக்கும் துணிவு இருக்காது."

"அவங்களுக்கு இல்லாட்டி பரவாயில்லை. அவங்களைப் பார்க்கிற தைரியமும் சரியான காரணமாக இருந்தா மன்னிக்கிற மனசும் எனக்கிருக்கு."

"அவங்க இரண்டு பேரும் மதிய ப்ளைட்டுக்கே அமெரிக்கா கிளம்பியாச்சு."

"ஓ..., எல்லாம் திட்டம் போட்டுத்தான் நடக்குதா?"

"இது திட்டம் இல்லம்மா... எல்லாம் தலைவிதி."

"அவங்களுக்கு சப்போட்டா டாக்டர்."

"இல்லடா... திட்டம் போட்டது என்னவோ குழந்தைக்காகத் தான். ஆனா அதையே கலைக்க ஏற்பட்ட சூழ்நிலை... சஞ்சலமான மனசுதான்."

"யாருக்கு?"

"அதெல்லாம் சொல்லி... உன் மனசை நான் நோகடிக்க விரும்பலை."



"அப்போ விஷயம் உங்களுக்குத் தெரியும்"

"தெரியும்" நிதானமாகச் சொன்னார்.

"எங்கிட்டே சொல்ல மாட்டீங்க அப்படித்தானே."

"ஆமாம்மா."

"சரி டாக்டர்... நான் வரேன்."

"துர்கா! எங்க கிளம்பிட்டே...? இனிமே கடத்துற ஒவ்வொரு நாளும் உன் உயிருக்கே ஆபத்தாய் முடியும். அதனால..."

"அதனால?" அவரின் முகம் பார்க்காமலே கேட்டாள்.

"இதுநாள் வரை இந்தக் கைகள் கருவைக் கலைத்தது இல்லை. முதலும் கடைசியுமா உனக்காகவே இருக்கட்டும்."

"ஸாரி டாக்டர். இந்தக் குழந்தை எனக்கு வேணும்" என்றதும் ஏதாவது விபரீதமான முடிவிற்கு வந்து விட்டாளா, என்று பதறிப் போனவர்.

"துர்கா!" என்றார்.

"ஆமாம் டாக்டர். ஒரு எறும்பை நசுக்குகிறதாக இருந்தால்கூட பல தடவை யோசிக்கிறவ நான். இந்த அளவுக்கு முன் வந்து இந்தக் குழந்தையைச் சுமக்குறதுக்கும் எதுக்கெடுத்தாலும் இரக்கப்படறதுதான் காரணம். அப்படியே வளர்ந்துட்ட நான் இந்தக் குழந்தையை எப்படி அழிக்க முடியும்? வேண்டாம் டாக்டர்... கை கால் முளைக்காத இந்தக் குழந்தைக்காக என் ரசனையை மாத்திக்கிட்டேன். சாப்பாட்டை மாத்திகிட்டேன். பஸ்ஸில் போறதே பிடிக்காத நான் பஸ்சல போய்கிட்டு இருக்கேன். இப்படி எல்லாம் என்னை மாற்றிய இந்த ஜீவனை நான் முழுசாப் பார்க்கணும்" என்று தன்



அடிவயிற்றின் மேல் இரு கைகளையும் கோர்த்தபடி வைத்துக் கொண்டாள்.

"துர்கா!"

"என் குழந்தை நல்லா வளர டானிக்கை கன்டின்யூ பண்ணுங்க டாக்டர்" அவளுடைய கன்ட்ரோலையும் மீறி குரல் தழுதழுக்க ஆரம்பித்தது.

"வரேன் டாக்டர்... கண்டிப்பாகத் திரும்ப வருவேன்.. என் குழந்தை இந்த ஹாஸ்பிடலில் தான் பிறக்கும்."

வீட்டிற்கு வரும் வரை எப்படித்தான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாளோ தெரியாது. காம்பவுண்ட் கேட்டில் கை வைத்தபோதே... கண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு புறப்பட்டது. உள்ளே நுழைந்ததும் ஹாலிலேயே விரித்துப் போடப்பட்டு இருந்த பாயில் போய் உட்கார்ந்து... சத்தம் இல்லாமல் கதறத் துவங்கினாள்.

மாலை நேரத்தில் குட்டித் தூக்கம் போடும் மகாலஷ்மி அப்போது எழுந்து பாத்ரூம் சென்று இருந்தாள். படுக்கையைச் சுருட்டவில்லை.

முகம் கழுவி நேராக ஹாலுக்கு வராமல்... கிச்சன் சென்று காபி ஒன்றையும் ஸ்ட்ராங்கா போட்டுக் குடித்துக் கொண்டே ஹாலுக்கு வந்தாள் மகாலஷ்மி. பொலிவோடும் சோர்வில்லாமல் இருந்தாள். இழுத்து இடுப்பில் சொருகி இருந்த சேலையைத் தளர்த்திக் கொண்டு உள்ளே வந்தவள், பாயில் துர்கா சுருண்டு படுத்துக் கிடப்பதைப் பார்த்து... வேகமாய் அருகில் வந்து அமர்ந்தாள்.. பாதி குடித்து முடித்த டம்ளரை தலையணைக்கு அப்பால் வைத்துவிட்டு...

துர்காவின் தோளைத் தொட்டாள்.

உடல் அனலாய் கொதித்தது. டெம்பரேச்சர் அளவுக்கு மீறிவிட்டது என்பதை சூடு தாளாமல் உதறிய கைகளே உணர்த்தியது.

''துர்கா... டேய் கண்ணம்மா... என்னடா ஆச்சு?'' தங்கையின் முகத்தை தூக்க அவள் கன்னத்தில் கை வைத்தபோது கன்னத்தில் ஓடிய கண்ணீரும் மகாலஷ்மியின் கைகளைப் பதம் பார்த்தது.

அழுகிறாளா?

என் செல்லம் அழுகிறாளா?

ஒரு நிமிடத்திற்குள் என்னென்னவோ தோன்றிவிட்டது. துர்காவை தன் மடியில் சாய்த்துக் கொண்டு... தலையை அழுத்தி பிடித்துவிட்டு... அவள் முகத்தையும், கழுத்தையும் தன் முந்தானையால் துடைத்துவிட்டு...

''என்னடா... உடம்புக்கு என்ன?'' அணைத்துக் கொண்டாள்.

நீர் தேங்கிய விழிகளோடு அக்காவைப் பார்த்தாளே தவிர... எதுவும் பேசவில்லை. உதடு மட்டும் துடித்தது... திரும்பவும் வீரியத்தோடு கண்ணீர் புறப்பட்டது.

''என்னடா செல்லம்... என்ன... மாத்திரை எடுத்துகிட்டு வரட்டா?''

''ம்ஹூம்'' தலையாட்டி மறுத்தாள்.

''சொல்லும்மா.. உடம்புக்கு என்ன பண்ணுது.. காய்ச்சலைத் தாங்க முடியலையாம்மா?''

''அ...க்...கா'' திணறினாள்.

''என்னம்மா...'' வார்த்தையில் அன்பு அப்படி வடிந்தது.



''அ....க்...கா...'' திணறினாள்.

''தண்ணீர் கொண்டு வரட்டா?''

''வேண்டாங்கா.''

''என்னம்மா...'' கொதித்த துர்காவின் நெற்றியில் குளிர்ந்த தன் இதழை வைத்தாள்.

''நா...ன்... நா...ன்... நல்...ல...வ...தா..னே?''

''என்னடா இது பைத்தியக்காரத்தனமான கேள்வி... நீ வைரம்டா.''

''நான்... ஒரு த...ப்...பு.. பண்ணிட்டேன்.''

''அ..த.. பற்றி அப்புறம் பேசலாம்... முதல்ல டாக்டருக்கு போன் பண்ணிட்டு வரேன்'' என்றபடி தங்கையை தலையணையில் சாய்த்துவிட்டு... எழ எத்தனிக்கும்போது...

''டாக்டர் வேண்டாங்கா... உங்கிட்டே பேசணுங்கா'' கெஞ்சினாள்.

''என்னடா'' இதைத்தவிர வேறு வார்த்தையே மகாலஷ்மியின் வாயில் இருந்து வரவில்லை...

''நான்... நான்... நான்...''

''இம்... சொல்லு.''

''நான்... நா...ன்...க...ர்...ப்...ப..மா இருக்கேன்.''

''து..ர்...கா...ஆ..ஆ...ஆ..'' நொறுங்கிப் போய் எழுந்தவளை... பரிதாபமாகப் பார்த்து... கண்களாலேயே அமரச் சொன்னாள். எந்திரமாய் அமர்ந்தவள்.

''.........'' மௌனமாய் பார்த்தாள்.



''நான் மூன்று மாசம்.''

''எவனோ?''

''ஏகம்.''

''ஆபீஸ்ல யாராவது?''

''இல்லக்கா...''

''பின்னே.''

நடந்த அத்தனையையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள். பலத்த மழை காற்று புயலோடு கலந்து அடித்து ஓய்ந்தது போல் இருந்தது. அமைதியாய் இருந்தவளைப் பார்த்து...

''என்னக்கா... எதுவும் பேசமாட்டேங்கறே... நான் பொய் சொல்றேன்னு தோணுதா?''

''..........''

''என்னை ஓங்கி அறையணும்னு தோணலையா?''

''உன்னை அடிச்சி திருத்தற வயசா... இல்லை நான் ஆத்திரப்பட்டதினால... உன் வயித்துல வளர்ற குழந்தை இல்லாமப் போயிடுமா?''

''அக்கா'' எழுந்து உட்கார்ந்தாள்.

''உனக்குக் கனிவும், கருணையும் ரொம்ப அதிகம்னு எனக்குத் தெரியும். ஆனா உன் கருணை ஒரு கர்ப்பத்தை சுமக்கிற அளவு கொண்டு வந்து விடும்னு எதிர்பார்க்கல. இது வெளியில தெரிஞ்சா... நீ சொல்றதையும் யாரும் நம்ப மாட்டாங்க. உங்கிட்டே இப்படி பேசிகிட்டு இருப்பதையும் யாரும் நம்ப மாட்டாங்க...''

''நீ என்னை நம்பறியா?''



''இம்.''

''........''

''துர்கா... காதும் காதும் வச்ச மாதிரி கலைச்சிடு. அதுதான் எல்லாருக்கும் நல்லது.''

''இல்லக்கா... இந்தக் குழந்தை எனக்கு வேணும்... என்னை மத்தவங்க காரணமே இல்லாம ஏமாத்தின மாதிரி... இந்தக் குழந்தையை நான் ஏமாத்தப் போறது இல்லை...''

''பைத்தியக்காரத்தனமாக உளறாதே.''

''இல்லக்கா... எனக்கு இந்தக் குழந்தை வேணும்.''

''உன் எதிர்கால வாழ்க்கை... யோசி.''

''ஐ டோன்ட் கேர்... என்னைப் பத்தி எனக்குத் தெரியும். உனக்கும் தெரியும் எனக்கு அது போதும்.''

''துர்கா.''

''ப்ளீஸ்கா'' கை எடுத்துக் கும்பிட்டாள். அதற்கு மேல் மகாலஷ்மி எதையும் பேசவில்லை. துர்காவின் முடிவை மாற்ற யாராலும் முடியாது. அப்படி ஒரு பிடிவாதக்காரி... கட்டாயப்படுத்தினால் பிரச்னை பெரிதாகும். அவள் போக்கில் விட்டுத் தான் பிடிக்க வேண்டும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்காக கருப்பையை விட்டுக் கொடுத்தவள். இந்தக் குழந்தைக்காக உயிரை விடவும் தயங்க மாட்டாள். அதனாலேயே மிகவும் யோசிக்கத் தொடங்க தினம் தினம் செத்து செத்துப் பிழைத்தாள் மகாலஷ்மி.

வயிறு தெரிய ஆரம்பிக்கும்... பயம் பந்தாய் எந்நேரமும் தொண்டையை அடைத்துக் கொண்டு இருந்தது. பத்மநாபனிடம் வேறு விஷயத்தை மறைக்க வேண்டுமே... எப்படி? நெருப்பின் மேல் நின்றாள் மகாலஷ்மி.

அடுத்த தெருவில் ஒரு ஹாஸ்பிடல் இருக்கே!

அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஹாஸ்பிடலில் மகாலஷ்மியை அட்மிட் பண்ணி இருந்தாள்.

விசிட்டர் ஹாலில் உட்காரவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தவளை நோக்கி வேகமாய் ஒரு நர்ஸ் நெருங்கி... ஒரு ப்ரிஸ்கிரிப்ஷன் பேப்பரை நீட்டி...

"இந்த மருந்து உடனே வேணும்... எங்க ஹாஸ்பிடல்ல இல்லை."

"அக்காவுக்கு" கேட்டபடியே மருந்து சீட்டை வாங்கிக் கொண்டாள்.

"உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை."

"ஓ... தேங்க் காட்... நர்ஸின் கையைப் பிடித்து சந்தோஷமாய் அழுத்தி விட்டு மருந்திற்காக வெளியே பறந்தாள்.

கிட்டத்தட்ட மதியம் ஒரு மணி வரை மகாலஷ்மியைப் பார்க்க யாரையும் விடவில்லை. பத்மநாபன் அருகில் இருந்தால் தெம்பாய், தைரியமாய் இருக்கும் என்று இதோடு ஆறேழு முறை போன் பண்ணிப் பார்த்தாள்... காலையில் ஆபீஸ் வந்து கையெழுத்துப் போட்டவன்.. கம்பெனி விஷயமாக வெளியே சென்றவன் வரவில்லை என்ற பதில்தான் வந்து கொண்டு இருந்தது.

காலையில் குடித்த காபியோடு சரி... வயிறு வேறு எதையாவது கொண்டா என்று அடம் பிடிக்கத் துவங்கியது... அந்த நேரம் பார்த்து அவளைத் தாண்டிச் சென்ற அந்த டாக்டரைப் பிடித்து நிறுத்தினாள்.

"ஓ... நீங்க அவங்க சிஸ்டரா... இப்ப நல்லா இருக்காங்க... ஷீ ஈஸ் ஓ.கே. ஆனா இனிமே நல்லா இருக்கணும்னா..."



"டாக்டர்."

"பயப்படாதீங்கம்மா... அவங்க இதயம் ரொம்ப பலகீனமா இருக்கு. அதிர்ச்சியான எதையும் தாங்கிக்கற சக்தி அவங்களுக்கு இல்லை. பீ.பீ... சுகர் என்று ஏகப்பட்ட கம்ப்ளைன்ட்ஸ் இருக்கு... நீங்க... இன்னும் உங்க வீட்டில் இருக்கிறவங்க அவங்க மனசறிஞ்சி நடந்துகிட்டு... சந்தோஷமாக வச்சிருந்தாலே போதும்."

"இந்த மயக்கம்?"

"லோ பீ.பீ. தான் காரணம்... அவங்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் டென்ஷனைக் கொடுத்துடாதீங்க."

"நா அக்காவைப் பார்க்கலாமா?"

"இம்... டிஸ்டர்ப் பண்ணாமப் பாருங்க."

தலையாட்டிவிட்டு மகாலஷ்மி இருந்த அறைக்கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அப்போதுதான் மகாலஷ்மிக்கு மற்றொரு க்ளுக்கோஸ் பாட்டில் மாற்றப்பட்டது. வலது கையில் ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது. பத்து நாள் படுத்தவள் போல் சோர்ந்து கிடந்தாள். மகாலஷ்மியின் தலைக்கு அருகே போய் அமர்ந்து... கண்ணீரோடு மகாலஷ்மி நெற்றியில் கை வைத்தாள்.

"அக்கா!" மெலிதாக வார்த்தைக்கும் வலிக்குமோ என்ற குரல். அந்தக் குரலைக் கேட்டதுமே மகாலஷ்மியின் கண்ணுக்குள் சின்ன சலனம். கருவிழி உள்ளே உருண்டது... கொஞ்சம் சிரமப்பட்டே கண் திறந்தாள். விழிகளில் ஜீவனே இல்லை... சிரிக்க முற்பட்டு தோற்றுப் போனாள்.

"எப்படிக்கா இருக்கு?" கண்ணீர் மகாலஷ்மியின் முகத்திலேயே கொட்டியது.



"அ...ழா...தே..." உதடு விரிந்து சொற்களை வெளியிட்டாள்.

"கொஞ்ச நேரத்துல என்னை பயமுறுத்திட்டியே... என் உயிர் என் கையிலேயே இல்லக்கா" தேம்பத் துவங்கினாள்.

"ஏ...ய்... அ... ழாதே... நான்... தான் சொன்னேனே... ரொம்ப நா...ளை...க்கு இருக்க மாட்டேன்."

"அ....ப்படி எல்லாம் சொல்லாதக்கா" வாய் பொத்தினாள்.

"கல்யாணம் பண்ணிக்கம்மா."

"ஐயோ அக்கா... வேற வார்த்தையே உனக்குத் தெரியாதா?"

"வாழ்க்கையே நீதானடா... பண்ணிக்கம்மா."

"சரி... பண்ணிக்கிறேன்."

"நிஜமா?" மகாலஷ்மியின் முகத்தில் ஒளி ஒன்று பிறந்தது.

"சத்தியமா... முன்னப்பின்ன அறிமுகம் இல்லாதவனுக்காக கருவை சுமந்தவ நான்.

"அப்படிப்பட்ட பைத்தியக்காரி நான். உனக்காக உன் நிம்மதிக்காக... பொய் சொல்றேன்.. கல்யாணம் பண்ணிக்கிறேன்.. நீ மட்டும் என்னை விட்டுப் போய் விடக்கூடாது" வேகமாகவே அழத் துவங்கினாள்.

மகாலஷ்மிக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. தன் சாவைப் பற்றி துர்கா பயப்படத் தொடங்கி விட்டாள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.. முடிவெடுத்தாள்.



துர்கா சம்மதித்ததும்... தான் புதிதாய் அப்போதுதான் பிறந்தது போல் உணர்ந்தாள்.

நாட்கள் மிகமிக மெல்லத்தான் நகரத் துவங்கியது. அக்காவின் வெற்றி தங்கையின் உற்சாகத்தை கணிசமாக குறைக்கத்தான் செய்து இருந்தது. மகாலஷ்மி என்ன சொன்னாலும் சம்மதம் என்பது போல் தலையாட்டி வைத்தாள். இதில் ரிசப்ஷனிஸ்ட் வித்யா வேறு நந்தா யார் என்று துளைத்து எடுத்தாள்.

அவள் கேட்கும்போதெல்லாம் நம்பும்படியான சில பொய்களை உருவாக்கி, யார் என்று சொல்ல மறுப்பது கஷ்டமாக இருந்தது.

இரவு 11.00 மணி. தூக்கம் வரவில்லை.

தூக்கமும் பசியும் கொடுத்து வச்சவங்களுக்குதான் வரும், வேதனை ஏக்கப் பெருமூச்சாய் வெளிவந்து விழுந்தது.

சத்தமில்லாமல் கதவு திறந்தது. உள்ளே வந்த கையோடு துணிபிடித்து கொண்டு வந்த கிண்ணத்தை டேபிள் மேல் வைத்து விட்டு... சுவிட்சைத் தட்டினாள். சட்டென வெளிச்சம் பரவியதும்... போர்வைக்கு உள்ளேயே கண்கள் கூசியது... கழுத்து வரை போர்வையை விலக்கிப் பார்த்த துர்கா...

"டேய்!" என்றாள்.

"ம்." கண்களைத் திறக்காமலேயே பதில் சொன்னாள்.

"தூக்கம் வரலையா?"

"ம்."

அவள் அருகே அமர்ந்தாள் மகாலஷ்மி.

''துர்கா உனக்கு ஏற்ற ஜோடியைக் கண்டு பிடிச்சிட்டேன்... பேசியும் முடிச்சிட்டேன்.''

''அப்படியா'' குரலில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

''யார் என்னன்னு கேட்க மாட்டியா?''

''அது எனக்குத் தேவையில்லாத விஷயம்... உனக்குப் பிடிச்சி இருக்குல்ல விட்டுடு... அந்த ஆள் கருப்பா, சிவப்பா நொண்டியா, நொள்ளையா என்று எதுவுமே எனக்குத் தெரிய வேண்டாம்.''

''உனக்குப் பிடிக்கலைன்னா.''

''அந்தப் பேச்சுக்கே இடமில்லக்கா.. உனக்குப் பிடிச்சா போதும்... தாலி கட்டும்போது அவர் முகத்தைப் பார்த்துக்கிறேன். இந்தப் பொண்ணு பாக்குறேன்... அதைப் பார்க்கிறேன்... இதைப் பார்க்கிறேங்கற வேலை எல்லாம் வேண்டாம்... ப்ளீஸ்.''

''பேராவது?''

''எனக்கு தூக்கம் வருதுக்கா'' அதற்கு மேல் மகாலஷ்மி எதுவும் பேசவில்லை.

அடுத்த நாள் காலை...

கம்பெனிக்குள் நுழையும்போதே... ஆர்ப்பாட்டமாய் வரவேற்பு வித்யா... அவளைத் தூக்கி சுற்றாத குறைதான்...

''இப்டி ஷாக் கொடுத்துட்ட'' சந்தோஷத்தில் திணறினாள்.

''என்ன ஷாக்.''

''ஆய்... டபாய்கிற பார்.''



''என்ன வித்யா.''

''ஐயோ... இன்னும் என்னால நம்ப முடியல... நம்பாம இருக்கவும் முடியலை.''

''ப்ச்... சொல்லிட்டு ஆச்சர்யப்படு.''

''என்னை ஒரு தடவை கிள்ளேன்.''

''உதபடுவ... எதுக்கு வித்யா?''

''கிள்ளு.''

வேகமாய் துர்கா கிள்ளினாள்.

''ஸ்... ஆ... ஆ...'' வலி தாளாமல் துடித்தாள்.

''நிஜமே'' என்றாள்.

''என்ன.''

''இந்தா பேப்பர் பார்!''

பேப்பரை வெகு அலட்சியமாக வாங்கியவள்... முதல் பக்க கொட்டை எழுத்துக்கள் அவளை அப்படியே விழுங்கத் தொடங்கின...

பார்வை ஒவ்வொரு எழுத்தின் மேலும் பயமாய் உட்கார்ந்து எழுந்தது. அடுத்த எழுத்தை, வரியை வாசிக்க முடியாமலும் தடுமாறினாள்.

**நடிகர் அவினாஷின் திடீர் திருமண அறிவிப்பு.**

**மணமகள் பெயர் துர்கா!**

இன்னும் என்னென்னவோ இருந்தது. இதில் துர்காவின் புகைப்படமும் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. மூன்று வருடங்களுக்கு முன்பு வியாழன் மேல் வந்து மோதிய சூ மேக்கர்





விண்கல் போல்... அதே வேகத்தோடு தன்னை நோக்கி ஒன்றும் வருவது போல் பீதியடைந்து நின்றாள்.

## 8

வெள்ளிக்கிழமை காலை மிக எளிமையாக திருப்பதி ஏழுமலையான் சன்னிதானத்தில் துர்காவின் கழுத்தில் பெருமிதத்தோடு தாலி கட்டினான் அவினாஷ். பத்திரிகைகள் முன்பே விளம்பரப்படுத்தி விட்டதால்... ரசிகர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆந்திர போலீஸ் திணறி விட்டது. ஏகப்பட்ட நடிகைகள்... லட்சக்கணக்கான பெண் ரசிகைகள் துர்காவை நினைத்து... பொறாமைக் கடலில், வீடியோ கேமராக்கள் வேறு திணறடித்தது. துர்காவின் முகத்தில் சந்தோஷம் என்பது மருந்துக்குக்கூட எட்டிப் பார்க்கவில்லை. அப்படி ஒரு கடுமை முகத்தில் படர்ந்து இருந்தது. நிருபர்கள் கேட்ட அத்தனைக் கேள்விகளுக்கும் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தாள்.

இதே கடுகடுப்பு பத்மநாபன் முகத்திலும் பரவிக் கிடந்தது. ஆனாலும் வெளிகாட்டிக் கொள்ளாமல்... அவ்வப்போது சிரித்தும் வைத்தான். அந்தக் கூட்டத்தில் உண்மையான சந்தோஷத்தில் இருந்தது மகாலஷ்மி மட்டுமே. துர்காவின் முகத்தில் பரவிக் கிடந்த கோபத்தை இயலாமையை அவ்வளவையும் திருட்டுத்தனமாக ரசித்து தனக்குள் சிரித்தான் அவினாஷ். மறந்தும்கூட துர்காவின் பற்கள் கோடாய்கூட எட்டிப் பார்க்கவில்லை. மனது காரணத்தோடு திக்கு திக்கு என அடித்துக் கொண்டது. அவனைத் தனிமையில் சந்திக்கப்



போகும் நேரத்தை நினைத்தால்... எண்ணிக்கையில் அடங்காத பேதி மாத்திரையை அள்ளி விழுங்கியது போல் இருந்தது. திருமணம் ஒரு சந்தோஷமான சடங்கு... அதில் மனசில்கூட சந்தோஷம் இல்லாமல் இருந்த முதல் பெண் இவளாகத்தான் இருக்கும். தன் உடன் பணிபுரியும் சக தோழிகளை... ஊழியர்களைக் கூட துர்கா அழைக்கவில்லை. அவினாஷ்தான் நேரடியாக வந்து இவள் சார்பில் ரிசப்ஷனுக்கு எல்லோரையும் அழைத்து விட்டுச் சென்றான். இவள் கம்பெனிக்கு வந்தபோதெல்லாம் மரியாதையின் பொருட்டுக்கூட அவனிடம் ஒரு வார்த்தைக் கூட இவள் பேசவில்லை. எல்லோருக்கும் துர்காவின் நடவடிக்கை வியப்பாகத்தான் இருந்தது.

மதிய சாப்பாட்டை திருப்பதியிலேயே முடித்துக் கொண்டு... நெருங்கியவர்களோடு பிளைட் மூலம் சென்னைக்கு வந்தாள். மற்றவர்கள் எல்லாம் காரில் கிளம்பினார்கள்.

இரவு நேரம் நெருங்க நெருங்க... நிம்மதி இல்லாமல்... குழப்பமான மனநிலையில் என்னாகுமோ... என்னாகுமோ என்று தடுமாறினாள். அத்தனை தடுமாற்றத்தையும் முகத்தில் கொண்டு வராமல் இறுகிக் கிடந்தாள்.

அவள்ள விட்டு அவினாஷின் சொந்தங்கள் நகருமா?... நகருமா?... என்று காத்து இருந்தாள் மகாலஷ்மி. எல்லோரும் முதலிரவு அறை அலங்கரிக்க ஆர்வமாய் நகர்ந்தபோது... தங்கையோடு ஓரம் கட்டினாள்.

''என் கண்ணே பட்டுடும் போல இருக்குது ராஜாத்தி.''

''..........''

''சாதாரணமாகவே நீ கொள்ளை அழகு... இப்போ எப்படித் தெரியுமா இருக்க?''

"..............." தலையைக் குனிந்து கொண்டாள்.

"என் மேலே கோபமாடா செல்லம்... கல்யாணம் பண்ணி வச்சிட்டாளேன்னு ஆத்திரமா இருக்கா?"

"............"

"எல்லாம் உன் நல்லதுக்குத்தான். எத்தனை முறை இந்தப் பையன் என்னை வந்து பார்த்தாரு தெரியுமா? இவ்வளவு பெரிய ஆள் உன்னைத்தான் கல்யாணம் பண்ணனும்னு பிடிவாதமாக இருந்தது... உன்னோட அதிர்ஷ்டம்தான். ரொம்ப நல்ல குணமாத் தெரியுது பாத்து நடந்துக்கோ... உண்மையைப் பேசுறேன்னு உளறி வைக்காதே..."

"............."

அப்போதும் பேசாமல் அமைதியாகவே இருந்தவளின்... முகத்தை நிமிர்த்தி... நெற்றியிலும் கன்னத்திலும்... ஈரம் படாமல் முத்தமிட்டு... தோள் தடவி, கன்னம் தடவி... கூந்தல் தடவி...

"இந்தக் கல்யாணத்தில் உனக்கு விருப்பம் இல்லன்னு எனக்கு நல்லாவே தெரியும். நீ புத்திசாலி.. உனக்கு நான் புத்தி சொல்லணுங்கற அவசியம் இல்லை. குறைன்னு பார்த்தால் பசுவின் மடிக்குள் இருக்கும் பால்கூட கலப்படமாத்தான் தெரியும். நிறைன்னு நினைச்சா.. அழுக்கு சுவத்துலகூட அழகான ஓவியத்தைப் பார்க்கலாம். குறை இல்லாதவங்களே இங்கே யாரும் இல்லே. எதையும் நல்ல கோணத்திலேயே பார். சாமின்னு நினைக்கிறவனுக்கு சாமிதான். கல்லுங்கறவனுக்கு அது கல்லுதான். எல்லாரையும் நம்பிக்கையோடு பார். உங்கிட்ட இருக்கும் நிறை எல்லாம்... உன்னை சுத்தி இருக்கறவங்ககிட்டேயும் இருக்கணும்னு எதிர்பார்க்காதே... அவங்க அவங்களை அவங்கவங்க இயல்போட ஏத்துக்க கத்துக்க... அதுதான் உனக்கும் நல்லது... மத்தவங்களுக்கும் நல்லது



"..............."

"என்னடா... நான்பாட்டுக்குப் பேசிகிட்டு இருக்கேன்... நீ எதுவும் பேச மாட்டேங்கற..."

"..............."

"என் செல்லம்... நல்லபடியா நடந்துக்கோ... உன் மனசுல... ஆயிரம் சஞ்சலம் இருக்கு. ஆயிரம் கவலை இருக்கு. இதையெல்லாம் விட கோபம் இருக்கு. இது எல்லாத்தையும் எச்சில் முழுங்குகிற மாதிரி... முழுங்கிடு... விட்டு கொடுன்னு உனக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பிடிச்சிருக்கோ பிடிக்கலையோ இனிமே இதுதான் உன் வாழ்க்கை... சந்தோஷங்கறது முழுக்க முழுக்க மனசைப் பொறுத்த விஷயம். உன்னை மத்தவங்க புரிஞ்சிக்கணும்னு நினைக்காதே... மத்தவங்களை நீ புரிஞ்சிக்க முயற்சி பண்ணு. அன்புங்கறது கொடுக்க கொடுக்க வளர்ற விஷயம். நீ களங்கம் இல்லாதவள். உண்மை என்ற பெயரில் உன் மேலே களங்கத்தை சுமத்திக் கொள்ளாதே..."

"..........."

"சரியா?"

"..........."

"சொல்லும்மா?"

"ம்" பெரிய மனது பண்ணி சொன்னாள்.

"ஆம்பளை எல்லாருமே... பெருந்தன்மையா நடந்து கொள்வது போல் பேச்சும் நடத்தையும் இருக்கும்... மனசு அப்படி இருக்காது. தப்புக்கள் அனைத்தையும் மொத்த குத்தகைக்கு எடுத்தவன்கூட, பொண்டாட்டி தப்பு பண்ணினால் ஒத்துக்க மாட்டான். உண்மையைச் சொன்னா... ஆம்பளைக்கு



தான் தனக்கு மட்டும் என்கிற குணம் ரொம்ப அதிகம். தப்பு பண்ணின பெண்ணை ஏத்துக்கிற ஆண்கள் ரொம்ப ரொம்ப கம்மி. இதெல்லாம் உனக்கு நான் எதுக்கு சொல்றேன்னு புரியும்னு நினைக்கிறேன்."

அதற்குள் ஒரு பெண்கள் பட்டாளம் உள்ளே நுழைந்தது. சிரிப்பொலி அறைக்குள் சுழன்று விளையாடியது.

"என்னங்க... தங்கைக்கு அட்வைஸ் எல்லாம் வாரி வழங்கியாச்சா?" துடுக்குத்தனம் நிரம்பிய ஒருத்தி மகாலஷ்மியின் காதுகளைக் கடித்தாள்.

"ஆச்சும்மா" மகாலஷ்மி சிரித்தாள்.

"துர்காவிற்கு மேக்கப் பண்ண வேண்டாமா?" ஒருத்தி சத்தமிட...

"கலையப் போறதுக்கு எதுக்கு மேக்கப்" ஒரு அதிகப்பிரசங்கி குரல் கொடுத்தது.

"போட்றதே கலைக்கத்தானே" ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாய் கூற...

சிரிப்பொலி காது ஜவ்வைக் கிழித்தது. இவை அனைத்தும் துர்காவிற்குள் கொதிப்பை ஏற்படுத்தியது.

அவர்கள் எல்லோரும் எங்கே உட்காரச் சொன்னார்கள் என்றாலும்... எப்படி திரும்பச் சொன்னாலும்... தன்னை எப்படி ஆட்டி வைத்தாலும்... உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஜடமாய் இருந்தாள்.

மேக்கப் முடிந்தபோது... அத்தனை பேரும் வாய் பிளந்தனர்.

"அவினாசுக்கு வாழ்க்கையிலும் சரி.. படத்திற்கும் சரி... வேற ஹீரோயினே வேண்டாம். மேட் பார் ஈச் அதர்."



அந்த அரை மணி நேரத்தில் துர்கா அவினாசின் அலங்கரிக்கப்பட்ட அறையில் தனித்து விடப்பட்டாள். அது அறை அல்ல... வீடு போல் பெரியதாக இருந்தது. எல்லாம் பணத்திமிர்... அவனை எண்ணத்தில் மென்று கொண்டே விழியை அறை முழுக்க சுழல விட்டாள். பணம்... பணம்... பணம்...

அறை முழுக்க பணம் விளையாடியிருந்தது. நாலைந்து நபர்கள் தாராளமாய் படுக்கும் ஊஞ்சல் டைப்பில் மிகப் பெரிய கட்டில்... லட்சங்களை அது மட்டும் சுலபமாய் விழுங்கி இருக்கும்.

'இம்... காஸ்ட்லியான தூக்கம்தான்... எவன் வீட்டு பணம்?' மறுபடியும் அவனை எண்ணத்தில் நன்றாய் மென்றாள். தூக்கத்தில் புரண்டு புரண்டு கீழே விழுவானோ... அதற்காகத்தான் இவ்வளவு பெரிய கட்டிலா? சுவரோடு அட்டாச் பண்ணப்பட்ட இரண்டு பீரோக்களுக்கு பக்கத்தில் சிரித்தபடி வெவ்வேறு போஸில் இரண்டு புளோ - அப் போட்டோஸ்... ஆளுயர ட்ரஸிங் டேபிள்... பார்க்காத... கேள்விப்படாத சினிமா துறை காஸ்மடிக் பொருட்கள்...

படுக்கைக்கு மிக அருகில் இருந்த லேட்டஸ்ட் மிகப் பெரிய த்ரி இன் ஒன் டேப்ரிக்கார்டர் அருகில்... குன்னக்குடியின் வயலின்... உன்னி கிருஷ்ணனின் கர்நாட்டிக்... ரஹ்மானின் லேட்டஸ்ட் மியூசிக்... ஹரிஹரனின் கஜல்... விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணனின் போக் லாங்... என்று எல்லாத் தரமும் கலந்து மியூசிக் கேஸட்கள்...

'நல்ல ரசனை' இதையெல்லாம் கேட்க நேரம் உண்டா? இல்லை பத்திரிகைகாரர்கள் கேள்வி கேட்டால் பதில் சொல்ல வாங்கி வைத்து இருக்கிறானா?

உடல் குளிர்வதைப் போல் தோன்றவும்... சிறிது சிரமத்திற்கு பின்பு... ஏ.ஸி.யின் சுவிட்சை கண்டு பிடித்து ஆஃப் செய்தாள்.

வெகு நேரம் அந்த ரூமில் தனியாய் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருந்து... போரடிக்க ஆரம்பித்தது. அதுவரை கட்டில் மேல் உட்கார்ந்து இருந்தவள் எழுந்து வந்து சோபாவில் உட்கார்ந்தாள். இரவு 10.00 என்று கடிகாரம் காட்டியது. ஏதாவது நடந்து விடுமோ என்ற பயத்தில் கொட்ட கொட்ட விழித்து இருந்தாள். கதவு திறக்கப்படும் சத்தமே இல்லை.

'ச்சே... இவன் வரவில்லை என்றாலும் பிரச்னையாக இருக்கு... வந்து நின்றால் ஏற்படப் போகும் அதிர்ச்சியை நினைத்தாலும் பயமாக இருக்கு.'

'என்னைக் காக்க வைக்க வேண்டும் என்றே வெளியில் இருக்கிறானோ?...' என்று தோன்றவும்... தன்மானம் தாக்கப் பட்டது போல்... ஒரு 'சுரீர்' வலி தோன்றி மறைந்தது. உடனே கண்களை மூடிக் கொண்டு சோபாவிலேயே ஒருக்களித்துப் படுத்தாள்.

துர்கா கண்களை மூடி பத்து நிமிடங்களுக்கு பின்பு... சத்தமில்லாமல் கதவைத் திறந்து... லாக் பண்ணிவிட்டு... பூனை போல் மெதுவாய் வந்தான். உள்ளே வந்ததும் கட்டிலில் துர்காவைக் காணாமல் திடுக்கிட்டான். சோபாவில் அவள் படுத்து இருப்பதைப் பார்த்து, தனக்குள் சிரித்தபடி சோபாவிற்கு அருகில் வந்து... சின்ன சத்தம்கூட ஏற்படுத் தாமல், அவளைப் பார்த்தபடி, வேஷ்டியை நன்றாய் மடித்துக் கட்டிக் கொண்டு கம்பளத்தில் அமர்ந்தான்.

கடைசியில் நான்தானே ஜெயித்தேன் தனக்குள் கர்வப் பட்டுக் கொண்டான். துர்காவின் முகத்தையும்... அவள் படுத்து இருந்த ஒய்யாரத்தையும் நமுட்டாய் சிரித்தபடி பார்த்தான். அப்போதுதான் அவள் நெற்றியில் பூத்து இருந்த வேர்வை முத்துக்களைக் கண்டு... ஏ.ஸி. ஆஃப் செய்யப்பட்டு இருப்பதைக் கண்டான்.



எழுந்து ஃபேன் சுவிட்சைத் தட்டினான். பின்பு அதே இடத்தில் வந்து அமர்ந்து கொண்டான். அவனுக்குப் பிடித்த வயலட் கலர் பட்டுப்புடவை. ஒரு கையைத் தலைக்குக் கொடுத்து படுத்து இருந்தது... ஆள் உயரத் தங்க மீன் ஒன்று படுத்து இருப்பது போல் தோன்றியது...

'அழகானவள்தான்... அதற்காக என்னை அலட்சியப் படுத்தலாமா? கூடாதே...' ஒட்ட வெட்டியிருந்த கை நகத்தை திரும்பக் கடித்துத் துப்பியதில்... சத்தம் இல்லாமல் ரத்தத் துளியும் எட்டிப் பார்த்தது. ரத்தத்தைப் பார்த்தவன் அதே வேகத்தில் வாயில் விரல் வைத்து உறிஞ்சி முழுங்கினான்... துவர்ப்பாய் உப்பாய் கரித்தது.

'எழுப்பலாம்' முடிவிற்கு வந்தான்.

''துர்கா!''

தட்டி எழுப்பினாலும் எழ அடம்பிடிக்கும் துர்கா... தூக்கி வாரிப்போட... வாரி சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள். உறக்கம் வந்து உறங்கிய விழிகள்... அவன் கீழே உட்கார்ந்து இருப்பதைப் பார்த்து அகல விரிந்தது.

''உட்காரலாமே'' அண்ணாந்து அவளைப் பார்த்தபடி கூறினான்.

சட்டென கம்பளத்திலேயே அவனுக்கு எதிரே சோபாவில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள்.

''மரியாதை?'' சிரித்தான். அவனைச் சிரிக்கச் சொல்லிப் பார்க்கலாம். அப்படி ஒரு அழகான பல் வரிசை.

''இல்லை... கீழே உட்கார்ந்தா எனக்கு சௌகர்யம்...''

''தூக்கம் வந்தால் பெட்லயே படுத்து இருக்கலாமே.''



''............''

''சரி... என்னைப் பிடிச்சு இருக்கா?''

நிமிர்ந்து முறைத்தாள்.

''இந்த இடத்துல கேக்கக்கூடாத கேள்விதான். வேற இடத் துல கேட்டேன் நீதான் பிடிக்கலைன்னு சொல்லிட்டியே.''

''இங்கே கேட்டதால் பிடிச்சிருக்குன்னு சொல்லிடுவேனா... இல்லை இந்த பாப்புலாரிட்டி வசதி... பணம்... இதுல நான் மயங்கிடுவேன்னு நினைச்சீங்களா?''

''இல்ல தாயே... டெபனட்டா இல்லை... எனக்கு த்ரில் ரொம்பப் பிடிக்கும்... காசு கொடுத்து வாங்கற மாம்பழத்தை விட... தானாக கொண்டு வந்து கொடுக்கிற மாம்பழத்தை விட... காம்பவுண்ட் சுவர்கட்டி... அதன் மேல் உடைஞ்ச கண்ணாடி எல்லாம் குத்தி வச்சி... இரண்டு தோட்டக்காரன்... இரண்டு மூன்று ஆளுயர அல்சேஷன் எல்லாம் காவலுக்கு போட்டு இருக்கிற ஒரு மாமரத்துல இருந்து... சுவர் ஏறி குதிச்சி... எல்லார் கிட்டேயும் தப்பிச்சு... வீர காயங்களோட பறிச்சிகிட்டு வர பழம் கசந்தாலும் அதான் பிடிக்கும்'' காலரைத் தூக்கி விட்டான்.

''சினிமா டயலாக்கா'' அலட்சியப்படுத்தினாள்.

''நெவர்... சொந்தமாப் பேசுனா நம்ப மாட்டீங்களே...''

''..............''

''என்னை உனக்கு பிடிக்கலங்கறதும் எனக்குத் தெரியும். பேப்பர் நியூஸ் வரும்வரை நான்தான் உன்னோட லைஃப் பார்ட்னராக வரப்போறவன்னு தெரியாதுங்கறதும் தெரியும். உன் கழுத்துல தாலிகட்டணும்னு ஆசைப்பட்டேன். இவதான் என் மனைவின்னு உன்னைக் காட்ட விருப்பப்பட்டேன்.. ஒரு



தடவைக்கு நாலு முறை உன்னோட அக்காகிட்டே பேசி னேன். வெரி நைஸ் லேடி... உன்மேலே காற்று பலமா மோதினாக்கூட பதறிப் போற உறவு இல்லையா?''

வெறித்துப் பார்த்தாள்.

''முறைக்காதே... நினைச்சேன். செஞ்சிட்டேன். நான் தோத்துப் போறதும் பிடிக்காது. என்னைத் தோக்கடிக்கணும்னு நினைக்கிறவங்களையும் பிடிக்காது.''

''அதுக்காக?''

''நீ ஏதாவது கற்பனை பண்ணிக்காதே... உன் கம்பெனி ஓனர்... என்னோட பேமலி ப்ரண்ட். எதேச்சையா உங்க கம் பெனியோட பங்ஷன் கேசட் பார்த்தேன். நீதானே காம்பையர் பண்ணின... உன் முகம் மனசல தங்கிப் போச்சு. கனவுல அடிக் கடி வர ஆரம்பிச்சே... கனவுல வந்தா மட்டும் போதுமா? உன்னை இந்த வீட்டுக்கு வரவழைக்கணும். வரவழைச் சிட்டேன்... சொல்ல மறந்துட்டேனே. என் பேமிலி பத்தி உனக்கு எதுவும் தெரியாது இல்ல? அம்மா, அப்பா இருக் காங்க... பாரின்ல... ஒரு அக்காவும் தங்கையும் உண்டு... ரெண்டு பேருமே கல்யாணம் ஆகி செட்டில் ஆகியாச்சு... இவங்க ரெண்டு பேரும் கனடா. வேணுன்னுதான் யாருக்கும் சொல்லலை. இந்த சஜஷன் கேக்கிற வேலையும் எனக்குப் பிடிக்காது. இவளைக் கல்யாணம் பண்ணிக்கட்டான்னு கேட் கறதைவிட, இவள்தான் என்னோட மனைவின்னா பிரச்னை இல்ல பாரு. என் பேமிலில இருக்கிறவங்க எல்லாம் மாடர்ன் டைப். ஸோ நோ ப்ராப்ளம். இன்னும் சில நாட்களில் உன்னைப் பார்க்க வருவாங்க ஓ.கே.''

''இது எதையும் நான் தெரிஞ்சிக்க ஆசைப்படலையே'' முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

வேகமாகச் சிரித்தான் அவினாஷ்.

"இன்னைக்குக் காலையிலே இருந்து நீ என் மனைவி. உன் ஒருத்திக்காவது என் உண்மையான உள்ளம் தெரியணும். எங்களை எல்லாம் பார்த்தா உங்களுக்கு பிரமிப்பா இருக்கும். நாங்கதான் ரொம்ப அதிர்ஷ்டசாலிங்கன்னு தோணும். அது எவ்வளவு பெரிய பொய் தெரியுமா? சுதந்திரம் பறி போயிடும்... ப்ரைவசி கிடையாது. விரும்பியதை சாப்பிட முடியாது... விரும்பியதைப் போட்டுக்க முடியாது... நினைச்ச நேரத்துக்கு வெளியே போக முடியாது... தங்க கூண்டுக்குள்ளே மாட்டிகிட்ட கிளி மாதிரி...

"இந்த அச்சம்... வெக்கம் இதெல்லாம் கேமரா முன்னாடி நிக்கும்போதே பறி போயிடும்... பளிச்சின்னு வெளிச்சத்துல... ஒரு பொண்ணைக் கட்டிப் பிடிக்கணும்... முத்தம் கொடுக்கணும்... அழணும் சிரிக்கணும்... வாழ்க்கையே நடிப்புங்கற மாதிரி ஆச்சு. எனக்காக நான் அழுதது இல்லை... எனக்காக நான் சிரிச்சது இல்லை... ஒரு சராசரி மனிதனுக்கு கிடைக்கும் சந்தோஷம்கூட எங்களுக்குக் கிடையாது.

"கல்யாணம், ஃபர்ஸ்ட் நைட் இதெல்லாம்... ஒரு சராசரி மனிதனுக்கு எவ்வளவு சந்தோஷமான விஷயம். என்னால இந்த சந்தோஷத்தை அனுபவிக்கவே முடியலை. துர்கா... காலையில உனக்கு தாலி கட்டும்போதுகூட ஏதோ ஆக்ஷன் சொல்லி... கட் சொல்ற சினிமா சீன் மாதிரி இருக்கு...

இங்கே உள்ளே வரும்போதுகூட என்னால அந்த மாதிரி ஒரு சந்தோஷத்தை வரவழைக்க முடியலை... இன்னும் சொல்லப் போனா வரலை. எத்தனை ஃபர்ஸ்ட் நைட் சீன்ல நடிச்சி இருப்பேன்... ஸோ, புதிரா எனக்கு நானே இருக்கேன்."

பேசத் தோன்றாமல் அவனையே பார்த்தாள். தூக்கம் எங்கோ தொலைந்து போய் இருந்தது.



"துர்கா! உன்னைக் கட்டாயப்படுத்துவேன்னோ... இல்லை... வற்புறுத்துவேன்னோ பயப்படாதே. உன்னைத் தொடணுங்கற ஆசையும் எனக்கில்லை. அவசியமும் இல்லை."

அதிர்ச்சி மேலிட ஸ்தம்பித்தாள்... உள்ளுக்குள் நிம்மதி பரவியது.

"என்னைப் பற்றி பத்திரிகைகள் பத்தி பத்தியாய் எழுதியிருக்கும். அதுல முக்கால்வாசி உண்மை. நான் ஒரு ப்ளே பாய்னு கட்டம் கட்டியிருப்பாங்க... நூற்றுக்கு நூறு உண்மை. நானா தேடிப் போவது இல்லை. தானா வந்து விழுந்தால் விடறது இல்லை. ரெண்டு மூன்று நடிகைகளைக் கூட சில கால கட்டங்கள்ல லவ் பண்ணினேன். அது சினிமா லவ்வுங்கறது போகப் போகத்தான் எங்களுக்கே தெரிஞ்சது. மனசுல ஒண்ணு வச்சிகிட்டு வெளியே வேற மாதிரி தான் பேசறோம். நான் பொய் பேசறேன்னு அவளுக்கும் தெரியும். அவள் பொய் பேசறாள்னு எனக்கும் தெரியும்... ஆனாலும் தெரியாத மாதிரி பேசிக்குவோம். கேமரா முன்னால நடிக்கிறதைவிட வெளியில இன்னும் பிரமாதமா நடிப்போம். நிஜ வாழ்க்கைன்னாவே என்னான்னு மறந்து போச்சு... ரொம்ப வருஷங்களுக்கு பிறகு மனம் திறந்து உங்கிட்டேதான் பேசறேன். பொறுமையாக் கேட்டதுக்கு தேங்க்ஸ்."

'நடப்பது நடக்கட்டும் உன்னைப் பற்றிச் சொல்லிவிடு' உள் மனம் துர்காவை உசுப்பியது.

'ஏய் வேண்டாம்... இந்தப் பேச்செல்லாம் வச்சு எடை போடாதே... உன் விஷயமே வேற.'

"என்ன துர்கா யோசிக்கிற?"

"ஒண்ணும் இல்லை."



"உன்னை நான் ஏமாத்தி கல்யாணம் பண்ணிகிட்டதா தோணும். உன்னைப் பற்றி நான் எதுவும் தெரிஞ்சிக்கக்கூடாதுன்னுகூட நினைக்கலாம்... என்னைக்கு என்மேல லேசா நம்பிக்கை தோணுதோ... அப்போ சொல்லு... ஆனா உண்மையைச் சொல்லு."

"ஏன் நான் பொய் சொல்லுவேன்னு தோணுதா?"

"இல்லை" அனிச்சையாய் தலையாட்டினான்.

"நான் அயோக்கியன் இல்லை. அதே நேரம் யோக்கியமானவனும் கிடையாது. ஆனா, ப்ரஸ்டீஜ்னு ஒண்ணு இருக்கு... அதுக்கு எந்த பங்கமும் உன்னால வரக்கூடாது."

மூளை நரம்பு ஒன்று பட்டென துர்காவிற்குள் அறுபட்டது.

"அழகா இருக்கே, காலேஜ் போய் இருக்கே... லவ்வெல்லாம் எதுவும் இல்லையா?"

"இல்லை."

"நீ பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. காதல்லாம் தினமும் விஷ் பண்ற மதிரி ரொம்ப ஈஸியா போச்சு... காதலை எல்லாம் ஒரு விஷயமா நான் எடுத்துக்கிறது இல்லை. உன் வாழ்க்கையில் நடந்த... நான் தெரிஞ்சிக்கணுங்கற நிகழ்ச்சி ஏதாவது நடந்து இருந்தால்... அது எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும்... சந்தோஷமோ, துக்கமோ தாராளமா சொல்லு... பொய் பேசறது எனக்குப் பிடிக்கும்... அதைப் பேசறது நானாக இருந்தால்... ரொம்ப அறுத்துட்டேன் போய் படுத்துக்கோ!" என்று எழுந்தான்.

குழப்பத்தின் எல்லையில் இருந்து கொண்டே படுக்கையில் தலை சாய்த்தாள். அவனும் வந்து படுக்கையின் மற்றொரு விளிம்பில் படுத்துக் கொண்டான்.

"துர்கா!" அழைத்தான்.

"இம்" திரும்பாமலேயே கேட்டாள்.



"குட் நைட்" என்றான்.

"ஸேம் டூ யூ" என்றாள். இவன் பாம்பா, கயிறா அவன் பேச்சில் அது புரியவில்லை என்பது மட்டும் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. நாட்கள் நகர்ந்தன. அவர்கள் உறவில் எந்த மாற்றமும் இல்லை. இன்டோரில் இருந்தாலும், அவுட்டோரில் இருந்தாலும் போன் பண்ணத் தவறுவது இல்லை.

அன்றும் வழக்கம் போல் போன் மணி அடித்தது. எடுத்தாள்.

"துர்காவா?" எதிர்முனையில் ஒரு ஆண் குரல் கேட்டது.

"உன் குழந்தை இன்னும் உயிரோடுதான் இருக்கு தெரியுமா?" என்றது.

## 9

அதைக் கேட்டபோதே உணர்வளவில் இறந்து போயிருந்தாள் துர்கா. இதயம் துடிக்க மறந்தது. இதழ் பேச மறந்தது. கண்களில் ஒளி குறைந்தது. நரம்புகள் நடுங்கத் தொடங்கின. மூளை செல்கள் செயல் இழக்கத் தொடங்கின. 'என் குழந்தை உயிரோடு இருக்கா? எப்படி... எப்படி... இது சாத்தியம்?' இத்தனை தடுமாற்றத்திலும் ரிசீவரை விடாமல் பிடித்து இருந்தாள்.

"என்ன சத்தத்தையே காணோம்" எதிர்முனை குரல் சிரித்தது.

"ராங் நம்பர்" என்றாள் சிறிது நேர அமைதிக்குப் பின்.

"ஆ.. ஆ.. போனை வச்சிடாதே.. வச்சிட்டா திரும்ப நான் போன் பண்ற மாதிரி இருக்கும். அப்போ... உன் புருஷன்கூட போனை எடுக்கலாம். நானும் ஏதாவது உளரலாம்.. எதுக்கு ரிஸ்க்."

"இட்ஸ் ராங் நம்பர்" கத்தினாள்.

"துர்காம்மா கோபப்படாதீங்க, டென்ஷனாதான் இருக்கும்... பக்கத்துல ஏதாவது சோபா இருந்தால் உட்கார்ந்து பேசுங்க.. உங்களுக்கு, உங்க அக்காவுக்கு... டாக்டர் மனோஜ்குமாருக்கு மட்டுமே தெரிந்த உண்மை எனக்கெப்படித் தெரியும்? இன்னும் சொல்லப்போனா நந்தாவைக் கூட எனக்குத் தெரியும்."

துர்காவிற்கு பூமி வேகமாய் ஒரு சுத்து சுத்தி வந்து நின்றது. யாரோ விஷயம் தெரிந்தவன்தான். இனியும் மறைப்பதில், நடிப்பதில் அர்த்தம் இல்லை. துணிந்துவிட வேண்டியதுதான் முடிவெடுத்தாள்.

"நீங்க யாரு?" குரலில் பதற்றம் தொனித்தது.

"அதைச் சொல்லவா போன் பண்ணினேன்? இல்லம்மா... உன் குழந்தை இன்னும் உயிரோடதான் இருக்கு."

"நீங்க யார்கிட்டே பேசுறீங்கன்னு தெரியுமா?" கோபப்பட்டாள்.

"நல்லா தெரியுமே. திருமணத்திற்கு முன்பே தாயான பொண்ணு. இப்போ மிஸஸ் அவினாஷ்... நான் சொல்றது சரிதானே?"

"..........."

"உங்க பொண்ணு பேரு என்ன தெரியுமா?"

"........" எதுவும் பேசாமல் மௌனம் சாதித்தாள்.

"நானே சொல்றேன்... 'யுவனா.'

"ப்ளீஸ்... நீங்க யாரு ஸார்?"

"உங்களோட நலன் விரும்பின்னு நினைச்சிக்கோங்க."

"இப்போ உங்களுக்கு என்ன வேணும்?"

"குட்... தட்ஸ் குட்... புத்திசாலிப் பொண்ணுங்கறதை ப்ரூப் பண்ணுறீங்க. வேறு என்ன பணம்தான்."

மெல்ல தைரியத்தை வரவழைத்துக் கொண்டு..



"பணமா? நினைச்சேன்.. என்னைப் பற்றி எப்படியோ தெரிஞ்சுகிட்டு.. ப்ளாக்மெயில் பண்ணுறீங்களா? அதுக்கும் புத்திசாலித்தனம் வேணும். பிறந்ததுமே இறந்துபோன குழந்தைக்கு.. உயிர் கொடுத்து அழகான பேரும் வச்சிருக்கீங்க.. நல்ல கற்பனை."

"நம்பலையா" கவலைப்படாமல் மிக அமைதியாய் மறுமுனைக் குரல் ஒலித்தது.

"நிச்சயமா இல்லை."

"சரி. குழந்தையோட நேரில் வர்றேன்" டக்கென ரிசீவர் வைக்கப்பட்டது.

பலமணி நேரம் துர்காவிற்கு படபடப்பு அடங்கவில்லை. நடந்து முடிந்தது அனைத்தும் கனவு போல் இருந்தது. ஒரு வேளை கனவுதான் கண்டேனோ... குழப்பமாகவும் இருந்தது. வார்த்தைக்கு வார்த்தை ப்ரிஸ்டீஜ். ப்ரிஸ்டீஜ்.. என்று பேசும் அவினாஷிற்கு இது தெரிந்தால்... வேறு வினையே வேண்டாம். அவினாஷ் பப்ளிக் பிகர் வேறு.. அவனுக்கு எறும்பு கடித்தாலே இந்தியா முழுக்கத் தெரிந்து போய்விடும். இப்படி ஒரு மனைவி என்றால் தாங்குவானா? அவன் நல்லவனோ கெட்டவனோ... என்னால் அவமானப்படக் கூடாது.

என்ன பண்றது?... சொல்லிவிடலாமா?

சொன்னால்... இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தாய் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

அன்றே சொல்லாமல் போனது எவ்வளவு பெரிய குற்றம். கைகளைப் பிசைந்ததில்.. அவைகள் சிவந்து வலிக்க ஆரம்பித்ததுதான் மிச்சம். அக்காவைப் போய் பார்த்தால் என்ன? அதுதான் சரி.. புடவைகூட மாற்றத் தோன்றாமல்.. வெளியே வந்தாள்.

எதிர்ப்பட்ட வேலைக்காரப் பெண்மணியிடம்,





"காமாட்சி! அய்யா போன் பண்ணினால், அக்கா வீட்டுக்கு போயிருக்கேன்னு சொல்லிடு என்ன?"

"சரிம்மா.. ராத்திரிக்கு வந்துடுவீங்கல்ல?"

"போனதும் வந்திடுவேன்" சொல்லிக் கொண்டே.. நடக்காமல் ஓடினாள்.. போர்டிகோவில்.. மூன்று கார் அமைதியாய் பார்த்துக் கொண்டு இருந்தது. அந்த வீட்டிற்கு மிஞ்சிப் போனால் இரண்டு கார்கள் போதும். ஒன்று அவனுக்கு.. மற்றொன்று இவளுக்கும்.. வீட்டு வேலைகளுக்கும் போதும். ஆனால் தேவையில்லாமல் இத்தனை கார்கள்.

"டிரைவர்!" வேகமாக அழைத்தாள்.

பவ்யமாய் ஓடி வந்து நின்றான்.

"வண்டியை எடு."

"எந்த வண்டிம்மா?"

"எதாவது ஒன்றை எடு."

"சரிம்மா" என்றபடி வேகமாய் நடந்து.. ஆஷ் கலரில் இருந்த ப்ரிமியர் 118-ஐ போர்டிகோவில் இருந்து வெளியே கொண்டு வந்தான். அவன் இறங்கி வந்து பின் சீட்டுக் கதவை திறப்பதற்கு முன்பே... அவசரமாய் வந்து தானே திறந்து உள்ளே உட்கார்ந்தாள். அவளிடம் காணப்பட்ட பதற்றம் டிரைவர் பையனிடம் சுறுசுறுப்பை தொற்ற வைத்தது.

க்யரைத் தள்ளி... ஸ்டியரிங்கை வளைத்தவன்..

"எங்கம்மா போகணும்" என்றான்.

"அக்கா வீட்டிற்கு."

"சரிம்மா" கார் காம்பவுண்டை தாண்டி.. சாலையில் வேகமாய் வழுக்கத் துவங்கியது.



கார் வந்து நின்ற சத்தம் கேட்டதுமே.. மகாலஷ்மி ஆர்வமாய் வெளிவந்தாள். தங்கை கார் விட்டு இறங்குவதைப் பார்த்ததும்.. முகம் சந்தோஷத்தால் பளிச்சென மாறியது.

இறங்கி டப்பென கதவை சாத்திய துர்கா,

"நீ கார்லயே வெயிட் பண்ணு" என்றாள்.

டிரைவர் கடமை உணர்வோடு தலையாட்டி வைத்தான். வேகமாய் உள்ளே வந்தவளை.. ஆசையோடும் அன்போடும் வரவேற்றாள் மகாலஷ்மி.. தங்கையின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு..

"வாடி... வா வா.. நானே உன்னைப் பாக்கணும்னு நினைச்சேன். எப்படி இருக்க?.. நல்லா இருக்கியா? குணம் எப்படி? எல்லாத்துக்கும் அட்ஜெஸ் பண்ணிக்கிறியா? அவர் இப்போ எங்கிருக்கிறார்? உள்ளூரிலா? வெளியூரிலா?" கொஞ்சம்கூட அவகாசம் கொடுக்காமல் மூச்சுவிடாமல் கேள்வியாய் கேட்டாள்.

உள்ளே நுழைந்ததும்... மகாலஷ்மியின் தோளை இறுக்கிப் பிடித்து நிறுத்தியவள் "மாமா இருக்காரா?"

"இல்லடி.. ஏன்?"

"அக்கா! என்னிடம் நீ பொய் சொன்னது இல்லைதானே?"

"இல்லை."

"என் தலையில் கை வைத்துச் சொல்."

"என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இல்லை."

"அப்படி இல்லை.. நீ சொல்லு" என்றவள் உடனே மகாலஷ்மியின் வலது கையைத் தன் தலைமேல் எடுத்து வைத்தாள்.

"இம்.. இப்ப சொல்லு" என்றதும்,

என்னமோ நடந்து இருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.

''உங்கிட்டே நான் பொய் சொன்னது இல்லை.''

''நிஜமா.. என்னிடம் எதுவும் மறைச்சது இல்லையே?''

''ஏண்டி உனக்கு திடீர்னு இப்படி ஒரு சந்தேகம்?''

''என் மேல உனக்கு கண்மூடித்தனமான அன்புண்டு.. அதான் கேட்கிறேன்.''

''இல்லைடி.''

''என் குழந்தை பிறந்ததும் செத்துப் போச்சுதானே?''

அந்த வெப்பமான வார்த்தைகளைக் கேட்டதும்.. மகாலஷ்மியின் உள்ளமும் உதடும் ஒரு சேர காய்ந்து வெடித்தது. பிரமை பிடித்தாற் போல் நின்றாள்.

''சொல்லுக்கா.. என் குழந்தை செத்துப் போச்சுதானே?''

''மெதுவா பேசுடி... சுவர்க்கும் காதுண்டு.''

''சொல்லு'' பிடிவாதமாய் தோளை உலுக்கினாள்.

''செத்துப் போச்சு.''

''நீ பார்த்தியா?''

''ஆமாம்.. குறை மாதமாம்.. உயரம் கம்மியாய்.. எடை கம்மியா, மூச்சு விடக்கூட தெம்பு இல்லாத இரண்டு நிமிடம் கூட உயிர் வாழாமல் செத்துப்போன குழந்தையை என் கண்ணால் பார்த்தேன்.''

''ஏன் எங்கிட்டே காட்டலை.''

''என்னடி இது. இத்தனை நாட்களுக்குப் பிறகு.. திரும்ப அதே கேள்வி.. பிரிவு, சாவு இது இரண்டையும் உன்னால் தாங்கிக்க முடியாதுன்னு எனக்குத் தெரியாதா?... அதான் உன்னால தாங்க முடியாதுன்னுதான்.. அந்தக் குழந்தையோட முகத்தைக் கூட காட்டலை.''

''இல்லக்கா.. என் குழந்தை உயிரோட இருக்குமோன்னு தோணுது'' அழத் தொடங்கினாள்.



''என்னது!'' அதிர்ந்து போய் தங்கையை உலுக்க..

தனக்கு வந்த போன் காலை வரி விடாமல் ஒப்பித்தாள் துர்கா.. எல்லாவற்றையும் தலையில் வந்து விழுந்த இடியின் அதிர்ச்சியோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எனக்குக் கல்யாணமும் வேண்டாம்.. ஒரு கண்றாவியும் வேண்டாம்னு தலையில அடிச்சிகிட்டேன்.. நீ கொஞ்சமாவது கேட்டியாக்கா?'' அழுகைக்கு நடு நடுவே வார்த்தைகளைக் கதறிக் கொண்டு வெளிவிட்டாள்.

மகாலஷ்மிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. துர்கா தலையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு.. அப்படியே சரிந்து உட்கார்ந்தாள்.

''இப்படி மாட்டிவிட்டிட்டியேக்கா.. இதெல்லாம் அவினாசுக்கு தெரிஞ்சா.. எனக்காக இல்லை.. அவரோட பாப்புலாரிட்டியை யோசிச்சுப் பார்.. பொம்பளைங்க எல்லாம் ஏமாத்துக்காரிங்கன்னு.. பெரிய தவறான அபிப்ராயமே அவர்கிட்டே இருக்கு.. இதுக்கு நான் பெட்ரோல் ஊத்துற மாதிரி ஆயிடாதா? ஒவ்வொரு நாளும் இவ்வளவு பெரிய விஷயத்தை சொல்லாம இருக்கோமேன்னு.. செத்து செத்துப் பிழைச்சிகிட்டு இருக்கேன்.. என் வேதனையை எப்படி உனக்குப் புரிய வைக்கிறதுன்னு தெரியலக்கா.''

துர்காவிற்கு அருகிலேயே உட்கார்ந்து.. அவள் முகத்தை தன் முகம் பார்க்கும்படி திருப்பி,

''பயப்படாத செல்லம். எதுக்கும் பயப்படாதே. ஒண்ணும் நடக்காது.. சும்மா யாரோ கலாட்டா பண்ணி இருப்பாங்க.. அந்தக் குழந்தை உயிரோட இல்லடா.. என்னை நம்பும்மா'' என்றபடி கண்களைத் துடைத்துவிட்டு.. தலையை ஒதுக்கி விட்டு.. ஆறுதலாய் நெஞ்சில் சாய்த்துக் கொண்டாள். துர்காவிற்கு வாய்தான் ஆறுதல் சொல்லியதே தவிர.. மனசு ரேஸ் குதிரையின் வேகமாய் தறிகெட்டு ஓடி மூச்சு வாங்கக்கூட முடியாமல் தடுமாறியது.



''இல்லக்கா... எனக்கு பயமா இருக்கு.. மனசாட்சி என்னை உயிரோடு கொன்னுடும் போல இருக்கு.. குழந்தை வேணா உயிரோட இல்லாம இருக்கலாம். ஆனா, உனக்கும் எனக்கும் மட்டும் தெரிஞ்ச விஷயம்.. இன்னொருத்தனுக்கு எப்படித் தெரிஞ்சது.. அவன் சும்மா இருப்பானா?''

''துர்கா! அந்த டாக்டரை போய்ப் பார்த்தால் என்ன?'' திடீர் என்று அந்த யோசனை தோன்றியது. உடனே மகாலஷ்மியின் மார்பில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டவள்.. அதே வேகத்தில் எழுந்தாள்.

துர்கா உள்ளே வந்து அமர்ந்ததும்.. கார் கதவை சாத்தி விட்டு... வந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு.. காரை உசுப்பினான் டிரைவர்.

''எங்கம்மா போகணும்?'' கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டு இருந்தது.

''பெசன்ட் நகர்... மனோஜ்குமார் ஹாஸ்பிடல்.''

''அம்மா! உடம்புக்கு ஏதாவது?'' தயக்கமாகக் கேட்டான்.

''உடம்புக்கு ஒன்றும் இல்லை. ப்ரண்ட் மனோஜ் குமார்.''

இரண்டு மாதங்களுக்கு முன்பே லண்டனில் போய் செட்டில் ஆகி விட்டார் என்றும்.. ஹாஸ்பிடல் வருமானத்தை மிகப் பெரிய சமூக நிறுவனம் ஒன்று பயன் படுத்தும்படியும்.. எல்லா லீகல் விஷயங்களையும் முடித்து விட்டார் என்றும் செய்தி தெரிவிக்கப்பட்டது. அவளுக்குத் தெரிந்த டாக்டர்ஸ் கூட யாரும் கண்ணில் படவில்லை. வேதனையாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

அவினாஷ் இரவு 11.00 மணி ஆகியும்.. ஷூட்டிங் முடிந்து வரவில்லை. நாலைந்து கற்கள் உள்ளே மாட்டிக் கொண்டது போல் வலிக்கத் தொடங்கியது.. இத்தனை வலியையும் வேதனையையும் மீறி.. ''உன் குழந்தை இன்னும் உயிரோடு தான் இருக்கிறது'' என்ற வார்த்தைகள் காதுக்கு அருகேயே



ஒலித்துக் கொண்டு இருந்தது. அவினாஷ் வந்து படுத்தது கூடத் தெரியாமல் போராடிக் கொண்டிருந்தாள்.

துர்கா தலையைத் திருப்பித் திருப்பிப் போட்டது... புரண்டு புரண்டு படுத்தது... பெருமூச்சு விட்டது. அவளையும் மீறி.. சூடாய் கண்களில் வழிந்த கோடு.. காது வரை தடம் போட்டது எல்லாம் அவனின் கவனத்தை கவர்ந்தது.

'என்னாச்சு?' தனக்குத்தானே கேட்டுக் கொண்டவன்.. அவள் அருகில் நெருங்கி தோளை ஐந்தாறு நிமிடங்கள் யோசித்த பின்பு தொட்டான்.

''துர்கா!''

''.........''

கண்களைத் திறக்க சிரமப்பட்டாள்.

''என்ன துர்கா... என்னாச்சு.''

அப்போதும் அவளால் கண்களைத் திறக்க முடியாமல்.. எழுந்து உட்கார்ந்து.. தலையணையை முதுகுக்கு மட்டும் கொடுத்தாள். அவளுடைய இமைகள் ஒன்றோடு ஒன்று விலங்கிட்டுக் கொண்டு... பிரிக்க முடியாமல் தடுமாறுவதை உணர்ந்தவன்,

எழுந்து.. தண்ணீர் கொண்டு வந்து.. முகத்தை துடைத்து விட்டு.. கண்களை மெல்லப் பிரித்து விட்டான். அவனைப் பார்க்க முடியாமல் கண்கள் கூசியது. கண்கள் மட்டுமா கூசியது? அவள் எழுந்து உட்கார்ந்ததுமே.. கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டான். நைட்டியின் ஒரு முனையால் முகத்தை துடைத்துக் கொண்டாள். அந்த நேரம் நைட்டி முழங்கால் வரை ஏறி இறங்கியதை அவன் பார்க்கத் தவறவில்லை. கண்கள் பார்ப்பதைத் தவிர்க்க முற்பட்டாலும் மனம் சலனப் பட்டுத்தான் கிடந்தது. எத்தனையோ பெண்களைப் பார்த்து இருக்கிறேன். உன்னிடம் புதிதாய் என்ன பார்க்கப் போகின்றேன் என்று மனதில் பட்டதை ரொம்ப தெனாவெட்டாவே

கூறியிருந்தாலும் சில வாரங்களாகவே துர்காவை பார்க்கும் போது ஏதோ ரசாயன மாற்றம் உடம்பில்... வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இல்லாமலேயே ஆசையால் அவன் உள்ளம் சிவக்கத் தொடங்கியது. காலம் முழுக்க இப்படித்தான் விலகியே இருப்பாளா? மனதாலும் உடம்பாலும் என்னை நெருங்க மாட்டாளா? இந்தத் திருமண சடங்கில் ஏதோ ஒன்று இருக்கு... இவள் எனக்கு சொந்தமானவள்.. இவளின் கனவுகள் ஆசைகள், ஏக்கங்கள், கோபங்கள்.. எதிர்பார்ப்பிற்கு எல்லாம் நான் தானே வடிகால். போன் பண்ணி இவள் குரல் கேட்கவில்லை என்றால்... ஏன் எதுவுமே ஓட மட்டேன் என்கிறது. அவளை எழுப்பி உட்கார வைத்து விட்டு.. இவன் பாட்டிற்கு யோசித்துக் கொண்டிருந்தான்.

"எதுக்கு எழுப்பினீங்க?.. எதாவது வேணுமா?" அவன் முகம் பார்க்காமல் கேட்டாள்.

"நீதான் எனக்கு வேணும்" அவன் மனம்தான் பேசியது.. இதழ் பேசவில்லை.

"என்ன அவினாஷ்" திரும்பவும் அதே நிலையில் கேட்டாள்.

"ஏன் உனக்கு தூக்கம் வரலையா?" அவளின் கன்னம் தொட்டு... கழுத்து தொட்டு கேட்க ஆசை... அவளிடம் எப்படித் தன்னை வெளிப்படுத்துவது என்று தெரியாமல் முழித்தான். காதல் காட்சிகளில் பார்ப்பவர் மனதை சுண்டி இழுப்பவன்.. நிஜ வாழ்க்கையில் தன் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறினான்.

"ஏன் ஒரு மாதிரியா இருக்க.. உடம்புக்கு என்ன?.. அழுது இருப்ப போல் இருக்கிறது? என்ன பிரச்சினை... எனக்கே தெரியாமல் நான் ஏதாவது உன் மனம் நோகும்படி நடந்துகிட்டேனா...? சொல்லு துர்கா..."

"நோ... நோ.. அப்படி எல்லாம் இல்லை."



"எதாவது பிரச்னையா?"

"இல்லை" தலையாட்டி மறுத்தாள்.

"நீ பொய் சொல்ற துர்கா... என்னை உனக்குப் பிடிக்காம இருக்கலாம். அது வேற விஷயம் என் பக்கத்தில் படுத்து இருக்கும் உன் கண்களில் கண்ணீரா.. அதை என்னால் எப்படித் தாங்க முடியும்? இத்தனை நாள் என்னோட இருக்க.. நான் நல்லவனாக இல்லாவிட்டாலும்.. கெட்டவன் இல்லைன்னு தெரிஞ்சு இருப்ப.. தயங்காம உன்னோட பிரச்னை என்னன்னு சொல்லு.. ஒருவேளை உன்னோட பிரச்னைக்கு நானே காரணமானாலும் சொல்லு.. எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போற..

"மனசுல மட்டும் எதையும் வச்சிகிட்டு உருகாதே.. ஏதோ என்னிடம் சொல்லணும்னு நினைக்கிற.. ஆனா சொல்லமாட்டேங்கற.. எந்த ஒரு பிரச்னையுமே மனதில் இருக்கும் வரை தான் பாரம். சரியான ஆளாப் பார்த்து இறக்கிடணும்.. அந்த உணர்வோடதான் உன்னிடம் நான் பேசிகிட்டு இருக்கேன். சொல்லு."

"அது வந்து" நடப்பது நடக்கட்டும் என்று சொல்ல முற்பட்டாள்.

"ம்.. சொல்லு."

"என்னை.. என்..னை.. தப்பா... நினைக்கக் கூடாது" கொத்துக்கறியாய் சொற்கள் கன்னா பின்னாவென பிய்ந்து வெளிவந்தது.

"உன்னை எதுக்காக நான் தப்பா நினைக்கப் போறேன்... உன் மேல் பட்ட காற்று கூட தப்பு பண்ணாது, தப்பானவங்களைத் தீண்டாது... அந்த நம்பிக்கை எனக்கிருக்கு.. நீ சொல்லு."

அவன் அவள்மேல் கொண்ட நம்பிக்கை... அவளை வேகமாகவே ஆட்டிப் பார்த்தது. 'நான் உண்மையைச் சொன்னால் தாங்குவானா?'



"சொல்லு துர்கா" நன்றாய் எழுந்து சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டு அவள் முகம் பார்த்தான்.

"அ...து... வ...ந்...து... நா...ன்" அவள் முடிக்கும் முன்பே... அருகில் இருந்த செல்லுலார் ஒன்று உயிர் பெற்று அலறியது.

"ச்சே... பெரும் தொல்லை" அலுத்துக் கொண்டே எடுத்து காது அருகே கொண்டு சென்று...

"எஸ்" என்றான்.

"........" போன் செய்தவர் என்ன கூறினார் என்று தெரியாது. அவினாஷ் மெலிதான கோபத்தோடு பேசினான்.

"நான் எத்தனை முறை சொல்றது. அந்த கறைபட்ட ட்ரஸை என்னால் போட முடியாது... அதையே திரும்ப கொண்டாந்தா நாளைக்கு ஷூட்டிங் கேன்சல்தான்."

"........"

"வாஷ் பண்ணினாலும்.. கறை படிந்தது படிந்ததுதானே.. எனக்கு வேண்டாம். நான் தான் சுத்தமா வாழ முடியலை. என்னிடம் இருக்கும் பொருள்கள்.. டிரஸ்ஸாவது சுத்தமா இருக்கட்டும்.. வேணும்னா.. உங்க பட்ஜெட்டில் இடிச்சா.. என் மேனேஜரிடம் சொல்லி இங்கே பணம் வாங்கிக்கோங்க." வேகமாகப் பேசிவிட்டு, போனைக் கட் பண்ணினான்.

துர்கா இன்னும் பீதியோடு அவனைப் பார்த்தாள்.

"ம்... சொல்லு துர்கா" என்றான்...

"ஒன்றும் இல்லை" கூறிவிட்டு அவனுக்கு முதுகுகாட்டி நத்தையாய் தன்னைச் சுருட்டிக் கொண்டாள். அதற்குமேல் அவனும் கட்டாயப்படுத்தவில்லை.

காலை துர்கா எழ 7.00 ஆகியது. அவள் கண் விழித்த போது அவினாஷ் குளித்து முடித்து ரெடியாகிக் கொண்டிருந்தான். கலைந்த கூந்தலை சரி செய்து கொண்டு... கண்களை நன்றாகத் துடைத்தபடி எழுந்தவளைப் பார்த்து..



"குட்மார்னிங்" என்றான்.

"குட்... மா...ர்..னி..ங்" என்றாள்.

"நல்லா தூங்குனியா?"

'இம்' சொல்லிக் கொண்டே பாத்ரூம் சென்று தன்னை அடைத்துக் கொண்டாள். வெளியே வர பத்து நிமிடங்களுக்கு மேல் ஆனது. அவள் வெளியே வந்தபோது... அவினாஷ் மேக்கப்பில் இருந்தான். டீபாய் மேல் அவளுக்காக வைக்கப்பட்டு இருந்த காபி கோப்பையை எடுத்துக் கொண்டு.. திரும்பும்போது..

இன்டர்காம் ஒலித்தது. அவினாஷ் தான் எடுத்தான். செய்தியை தனக்குள் வாங்கிக் கொண்டு.. துர்காவின் பக்கம் திரும்பியவன்..

"துர்கா உன்னைப் பார்க்க யாரோ ஒருவர் வந்திருக்காராம்.. கையோடு பெண் குழந்தை ஒன்றும் கூட்டி வந்திருக்கிறாராம்... போய்ப் பார்க்கிறாயா?" என்றான்.

துர்காவின் கையில் இருந்த காபிக் கோப்பை நழுவி விழுந்து... சில்லு சில்லாய் உடைந்து சிதறியது.

## 10

ட்ரஸ்ஸிங் டேபிள் விட்டு எழுந்து வந்தவன் அவள் அருகில் வந்து.. நின்று.. அவளை உற்றுப் பார்த்தான். அவளின் தளிர் உடல் வேகவேகமாய் நடுங்கத் தொடங்கியிருந்தது. தன் தோளில் கிடந்த டவலால்... மிக நிதானமாய் அவள் முகம் துடைத்தான். வேலையாளை வரச் சொல்லி.. தரையைக் க்ளீன் பண்ணச் சொன்னான். இது எதுவுமே தெரியாமல் ஸ்தம்பித்து போய் இருந்தாள். எல்லாம் முடிந்து வேலையாள் அப்பால் நகர்ந்ததும்.

"என்னாச்சி?" அவன் கையைத் தட்டினான்.

"ஆ... ஆ..." சுயநினைவுக்கு வந்து பிதற்றினாள்.

"என்னம்மா ஆச்சு... ஏன் இப்படி பயந்து சாகுற... வர வங்க யார்னு முன்கூட்டியே தெரியுமா?"

"ஆ... இல்ல.. அதெல்..லா..ம் தெரியாது.. ஏதோ ஞாபகத் துல தவற விட்டுட்டேன் ஸாரி."

"இதுக்கு எதுக்கு ஸாரி சொல்லிகிட்டு... ஆனா கொஞ்ச நாளாவே நீ சரியில்லை.. கீழே போய் பாக்குறியா... இல்லை அனுப்பிடச் சொல்லட்டுமா?"

"இல்லல்ல போய் பார்க்கிறேன்" அவசர அவசரமாய் மறுத்தாள்.

"நானும் வரணுமா?"

'செத்தேன்.. வேண்டாம் சாமி' வாய் வரை வந்த வார்த் தையை மிக கஷ்டப்பட்டு வெளிவர விடாமல் தடுத்து நிறுத் தினாள்.

"இல்ல.. இப்ப வேண்டாம்.. ரொம்ப முக்கியமானவங் களா இருந்தா வாங்க."

"கீழபோய் ஆளைப் பார்த்ததுமே என்னைக் கூப்பிடாதே.. என்னோட காஸ்ட்யூம். மேக்கப் எல்லாம் முடிச்சிகிட்டு வெளியே வர ஒருமணி நேரமாவது ஆகும்."

"சரி.." சந்தோஷமாய் தலையாட்டினாள். உடனே கதவை திறந்து கொண்டு புறப்பட்டாள்.

ஹாலுக்கு வந்தாள். அவினாஷின் பி.ஏ. ரெடியாய் நின்று இருந்தான்.

"யார் சங்கர் வந்து இருக்கிறது?"

"தெரியல மேடம். உங்களைப் பார்க்கணும்னு ரொம்பப் பிடிவாதமா இருக்கார்."

"எங்கே?"



"விசிட்டர் ஹாலில் வெயிட் பண்றார்."

"கூட குழந்தை இருக்கா?"

"எஸ் மேடம்."

"அவர் பெயர் என்ன?"

"இம்.. நந்தான்னு சொன்ன மாதிரி இருக்கு."

"ந..ந்..தா..வா.." வாய் உலர்ந்தது.

"........"

தன்னை சுதாரித்துக் கொண்டு.

"சரி.. சரி.. அவரை கெஸ்ட் ரூம்க்கு கூட்டி வாங்க."

"எஸ் மேடம்."

சங்கர் நகர்ந்ததும்.. கெஸ்ட் ரூமில் போய் அமர்ந்து கொண் டாள். வருபவரிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? நேற்று போன் செய்தது இவன்தானோ? இவன் இல்லை என்றால் உடன் எப்படி குழந்தை? மண்டையை உடைத்துக் கொண் டதுதான் மிச்சம். அவினாஷ் எப்போதும் டைரக்டர்களை யும், புரட்யூசர்களையும், கதாசிரியர்களையும் சந்திக்கும் அறைக்குத்தான் நந்தாவை அழைத்து வரச் சொல்லி இருந் தாள். அந்த அறையில் இருந்த சோபா ஒன்றில் தன்னை ஒடுக் கிக் கொண்டு கண்களின் வீச்சு முழுவதும் கதவு பக்கத்தி லேயே தவம் கிடந்தது.

தயக்கம் நந்தாவின் கால்களில் தடுமாற்றத்தை உண்டு பண்ணி இருந்தது. அவன் இடது கை ஒரு சின்ன மொழு மொழுக் குழந்தையின் கரத்தோடு இணைந்து இருந்தது. அந்தக் குட்டிப் பெண் குழந்தை.. நந்தாவின் கையை விட்டு விட்டு தனியாய் நடக்க பிரயத்தனம் பண்ணியது.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும். இந்த சந்தர்ப்பத்தை விட்டால் உங்களை சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் என் வாழ்க் கையில் இனி கிடைக்காது. அதான். எக்ஸ்ட்ரீம்லி ஸாரி. நான் உள்ளே வரலாமா?" கேட்டான்.



"வருவதற்கு முன்னாலதான் அனுமதி வாங்கணும்.. வந்த பின்னால் அல்ல..."

"ஐ ம் ஸாரி."

"உட்காருங்க" அவள் அமர்ந்து இருந்த சோபாவின் மறு ஓரத்தையே காட்டினாள். அமர்ந்து கொண்டான். அவன் மடியிலேயே அந்தக் குழந்தையையும் அமரச் செய்து இறுக்கிப் பிடித்துக் கொண்டான். நிமிர்ந்து துர்காவை பார்த்துப் பேசச் சிரமப்பட்டு தலையைக் குனிந்து கொண்டே இருந்தான்.

அவனிடம் இருந்து விடாப்பிடியாய் தன்னைக் கஷ்டப் பட்டு விடுவித்துக் கொண்டு.. தரையில் ஜம்மென்று குதித்தது. துர்காவைப் பார்த்துச் சிரித்தது. பற்கள் எல்லாம் வரிசையாக முளைத்து இருந்தது. இரண்டு வயது இருக்கும். அப்படியே நந்தாவை உரித்து வைத்து இருந்தது. அப்படி ஒரு கொள்ளை அழகாய் இருந்தது. அந்தக் குழந்தையை அள்ளிக் கொள்ள கையும் மனமும் பரபரத்தாலும்.. கட்டுப்படுத்திக் கொண்டு.. எங்கே அந்தக் குழந்தை முகத்தின் முன்பு தன் கோபம் மறைந்து விடுமோ என்ற பயத்தில் அந்தக் குழந்தையைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

ஆனால் அந்தக் குழந்தை அவளை விடுவதாய் இல்லை. அவள் அருகில் வந்து அவள் தொடையைச் சுரண்டி... அன்னாந்து அவள் முகத்தைப் பார்த்தது. கஷ்டப்பட்டு தவிர்த்தாலும்.. திருட்டுத் தனமாய் பார்வை குழந்தை பக்கம்தான் சென்றது..

துர்கா தன்னை கண்டு கொள்ளாததினால்.. ஏறி அவள் மடிமேலேயே மெத்னே உட்கார்ந்து.. அவள் கழுத்தில் தன் கைகளை சுற்றி கட்டிக் கொண்டு..

"ஆ..ன்..டி.." என்றது.

நெஞ்சக் கூட்டுக்குள் புதியதாய் ஒரு ஊற்று பீறிட்டது.

மெள்ள அவள் கைகள் அவளையும் மீறி அந்தக் குழந் தையின் முதுகை சுற்றிக் கொண்டது. இது என் குழந்தையாக



இருக்குமோ... தோன்றியதும்... கண்ணுக்குள்ளும்.. நெஞ்சுக் குள்ளும் ஈரம் சுரந்தது. ஆர்வத்தோடு தன் உணர்வை வெளிக்காட்டாமல் அந்தக் குழந்தையை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

"இந்தக் குழந்தைதான் யுவனாவா?" நந்தாவைப் பார்த்துக் கேட்டாள்.

"யுவனாவா?" ஆச்சர்யமாக தலையை உயர்த்தினான்.

"நீங்கதானே நேற்று போன் பண்ணுனீங்க?"

"இல்லையே" புரியாமல் கூறினான்.

"அப்போ இந்தக் குழந்தை?"

"என்னோட பெண் துர்கா."

"உங்க பெண்ணா? வேறு ஒரு கல்யாணம் பண்ணிகிட் டீங்களா?"

"இல்லைங்க... எனக்கும் சுபலாவிற்கும் பிறந்த குழந்தை தான்."

"ரொம்ப சந்தோஷம்.. எங்கே அவங்க.. ஏன் கூட்டிகிட்டு வரலை?"

"அவ வரமாட்டா.. நாமதான் போய் பார்க்கணும்.. உங் களுக்கு பண்ணின துரோகம் இந்தக் குழந்தை இந்த பூமியைப் பார்க்கிற வரைக்கும்தான் அவளை உயிரோட வச்சிருந்தது" அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் பிரதிபலிக்கவில்லை.

"ஐ'ம் ஸாரி.. ரியலி ஐ'ம் வெரி ஸாரி" அவள் குரலில் உண்மையான துக்கம் இழைந்தோடியது.. அந்தக் குழந்தையை மேலும் இறுக்கிக் கொண்டாள்.

"ஸாரி சொல்ல வேண்டியது.. நானும் அவளும் தான்.. நீங்க இல்லை.. என்னைக்கு உங்க கர்ப்பத்தைக் கலைக்கச் சொல்லி போன் பண்ணிச் சொன்னேனோ.. அதுக்கப்புறம் ஆறு மாதத்துக்கு முன்புதான் என் குழந்தையோட இந்தியா

வந்தேன். வந்த காரணமே உங்களைத் தேடிக் கண்டு பிடித்து மன்னிப்புக் கேட்கணும்னுதான். அதுக்காகத்தான் அன்னைக்கு கம்பெனிக்கு வந்தேன். அப்போ எங்கிட்டே பேசக்கூடிய மனநிலையில் நீங்க இல்லை. உங்களைத் தவிர வேற யாரா வது அந்த நிலைமையில இருந்தால் என்னைக் கொன்னே இருப் பாங்க."

"இப்போ.. அதெல்லாம் எதுக்கு?"

"என் பொண்ணு பேரு கூட துர்காதான். அவளை வாய் நிறைய அழைக்கும்போது.. உங்ககிட்டே மன்னிப்பு கேட்ட திருப்தி ஏற்படும். நீங்க எங்களுக்காக எடுத்த முடிவு.. அதுக்காக எந்தப் பொண்ணுமே செய்ய முடியாத.. செய்யத் துணியாத செயலை செஞ்சீங்க.. அப்போதும் உங்களுக்கு நாங்க பண்ணினது அப்படியே ஒரு பச்சை துரோகம்."

"அதெல்லாம்... இப்போ எதுக்கு?"

"இல்லங்க.. மனம் விட்டு நடந்ததைச் சொல்லிடணும்."

"என்ன?"

"இதைச் சொல்றதுனால.. உங்க மனசு இன்னும் வேதனைப் படும்னு தெரியும். ஆனாலும் என் பாரத்தை இறக்கி வைக்க.. அன்னைக்கும் உங்களைத் தான் நாடினேன். இன்னைக்கும் இங்கேதான் வந்திருக்கேன்" கலங்கினான்.

"ப்ளீஸ்... கண்ட்ரோல் யுவர் செல்ப்..." அவனைப் பார்த் ததும் வந்த கோபம்... ஆத்திரம் எல்லாம்... இப்போது அவன் மேல் அனுதாபமாய் மாறிக் கொண்டிருந்தது.

"என் குழந்தை உங்க வயிற்றில் வளரும்போது.. எங்க இரண்டு பேருக்குமே நீங்கதான் தெய்வம். உங்களை பற்றி நாங்க இரண்டு பேரும் பேசாத நிமிடமே கிடையாது. உங்களைப் பார்ப்பதற்கு முன்பே.. எல்லா ட்ரீட்மெண்டும் எடுத்து பலன் இல்லாம.. தோல்வியை சந்தித்து.. கடைசி முயற்சியா சித்தா ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டா என்னன்னு



தோணிச்சு. அந்த ட்ரீட்மெண்டை கடைசியா நாங்க ஃபாலோ பண்ணினாலும்.. ஏகப்பட்ட தோல்வியை சந்திச்ச அதிருப்தியை எங்களால தாங்க முடியலை.. அதனால நாங்க வந்த கடைசி முயற்சி தான்.. உங்க விசயம்.

"அதுக்கப்புறம்.. உங்களை அடிக்கடி எனக்குப் பார்க்க ணும்னு தோணும்.. அது என் குழந்தைக்காக மட்டும் இல்லை.. உங்களையும் பார்க்கணும்.. பேசணும்னு தோணும். கண்டிப்பா தப்பான கண்ணோட்டத்தில் இல்லை.. ஒரு வெறி பிடித்த பக்தனுக்கு கோவில் எப்படியோ.. அப்படித்தான் எனக்கும்.. ஆனா.. அது சுபலாவிற்கு பெரிய பிரச்சனையா போயிடுச்சு.. எந்த ஒரு பொண்ணுக்குமே.. தன்னைத் தவிர வேற யாரையும் புருஷன் மட்டும் புகழக் கூடாது. பேசக் கூடாது. இது எனக்கு ரொம்ப லேட்டாத்தான் தெரிஞ்சது.. எங்கே நீங்க அவ இடத்துக்கு வந்துடுவீங்களோன்னு மெண்டலி அப்செட் ஆக ஆரம்பித்தாள். அவ மேல எந்த அளவு என் உயிரையே வச்சிருந்தால்.. யாருக்கும் தெரியாம.. இந்த அளவுக்கு இப்படி ஒரு முடிவுக்கு நான் வருவேனா?... ஆனா அவ பயந் துட்டா. நான் விலகிப் போய்டுவேன்னு ரொம்ப பயந்துட்டா.. இதுல.. சித்தா ட்ரீட்மெண்டால கன்சீவ் ஆனா... அதைப் பார்த்து என்னால சந்தோஷப்பட முடியலை.. என்ன பண்ற துன்னே தெரியலை."

துர்காவின் விழிகள் விரிந்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

"நான் சந்தோஷப்படாதது அவ சந்தேகத்தை இன்னும் அதிகமாயிடுச்சி. என் வயித்துலதான் குழந்தை வந்துடுச்சே.. அந்தப் பொண்ணு வயிற்றில் இனி எதுக்கு..? நாளைக் கடத் தாமல் சீக்கிரம் கலைச்சிடணும்னு.. பிடிவாதம் பிடிக்க ஆரம் பிச்சா.. நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவ கேட்கவே இல்லை. ஒரு நாள் கோபத்துல அறைஞ்சிட்டேன். அதுக்கு அப்புறம்.. தற்கொலைக்கு முயற்சி பண்ணிட்டா. என் மனைவியைப் பிணமா பார்க்கிற சக்தி எனக்கில்லை.





"அதான் மனதைக் கல்லாக்கிட்டு.. டாக்டர்கிட்டே போன் பண்ணிச் சொல்லிட்டேன். டாக்டரும் சரின்னு சொல்லிட்டார். அதுக்கப்புறம் டாக்டரைப் பார்த்த போதுதான் அந்தக் குழந் தையை நீங்க கலைக்கலன்னு தெரியும். அது தெரிஞ்சதுமே.. ரொம்ப உடஞ்சி போய்ட்டா.. தப்பு செய்த குற்ற உணர்வு.. அவளை ஒவ்வொரு நாளும் கொல்ல ஆரம்பிச்சது. அவ ளுக்கு வெளிநாடும் அமைதியைக் கொடுக்கலை.. என் பொண்ணோட பிறப்பு தான் அவளுக்கு பூரண அமைதியைக் கொடுத்துச்சு.. எங்களை மன்னிச்சிடுங்க ப்ளீஸ்" கை கூப் பினான்.

என்ன சொல்வது என்றே துர்காவிற்கு விளங்கவில்லை.

"என்னங்க... அந்தக் குழந்தை எங்கே?" ஆர்வமாகக் கேட்டான்.

"எந்தக் குழந்தை?"

"உங்க வயிற்றில் பிறந்த குழந்தை?"

"இறந்து போச்சு."

"...." நந்தா எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண் டான். அந்தக் குழந்தை... துர்காவின் கன்னத்தை வேகமாய் எச்சில் படுத்தியது. அந்தக் குழந்தையின் ஒவ்வொரு அணுகு முறையிலும் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழக்கத் துவங்கினாள்.

திடீர் என்றுதான் நினைவுக்கு வந்தது.

'வந்தவனுக்கு ஒரு காபி... டீ.. கூட கொடுக்கவில்லையே.'

"என்ன சாப்புட்றீங்க.. காபியா? டீயா?" என்றாள்.

"ஒன்னும் வேண்டாம்.. நீங்க இந்த அளவிற்கு என்னிடம் பேசியதே எனக்குப் போதும்.. ரொம்ப சந்தோஷம்."

"எதாவது சாப்பிட்டுத்தான் போகணும்" விடாமல் தடுத் தாள்.



"சரி.. உங்க விருப்பம்."

"துர்கா குட்டிக்கு என்ன பிடிக்கும்?" அந்தக் குட்டிப் பெண் ணின் கன்னத்தைச் செல்லமாய் திருகினாள்.

"ஐ..ஸ்..க்..ரீ..ம்" அது பேசியதும் ஐஸ்க்ரீம் போல் உள்ளுக்குள் சென்று ஜில்லென இனித்தது.

"பால் கொண்டு வரேன்" என்றபடி குழந்தையோடு எழுந்தவள். இந்த நிமிடமே இறந்து விட மாட்டோமா?' என்று உயிர் மூச்சைக் காற்றில் பறக்க விட்டபடி.. அதிர்ந்து போய் நின்றாள்.. அவள் கால்களுக்குக் கீழே பூமி நழுவியது.

ஏன் இப்படி துர்கா கல்லாய் நிற்கிறாள் என்று திரும்பி வாசல் பக்கம் பார்த்த நந்தாவும்.. விபரீதத்தின் எல்லையைத் தொட்ட திகிலோடு நின்றான்.

ஆனால் இவர்கள் உணர்வுகளை பற்றி யோசிக்காமல்.. தன் நகத்தை வேக வேகமாய் கடித்துத் துப்பிய அவினாஷ்.. கதவு ஓரத்தில் சாய்ந்தபடி தன் கைவிரல்களைப் பார்த்தான். இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"ஸார் ஷூட்டிங்குக்கு ஏற்கெனவே நேரமாச்சு" சங்கர் வந்து ஞாபகப்படுத்தினான். காரை எடுக்கும்படி கையைக் காட்டினான் அவினாஷ்.

நந்தாவையும், துர்காவையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு.. எதுவும் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து ஷூட்டிங் கிளம்பி விட்டான்.

அவன் எதுவும் பேசாமல் மௌனமாய் சென்றது. வயிற்றுக்குள் பீரங்கியை வெடிக்க வைத்தது.

"அவருக்கு முன்பே இந்த விஷயம் எல்லாம் தெரியுமா?" நந்தாதான் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு கேட்டான்.

அவன் குரலில் பயம் தெரிந்தது. எங்கே தன்னால் துர்கா வின் வாழ்வு பாதிக்கப்பட்டு விடுமோ என்ற துடிப்பும் இருந்தது.

"நீங்க எதுக்கு பயப்படுறீங்க. அவருக்கு எல்லாம் தெரியும்.. நீங்க எதையும் நினைத்துக் கொண்டு மனதைக் கஷ்டப் படுத்திக் கொள்ளாதீங்க..' சின்னச் சின்னப் பொய் சொல்லவே.. வாரக் கணக்கில் அதைப் பற்றி யோசிப்பவள்... அப்பட்டமாய் அவளிடம் புளுகினாள்.

"எப்போ ஸ்டேட்சுக்கு போறீங்க?"

"11.00 மணி ப்ளைட்டுக்கு."

"இன்னைக்கா?"

"ஆமாம்."

புறப்படும்போது.. தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல்..

"குட்டி.. ஆன்ட்டிக்கு கிஸ் இல்லையா" என்றாள்.

அந்தக் குழந்தையும்.. துர்கா ஐஸ்கிரீமாக வாரிக் கொடுத்த சந்தோஷத்தில்... மொச்சு.. மொச்சு என தன் முகத்தை அவள் முகத்தோடு மோதி... அதன் வாயிலும் கன்னங்களிலும் அப்பி இருந்த, ஒழுகிக் கொண்டிருந்த ஐஸ்க்ரீம் அனைத்தையும் துர்காவின் முகத்திற்கு இடம் மாற்றியது.

அவர்கள் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட பின்னால் தான் தனக்கு இனிமேல் நேரப்போகும் விபரீதம் உறைக்கத் துவங்கியது. அவன் ஓங்கி அறைந்து இருந்தாலோ.. திட்டி இருந்தாலோ.. இல்லை வெளியே போடி நாயேன்னு கத்தியிருந்தாலோ மனம் சந்தோஷப்பட்டு இருக்கும். இப்படி வெறித்துப் பார்த்துவிட்டுப் போயிருக்கானே.. என்ன நடக்குமோ.. தெரியவில்லையே.. எந்த நிமிடமும் உனக்கு சாவு வரலாம் என்று கூறியிருந்தால் கூட துர்கா இப்படி செத்து இருக்க மாட்டாள்.

அவினாஷை நேரில் பார்த்து வாங்கிக் கட்டிக் கொள்ள உள்ளம் துடித்தது. ஒவ்வொரு நிமிடமும் நேரத்தைவிட கொடுமையானதாக அவளுக்கு பட்டது.



"போனாவது பண்ணலாம்" போன் பட்டனில் கை வைக்கும்போது... அதுவே எடுக்கச் சொல்லி அழுதது. எடுத்து..

"ஹலோ!" என்றாள்.

"மிஸஸ். அவினாஷ் ப்ளீஸ்."

அந்தக் குரல்.. அரிசியை வாயில் போட்டு மென்று கொண்டே பேசுவது போல் இருக்கும் கரகர குரல்.. நன்றாகவே நினைவில் இருந்தது.

"எஸ்.. ஸ்பீக்கிங்" வாய் உளறியது.

"நீங்கதானாம்மா.. நான்தான்.. உங்கமேலே அக்கறை உள்ளவன்.. இப்போ உங்க குழந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் பேசுறேன். வீட்டுக்கு வரட்டுமா?"

"டேய்!... யார்ரா நீ" கத்தினாள். இன்னும் வேகமாய் கத்தியிருந்தால் ரிசீவர் ரெண்டாய் தெறித்து இருக்கும்.

"இங்க பாருங்கம்மா. கோபப்படக்கூடாது.. நான் எவ்வளவு மரியாதையா பேசுறேன். அந்த மரியாதையை நீங்களும் எனக்குத் தரணும். கிவ் ரெஸ்பெக்ட் அண்ட் டேக் ரெஸ் பெக்ட்..."

"இந்தா பார். உனக்கோ உன் போன் கால்கோ... குழந்தை இருக்கு குழந்தை இருக்குங்ற மிரட்டலுக்கோ.. நான் பயப் படப் போறது இல்லை. சாட்சிக்காரன் காலில் விழுவதை விட.. சண்டைக்காரன் காலில் விழலாம்."

"அப்படியா ரொம்ப நல்ல முடிவு. சரி உங்க குழந்தையை என்ன பண்றது? இன்னார் உடைய குழந்தை இது யாராவது அடாப் பண்ணிக்கிறீங்களான்னு பேப்பர்ல அட்வடைஸ் மெண்ட் கொடுத்துடட்டுமா?'

"யூ..." கத்தினாள்.

"ப்ளீஸ்.. ரிலாக்ஸ்.. உடனே நான் சொல்ற இடத்துக்கு கிளம்பி வாங்க.. உங்க பெண்ணை நேரில் காட்டேன்..



மத்ததையும் நேரில் பேசுவோம். காசு நாமதப்படுத்தினாலோ.. என்னை நம்பலன்னாலோ.. அட்வர்டைஸ்மெண்ட் கொடுக்கிற மாதிரி இருக்கும்.. நான் செய்யறதைத்தான் சொல்வேன்."

"நான் எங்கே வரணும்?"

"[illegible].."

முகவரியைச் சொன்னான்.

"இந்த இடம் தெரியுமில்ல?"

"ம்."

"சீக்கிரம் வாங்க. பொண்ணைப் பார்க்க வேண்டாமா?" கூறிவிட்டு வைத்து விட்டான்.

மணி பார்த்தாள். 11.41 என்று எடுத்துச் சொன்னது. தன் ஹேண்ட் பேக்கை மட்டும் எடுத்துக் கொண்டு.. வெளியே வந்தாள். ஹேண்ட் பேக்கோடு அவளைப் பார்த்ததுமே.. டிரைவர் அருகில் ஓடிவந்து..

"எங்கம்மா போகணும்" என்றான்.

"நீங்க வேண்டாம்.. நானே போய்க்கிறேன்" என்றாள்.

"ஐயா திட்டுவார்" தலை சொறிந்தான்.

"ஐயாகிட்டே நான் சொல்றேன்.. எனக்கு டிரைவிங் தெரியும். நீங்க பயப்பட வேண்டாம்." விருட்டென பின்னால் காரைக் கிளப்பிக் கொண்டு வேகமாய் சீற விட்டாள். நெற்றி நரம்புகள் எல்லாம் புடைத்துக் கொண்டு இருந்தன. கண்ணுக்குள் குண்டூசி குத்தியது போல் தொடர்ந்து வரவும், தாள முடியாமல் தலையைக் குனிந்து.. ஒரு கையால் நெற்றியை இறுக்கிப் பிடிக்க முயன்றபோதுதான்.. எதிரே வேகமாய் வந்து கொண்டிருந்த சரக்கு லாரி தெரிந்தது. திடீர் என ஏற்பட்ட பதற்றத்தில் வலது பக்கம் ஒடித்துத் திருப்பி நேராய் போய் மோதினாள். அடுத்த நொடி.. கிரிக்கெட் பால் கணக்காய்.

காரில் இருந்து தூக்கி வீசப்பட்டாள்.



மனோஜ்குமார் நர்ஸிங் ஹோம்.

நான்கு நாட்களாய்.. அவினாஷைக் கூட்டிப் பார்க்கக் கூட எந்த டாக்டரும் அனுமதிக்கவில்லை. அவசரச் சிகிச்சைப் பிரிவில் எந்த நேரமும் நாலைந்து ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களுக்கு நடுவில் கிடத்தப்பட்டு இருந்தாள் துர்கா. மகாலஷ்மியும், பத்மநாபனும் தூக்கம் இல்லாமல் ஆபரேஷன் தியேட்டர் அருகிலேயே தவம் கிடந்தார்கள். அவினாஷ் மட்டும் நன்கு அறிமுகமான டாக்டர் ஒருவரின் பர்சனல் அறையில் தலை கவிழ்ந்தபடி அமர்ந்து இருந்தான். அவன் சம்பந்தப்பட்ட அத்தனை படக் காட்சிகளையும் ஒட்டு மொத்தமாய் கேன்சல் செய்து இருந்தான்.

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு.. தலையைத் திருப்பிப் பார்த்தான். டாக்டர் ராம்சந்தர் தான் உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததுமே சேரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு.. வேகமாய் எழுந்து நின்று.. அவர் இவனிடம் நெருங்குவதற்கு முன்பு.. இவன் அவரை எதிர்கொண்டான் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு.. பேச முடியாமல்.. விழிகளால் துர்காவைப் பற்றி வினவினான்.

அவன் தோளை தட்டிக் கொடுத்த டாக்டர்..

"யூ ஆர் வெரி லக்கிமேன் அவினாஷ். உங்க வொய்ப் இன்னும் ஒரு மாதத்தில் பரிபூர்ணமா குணம் அடைஞ்சிடுவாங்க. யூ டோன்ட் ஒர்ரி.. காட் ஈஸ் க்ரேட். திரும்ப உங்க மனைவியை உங்களிடம் கொடுப்போம்னு நாங்க நம்பவே இல்லை." கைகளைப் பிடித்து டாக்டர் ராம்சந்தர் சந்தோஷமாகக் குலுக்கினார்.

"டாக்டர்" அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை.

"எஸ்.. உங்க மனைவிக்கு இனி ஒன்றும் இல்லை.. நல்ல வேளை.. லாரிக்காரன் ப்ரேக் அடிச்சி நிறுத்திட்டான். அதனால

தான் இவங்களை உயிரோட பார்க்க முடிஞ்சிருக்கு.. அவ்வளவு அவசரமா எங்கே போனாங்க.''

அதற்கு பதில் சொல்லாமல்,

''நான் போய்ப் பார்க்கலாமா'' என்றான்.

''தாராளமாய் போய் பார்க்கலாம்.. அவங்களுக்கு இப்போ தான் நினைவு திரும்பியிருக்கு.. அதிகமாக பேசி தொந்தரவு படுத்தாதீங்க.. பார்த்துட்டு வந்திடுங்க.''

தலையாட்டிவிட்டு வெளியே வந்தான். இன்டன்சிவ் கேரை நெருங்கும்போது.. எதிரேயே மகாலஷ்மியும் பத்மநாபனும்...

''பார்த்தீங்களா?''

''பார்த்தோம்.. இந்தக் கண்ணாடி வழியாத்தான் பார்க்க விட்டாங்க... உள்ளே விடலை'' பரிதாபமாக மகாலஷ்மி கூறினாள்.

''இனிமேல் ஒன்றும் இல்லை'' கூறிவிட்டு.. நர்ஸ் கொண்டு வந்து கொடுத்த உடை ஒன்றை மேலே அணிந்து கொண்டு உள்ளே நுழைந்தான். துர்காவைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. வலது காலில் மிகப் பெரிய கட்டு.. எலும்பு உடைந்து இருப்பதாகக் கூடக் கூறினார்கள். மண்டையில் பலத்த அடி இல்லாததால் கோமாவிற்குப் போகாமல் தப்பித்தாள். இதயத் துடிப்புக்கூட சீராக இல்லாமல் இப்போதுதான் சீராக்கி இருந்தார்கள். நெஞ்சில் இருந்து.. கையில் இருந்து.. காலில் இருந்து.. எங்கெங்கோ ஒயர் கனெக்ஷன்ஸ்.. அவளின் சீரான இதய ஓட்டத்தை கம்ப்யூட்டர் பச்சை வரி கோடுகள் மூலம் காட்டிக் கொண்டிருந்தது. இடது பக்க முதுகில் சதை பிய்ந்து தொங்கிய இடத்தில் ஸ்டிச்சிங் போடப்பட்டு இருந்தது... அதனால் வலது பக்கமாக கொஞ்சம் சாய்த்து படுக்க வைக்கப்பட்டு இருந்தாள்.



''துர்கா.''

''துர்கா'' மென்மையாய் அவன் அழைத்தாலும்.. அந்த அமைதிக்கு குரல் சத்தமாக எழுந்து.. துர்காவின் செவிப் பறையைத் தட்டியது...

சூரிய ஒளிக்காக காத்திருந்து.. ஆவலோடு இதழ் வெடிக்கும் தாமரை போல்... அந்தக் குரலுக்காகவே காத்திருந்தது போல்.. அவள் கண்களின் கதவுகள் திறந்தன. அவன் முகம் கண்களுக்குத் தட்டுப்பட்டதுமே... கண்ணீர் கடகடவென வழியத் துவங்கியது..

அவள் முகத்திற்கு அருகில் நெருங்கி வந்தவன் கண்ணீரைத் துடைத்து விட்டு.. அவள் கண்களையே உற்றுப் பார்த்தான். அவன் கண்களும் நீரைச் சுரந்து.. சொட்டுச் சொட்டாய்.. அவள் கன்னத்திலேயே விழுந்தது. சூடாய் விழுந்த துளிகள்.. அவள் முகத்தில் கேள்விக் குறியைத் தான் ஏற்படுத்தியது.

''என்னை மன்னிச்சிடு துர்கா'' தழுதழுத்தான்.

துர்காவால் பேச முடியவில்லையே தவிர... முகத்தில் அவன் ஏன் மன்னிப்புக் கேட்கிறான் என்ற வினா. வரிசையாய் வந்து போனது.. அவற்றை அவினாஷால் அறிய முடிந்தது.

''நான் எதுக்காக மன்னிப்புக் கேக்கிறேன்னு பாக்குறியா.. உன்னோட இந்த நிலைமைக்கு.. நான்தான்டா காரணம். தயவு செய்து என்னை மன்னிச்சிடு துர்கா.. உனக்கு பயத்தைக் கொடுத்த ரெண்டு போன் காலும் நான் பண்ணினதுதான்.''

அதிர்ச்சியில் எழ எத்தனித்தாள்.

''ப்ளீஸ்... ரிலாக்ஸ்... உன்னைப் பத்தி எல்லாமே எனக்குத் தெரியும் துர்கா. டாக்டர் மனோஜ்குமார் எனக்கு தூரத்து சொந்தம். என்னை முழுமையாப் புரிஞ்சிகிட்ட ஒரு ஆத்மா.. ஆக்ஸிடென்டா உங்க கம்பெனி பெஸ்டிவெல் கேடைட..



நாங்க சேர்ந்து பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் அமைஞ்சது.. நீதானே காம்பையராக இருந்தே.. உன்னைப் பார்த்ததுமே.. அவருக்கு அப்படி ஒரு சந்தோஷம். அன்னைக்கு முழுக்க துர்கா துர்கான்னு பேசிகிட்டே இருந்தார். அவர் உன்னைப் பத்தி பெருமையா பேசப் பேச.. என்னைப் புரிஞ்சிக்கிற பெண் கிடைக்க மாட்டாளான்னு ஏங்கிக்கிட்டு இருந்த எனக்கு.. உன் அழகு.. உன் பேச்சு.. உன் குணம் இதெல்லாம் கேள்விப்பட் டதும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணிச்சு.. மனோஜ்குமாரைத்தான் கான்டாக்ட் பண்ணினேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுவதாய் ரொம்பப் பிடி வாதமாய் நான் சொன்னதைப் பார்த்ததும்தான்..

''அவர் உன்னைப் பத்திய எல்லா உண்மைகளையும் சொன்னார். அதைக் கேட்கும்போது அப்படி ஒரு பிரமிப்பாய் இருந்தது. இப்படிக் கூட ஒரு பெண்ணிற்கு இரக்கம் இருக்குமான்னு தோணிச்சு.

''பொய் முகங்கள் நிறைந்த ஒரு துறை.. சாப்பிட்டாயான்னு கேக்கறதுகூட என் பணத்துக்காகத்தான்.. அதெல்லாம் பார்த்து வெறுத்துப்போன எனக்கு.. நீ மட்டும் மனைவியாக் கிடைத்தால்.. நான் ஏங்கின அன்பெல்லாம் கிடைக்கும்.. என்னை உன் நெஞ்சுக்குள்ளேயும் கண்ணுக்குள்ளேயும் வச்சிப் பார்த்துக்குவே.. அப்படிங்கற நம்பிக்கை வந்துச்சு.. நான் உன்னையேதான் மனைவியாக்கிக்கணும்கற முடிவுக்கு வந்ததை மனோஜ்குமார்கிட்டே சொன்னபோதுதான், உன் குழந்தையும் உயிரோட இருக்கிறதா சொன்னார். அது உன் அக்காவிற்கே தெரியாது. குறைமாத குழந்தை.. உயிரோட இருக்கா இல்லையான்னு.. குழப்பமாக இருந்த உங்கக்காவால புரிஞ்சிக்க முடியலை. அது டாக்டருக்கு சாதகமாப் போய்டுச்சி.. உன் வாழ்க்கைக்கு அந்தக் குழந்தை ஏதாவது பாதிப்பை கொடுத்துடுமோன்னு பயந்து.. ஒரு நல்ல ஆசிரமத்தில்.. அதை நன்றாக குணப்படுத்தி சேர்த்துட்டார்.

''......நா... அ...து...''



''நீ... பேசாத துர்கா'' அவள் தோளில் கைவைத்து தட்டினான்.

''அப்பவே அந்தக் குழந்தையையும் என் கஸ்டடிக்குக் கொண்டாந்துட்டேன். ஆறு மாதங்களுக்கு முன்பே அதுக்கு நான் அப்பா ஆகியாச்சு.. நிலவுக்கு களங்கம்னு சாஸ்திரம் சம்பிரதாயம் வேண்டுமானால் சொல்லும். விஞ்ஞானம் சொல்லாது. வானத்துல எத்தனையோ நட்சத்திரம் மின்னலாம்.. மறையலாம்.. ஆனா துருவ நட்சத்திரத்திற்கு இருக்கிற மதிப்பு.. வேற எதுக்கும் இல்லை. எனக்கு இந்த துர்கா துருவ நட்சத்திரம். இல்லன்னா உன்னையே கல்யாணம் பண்ணிக்கணும்னு வெறித்தனமா இருந்த உன் மாமாவை. என் வழிக்கு கொண்டு வந்து.. பணத்தால அடிச்சி.. உன்னைக் கல்யாணம் பண்ணி இருக்க மாட்டேன்.

''என்னைப் பத்திய குறைகளை உங்கிட்டே நான் சொல்லக் காரணம். அப்பவாவது உன்னைப் பற்றி எங்கிட்டே சொல்ல மாட்டியாங்கற நப்பாசைதான். நானா கேட்டால் தெரிந்துதான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொன்னா.. நீ என்னை - இந்த சாதாரண மனிதனை தெய்வமா நினைச்சிடுவே. அதுக்கு எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. உன்னைக் கல்யாணம் பண்ண நான் தான் கொடுத்து வச்சிருக்கணும்..

''நானும் தவறுகள் பண்ணினவன் அப்படின்னு உனக்குத் தோணினாதான், உன் மனதைத் திறப்பாய். அதுக்குப் பிறகு தான்.. நான் எதிர்பார்த்த.. என்னிடம் சண்டை போடும். கோபம் கொள்ளும்.. ஊடல் கொள்ளும்.. அரவணைத்துக் கொள்ளும்.. என் துர்கா கிடைப்பாள்னு தோணிச்சு.. ஆனா நீ வாயவே திறக்கலை..

''யுவனாவை வீட்டுக்குக் கொண்டு வாணும்னு தோணிச்சு.. அதான் போன் பண்ணி மிரட்டினேன். அப்பவாவது என்னிடம் சொல்லுவன்னு எதிர்பார்த்தேன். ம்கூம் அப்பவும் உன்னைத்தான் வருத்திக்கிட்டியே தவிர. என்னிடம் மனம் விட்டுப் பேசல.. உன்னை வரச் சொல்லி.. குழந்தையோட..

நின்னு இன்ப அதிர்ச்சி உனக்குக் கொடுக்கணும்னு நினைச்சி தான் போன் பண்ணினேன்...

"ஆனா.. நீ... நீ... ஆக்ஸிடென்ட்ங்கற பேர்ல.. பெரிய இடியையே தூக்கிப் போட்டுட்ட.. கொஞ்ச நேரத்துல என்னை விட்டுப் போகப் பார்த்தியே.. நீ மட்டும் கண்ணை மூடியிருந் தன்னு வச்சிக்கோ. நான் மட்டும்.. உயிரோடவா.. இருப் பேன்" அழத் தொடங்கினான். அவனையும் மீறி விம்மல் வெளிப்பட்டது.

'இப்படி ஒரு கணவனா எனக்கு... கடவுளே இவரோடு ஒரு மணி நேரமாவது என்னை வாழ வை போதும்..' கைகளைத் தூக்க முற்பட்டு தோற்றுப் போனாள்.

"குழந்.. இ..ந்.. ஊர்..." வார்த்தைகள் சரியாய் வர வில்லை.

"குழந்தையா.. பேரு.. யுவனா.. நான் வச்சேன்.. உன்னை மாதிரியே நம்ம குழந்தையும் கொள்ளை அழகு.. இந்த சமுதாயத்தை பத்தி உனக்கு எதற்கு கவலை? இந்த சமுதாயம் கழுதை மாதிரி.. ஏகப்பட்ட துணி மூட்டைகளை சுமக்கும்.. அது 'ட்ரஸ்' போட்டுக்காது.. யுவனாவை தத்தெடுத்த குழந் தையா இந்த உலகத்திற்கு நான் எதுக்காக அறிமுகப்படுத் தணும். அவ என் குழந்தை. எனக்கும் உனக்கும் மூன்று வருடங் களுக்கு முன்பே பிறந்த குழந்தை. நாம் ரெண்டு பேரும் ஐந்து வருடமா லவ் பண்றோம். இப்போதான் கல்யாணம் பண் ணிக்கிட்டோம்."

"...இ...தை."

"பத்திரிகைக்கு கொடுத்தா.. இந்த ஊரும் உலகமும் அப் படியே நம்பும். ஏன்னா.. பிள்ளை பெத்துகிட்டு கல்யாணம் பண்றது என்னைப் போன்ற பிளே பாய்க்கு புதுசு இல்லைன்னு நம்பிடுவாங்க. அதுதான் யுவனாவோட எதிர் காலத்துக்கும் நல்லது.. இது உனக்கும் எனக்கும் மட்டும் உள்ள விஷயம்.. உங்கக்காவிற்கு கூடத் தெரிய வேண்டாம்."



சந்தோஷ மிகுதியால் மீண்டும் வேகமாய் கண்ணீர் புறப் பட்டது.

"எதுக்கு செல்லம் அழற.. இம்.. அழாத.." என்றான்.

"கு..ழ..ந்.."

"யுவனாதானே.. சாயந்திரமா கூட்டிகிட்டு வரேன்.. பயங் கர வாய் தெரியுமா?"

'ம்" சந்தோஷமாய் கண் மூடித் திறந்தாள்.

"டேய்.. கண்ணம்மா.. நீ எனக்கு வேணுண்டா.. வாழ்நாள் முழுக்க என் பக்கத்துல வேணும். இரண்டு பேருமே மனதை திறக்காமல் இருந்ததற்கு அனுபவிச்சிட்டோம் இனிமேலும் இந்த தண்டனை வேண்டாம்."

துர்கா என்ன சொல்வாள். கண்ணீரைத் தவிர வேறு எது வும் நன்றியாய் அவளிடம் இருந்து வெளிப்படவில்லை.

அடுத்த நாளே... அந்தக் குட்டிக் குழந்தை பத்திரிகைகள் மூலம் இந்த உலகத்திற்கு அவர்கள் இருவரின் வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்டது. மகாலஷ்மி உள்பட எல்லோரின் புருவமும் உயர்ந்தபடியே இருந்தது. மகாலஷ்மி நம்பாவிட் டாலும்.. தங்கையிடம் எதுவும் கேட்காமல் எப்போதும் போல இருந்தாள். யுவனா உண்மையில் யார் என்ற அவர் கள் இருவருக்கு மட்டும்தான் தெரியும்.

துர்காவை ஸ்பெஷல் வார்டில் இருந்து.. தனி அறைக்கு மாற்றினார்கள். மகாலஷ்மியின் உதவியோடு எழுந்து மட்டும் உட்கார்ந்தாள். அவினாஷ் அன்று காலை வழக்கம் போல் பார்க்க வந்ததும்.. மகாலஷ்மி.. அறையை விட்டு வெளி யேறி - எதிர்ப்பட்ட நர்ஸிடம் நலம் விசாரிக்க ஆரம்பித்தாள்.

"எப்படி துர்கா இருக்கு" அவள் தலை பக்கம் பெட்டில் அமர்ந்து கொண்டான்.

"இம்.. பரவாயில்லை.. ஆனாலும் வலி குறையலை. காலைத்தான் அசைக்க முடியலை."



"காலையேதும் அசச்சிடாதே... நீ முன்னமாதிரி நடக்க ஒரு மாதம் ஆகுமாம்?"

"அவ்வளவு நாளா?" கண்களை விரித்து அவனைப் பார்த் தாள்.

"ஏன் சீக்கிரமே வீட்டிற்கு வரணுமா?" கண் சிமிட்டினான்.

"ச்சீய்... இல்லை... யுவனா எங்கே?"

"இவ்வளவு சீக்கிரம் எப்படிடா எழுந்திரிப்பா" அவன் முகத்தை தோளில் சாய்த்து தான் கொண்டு வந்த பத்திரி கையை காண்பித்தான். அதில் துர்காவும் - அவினாசும் எப்படிக் காதலித்தார்கள். குழந்தை எப்படி வளர்ந்தது.. என்றெல்லாம் பத்தி பத்தியாய்.. சுவாரஸ்யமாக இருந்தது.

முதல் முதலாய் நாண ரேகை, துர்காவின் முகத்தில்..

"இதைப் படிக்கும்போது.. லவ் பண்ணியிருக்கலாமோன்னு தோணுது" என்றான்.

"ஏன் இப்போ மட்டும் என்ன? நான் எப்போதும் ரெடியாத் தான் இருக்கேன்.. ம்னு சொல்லு.. தடி ஊன்ற வரைக்கும்.. உன்னை ஓடி ஓடிக் காதலிக்கிறேன்" என்றான்.

"இம்.. கொஞ்சம் கிட்ட வாயேன்."

"வாயேன்னா?"

"வேட் பண்ணினால்.. வாடான்னு கூட கூப்பிடுவேன்."

உடனே தன் பலம் கொண்ட மட்டும் அவன் கழுத்தில் கைகளைக் கோர்த்து இழுத்து.. தன் முகத்தோடு அவன் மூச்சுக் காற்றை மோத வைத்து.. கலங்கிய அவன் கண்களில் தொடங்கி.. ஒவ்வொரு இடமாய் தன் இதழால் ஒற்றி எடுத்து.. அவன் இதழ் மேல் தன் இதழைக் கடைசியாய் பதிய வைத்துக் கொண்டாள்.

கற்பு என்பது கர்ப்பப்பையையோ.. உடம்பையோ பொறுத்த விஷயம் அல்ல.. அது மனது சம்பந்தப்பட்ட மென் மிய.. திடமான உணர்வு.. அது துர்காவிற்கும்.. தெரியும் அவினா ஷிற்கும் தெரியும்.

# என் உயிர் பிரபா

## 1

வெள்ளை மேகங்கள் எல்லாவற்றையும் வேண்டாம் என்ற எண்ணத்தோடு வான முதலாளி வெளியே வழியனுப் பிக் கொண்டு இருந்தார். எதிர்த்து நின்ற தொழிலாளி மேகங்கள் சிலவற்றை அடித்து நொறுக்கியதால் அவை ரத்த ஆறுகளாய் வானவெளியில் கலந்து ஆரஞ்சு நிறத்தோடு ஆரவாரம் செய்து கொண்டு இருந்தன. மணி ஆறு ஆகி இருக்கலாம் என்ற எண்ணத்தோடு குட்டைகளில், வெட்ட வெளிகளில் உறங்கிக் கொண்டு இருந்த ஜீவன்கள் எல்லாம் சோம்பல் முறித்துக் கொண்டு தொழிலைத் தொடங்கின.

பாரதி தெருவில் பதினொன்றாம் வீட்டில் பம்பரமாகச் சுழன்று கொண்டு இருந்தாள் விமலா.

இடுப்பில் செருகப்பட்டு இருந்த சேலையை இறக்கி விட்டபடியே, பக்கெட்டையும், துடைப்பத்தையும் உள்ளே எடுத்துக் கொண்டு சென்றவள், திரும்பி ஒரு முறை வாசலைப் பார்த்தாள். மனதிற்கு திருப்தி ஏற்பட்டதால், வாசல் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே திரும்பினாள்.

பக்கெட்டையும், குவளையையும் பாத்ரூமில் கொண்டு போய் வைத்தவள், பரபரப்பாக சமையல் அறையில் நுழைந்தாள். இராத்திரியே விளக்கி வைக்கப்பட்ட சாமான்கள், அவளைப் பார்த்து 'பளிச்' என்று சிரித்தன.

அடுப்பைப் பற்ற வைக்க எத்தனித்தவள், "அம்மா பால்" என்ற குரல் கேட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

பாக்கெட் பாலை வாங்கி வந்தவள், ஹாலுக்கு ஒட்டி இருந்த பெட்ருமைக் கொஞ்சம் கூட சத்தம் இல்லாமல் திறந்து பார்த்தாள். அரவிந்தன் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தான். அவன் மார்பின் மேல் நான்கு வயது கௌதம் குட்டி ஒய்யாரமாகப் படுத்து உறங்கிக் கொண்டு இருந்தான். அந்த நிலையை மனதினுள் ரசித்தவள் காபி போட்டுவிட்டு எழுப்பிக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

இருபத்தி ஆறு வயதாகும் விமலாவைப் பார்த்தால் கண்டிப்பாக இருபத்தி ஆறாகத் தோன்றாது. நான்கு வயது குழந்தைக்குத் தாய் என்றால் நம்புவது கொஞ்சம் கடினம்தான். சிவப்பும் இல்லாமல் கறுப்பும் இல்லாமல் இருவிதக் கலப்பு நிறத்தை உடையவள்தான் விமலா.

ஆனாலும் அவளது கறுப்பு கவர்ச்சியானது. சிவப்பாக இருப்பவர்களின் ப்ளஸ் பாயிண்ட் அவர்கள் நிறம்தான். ஆனால், விமலாவின் அந்தக் கவர்ச்சியான கறுப்பு நிறமே ப்ளஸ் பாய்ண்ட். ஒரு நிமிடம் நின்று திரும்பிப் பார்க்கும் அழகுடையவள். பிரம்மனே இரண்டு நாள் யோசித்து, கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு இருக்க வேண்டும்.



ஐந்து வருடங்களுக்கு முன்னால் இன்ஸ்பெக்டர் அரவிந்தனுக்குக் கழுத்தை நீட்டியவள். விமலாவிற்கு எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல அரவிந்தன்.

**"பொருத்தம் உடலிலும் வேண்டும்.**

**புரிந்தவன் துணையாக வேண்டும்."**

என்ற பாடல் வரி இவனுக்காகவே கூட எழுதப்பட்டு இருக்கலாம். இவர்களின் அன்புக்கு அடையாளமாகி கரும்பான குறும்புகளைச் செய்பவன்தான் கௌதம்.

ஃபில்டரில் இருந்த டிக்காஷனை வடிதட்டில் இறக்கி, காப்பியைக் கலந்து எடுத்து வைத்தாள். பால் குக்கரை இறக்கி வைத்துவிட்டு, இட்லி பானையில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டு அறையை நோக்கி நடந்தாள்.

காபியை மேசை மேல் வைத்தவள், கௌதமை அவன் மார்பில் இருந்து நாசூக்காக எடுத்து, பக்கத்தில் இருந்த தலையணையில் படுக்க வைத்து, அவனின் இருபுறமும் போர்வையால் அணைப்புக் கொடுத்தாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் கௌதம்.

அரவிந்தன் மேல் இருந்த போர்வையை விலக்கி விட்டு "என்னங்க!" கிசுகிசுத்தாள்.

"ம்." திரும்பிப் படுத்தான்.

"மணி ஆறரை. இப்ப எழுந்திருக்கீங்களா? இல்லையா?"

"ப்ளீஸ் விமலா இன்னும் பத்து நிமிடம்."

"அதெல்லாம் முடியாது. இப்ப எழுந்திரித்தால்தான் நீங்க கரெக்டான டைமுக்கு ஸ்டேஷன் போக முடியும்."

"ஒரு அருமையான கனவு. கலைத்து விடாதே" போர்வையால் முகத்தை மூடிக் கொண்டான்.

"அப்ப, காபி வேண்டாம் இல்ல?" பொய்யான கோபத்தோடு கேட்டாள் விமலா.





முகத்தின் மேல் இருந்த போர்வையை விலக்கி விமலாவைப் பார்த்துச் சிரித்தான்.

"இந்தச் சிரிப்பு சிரித்து எல்லாம் என்னை ஏமாற்ற முடியாது. கெட் அப்."

"ப்ளீஸ் டார்லிங்" கண்களால் கெஞ்சினான்.

"நோ... நோ... ப்ளீஸ் கெட் அப்."

"ம்... அப்படியா" என்றவாறே அவள் சற்றும் எதிர்பாராத சமயமாகப் பார்த்து, அவளை இழுத்துத் தன் மேல் சரித்துக் கொண்டான்.

"இப்பக் கூடச் சொல்லுவியா?"

"ஐய்யய்யோ... விடுங்க... கொஞ்சம் கூட..."

"ஏன் நிறுத்திட்ட. சொல்ல வேண்டியதுதானே" என்று அவளை இறுக்கினான்.

அவன் செயலை விரும்பியவள், அவன் மார்பில் இருந்து முகத்தை எடுக்காமலேயே "எழுந்திருங்க..." முனகினாள்!

அவள் முகத்தைத் தூக்கி 'இச்' என்ற ஓசையோடு அவளின் நெற்றிக்கு அச்சாரத்தை அனுப்பிவிட்டு, "குட்மார்னிங்" என்றான்.

அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள், "பேஸ்டையும், ப்ரஷ்ஷையும் எடுத்து வச்சி இருக்கேன். போங்க, போயி முதல்ல பல்லை விலக்கிட்டு காபியைக் குடிங்க" அரவிந்தன் ஏதோ சொல்ல வாய் எடுத்தான். அதற்குள் அவள் மின்னல் என ச்மையல் அறையில் புகுந்தாள்.

கைலியைச் சரி செய்து கொண்டு சோம்பல் முறித்தான்.

மகனின் நெற்றி முடிகளை விலக்கி ஆசையோடு, தன் இதழைக் கவுதம் நெற்றியில் பதித்தான்.



"இன்னும் எழுந்திருக்கவில்லையா?" சமையல் அறையில் இருந்து கத்தினாள் விமலா.

"அம்மாடியோ... எழுந்தாகிவிட்டது" என்றபடியே பாத்ரூம் நோக்கி ஓடினான்.

பாத்ரூம் கண்ணாடியில் தன் முகத்தில் கையை வைத்துத் தடவிப் பார்த்தான், அதே சமயம், "ஷேவிங் பண்ணி நாலு நாளாகிறது. ஒழுங்கா இன்னைக்கு ஷேவிங் பண்ணுங்க."

"உத்தரவு தேவி!" கண்ணாடியில் தன்னைப் பார்த்துச் சிரித்தான்.

'விமலா என்னோட மனைவியாகாமல் வேறு யாராவது என் மனைவியாக ஆகி இருந்தால், எல்லா வீட்டுச் சங்கதியும் இங்கும் தாண்டவமாடும்.

அவள் என்னை அதிகாரம் பண்ணும் போதும் கண்டிப்பு இல்லையே, கருணையும் கனிவும் அல்லவா கலந்திருக்கிறது. விமலா ஐ லவ் யூ வெரி மச்!

ஒண்ணாந் தேதியாகியதும், எந்த மருமகள் அத்தைக்குப் பணம் அனுப்பிட்டீங்களா? என்று கேட்பாள். என் விமலா கேட்கிறாளே. ஒரு நாள் அனுப்பாமல் வந்துவிட்டேன் என்பதற்காக, இரண்டு நாள் என்னுடன் பேசாமல் இருந்து என்னைக் கொன்றவள் ஆயிற்றே.'

"டேய் தம்பி, விமலா எனக்கு மருமகள் இல்லை மகள்டா" என்று அம்மா சொன்னது மட்டும் ஏனோ அடிக்கடி நினைவிற்கு வந்து கொண்டு இருக்கிறது.

"ஸ்ஆ." பிளேடு அவன் தாடையைப் பதம் பார்த்தது. உடனே டெட்டாலை எடுத்துத் தண்ணீரில் கலந்து தாடையில் தடவினான்.

கொஞ்ச நேரத்தில் எல்.கே.ஜி.க்குக் கௌதம் குட்டியும், ஸ்டேஷனுக்கு அரவிந்தும் தயாரானார்கள்.

"விமலா டிபன் ரெடியா?"

"ஓ, அப்பாவும் புள்ளையும் வாங்க."

டைனிங் டேபிள் முன் வந்து அமர்ந்தான் அரவிந்தன். அவ னுக்குப் பக்கத்தில் உள்ள சேரிலேயே தனக்கும் ஒரு ப்ளேட்டை போட்டு இட்லி விள்ளலைகளை எடுத்து வைத்தாள்.

கௌதம் வாயிலும் விள்ளலைகளை ஊட்டிக் கொண்டே, "இட்லி நல்லா இருக்கா?"

"தினமும் இதே கேள்விதானா?"

"நல்லா இருக்குன்னு சொன்னா, ஒரு திருப்திதான்."

"இனிமேலேயும் நல்லா நீ அழகா இருக்கேன்னு என்னால பொய் சொல்ல முடியாதும்மா" தோளைக் குலுக்கினான்.

அவனை முறைத்தவள், அவன் தாடையில் உள்ள ப்ளேடு கீறலைக் கவனித்தாள். கோபத்தை மறந்து பதறினாள்.

"ஏய், ஒண்ணும் இல்ல. ஏதோ ஞாபகத்தில்..."

"ஸ்டேஷன் நினைவுதானா?"

"அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை."

"மம்மி ஷூ போட முடியலை."

"இதோ வந்துட்டேன்டா." கைகளை டவலில் துடைத்துக் கொண்டாள்.

கௌதம் தானே கட்டி இருந்த டையைச் சரி செய்து, ஷூவை சரி செய்து, ஸ்கூல் பேக்கை அவன் முதுகில் மாட்டி விட்டாள்.

"ஹோம் ஒர்க் பண்ணிட்டியா?"

"பண்ணிட்டேன் மம்மி."

"குட், வெரி குட் பாய். டிபனை எல்லாம் மதியம் சமத்தா சாப்பிட்டு விடணும்."



"சரி மம்மி."

"சமத்துக் குட்டி." உச்சி முகர்ந்தாள் விமலா.

ஸ்கூல் ரிக்ஷா வந்ததும், வாசல் வரை வந்து வழி அனுப் பினாள்.

பேண்டில் சட்டையை திணித்து இன் பண்ணி,

"விமலா."

"வந்திட்டேன்."

"சீக்கிரம் ஸ்டாரைக் குத்தி விடு."

அவன் தோள்பட்டையிலும், மார்பிலும் ஸ்டாரைக் குத்தி னாள்.

அவன் இடதுபுற பாக்கெட்டில் முத்தமிட்டாள்.

"தெனமும் என்னோட பாக்கெட்டுக்கு நீ கிஸ் பண்ற கார ணம் எனக்குத் தெரிஞ்சு போச்சு."

"என்ன?"

"பாக்கெட்ல பர்ஸ் இருக்கு, ஆம் ஐ கரெக்ட்?"

"அறிவுக் கொழுந்தாச்சே." தலையை ஒரு வெட்டு வெட்டிச் சாய்த்தாள்.

"நான் சொன்னது இல்லையா?"

"இல்லை."

"பின்ன என்னவாம்?"

"ஒண்ணும் இல்ல." திரும்பிக் கொண்டாள்.

"ஏய், இங்கப் பாரும்மா, உண்மையிலேயே தெரியாமத் தான் கேட்கிறேன். நீயும் ஜந்து வருஷமா என்னோடு இடது பக்க பாக்கெட்கிட்டதான் முத்தம் அதிகமா தர்ற. அது ஏன்?"



"நெசமாத் தெரியாது!"

"சத்தியமாத் தெரியாது!"

"இடது பக்கம் உள்ள மார்புக்குள்ளேதான் இதயம் இருக் குது. உங்க இதயம் எப்போதும் சந்தோஷமா துடிச்சுகிட்டே இருக்கணும். என்னோட கிஸ் அதுக்கு டானிக் மாதிரி."

"ரியலி?"

"எஸ் மை ஸ்வீட் ஹார்ட், உங்க உதட்டுக்கு கிஸ் பண்ணு வதை விட இதயத்திற்குக் கிஸ் பண்ணத்தான் விரும்புகிறேன்."

ரகுவரனால் ஒன்றும் பேச முடியவில்லை. அப்படி அடிக்கடி ஏதாவது பேசி ஆள அசத்திட்றா, சந்தோஷத்தில் திணறினான்.

**"உச்சிதனை முகர்ந்தால்**

**கர்வம் ஓங்கி வளருதடி**

**மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால்**

**மேனி சிலிர்க்குதடி மேனி சிலிர்க்குதடி"**

தன் மனைவியை இறுகத் தழுவினான் அரவிந்தன்.

"ஐ லவ் யூ விமலா." அவள் கன்னத்தை இவனும், இவள் கன்னத்தை அவனும் மாறி மாறி எச்சில் படுத்தினர்.

**"மணவாழ்க்கை அமைவதற்கோர்**

**மனைவி வாய்க்க வேண்டும்**

**குலமகளாய்க் கிடைப்பதற்கோ**

**கொடுத்து வைக்க வேண்டும்."**

தாங்கள் முத்தம் இட்டுக் கொள்வது இதுதான் கடைசி தடவை என்று பாவம் இருவருமே அறியவில்லை.



## 2

ராமபுரம் போலீஸ் ஸ்டேஷன்.

"108."

"எஸ் ஸார்."

"ஏட்டு சிவராமன் எங்கய்யா?"

"அவரு இன்னும் வரலை சார்."

"என்ன வரலையா?"

"ஆமாம் சார்."

"காலையிலதானே அவருக்கு டியூட்டி போட்டிருக்கு."

"எஸ் ஸார்."

"கொஞ்சம் கூட பஞ்சுவாலிட்டி கிடையாது. சிவராமன் வந்ததும் என்னைப் பார்க்கச் சொல்லு."

"எஸ் சார்."

காலரைச் சரி செய்தபடி அறைக்குள் நுழைந்தான். பேன் சுவிட்சைத் தட்டிவிட்டுச் சேரில் அமர்ந்தான். தலைக்கு மேலே இருந்த காந்திஜியைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

மேஜை மேல் அவன் விலாசத்திற்கு வந்திருந்த இன்லெண்ட் கவரைப் பிரித்துப் படித்தான்.

ஃபைலைப் புரட்ட ஆரம்பித்தபோது, தயக்கத்தோடு சிவ ராமன் உள்ளே நுழைந்தார்.

"ஸிட் டவுன்."

"சார்... சார்..."

"நோ ஆர்க்யூமென்ட்ஸ். இனிமேலும் இந்த மாதிரி நடந்து கொண்டால் நான் ஆக்ஷன் எடுக்க வேண்டி வரும், [illegible] யூ கேன் கோ."

தலையைக் குனிந்து கொண்டு ஏட்டு சிவராமன் வெளி [illegible] எடுத்தான், விமலா இல்லை [illegible] வந்திடுவோமா, பாவம் [illegible] நாம மட்டும் ஒழுங்கா [illegible] அடுத்த மாதிரிப் பேசி சிவராமன், அவரை இப்படி [illegible] அனுப்பி இருக்கக் கூடாது.

யோசித்தான், பெல் அடித்து 108ஐ வரவழைத்தான்.

"எஸ் சார்."

"சிவராமனை வரச் சொல்லுங்க."

"எஸ் சார்."

சிவராமன் பதற்றத்தோடு வந்தார் 'ஆக்ஷன் எடுப்பேன் என்றுதானே மிரட்டினார். எடுத்திட்டாற்போல இருக்கே' [illegible] எல்லாக் கடவுளையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

"சிட் டவுன் மிஸ்டர் சிவராமன், நான் சொன்னதை மன சில் வச்சிக்காதீங்க, ஐ அம் வெரி சாரி. இனிமேல் கரெக்டான டைமுக்கு வர முயற்சி பண்ணுங்க."

"தாங்க்யூ சார். கண்டிப்பாக இனிமேல் இப்படி நடந்து கொள்ள மாட்டேன்."

"தட்ஸ் குட். ஒன் மினிட் சிவராமன். எம்.எல்.ஏ. பலராம னோட கேஸ் பத்திய டீட்டெய்ல்ஸ் எல்லாம் உங்க கிட்ட தானே இருக்கு?"

"எஸ் சார்."

"அந்தக் கேஸை நான் டீல் பண்ணணுமாம், அதைக் கொஞ் சம் கொண்டு வரீங்களா?"



"இதோ சார்."

கொஞ்ச நேரத்தில் [illegible] அரவிந்த னிடம் ஒப்படைத்தார் சிவராமன்.

பேப்பரைப் புரட்டிக் கொண்டு இருந்தவன், போன் [illegible] கைகளைக் கொண்டு போனான். [illegible] சத்தம் கேட்டதும், காதோடு போனை [illegible] டான்.

"ஹலோ."

"ஹலோ."

"ஹலோ."

"ஹலோ."

திரும்பத் திரும்ப ஹலோ ஹலோ என்று கேட்டு, [illegible] போய் போனை டொக் என்று வைத்தாள் விமலா.

தனக்குள் சிரித்த அரவிந்தன் மீண்டும் [illegible] செய்தான்.

"ஹலோ விமலா ஹியர்."

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு, "நான்தான் [illegible]"

"நீங்கதானா?"

"ஆமாம். ஏன் வேற யாராவது போன் [illegible] கன்னு எதிர்பார்த்தியா?"

"ச்சேசே, கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி போன் [illegible] எடுத்தால், 'நோ ரிப்ளை' சரியான [illegible]"

"ஆமாம் டியர், பொண்டாட்டி [illegible] விமலா [illegible]"

"என்ன சொல்றீங்க?" [illegible] கொண்டது.



"சாட்சாத் அந்த ஹஸ் இன்ஸ்பெக்டர் அரவிந்தன்."

"ஸாரிங்க, தெரியாம..."

"ஏய், இதில் என்ன இருக்கு. டோன்ட் பீ சில்லி."

"சரி, எதுக்கு இப்ப கவர்மெண்டுக்குக் கடனை ஏத்துறீங்க?"

"வாட் நானா?" சேரை விட்டு எழுந்தவன் டேபிள் நுனி யில் அமர்ந்து கொண்டான்.

"ஆமாம் இப்படி வழ வழன்னு பேசிகிட்டு இருந்தா என்ன அர்த்தம்... டெலிபோன் பில்லை கவர்மெண்ட் கட்டுது இன்ஸ்பெக்டர் சார்."

"ஓ.கே. ஓ.கே. எதுக்கு இப்ப போன் பண்ணினேன் என்று சொல்லிவிடுகிறேன், பிரபா ஸ்டேஷனுக்கு லெட்டர் போட்டு இருக்கா."

"என்னவாம்?"

"ஒரு பெரிய அப்ளிகேஷன்."

"உங்க தங்கச்சியாச்சே, அதான் எப்போதும் அப்ளிகேஷ னோடயே நிற்கிறா. என்ன எழுதி இருக்கா?"

"என்னங்க எழுதி இருக்கா, என்னங்க எழுதி இருக்கான்னு ஏன் அவசரப்படுற?"

"ரொம்பத்தான் பிகு பண்ணாதீங்க. ப்ளீஸ், சொல்லுங்க."

"இன்னும் ஒன் மன்த்தில் ஸ்டடி லீவ் வருமாம். அப்ப அவ நம்ம ஊருக்குப் போகலையாம், மெட்ராஸ் வர்றாளாம்."

"வித் க்ரேட் ப்ளஷர், அதுக்கு என்ன?"

"ஒன்றும் இல்ல, வரும் போது ஊறுகாய் பாட்டில் வாங்கி வரட்டுமான்னு கேக்கறா?"

"ஊறுகாய் பாட்டிலா? எதுக்கு?"



"எனக்கென்ன தெரியும்? [illegible] அண்ணிக்குப் புரியும்னு எழுதி இருக்கா, என்ன விஷயம்?"

போனில் சிணுங்கியவள், "அது என்னன்னு வீட்டுக்கு வாங்க, சொல்றேன்."

"என்னங்க ஒன்னு [illegible] மாட்டீங்களே?"

"சொல்லும்மா?"

"பிரபா இங்க வரும்போது இங்க நல்ல [illegible] பார்த்து ஆபரேசன் பண்ணுவோமா?"

"எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆனா, இப்போ எழுபத்தி ஐந்து ஆயிரத்திற்கு [illegible] போறது?"

"போன்ல பேச வேணாம், வீட்டுக்கு வந்த பிறகு பேசி கலாம்" விமலா போனை வைத்ததும் அரவிந்தன் மனதில் இனம் புரியாத சோகம். [illegible] மனசு பிசைந்தது. கண்களில் [illegible] மறைத்துக் கொண்டு மீண்டும் ஃபைலில் [illegible]

மாலை ஐந்து மணிக்கெல்லாம் [illegible] வீட்டுக்கு வந்தான் அரவிந்தன். வந்தவன் முதலில் [illegible] பாக்கெட்டில் நாலாக மடித்து வைக்கப்பட்டு இருந்த [illegible] கவரை விமலாவிடம் கொடுத்துவிட்டு [illegible] அவனுக்கு முன்பே கௌதம் முகத்தில் [illegible] கொண்டு பக்கெட்டில் உள்ள தண்ணீரால் [illegible] இருந்தான்.

கைலியை முழங்காலுக்கு மேல் தூக்கிக் கட்டிக் கொண்ட வன், கௌதம் முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு ஹாலுக்குத் தூக்கி வந்தான். அதற்குள் விமலா [illegible] காபியோடு காத்திருந்தாள்.

அவள் கையில் பிரபா எழுதிய கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது.

"படிச்சிட்ட இல்ல லெட்டரைக் கொண்டா?"

"ஏன்?"

"திரும்பப் படிக்கணும்" அவள் கையில் இருந்த கடிதத்தைப் பிடுங்கினான்.

"ஆமாம், மாங்காய் ஊறுகாய் எதுக்காம்? உனக்கு எதுக்கு மாங்காய் ஊறுகாய்?"

நமுட்டுச் சிரிப்பு சிரித்தவள், "நான் உண்டாகி இருக்கேனான்னு கேட்டு இருக்கா?"

அவளை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்த அரவிந்தன் "என்ன எழுதப் போற?"

"நான் எழுதுவது அப்புறம், ஆபரேசனுக்கு என்ன பண்ணப் போறீங்க?"

"அதான் விமலா எனக்கு ஒண்ணும் புரியல, இப்ப நம்ம கிட்ட இருப்பது இருபது ஆயிரம் ரூபாய்தான். அத வச்சி என்ன பண்றது?"

"ஏன் என்னிடம் பதினைந்து பவுன் நகை இருக்கு. அதை வித்தம்னா இருபத்தைந்து, முப்பதாயிரம் கிடைக்கும்."

"மேற்கொண்டு கடன் வாங்கலாமே!"

காபிக் கப்பை எடுத்துக் கழுவச் சென்றவளின் பின்னாலே அரவிந்தனும் சென்றான்.

"இல்ல விமலா, நீ சொல்றது தப்பு; உன்னோட நகைகளை வித்து நான் ஆபரேஷன் செய்ய மாட்டேன்."

"ஏங்க?"

அவள் தோளை பற்றித் திருப்பியவன், "உன்னோட நல்ல மனசு எனக்குத் தெரியும். இந்த நகை உனக்கு உங்க அப்பா,



அம்மா போட்ட நகை. இதை விற்க எனக்கு எந்தவித உரிமையும் இல்லை. அதில் எனக்கு விருப்பமும் இல்லை."

"பேசி முடிச்சிட்டீங்களா? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா. நீங்க, உங்கம்மா, உங்க ரெண்டு தங்கச்சி எல்லாம் ஒண்ணு, நான் மட்டும் தனி அப்படித்தானே? எனக்கும் இந்தக் குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அப்படித்தானே?"

"தெரியாமப் பேசாத விமலா" அவள் கண்களைத் துடைக்க வரும்போது அவன் கைகளைத் தட்டி விட்டாள்.

"விமலா நான் சொல்றதக் கேளு. நான் மட்டும் என்னோட தங்கச்சிக்காகக் கஷ்டப்பட்டது போதும். நீ வேணாம்மா."

"உங்களுக்கு எப்படி உங்க தங்கச்சிங்க மேல உரிமை இருக்கோ, அதே உரிமை எனக்கும் இருக்கு என்பதை மறந்திடாதீங்க."

"விமலா."

"நோ, நான் சொல்றதைக் கேளுங்க. கிராமத்தில் இருந்த வீட்டையும், காட்டையும் வித்தால் ஒன்றரை லட்சத்துக்கு மேலே கிடைக்கும். இப்பதான் கீதா டவல்த் படிக்கிறா. அவளுக்கு ஐம்பது ஆயிரத்தை ஒதுக்கிடுங்க. பிரபாவிற்கு ஆபரேஷன் பண்ணுங்க. மீதி தொகையை கௌதம் பேர்ல டெபாசிட் பண்ணிடுங்க. மெட்ராஸில்தான் லோன் வாங்கி வீடு கட்டிட்டோம். எல்லாம் இங்கே இருந்திட்டுப் போறது, எங்க இருந்தாலும் செலவாவது நம்ம காசு தான். அது டவுனா இருந்தா என்ன? கிராமமா இருந்தா என்ன?"

"சரிதான் விமலா, ஆனா, நாம விக்கப் போனா அடி மட்டத்துல இல்ல விலை கேப்பாங்க."

"ஆமாம்."

"ஏய், ஏன் ஒரு மாதிரியா இருக்க, உடம்பு சரியில்லையா?"



"அப்படி ஒண்ணும் இல்ல. காலையில இருந்து, கை, கால் எல்லாம் துவண்டு போவுது. ஒரு மாதிரியா இருக்கு. லேசா மயக்கம் கூட வருது."

துடித்துப் போன அரவிந்தன், "சரி கிளம்பு, டாக்டர் கிட்டப் போகலாம்" துரிதப்படுத்தினான்.

அவன் தாடையை செல்லமாகத் தட்டியவள், "நாளைக்குப் போகலாம். இவ்வளவு அன்பான புருஷன் எனக்கு இருக்கும் போது என்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லப்பா." அவன் தலையில் குட்டினாள்.

"சொன்னாக் கேளு" கோபப்பட்டான். அவன் கோபத்தைப் பொருட்படுத்தாமல், அவனைச் சுவர் ஓரமாக நகர்த்திவிட்டு சமையல் அறையில் நுழைந்தாள்.

கேஸை பற்ற வைக்கும்போது, கை கால்களில் லேசான பதற்றம் தெரிந்தது. கை வெடவெடன நடுங்கியது. கை கால்கள் அதன் அதன் இடத்தில் இருந்து கழண்டு விழுவது போல் ஒரு ஃபீலிங். கொஞ்சம் கொஞ்சமாகச் செயல் இழந்தன. கேஸ் அடுப்பு மேடையைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தாள். அவள் மயக்கமடையவும், கேஸ் அறை முழுவதும் பரவவும் சரியாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் அவள் கையில் இருந்த கேஸ் லைட்டர், அவளின் இறுக்கமான பிடியில் குப்பென்று நெருப்பைக் கக்கி விபரீதத்தை உண்டு பண்ணியது.

## 3

மனோஜ்குமார் நர்ஸிங் ஹோம் முன்னால், கண்ணீரும் கம்பலையுமாகக் கண்களில் கருவளையம் இடம் பிடித்துக் கொள்ள அரவிந்தன் சாய்ந்தபடி நின்றிருந்தான். அடிக்கடி யாருக்கும் தெரியாமல் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருந்தான்.



நர்ஸிங்ஹோம் வெளியே, வந்து சுற்றும் முற்றும் பார்த்த கீதா, அரவிந்தன் சுவர் ஓரமாகச் சாய்ந்து இருப்பதைப் பார்த்ததும், அவனிடம் வேக வேகமாக வந்தாள்.

"அண்ணே, அண்ணிக்கு நினைவு வந்திடுச்சி, உன்னோட பேரைச் சொல்றாங்க; வா."

"இங்க பாருண்ணே, நீயே இப்படிக் கண் கலங்கினால், அண்ணிக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது? கண்ணைத் துடையேன்."

அந்த சின்னப் பெண்ணின் வார்த்தைக்கு கட்டுப்பட்டவன், கண்களைத் துடைத்துக் கொண்டு அறைக்குள் பிரவேசித்தான்.

முகத்தைத் தவிர எல்லா இடத்தையும் வெள்ளைத் துணியால் சுற்றிக் கட்டுப் போட்டு இருந்தார்கள். குளுக்கோஸ் கையில் ஏறிக் கொண்டு இருந்தது. நாசித் துவாரங்களில் ட்யூப் செருகி இருந்தார்கள். ட்யூபின் மறுமுனை ஆக்ஸிஜன் சிலிண்டரில் இருந்தது. கண்களைத் தவிர தெரிந்த முகத்தில் திட்டுத் திட்டாகக் கறுத்துப் போய் தோல் வறண்டு இருந்தது. விமலாவின் வாய் எதையோ சொல்லத் துடிப்பது போல் திறந்திருந்தது.

முத்தாகப் பளிச்சிட்ட பற்கள், வாழைக்காய் கடித்த பற்களைப் போல் அழுக்குக் கறை கட்டி இருந்தது.

அரவிந்தன் உள்ளே நுழைந்ததும், பேரனைத் தோளில் தட்டிக் கொடுத்துக் கொண்டு இருந்த கமலத்தம்மாள், "பையன் தூங்கறாண்டா. நான் வீட்டுக்குப் போய் சமைத்துக் கொண்டு வரேன்."

"சரிம்மா." கமறியபடி குரல் வெளி வந்தது.

பேரனைத் தோளில் சுமந்து கொண்டு கமலத்தம்மாள் நகர்ந்ததும், விமலாவிற்கு அருகில் வந்து நின்றான்.

"விமலா... விமலா... விமலா இங்க பாரும்மா. விமலா..." விமலாவின் இமைகள் லேசாக அசைந்தன.

திறக்க முடியாமல் ரொம்பக் கஷ்டப்பட்டு கண்களைத் திறந்தாள்.

ஆர்வத்தோடு இதழ்கள் துடிக்க அவனைப் பார்த்தாள்.

அந்த நிலையிலும் கண்களால் அழக்கூடாது என்று அவனைப் பார்த்துக் கட்டளை பிறந்தது.

மிகுந்த தடுமாற்றத்தோடு, "கௌ...த...ம்... எ...ங்..."

அவளை அமைதிப்படுத்தியவன், "அம்மா இப்பதான் வீட்டுக்குத் தூக்கிக்கிட்டுப் போய் இருக்காங்க."

"கீதா வந்திருந்தாளா" அவள் பார்வை அறை முழுவதும் அலைந்தது.

விமலாவின் தலைமாட்டில் நின்றிருந்த கீதா சத்தம் இல்லாமல் அழுதாள்.

கைகளைத் தூக்க முயன்று தோற்ற விமலா பார்வையைப் பின்பக்கமாகத் திருப்பித் தலையைத் தூக்கினாள்.

"கீதா... இந்தப் பக்கம் வாடி."

பெட்டை உரசிக் கொண்டே தாவணியின் நுனியைக் கைகளில் சுற்றிக் கொண்டு தலையைக் குனிந்திருந்தாள்.

"ச்சீ. இப்ப எது...க்குடி அழுகுற? இம். சொன்னாக் கேளுடி, காலாண்டு பரீட்சை எப்ப?"

ஒன்றும் பேசாமல் விமலாவைப் பார்த்து, புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்...னடி இ...து? சின்னப் புள்ள மாதிரி, ப்ளஸ் டூ படிக்கிற!"



"அ... ண்...ணி."

விமலாவின் கண்களில் இருபுறமும் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது. கர்சிப்பால் பூவின் இதழை வருடிக் கொடுப்பது போல் துடைத்து விட்டான் அரவிந்தன்.

"இது தா...ன் வி...தி... ன்...னா, நாம் என்ன... பண்ண முடியும்?"

"இல்லண்ணி, உங்களை நான் விட மாட்டேன், எனக்கு நீங்க வேணுமண்ணி, நீங்க பொழச்சிக்குவீங்கண்ணி" வார்த்தைகள் தடுமாறித் தடுமாறி, வெளிவர முடியாமல் தடுமாறினாள் கீதா.

"நான் இன்னைக்கு நம்ம தெருவில் இருக்கும் கோவிலுக்குப் போனேன்; கண்டிப்பா உங்களைக் கடவுள் காப்பாற்றுவார்."

"நீ... நீ கோயிலுக்குப் போனியா?"

"ஆமாண்ணி. எனக்கு என்னோட அண்ணிதான் வேணும் கோவிலுக்குப் போக மாட்டேன் என்கிற வைராக்கியம் இல்லை."

நெகிழ்ந்து போனாள் விமலா. 'என்னிடம் ஒட்டாத கீதாவே இப்படிக் கதறுறாளே, பிரபாவிற்குத் தெரிந்தால் கடவுளே, எதையும் தாங்கற இதயத்தை அவளுக்குக் கொடு.'

'ஆண்டவா, இப்படி ஒரு அருமையான குடும்பத்தையும், அற்புதமான புருஷனையும் கொடுத்திட்டு இப்படிப் பண்ணிட்டியே." உடலில் ஏற்பட்ட ரணத்தை விட, பாசக் கொடுமை அவள் இதயத்தைக் கிள்ளி எடுத்தது. 'இவங்களுக்கு நல்ல அண்ணி வேணும். அத்தைக்கும் நான் வேணும். கௌதமிற்கு அம்மா வேணும். நான் செத்துப் போயிட்டா? அவரு திரும்ப கல்யாணம் பண்ணிக்கணும்.'

ஒரு சின்னத் தெளிவு விமலாவின் முகத்தில் படர்ந்தது அரவிந்தனைப் பார்த்தாள். அவன் அழுகையை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தான்.





"எ...ன்...ன...ங்...க..."

ஆர்வத்தோடு அவள் முகத்தருகே குனிந்தான்.

"என்னம்மா?"

"பிரபாவிற்குத் தெரியாதே?"

"தெரியாதும்மா. நாங்க சொல்லலை. அவ உடம்பைப் பத்திதான் உனக்குத் தெரியுமே, ஏன் பிரபாவைப் பார்க்கணுமா?"

"வேணாங்க. அவளுக்கு இந்த விஷயம் தெரிய வேணாம்."

"சரி, சொல்லலை நீ குணமாகி வீட்டுக்கு வந்ததும், சொல்லிக் கொள்ளலாம்."

விரக்தியாக விமலாவின் இதழில் சிரிப்பு விரிந்தது.

"எனக்கு... அந்த நம்பிக்கை இல்லங்க."

"அப்படி எல்லாம் சொல்லாத; உன்னை நான் சாக விட மாட்டேன்."

"எக்ஸ்க்யூஸ் மீ."

திரும்பிப் பார்த்தான் அரவிந்தன். ஓர் இளம் நர்ஸ் நின்றிருந்தாள். "நீங்கதானே மிஸ்டர் அரவிந்தன்!"

"எஸ்."

"உங்களை டாக்டர் கூப்பிடுறார்."

அறையை விட்டு வெளிவந்தவன்,நேராக டாக்டர் அறையில் நுழைந்தான்.

"உட்காருங்க மிஸ்டர் அரவிந்தன்."

எதிர்பார்ப்போடு அமர்ந்தான்.

"மனதை தேற்றிக் கொள்ளுங்கள் மிஸ்டர் அரவிந்த். உங்க வொய்ப் இன்னும் எத்தனை நிமிடங்கள் உயிரோடு



இருப்பார் என்று என்னால் சொல்ல முடியாது. காரணம், ஃபிட்ஸ் வந்திருக்கு. இப்ப அவங்க உடம்பு இருக்கும் நிலையில் அடுத்த ஃபிட்ஸ் வந்தால் ஸாரி... அவங்க பிழைக்கச் சான்ஸ் எனக்குத் தெரிந்த வரை இல்லை."

"டாக்டர்!" உறைந்து போனான் அரவிந்தன்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் தளர்ந்த நடையுடன் வெளியே வந்தான் அரவிந்தன். விமலா இருக்கும் அறையின் கதவில் சாய்ந்து கொண்டு நிற்கும்போது, அவன் நிற்கிறான் என்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் அவனை இடித்துக் கொண்டு புயலென ஓர் இளம் பெண் உள்ளே பாய்ந்தாள்.

"விமலா..." விமலாவின் அருகே சென்று அந்தப் பெண் மெலிதாக அழைத்தாள். சோர்வாகக் கண்களைத் திறந்த விமலாவின் கண்களில் ஆச்சரியம் குடிபுகுந்தது.

"நீ.. நீ..."

"நான்தாண்டி லாவண்யா."

"நீ இப்படி இங்கே?"

"புரசைவாக்கம் ஹைஸ்கூலில் இன்னைக்குத்தாண்டி எக்னாமிக்ஸ் டீச்சரா ஜாயின் பண்ணினேன். உன்னோட அட்ரஸ் என்னிடம் இருந்தது. உன் வீட்டுக்குப் போனேன். உன்னோட மாமியார் எல்லாத்தையும் சொன்னாங்க. அதான் இப்ப ஓடி வந்தேன். விமலா, நீ கண்டிப்பாப் பிழைத்துக் கொள்வாய். நான் உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்டி."

லாவண்யாவின் கழுத்தைப் பார்த்தாள் விமலா. சின்ன டாலர் செயின் மட்டும் சிரித்தது.

"லாவண்யா... கல்யாணம் ஆயிடுச்சா?"

'இல்லை'யெனத் தலையாட்டினாள் லாவண்யா.

விமலாவின் உள்ளத்தில் திடீர் என்று தென்றல் வீச ஆரம்பித்தது.

'லாவண்யாவைப் பற்றித்தான் நமக்குத் தெரியுமே. அவ ருக்குப் பொருத்தமானவள்தான். அத்தைக்கும் நல்ல மருமகளா இருப்பா.'

"அவரைக் கூப்பிடேன்."

இவர்களையே பார்த்துக் கொண்டு இருந்த அரவிந்தன், அவள் குறிப்புணர்ந்து அவளருகில் வந்தான்.

"ஏங்க, பக்கத்தில் கோயில் இருக்கா?"

"இருக்கு. அரச வேம்பு கோயில் என்று நினைக்கிறேன்."

"நல்லதாப் போச்சி. அங்க ஒரு மஞ்சள் கயிறும், ஒரு மஞ்சள் துண்டும் வாங்கி வர்றீங்களா?"

"எதுக்கும்மா?"

"ப்ளீஸ்."

"சரி."

'எதுக்கு இப்ப இவ இப்படிச் சொல்றா? என்னைத் திரும்பத் தாலி கட்டச் சொல்லப் போறாளோ?' ஒன்றும் புரியாமல் கயிறையும், மஞ்சளையும் வாங்கி வந்தான்.

"கீதா எங்கங்க?"

"ப்ரட் வாங்கப் போயிருக்கா."

"நான் ஒண்ணு சொன்னாக் கேப்பிங்களா?"

"என்னடா வேணும்?"

"செய்வீங்களா?"

"சத்தியமா. உம்மேல ஆணையாச் செய்றேன். என்ன வேணும் சொல்லு."

லாவண்யாவைப் பார்த்த விமலா, "லாவண்யா, நீயும் எனக்கு ஒண்ணு செய்வியா?"



"கண்டிப்பா. உன்னோட டிபன், புக்ஸ், ட்ரஸ் எல்லாத்தை யும் எனக்கு விட்டுக் கொடுத்தவடி நீ. உனக்கு நான் செய்ய மாட்டேனா? சொல்லுடி."

"என் புருஷனைத் தரேன், வாங்கிக்கிறியா?"

"விமலா!" இருவரும் ஒருசேரக் கத்தினார்கள். ஆடிப் போய் விட்டார்கள் இருவரும்.

"எதுக்கு இப்பச் சத்தம் போடுறீங்க? நான் என்ன சொல் லிட்டேன். நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணும். அதான் என்னோட கடைசி ஆசை. ப்ளீஸ்..."

"விமலா, வலிக் கொடுமையில இப்படி எல்லாம் பேசாதே. நீ பிழைச்சிக்குவ."

"இல்லங்க, எனக்குத் தெரியும், நீங்க பொய் சொல்லுறீங் கன்னு. லாவண்யா ப்ளீஸ்டி."

"நோ விமலா. நெவர் என்னால முடியாது. உனக்குத் துரோகம் பண்ணச் சொல்லுறியா?"

"எனக்குத் தெரியாம நீ எம் புருஷனைக் கல்யாணம் பண் ணிக் கொண்டால் தான் துரோகம். நானே சொல்லும்போது நீங்க ரெண்டு பேரும் மறுப்பதுதான் எனக்கு நீங்க பண்ற துரோகம்."

ஒரு நிமிடம் நிதானித்த லாவண்யா, "மிஸ்டர் அரவிந்தன் ஒன் மினிட்" வாசல் அருகே இருவரும் சென்றனர்.

"இங்கப் பாருங்க. இவ ஏதோ பயந்துட்டா. பண்ணிக் கொள்கிறோம் என்று சொல்லிடுவோம். நெருப்புன்னா வாய் சுட்டிடாது. இப்ப விமலாவிற்குத் தேவை மன அமைதி. சோ, சும்மா ஒத்துக் கொள்வோம்."

நன்றிப் பெருக்கோடு அவளைப் பார்த்த அரவிந்தன் "தாங்க்யூ மிஸ் லாவண்யா."



"தேங்க் யூ. வெல்லன்." விமலா அருகில் இருவரும் வந்தனர்.

"சரி விமலா. உன்னோட இஷ்டப்படி நடந்து கொள் கிறேன். அமைதியாத் தூங்கு."

வேதனைச் சிரிப்பு விமலாவிடம் வெளிப்பட்டது.

"உங்க ரெண்டு பேரையும் பத்தி எனக்கு நன்றாகவே தெரியும். நான் நம்ப மாட்டேன். லாவண்யா கழுத்தில் இப்ப இந்தத் தாலியைக் கட்டுங்க" அவள் சொல்லும்போதே லேசாக ஒரு சொடுக்கு சொடுக்கியது.

பதறிப்போன அரவிந்தன் டாக்டர் அறையை நோக்கி ஓடி னான். 'உங்க மனைவிக்கு ஃபிட்ஸ் வந்தால் தாங்க மாட் டாங்க' என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

டாக்டர் வருவதற்குள், விமலாவின் கை கால் சொடுக் கல்கள் அதிகமாக இருந்தன.

"ஸாரி மிஸ்டர் அரவிந்தன்."

"ஸார், ப்ளீஸ் எப்படியாவது என்னோட விமலாவைக் காப்பாற்றுங்கள்" தலையில் அடித்துக் கொண்டு கதறினான் அரவிந்தன்.

"ப்ளீஸ் அரவிந்தன். காம் டவுன்."

அந்த வலிப்பிலும், "என்னங்க" என்று முனகினாள்.

"விமலா."

"லாவண்யா கழுத்தில் தாலி கட்டுங்க. ப்ளீஸ் லாவண்யா எனக்காக அவரை ஏத்துக்கடி. என்னங்க எனக்காக... எனக் காக..." வார்த்தைகள் நின்றன. என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், டாக்டரின் உசுப்பலின் பெயரில் மஞ்சள் கயிறை எடுத்து லாவண்யாவின் கழுத்தை நோக்கி நீட்டினான்.

ஒன்றும் புரியாமல் விக்கித்து நின்றாள் லாவண்யா.



மூன்று முடிச்சைப் போட்டவன், அப்படியே தரையில் உட்கார்ந்து முழங்காலில் முட்டிக் கொண்டு கதறினான்.

"விமலா!" லாவண்யாவின் வீறிட்டுக் கத்தல் அரவிந்தனை தூக்கி வாரிப் போட்டது.

பிரமை பிடித்தவன் போல் எழுந்து அப்படியே நின்றான்.

விமலாவின் முகத்தில் பூரிப்பு நிலவியது. ஏதோ பெரிய சாதனை செய்துவிட்ட நிம்மதியில், இதழில் சின்னப் புன்னகையைத் தொங்கவிட்டு நிரந்தர உறக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தாள்.

## 4

**வா**னம் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, சூரியனோடு கோபித்துக் கொண்டு நிலவோடு கைகோர்த்துக் கொண்டு குளுமையான நிலவை வரவேற்க, அதன் பதவி ஏற்பைக் காண விண்மீன்கள் வெண்ணிலவை ஆசையோடும் அன்போடும், சூழ்ந்து கொண்ட நேரம் பூமியில் இருக்கும் முல்லை, மல்லி எல்லாம் நிலவின் வரவை ஆசையோடு எதிர்பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டு இருக்கும் இரவு நேரம்.

திருச்சியில் இருந்து புறப்பட்ட நெல்லை எக்ஸ்பிரஸ் கொஞ்சம்கூடச் சலனம் இல்லாமல் தன் பாதையில் விரைந்து கொண்டு இருந்தது.

இன்ஜினோடு இணைக்கப்பட்டு நான்காவதாக வந்து கொண்டு இருந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியில், மேல் பெர்த்தில் அந்த இளம் பெண் சூட்கேஸைத் தலைக்கு

வைத்துப் படுத்து இருந்தாள். சூட்கேஸ் தலைக்கு வலியை ஏற்படுத்தவும் எழுந்து உட்கார்ந்தாள்.

மேல் பர்த்தில் இருந்து கீழே குனிந்து பார்த்தாள். அவ ளுக்குக் கீழே உள்ள பர்த்தில் ஒரு வயதான குண்டம்மா படுத்திருந்தாள். அவள் தூங்கிக் கொண்டு இருப்பதைப் பார்த் தால், யானை ஒன்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வது போல் தோன்றும்.

சத்தம் போடாமல் கம்பியைப் பிடித்துக் கீழே இறங்கிய அந்தப் பெண், தன்னை யாரும் பார்க்கவில்லை என்று தெரிந் ததும், அந்தப் பெண்மணியின் பக்கத்தில் சென்று குனிந்து பார்த்தாள்.

அந்தப் பெண்மணியின் மார்பு வேக வேகமாக ஏறிக் கொண்டு இருந்தது. அடேயப்பா, இவ்வளவு நகையைப் போட் டுக் கொண்டு கொஞ்சம்கூடப் பயம் இல்லாமல் இப்படித் தூங்கறாங்க? எழுப்பிடுவோமா? ச்சே, தூங்கறவங்களை எழுப்பக் கூடாது. அடுத்த பெர்த்தில் உள்ளவர்களும் தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

'என்ன எல்லோருமே தூங்கறாங்க? எனக்கு மட்டும் தூக்கம் வரலை?' முணுமுணுத்தபடியே வாசல் பக்கம் வந்து முதல் படி யில் அமர்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

குளுகுளு என்று காற்று, வேக வேகமாக அவள் முகத்தில் அறைந்து கொண்டு இருந்தது. கன்னத்தில் இரண்டு கைகளை யும் வைத்துக் கொண்டு இருட்டு தேவனை இமை மூடாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

வேடிக்கை பார்ப்பவளைப் பற்றி ஒரு சின்னக் குறிப்பு: பெயர் பிரபா. இந்த உலகத்தில் அவள் பிறந்து இன்றையோடு 7502 நாட்கள் ஆகின்றது. உயரம் 154 செ.மீ. படிப்பு எம்.காம். பர்ஸ்ட் இயர். ராசி மேஷம். நட்சத்திரம் பரணி. சதை பிடிப் பான கன்னங்கள். சிவந்த உடல் அல்ல. இதழில் எப்போதும்



ஒரு சின்னப் புன்னகை தவழ்ந்து கொண்டே இருக்கும். நீல வண்ணத் தாவணியில் பூப்போட்ட பாவாடையுடன் மெலி தான மேக்கப்போடு காணப்பட்டாள். கிராமத்துச் சாயல் அப்பட்டமாகத் தெரிந்தது. கிராமத்து அழகை வஞ்சனை இல்லாமல் பிரம்மன் அவள் மேல் வாரி இறைத்திருந்தான். காதில் சிறிய வளையம் தொங்கிக் கொண்டு இருந்தது.

தூக்கி வாரி ரப்பர் பாண்ட் போட்டிருந்தாள். நடு நெற்றி யில் சிகப்பு ஸ்டிக்கர் உட்கார்ந்திருந்தது. ஊதக் காற்றால் அவள் உடம்பு நடுங்க ஆரம்பித்ததும் எழுந்து வந்து பர்த்தில் ஏறினாள். சூட்கேஸைத் திறந்து ஒரு வார இதழைப் புரட்டி னாள். மனம் அதில் செல்லாததால், புத்தகத்தை மூடி சூட்கேஸில் போட்டு விட்டு டைரியை எடுத்துப் பக்கங்களைப் புரட் டினாள். அதிலிருந்து, சின்னக் கலர் போட்டோ அவள் மடியில் விழுந்தது. டைரியை மூடிவிட்டு போட்டோவை எடுத்துப் பார்த்தாள். அதில் விமலா, கௌதம், அரவிந்தன் மூவரும் சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

தாவணியால் அந்த போட்டோவை இரண்டு முறை துடைத்து விட்டுப் பார்த்தாள். ஆனால் உருவம் தெரியாமல் கண்களில் கண்ணீர் திரையிட்டது.

"விமலாண்ணி இறந்து ஒன்பது மாதம் ஆகிவிட்டது. இது வரைக்கும் என்னால் நம்ப முடியவில்லை. பொய்யாக இருக்கக் கூடாதா? இருக்கணும் என்று, உள்ளம் துடித்தாலும் காலத்தை மாற்றும் சக்தி யாருக்கும் இல்லையே என்ன செய்வது? விமலாவை எரித்த அன்று மட்டும் வந்த ப்ரபா, அதற்கு மேல் அங்கு இருக்க மனம் ஒப்பாததால் அடுத்த நாளே காலே ஜிற்கு வந்து விட்டாள். தனிமையில் ஆயிரம் முறைக்கு மேல் கதறி இருப்பாள். ஆனால், விமலா திரும்பி இவளைப் பார்க்க வரப்போகிறாளா? இல்லையே. கீதாவும், கமலத்தம்மாவும் அரவிந்தனுடன் சென்னையிலேயே தங்கிக் கொண்டனர் கிராமத்தில் இருக்கும் வீட்டை வாடகைக்கும், காட்டைக்



குத்தகைக்கும் விட்டனர். கீதாவைப் பக்கத்தில் உள்ள ஹை ஸ்கூலில் சேர்த்தனர். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு கடைசி செமஸ்டர் காரணமாக விடப்பட்ட ஸ்டடி லீவை மெட்ராஸில் கழிக்கும்படி ஆகி விட்டது. மாதம் ஒரு முறை தவறாமல் தங்கையை வந்து பார்த்தான் அரவிந்தன். எந்தச் சூழ்நிலை யிலும் லாவண்யா என்பவளுக்குத் தான் தாலி கட்டி இருப் பதை மட்டும் மறைத்து வந்தான். அவளோடு வாழ்ந்தால் தான் சொல்லுவான்.

வேகத்தைக் குறைத்துக் கொண்டு, எக்மோரில் நெல்லை எக்ஸ்பிரஸ் மூச்சு வாங்கியது.

பக்கத்தில் இருந்த பெரியவரிடம் விசாரித்து, சென்னை எக்மோர் என்று தெரிந்து கொண்டாள். சூட்கேஸை இழுத்து மூடி ரயிலை விட்டுக் கீழே இறங்கினாள்.

காற்றினால் தலை கலைந்து அங்கும் இங்கும் பறந்த தலையை, ஒரு கையால் ஒதுக்கிக் கொண்டே ப்ளாட்பாரத் தில் நடந்தாள்.

எங்காவது தமையன் தன்னைப் பார்க்கிறானா என்று பார்த்தவளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'ஏன் அண்ணனைக் காணோம். ஒருவேளை நான் போட்ட லெட்டர் கிடைக்கலையா? அப்படித்தான் இருக்கணும். இல்லை யென்றால் அண்ணன் வாராம இருப்பானா?'

'பேசாம ஆட்டோ புடிச்சிப் போயிடலாமா? ராத்திரி நேரத்தில் ஆட்டோவை நம்பிப் போகலாமா?' ஒன்றும் புரியா மல் விழித்தாள். "எக்ஸ்க்யூஸ் மீ."

பக்கென்று பயம் தொற்றிக் கொள்ளத் திரும்பிப் பார்த் தாள் பிரபா.

புன்னகையோடு நின்றிருந்தாள் ஒரு சல்வார் கமிஸ்.



"ரொம்ப நேரமாக் கவனித்துக் கொண்டு இருக்கிறேன். நீங்க இங்கேயே நின்று கொண்டு இருக்கீங்க. யாராவது வரணுமா?"

"இல்லை."

"ஏன் பயமா இருக்கா? மெட்ராசிற்குப் புதுசா?"

தலையாட்டினாள்.

"எந்த அட்ரஸ்?" அட்ரஸைச் சொன்னாள் பிரபா.

"அட இது எங்க தெருவிற்கு அடுத்த தெருதான். ஆட்டோ வில் போயிடுவோம்."

"பைசா பிப்டி பிப்டி." சிரித்தாள் ப்ரபா.

இருவரும் சேர்ந்தே ஆட்டோ பிடித்தனர். பதினொன்றாம் நம்பர் வீட்டின் முன்னால் பிரபாவை இறக்கி விட்டு "ஸீ யூ" என்றாள் சல்வார் கமீஸ்.

நன்றியோடு அவளைப் பார்த்த பிரபா, "தாங்க்யூ வெரிமச்."

"இட்ஸ் ஆல் ரைட். லேடிஸுக்கு லேடிஸ் ஹெல்ப் பண் ணாமல் யார் செய்வது?" அவள் கைகளை ஆட்டிக் கொண்டே இருக்கும்போது ஆட்டோ அடுத்த தெருவை நோக்கிப் பாய்ந்தது.

'எவ்வளவு நல்ல பொண்ணு. பெயரைக் கேட்கக்கூட மறந்து விட்டோமே.' தன்னைத் தானே நொந்து கொண்டு காலிங் பெல்லில் கை வைத்தாள்.

இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப அழுத்தினாள்.

கொஞ்ச நேரத்தில் வீட்டின் உள்ளே வெளிச்சம் பரவியது. தாள் விலகும் சத்தம் கேட்டது. கதவை லேசாகத் திறந்து கொண்டு, "யார்?" என்றாள் லாவண்யா.

"நல்லாவே கதவைத் திறங்க. நான் ஒன்றும் திருடி இல்லை நீ யாரும்மா?"

"நல்லா இருக்கு. நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்க கேட்கிறீங்க?" பேசிக் கொண்டே உள்ளே நுழைந்து சோபாவில் சூட்கேஸைத் தூக்கிப் போட்டுத் தானும் பொத்தென்று அமர்ந்தாள். கடிகாரம் பனிரெண்டு முறை அடித்து ஓய்ந்தது.

கதவைத் தாழ் இட்டுத் திரும்பி வந்த லாவண்யா, பிரபாவைப் புதிராகப் பார்த்தாள். பிரபாவும் லாவண்யாவைப் புதிராகப் பார்த்தாள்.

லாவண்யாவிற்கு மட்டும் புரிந்தது. ஹாலில் மாட்டியிருக்கும் போட்டோக்களில் இருப்பவள் அரவிந்தனின் பெரிய தங்கை. மௌனமாகத் தன் அறைக்குள் அடைக்கலமானாள்.

## 5

தூக்கக் கலக்கத்திலும் அப்சரஸ் போல அழகு தேவதையாகத் தெரிந்தாள் லாவண்யா. மெல்லிய சேலையின் வழியாக அவள் போட்டு இருப்பது லோ கட் டைப் ப்ளவுஸ் என்று தெரிந்தது. சிநேகமாகப் புன்னகைத்தாள் பிரபா. லாவண்யாவும் கட்டாயத்தின் பெயரில் காதுப் பக்கமாக உதட்டை லேசாக அசைத்தாள். தலையை தாழ்த்திக் கொண்டு சூட்கேஸைத் திறந்து 4 இன்ஸ்கர்ட், 5 தாவணி, 3 பாவாடை, 5 ப்ரா, 2 சல்வார், பேஸ்ட், பிரஸ் எல்லாவற்றையும் எடுத்து வெளியே குவித்தாள். கொண்டு வந்திருந்த நைட்டியில் ஒன்றை எடுத்துக் கொண்டு, அழுக்காகக் கிடந்த கர்சீப்கள், டவல், பாண்டிஸ் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

'ஒரே ஒரு நாள் வந்திருந்தாலும் பாத்ரூமைச் சரியாகக் கண்டு பிடித்து விட்டேன்.' தனக்கே பாராட்டு சான்றிதழை வழங்கிக் கொண்டாள்.



நைட்டியில் பிரபா வெளிவந்தபோது லாவண்யா அவள் ரூமிற்குள் நுழைந்து லைட் ஆப் பண்ணி இருந்தாள்.

'நான் போட்ட லெட்டர் கிடைக்கவே இல்லையா? யாரு இந்த லேடி. ஒண்ணும் புரிய மாட்டேங்குது.' ஹாலில் இருந்த லைட்டைப் போட்டுவிட்டு வரிசையாக இருந்த மூன்று ரூமின் கதவுகளையும் திறந்து பார்த்தாள். நடுவில் இருந்த ரூமில் கீதா போர்வையை சுருட்டிக் கொண்டு படுத்திருந்தாள். கடைசி அறையில் அரவிந்தன் ஒருக்களித்துப் படுத்து இருந்தான்.

ஹாலிற்கு ஒட்டினாற் போல் வலது கோடியில் இருந்த அறையில் லாவண்யா தலை கவிழ்ந்து இருந்தாள்.

மெல்லிய வெளிச்சத்தில் அவள் அறை மிகச் சுத்தமாக மினுமினுத்தது. பெட்டுக்கு அருகே ஒரு நிக்கல் சேர் போடப்பட்டு இருந்தது. அதற்கு ஒட்டினாற் போல் இருந்த டேபிளில் நைட் லேம்ப் இருந்தது. சில ஆங்கிலப் புத்தகங்கள் அழகாக அடுக்கப்பட்டு இருந்தன.

ஒன்றும் புரியாமல் தலையைச் சொறிந்து கொண்டே தாயை எழுப்பினாள். "ம்மா, அம்மா. ம், எழுந்திரும்மா. பிரபா வந்திருக்கேன்."

"பிரபாவா?" தடாபுடாவென எழுந்தார் கமலத்தம்மாள்.

"என்னடி இது லெட்டர்கூடப் போடாம?"

"நான், போட்டேன். உங்களுக்குக் கிடைக்கலை போல இருக்கு. எப்படியோ வந்து சேர்ந்திட்டேன்."

"யாருடி கதவைத் திறந்தா?"

"அந்தப் பொண்ணு யார் என்று தெரியலை. யாரும்மா அது?"

"அவளைப் பத்தி உனக்கென்ன? சாப்பிட்டாயா?"



"பசிக்குதும்மா. என்ன இருக்கு?"

"தோசை மாவு இருக்கு. ஊத்திக் கொடுக்கட்டுமா?"

"ம்." மனதில் லாவண்யாவைப் பற்றிய எண்ணம் அசை போட்டாலும், அம்மாவிடம் அவள் திரும்பக் கேட்க விருப்பப்படாமல், தோசை வார்த்துப் போடப் போட, காலேஜ் பற்றிப் பேசியபடியே சாப்பிட்டு முடித்தாள்.

"அண்ணனையும் கீதாவையும் எழுப்பட்டுமா?"

"வேணாம்மா. இன்னும் இரண்டு மாதத்திற்கு மேலே இங்க தானே இருக்கப் போகிறேன். காலையில் பார்த்துக் கொள்கிறேன்."

## 6

"எனக்கு என்னக்கா வாங்கி வந்திருக்கே?"

"நான் என்ன கடையா வச்சி இருக்கேன்?"

"சரிதான் போடி. உன்ன பத்தித் தெரியாது. தங்கச்சி இருக்கான்னு நினைவு இருந்தால் ஏதாவது வாங்கிவந்திருப்ப." அலுத்துக் கொண்டாள் கீதா.

"ஏதாவதுன்னா? எள்ளுப் புண்ணாக்கா?"

"அண்ணே இவளப் பாருண்ணே. வந்தன்னைக்கே வம்பிழுக்க ஆரம்பிச்சிட்டா?"

"என்னம்மா, ரெண்டு பேருக்குமே வயசு தான் ஆகுது. ஒரு விவரமும் இல்லை. தங்கையின் அருகில் வந்து உட்கார்ந்த அரவிந்தன், "அந்தப் பொண்ணு. அதான் அந்த சல்வார் கமீஸ் வரலைன்னா என்ன பண்ணி இருப்ப?"



"ப்ளாட்பாரத்தில் படுத்துத் தூங்கி ஆற அமரப் பொடி நடையா மெட்ராஸைச் சுத்தி எப்படியாவது வீடு வந்திருப்பேன்."

"மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிடுறியா?"

"ஓ. அதில் குறை வைப்பது இல்லை."

"அண்ணே அந்த லேடி யாருண்ணே?"

கீதாவின் முகத்திலும், அரவிந்தன் முகத்திலும் கருமை படர்ந்தது. "அது... வந்து..." சோபாவின் நுனியைப் பிடித்து இழுத்தான். பிறகு, "பிரபா எனக்கு ஸ்டேஷனுக்கு நேரமாகிறது. நான் குளிச்சிட்டு வந்து விடுகின்றேன்..."

"நான் கேட்டதற்குப் பதில்."

"சாயந்திரம்."

"நீயாவது சொல்லேண்டி. அவங்க யாரு?"

"யாரப் பத்தி வேணும் என்றாலும் கேளு. ஆனால் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை." அவளும் எழுந்து சென்று விட்டாள்.

நெற்றியைச் சுருக்கியவள், தனக்குத்தானே கையை விரித்துக் காட்டி சமையல் ரூமை நோக்கி நடந்தாள்.

சமையல் அறையின் உள்ளே மிக்ஸியில் எதையோ போட்டு மூடி அழுத்திக் கொண்டு நின்றாள் லாவண்யா. ஆனது ஆகட்டும் பேசிப் பார்ப்போம்.

லாவண்யாவின் பின்னால் போய் நின்ற பிரபா, "குட்மார்னிங்" என்றாள்.

திருதிருவென விழித்த லாவண்யா, "ஸேம் டு யூ" தடுமாறினாள்.

"ஏன் இப்படி பயப்படுறீங்க? நான் என்ன புலியா, சிங்கமா?"

"[illegible] இல்லையே!" [illegible] தக்காளிச் சட்னியை [illegible] இருந்த [illegible] போட்டுப் பொரிய விட்டுச் சட்னியோடு கலந்தாள்.

"ஆச்சு... ஆச்சு... ஆச்சு..."

மூக்கைப் பிடித்துக் கொண்டாள் பிரபா.

"நல்ல தாளிப்பு."

மௌனமாக லாவண்யா வேலையை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பிரபா விடுவதாக இல்லை.

"உங்கள் பெயர் என்ன?"

பிரபாவைத் திரும்பிப் பார்த்த லாவண்யா, "லாவண்யா." என்றாள்.

"ஸ்வீட் நேம். காபி கிடைக்குமா?"

ஒன்றும் பேசாமல் ஒரு கப் காபி கலந்து அவளிடம் நீட்டினாள்.

"தாங்க்யூ" காபியை உறிஞ்சியபடியே, "நீங்க யார் என்று எனக்குத் தெரியாது. யாரிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டாங்க. ஆனா எனக்கு ஒன்று மட்டும் புரியுது. இந்தியா என்கிற எங்க வீட்டிற்கு நீங்க ஒரு பஞ்சாப், சரியா?"

முன் பற்கள் இரண்டு தெரிய சிரித்தாள் லாவண்யா.

"அப்படி சிரிச்சிடாதீங்க. அழகா இருக்கீங்க. எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. எஸ். ஒரு சிலரை நாம முன்ன பின்ன பார்த்திருக்க மாட்டோம். ஆனா ரொம்ப அவங்களை பிடிக்கும். ஒரு சிலர் மேல் காரணம் இல்லாமல் வெறுப்பு



வரும். என்னைப் பொறுத்தவரை நீங்க முதலில் சொல்லலிஸ்ட்."

"உனக்கு இப்ப என்ன வேணும்?"

"உங்களைப் பத்தித் தெரிந்து கொள்ளணும்."

"ஸாரிம்மா. இந்த வீட்டு மெம்பர்ஸ் என்னைப் பத்தி உன்னிடம் சொல்லாதபோது, நானே அறிமுகப்படுத்திக் கொள்வது அநாகரீகம்."

"பரவாயில்லை. என்னை நான் அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். என் பெயர் பிரபா. திருச்சியில் எம்.காம். பர்ஸ்ட் இயர். இன்ஸ்பெக்டர் அரவிந்தனோட முதல் தங்கை. தின்ஸ் மை பயோ டேட்டா."

பிரபாவை நோக்கித் திரும்பிய லாவண்யா, "திருச்சியிலே படிப்பது நீதானா?"

"இம்." பலமாகத் தலையாட்டினாள்.

பிரபாவின் தோளைப் பிடித்து, "என்னைப் பத்தித் தெரிந்து கொண்டால் நீயும் என்னிடம் பேச மாட்ட."

"ஏன்? எனக்கு ஒன்னும் புரியவில்லையே."

"புரிந்தால்தான் கஷ்டம். என்னிடம் இப்ப நீ பேசிக் கொண்டு இருப்பது தெரிந்தால்கூட உங்கண்ணா, உன்னைத் திட்டுவார்."

"எனக்குத் தலையைப் பிச்சிட்டு ஓடலாம்னு இருக்கு."

கலகலவெனச் சிரித்தாள் லாவண்யா. பளிச்சென்று பற்கள் மின்னி மறைந்தன. "முன்னாடி நீளமாப் பெருசா இருக்கும் இந்த முன்பல் இரண்டும் உங்களுக்கு அழகா இருக்கு."

பிரபாவின் தலையை லேசாகக் கலைத்துவிட்ட லாவண்யா, செல்லமாக அவள் கன்னத்தில் தட்டிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தாள்.





எட்டரை மணிக்கு டைனிங் டேபிளில் தோசை, சட்னி, சாம்பார் இவற்றைக் கொண்டு வந்து பரப்பினாள் லாவண்யா.

கௌதம் குட்டி பாட்டியை விட்டு யாரிடமும் வர மறுத்தான். அரவிந்தனைக் கண்டாலே பயந்து ஒடுங்கினான். அரவிந்தன் கெஞ்சிப் பார்த்தான். குழைந்து பார்த்தான். நோ ரியாக்ஷன். ஆன மட்டும் முயற்சி செய்து பார்த்ததில், 'டாடி ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க மம்மியக் கொன்னுடுச்சி' என்று பிதற்றினான். யார் சொல்லிக் கொடுத்த வார்த்தையோ தெரியவில்லை. கௌதம் தன்னிடம் ஒட்டாமல் இருப்பதைப் பார்த்து மனசினுள் புழுங்கினான் அரவிந்த்.

அழுகையும், கூக்குரலும் சேர்ந்து தாலாட்ட விடாப் பிடியாக ஸ்கூல் ரிக்ஷாவில் ஏற மறுத்தான். ஒவ்வொரு நாளும் பெரிய போர்க்களமே நடக்கும், அவன் ஸ்கூல் போவதற்குள்.

கீதா அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, டிபன் பாக்ஸிலும் அடைத்துக் கொண்டு ஓடினாள்.

அரவிந்தனும் வீட்டை விட்டுக் கிளம்பினால் போதும் என்ற நினைப்பில் பறந்தான். லாவண்யாவையும் பரபரப்பு தொற்றிக் கொள்ள அவளும் கிளம்பினாள்.

'எல்லோருக்கும் என்னாச்சி? எல்லாம் வடதுருவம், தென்துருவமா இருக்காங்க. இந்த லாவண்யா யாரு? ஏன் யாருமே அந்தப் பெண்ணிடம் பேச மாட்டேங்கறாங்க?'

பொறுமை எல்லை மீற ஆரம்பித்ததும், வீட்டுத் துணிகளைத் துவைத்துத் தோளில் போட்டு ஒவ்வொன்றாக எடுத்துக் கம்பியில் உலர்த்திக் கொண்டு இருந்த கமலத்தம்மாவின் முன்னால் கைகளை இடுப்பில் ஊன்றிக் கொண்டு எதிரில் போய் நின்றாள்.

"என்னடி இது, சண்டைக்கு வர மாதிரி?"

"மாதிரி என்ன மாதிரி. அதுக்குத்தான் வந்திருக்கேன்."



"யாரு அந்தப் பொண்ணு? யாரும் பதில் சொல்லாம திரும்பிக்கிட்டு போறீங்க?"

"அவளைப் பத்திச் சொல்ல விருப்பம் இல்லை."

"இந்த பார்மாலிட்டி எங்கிட்ட வேண்டாம். இப்ப நீ சொல்லப் போறியா? இல்லையா?" கமலத்தம்மாளின் தோளில் இருந்த துணிகளை எல்லாம் பிடுங்கி வைத்துக் கொண்டாள்.

"சனியன் புடிச்சவளே. அவ உங்கண்ணனுக்கு சக்களத்திடி."

"சக்களத்தியா? அப்படின்னா?"

"உங்கண்ணன், அதான் எம்புள்ள. அவ கழுத்திலேயும் தாலி கட்டி இருக்கான்." அதிர்ச்சியால் ஒருமுறை அவள் உடல் ஆடி அடங்கியது.

"விமலாண்ணி இடத்தில் இன்னொருத்தியா? என்னம்மா இதெல்லாம்?" தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

அத்தியாயம் மூன்றை அப்படியே ஒப்பித்தாள் அம்மா.

"ஏதோ பைத்தியக்காரத்தனமா அவன்தான் கட்டினாலும், சூட்கேஸைத் தூக்கிக்கிட்டு இந்த வீட்டுக்கு வந்து விடுவதா? இதை ஏன் நீங்க என்னிடம் சொல்லலை?"

"நீ தாங்க மாட்டன்னு உன்னோட அண்ணன்தான் சொன்னான்."

பிடுங்கி வைத்திருந்த துணியை நழுவ விட்டாள்.

குமுறி வந்த துக்கத்தை அடக்கிக் கொண்டு, பூஜை அறையில் நுழைந்தாள். நல்லது செய்துவிட்டோம் என்ற நினைப்பில் சந்தன மாலைக்குள் சிரித்தாள் விமலா.

"என்னண்ணி இதெல்லாம்? எதுக்காகண்ணி இப்படி ஒரு முடிவை எடுத்தீங்க? நீங்க இருந்த மனதிலே அந்த லாவண்யா நுழைவது ரொம்பக் கஷ்டமண்ணி. எத்தனை ஜென்மம் வந்தாலும் நீயும் நானுந்தான் அண்ணி. நாத்தியா வாழணும்னு

சொன்ன நீங்களே. இன்னொரு அண்ணியைக் கொடுத்திட்டுப் போய் இருப்பது உங்களுக்கே நல்லா இருக்கா?

''இதனால் பாதிக்கப்பட்டது எல்லாம் அந்தப் பொண்ணு தாண்ணி. நம்ம வீட்டில் யாருமே அவங்ககிட்டேப் பேசவில்லை. இந்த உப்பு சப்பு இல்லாத வாழ்க்கை அவங்களுக்குத் தேவையா? சொல்லுங்கண்ணி. எனக்கென்னமோ அவங்க மேலே தப்பு இருப்பதாத் தோணலை. நீங்க என்ன நினைத்து இப்படிச் செய்தீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனா எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்க தப்பான முடிவை எடுக்க மாட்டீங்க. அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு'' கண்களில் தடையில்லாமல் வழிந்து கொண்டு இருந்த கண்ணீரைத் துடைக்கக் கூட மனம் இல்லாமல் அப்படியே நின்றாள்.

சிவந்து கன்னிப் போய் இருந்த கண்களைக் குளிர்ந்த நீரில் குளிப்பாட்டினாள்.

வாரி வாரி முகத்தில் தண்ணீரை அடித்தாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தவள் பாத்ரூம் கொடியில் ஓரத்தில் துவைக்காமல் லாவண்யாவின் ப்ளவுஸ், சேலை, உள்ளாடை தொங்கிக் கொண்டு இருந்ததைப் பார்த்தாள். இதைத் துவைத்துப் போட்டு, ஏன் நம் அன்பை வெளிப்படுத்தக் கூடாது? தட்ஸ் கரெக்ட். அப்படியே துணிகளை வாரி வாளியில் அமிழ்த்தி அழுக்கு நீக்கியின் உதவியால் சேலையை உருவி நிர்வாணப்படுத்தினாள்.

டி.வி.யில் வரும் விளம்பரப் பெண்களைப் போல், சோப்பைக் கரைத்து குபுகுபுவென நுரையைப் பொங்க விட்டாள் தன் துணிகளை அயர்ன் பண்ணும்போது லாவண்யாவின் துணிகளையும் சேர்த்தே சலவை பண்ணினாள்.

மாலை வீடு திரும்பிய லாவண்யாவிற்கு, தன் துணிகள் துவைக்கப்பட்டு அழகாக அயர்ன் பண்ணி அடுக்கி வைக்கப்பட்டு இருப்பதைப் பார்த்ததுமே மூர்ச்சையாகிப் போகும்



அளவிற்கு அதிர்ந்து போனாள். இருந்தாலும் கண்டு கொள்ளாமல் வீட்டு வேலையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் மனதில் சொல்லத் தெரியாத ஓர் இன்பம். என்னை ஏற்றுக் கொள்வார்களா? ஒன்பது மாதமா யாருக்கும் இல்லாத அக்கறை இப்ப யாருக்கு வந்தது?

பூனை போல் நடந்து வந்த பிரபா, லாவண்யாவின் பின் தோளை மெதுவாகப் பற்றி, ''அண்ணி, ஒரு கப் காபி கிடைக்குமா?''

சிரித்தாள்.

ஆச்சரியத்தின் விளிம்பில் நின்ற லாவண்யாவின் இதயத்தில் அண்ணி என்ற சொல் சுகமான ஒரு நரம்பை இதமாகச் சுண்டி விட்டது.

## 7

''ஹலோ... ஹலோ...'' கண்களுக்கு நேராக கைகளை அசைத்துப் பார்த்தாள். பின் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு லாவண்யாவைப் பிடித்து உலுக்கினாள் பிரபா.

''ம்... ம்...'' தூக்கத்தில் இருந்து விழிப்பவளைப் போல் தடுமாறினாள்.

''இப்ப நீ என்ன சொன்ன?''

''காபி கேட்டேண்ணி.''

''இன்னொரு முறை சொல்லு.''

''காபி கேட்டேண்ணி.''

''அண்ணின்னு என்னையா சொன்ன?'' சந்தேகப் பட்டாள்.



தலையில் கைகளை வைத்து, ''போச்சுடா,'' என்றாள்.

''நிஜமாவா?''

அண்ணியின் கைகளைப் பிடித்து அவள் உள்ளங்கையில் தன் கையை வைத்து ''சத்தியமா உங்களத்தான் சொன்னேன்.''

''ஸாரிம்மா.''

''ஏன்?''

''என்னை அண்ணின்னு கூப்பிட்டு, உங்க குடும்பத்தோட சேர்த்து விடலாம் என்று மட்டும் நினைக்காதே.''

''என்னண்ணி சொல்றீங்க?''

''திரும்பவும் தப்பு பண்ணுறியே. குடும்ப வாழ்க்கை எனக்கு ஒத்து வராது. இந்த வீட்டில் எல்லாரும் என்னை விரும்பாதது, நான் செய்த புண்ணியம். உங்கண்ணி விமலா என்னோட உயிர்த்தோழி. பட், அவ இப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்கிடுவான்னு நான் நினைக்கலை.''

பிரமிப்பாக லாவண்யாவைப் பார்த்துக் கொண்டு இருந்த பிரபா ''பின் எதற்கு இங்க வந்தீங்க?''

''நான் தமிழ்நாட்டுப் பெண். விரும்பியோ, விரும்பாமலோ கழுத்தில் தாலி ஏறிட்டா, அதை ஏற்றுக் கொள்வது நம்ம வழக்கமாகப் போயிடுச்சு. இட் வாஸ் நேச்சர். பட், இதில் ஏதோ ஒரு சக்தி இருக்கு. இல்லாவிட்டால், இவ்வளவு அவமானத்தைத் தாங்கிக் கொண்டு நான் ஏன் இங்கே இருக்கணும்?''

திறந்த வாயை மூடாமல் விக்கித்து நின்றாள் பிரபா.

''தாலி வாங்கிட்ட பாவத்திற்காக உங்கண்ணா என்னை வெறுக்கலாம். விலக்கி வைப்பதை நான் பொறுத்துக் கொள்ளலாம். அதற்காக மாமியார், நாத்தனார், கொளுந்தன், போன்ற புகுந்த வீட்டுச் சொந்தங்கள் எனக்குத் தேவை



யில்லை'' இன்னும் என்ன என்ன சொல்ல முடியுமோ அத்தனையையும் சொல்லி, ஒன்பது மாதமாகத் தேக்கி வைத்திருந்த கோபத்தை, ஏக்கத்தை, ஏமாற்றத்தை எல்லாமே பிரபாவின் மேல் கோபமாக வீசினாள்.

அவமானத்தில் கோழிக் குஞ்சாகக் கருகினாள். மௌனமாக தலையைக் குனிந்து கொண்டு வெளியேற எத்தனித்த போது.

''காபி.''

''நோ, தாங்க்ஸ். நான் எங்க அண்ணி கையாலதான் குடிக்கணும்னு வந்தேன். எக்னாமிக்ஸ் டீச்சரிடம் இல்லை.''

''சாரி பார் த டிஸ்டர்பன்ஸ்.''

இரவு ஒன்பது மணி இருக்கும். புரண்டு புரண்டு படுத்தாள் லாவண்யா. தூக்கம் அவளுக்கு டாட்டா காட்டி இருந்ததால், கண்களைத் திறந்து இருட்டிலும் தெரிந்த சின்னச் சின்ன வெளிச்சப் புள்ளிகளைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். பாவம், இந்தப் பிரபா. நம்ம கோபத்தை அவகிட்டக் காட்டிட்டோம். எப்படிக் கூனிக் குறுகிப் போய்ட்டா. ஏன் அவ அவமானப் படக்கூடாது? அவ தங்கச்சியும், அம்மாவும் என்னை அலட்சியப்படுத்தலை. ஒன்றுமே தெரியாத மாதிரி அப்பாவி மாதிரி அவ அண்ணன் நடிக்கலை. என்னை மனைவியா ஏத்துக்காட்டிப் போகுது. அலட்சியப்படுத்தணுமா? அதுக்காக இவகிட்ட நான் ஏன் கோபித்துக் கொள்ளணும். பாவம் ஒரு பக்கம், பழி ஒரு பக்கமா? அவ அண்ணின்னு வரிக்கு வரி சொன்னபோது அப்படியே உருகிப் போய்விடவில்லையா நான்? பிறகு எதுக்கு நாளும் ஓர் உறவும் வேண்டாம் என்று நடிக்கணும்? உயிருக்கு உயிராகக் காதலிச்ச மனைவி, அருமையான அண்ணி, அற்புதமான மருமகள், அந்த மாதிரி இருந்த விமலாவை இழந்த குடும்பத்தில் என் வரவு புயலைத்தானே உருவாக்கும். அவங்க விலகியதைப் பார்த்து நாளும் இவ்வளவு நாளா விலகி இருப்பது என் தவறுதான்.

படுக்கையை விட்டு எழுந்தாள். ஹாலை எட்டிப் பார்த்தாள். கீதா என்னமோ எழுதிக் கொண்டு இருந்தாள். பிரபாவும் ஏதோ புத்தகத்தை விரித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அரவிந்தனுக்கு நைட் டியூட்டி என்பதால் எட்டு மணிக்கே ஸ்டேஷனுக்குப் போய் விட்டான்.

"தூக்கம் வருதுடி" கொட்டாவியை அவிழ்த்து விட்டாள் கீதா.

"போய்த் தூங்கேன்."

"நீ வரலையா?"

"உங்கிட்டயா, வேணாம்மா. கையையும், காலையும் படீர் படீர் என்று தூக்கிப் போடுவ. வலியை நம்மால தாங்க முடியாது. கொஞ்சம் படிக்கணும். குட் நைட். ஸ்வீட் ட்ரீம்ஸ்."

"வெறும் வார்த்தைதானா?"

"ஓ மறந்திட்டேன்." கீதாவின் நெற்றியில் முத்தமிட்டுத் திரும்ப "குட் நைட்." என்றாள். கீதா பிரபாவிற்கு குட் நைட் சொல்லும்போது கண் கலங்கினாள்.

"என்னடி இது?"

"அண்ணி மாதிரி, நீயும் எங்களை விட்டுப் போயிடுவியோன்னு எனக்குப் பயமா இருக்கு."

"எப்ப இந்த மாதிரி அழுவ கத்துகிட்ட, கண்ணைத் துடை." கீதாவைச் சமாதானப்படுத்தி அனுப்புவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

காலையில் லாவண்யாவிற்காக வரிந்து கட்டிக் கொண்டிருந்த உள்ளம், லாவண்யாவின் சுடு சொற்களால் கன்றிப் போய் இருந்தது. லாவண்யாவை நினைத்தாலே எங்கே சத்தம் போட்டு அழுது விடுவோமோ என்று பயந்தாள். அவமானப்பட்டது புதிது என்பதால், லாவண்யா இருந்த பக்கமே திரும்



பவே இல்லை. கோபம் கோபமாகத் தன் மேலேயே வந்து. சுவரில் அடித்த பந்து போல் தன்னையே அவன் திருப்பித் தாக்குவான் என்று எதிர்பார்க்கவில்லை. உணர்ச்சி வசப்பட்டு தன்னை அணைத்துக் கொள்வான் என்று எதிர்பார்த்தவளைத் தூக்கி அல்லவா எறிந்து விட்டான்?

என்றைக்கு விமலா அந்த வீட்டில் அடியெடுத்து வைத்தாளோ அன்றே கமலத்தம்மாள் மகனை மட்டும் அல்லாது தன் இரண்டு மகளையும் விமலாவின் கையில் ஒப்படைத்தாள்.

ஒவ்வொரு லீவிற்கும் கிராமத்திற்குப் போகும்போது நாத்திகள்தானே என்ற நச்சுப் பார்வையை அவர்கள் மேல் வீசாமல் தோளில் தொங்க விட்டுத் தாலாட்டினாள்.

கீதா விமலாவிடம் ஒட்டாவிட்டாலும் மனதில் பாசச் சரங்கமாக இருந்தாள். நாலைந்து வயதுதான் வித்தியாசம் என்றாலும், பிரபா, விமலாவைக் குழந்தையைப் போல் கட்டிக் கொள்வாள். விமலா அன்னியமாக ஒரு நொடிகூட அந்த வீட்டில் வாழவில்லை. ஒருவேளை சீக்கிரம் பிரிந்து விடுவதற்காகத்தான் அந்த அளவு ஒட்டுதலோடு அவள் இருந்திருக்கலாம். விமலாவின் இடத்தில் வேறு ஒருத்தியை நினைத்துக் கூட பார்க்கவில்லை அந்தக் குடும்பம். ஆனால் பிரபாவிற்கு மட்டும் அவள் அவமானப்படுத்திய பிறகும், லேசான பாசம் இல்லாமல் இல்லை. மனதிற்குள் லேசான நெருடலும் இல்லாமல் இல்லை. என்ன செய்வது? குழம்பித் தவித்தாள். வாழ்க்கையின் முடிவு வரை இப்படியே இருக்க முடியாது என்று தெரிந்திருந்தும் எதற்காக இப்படிக் கீரி பாம்பு போல் இருக்கின்றனர். முதலில் இவர்கள் எல்லாம் நடிக்கிறார்களா இல்லை, உண்மையிலேயே வெறுக்கிறார்களா என்று தெரிய வேண்டும்.

பிரபா மனதிற்குள் எண்ணங்களை மென்று கொண்டு இருந்தாள்.



இரண்டு நாள் கழிந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமை.

கௌதமைத் தூக்கிக் கொண்டு, தோட்டத்தில் உள்ள மல்லிகைச் செடியருகே பிரபா நின்று கொண்டு இருந்தாள்.

தோட்டத்தை எட்டிப் பார்த்த லாவண்யா, பிரபாவைப் பார்த்ததும் அவர்களை நோக்கி நடந்தாள். பிஸ்கெட் பாக்கெட்டோடு அருகே நின்று கொண்டு இருந்த கீதா, பாதி தன் வாயிலும், மீதியைக் கௌதம் வாயிலும் வைத்துக் கொண்டு இருந்தாள்.

லாவண்யாவைப் பார்த்ததும், கீதா தலையைப் பின்புறமாக ஒரு வெட்டு வெட்டிக் கொண்டு திரும்பினாள். லாவண்யா அருகில் நெருங்கியதும் "இவ ஏன்டி இங்க வர்றா?"

"மரியாத இல்லாமப் பேசாத. வயதில் பெரியவங்க."

"சரிதான் போடி. நான் போறேன்." கீதா வேகமாக வீட்டினுள் சென்று மறைந்தாள்.

லாவண்யா பிரபாவை நோக்கி, எந்தவிதமான சம்பிரதாயமான வார்த்தையையும் பேசாமல் நேராக விஷயத்திற்கு வந்தாள்.

"உங்கிட்ட கொஞ்சம் பேசணும்."

நேராகப் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு, கண்களை மட்டும் மேலே தூக்கிப் பார்த்தாள் பிரபா.

பார்வையின் வெப்பம் தாங்காமல், எச்சிலை விழுங்கிக் கொண்டு தயங்கினாள் லாவண்யா.

"பேசலாமா?"

"ம்."

"என்மேல உனக்குக் கோபமா?"



"உங்ககிட்ட கோவித்துக் கொள்ள நான் யார்?"

"ஸாரி."

"இட்ஸ் ஓ.கே. உங்களப் பத்தித் தெரிஞ்சிக்க எனக்குக் கிடைச்ச வாய்ப்புன்னு நெனச்சிகிட்டேன்."

"நீ என்னைத் தப்பா எடை போடக் கூடாது."

"ஏன்?" கேலியாகப் பார்த்தாள் பிரபா.

"நீ... நீ... வந்து..."

"நான் வந்ததும் போனதும் இருக்கட்டும். பையனுக்குச் சாதம் ஊட்டணும். என்ன சொல்ல வந்தீங்களோ அதச் சொல்லுங்க."

"ப்ளீஸ். என்னைப் புரிஞ்சுக்கோ. இந்த ஒன்பது மாதமும் எனக்குக் கிடைச்ச ஏமாற்றம்... உங்கிட்ட அப்படிப் பேசும்படி வந்திடுச்சி."

"இங்க யாராவது உங்களைக் கொடுமைப்படுத்தினாங்களா?"

"இல்ல. ஆனாப் பேசாமக் கொன்னுட்டாங்க."

"நீங்களும் பேசணும்னு நினைக்கல இல்லையா?"

பிரபாவைப் பரிதாபமாகப் பார்த்தாள். "தோணலை" என்றாள்.

"நான் உங்களுக்கு என்ன பண்ணனும்?"

"என்னைப் புரிஞ்சுக்க. எனக்கும் மனசு இருக்கு. அதிலேயே ஆசைகள் இருக்கு. காலையில அவசர அவசரமா எழுந்திரிக்கணும். பதட்டத்தோட வீட்டு வேலைகளை முடிக்கணும். கொழந்தைகளையும் வீட்டுக்காரரையும் புறப்பட வச்சி ஸ்கூல்க்கு நேரமாச்சேன்னு டிபன் பாக்சை மறந்திட்டு

ஓடணும்; வீட்ல இருக்கும் அத்தையோ, மாமாவோ இப்படி டிபன் பாக்ஸை மறந்திட்டு ஓடினா... உடம்பு என்னத்துக்கு ஆகும்னு உரிமையோட கண்டிக்கணும்; ஸ்கூல் போற மாதிரி அவருக்குத் தங்கை, தம்பி இருக்கணும்; தினமும், இரவு அவர்களை உட்கார வைத்து, எல்லா சப்ஜெக்ட்டையும் விளாவாரியா நடத்தணும்; போதும் மன்னின்னு அவங்க கெஞ்சணும்; அவங்களை விடாமல் இழுத்துப் பிடிச்சி உட்கார வைத்துத் திரும்பவும் அறுக்கணும்; கொஞ்சமாச் சாப்பிட்டுட்டு அவங்க எழுந்திரிக்கணும்; உடனே நச்சுன்னு செல்லமா ஒரு கொட்டு கொட்டி, இது போதுமான்னு அதிகமா சாதம் போட்டு முழி பிதுங்க வைக்கணும். நான் அம்மா வீட்டிற்குப் போய் விட்டுத் திரும்பும்போது நீங்க இல்லாம ஒண்ணுமே புரியலண்ணின்னு என்னை வந்து ஒட்டிக்கணும்; இனிமேல் சீக்கிரம் வந்திடுவேன்னு நான் அவங்கத் தலையைக் கோதி விடணும்; என்னை விட்டுப் பிரியாத அளவிற்கு அவங்களை என்னோட பைத்தியமாக்கணும்; ப்ளாட்பாரத்து கர்ச்சீப்பை வாங்கி வந்து, எத்தனை கடை ஏறி இறங்கினேன் தெரியுமா? என்று பொய் சொல்லி பீத்திக்கணும்; எனக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போயிடணும்; எல்லாரும் என்னைச் சுற்றி நின்று கொண்டு நிமிடத்திற்கு நிமிடம் எப்படிம்மா இருக்கு, இப்ப எப்படி இருக்குன்னு கேக்கணும்; எனக்கு ஒண்ணும் இல்லையென்று நான் மழுப்பணும்; வீட்டு வேலையையும் ஸ்கூல் வேலையையும் செய்வதால் அவரை மறந்திடணும்; திடீர்னு நினைவு வந்து வாரிச் சுருட்டிக் கொண்டு ரூமிற்கு ஓடணும்; அவர் கோபமா திரும்பிப் படுத்துக்கணும். அவர் முகத்தைத் திருப்பி ஸாரி டியர்னு சிணுங்கணும். இது மாதிரி எத்தனையோ கற்பனைகளை நெஞ்சில சுமந்தவள் நான். இதில ஒண்ணாவது இங்க நடந்து இருக்குமா? ஏமாற்றம்



வாழ்க்கையில் சகஜம்தான். ஆனா ஏமாற்றமே வாழ்க்கையானால் என்னால எப்படித் தாங்கிக்க முடியும். இதெல்லாம் உங்கிட்ட நான் ஏன் சொல்றேன்னு தெரியல. ஆனால் சொல்லணும்போல தோணிச்சி." மேலே பேச முடியாமல் அவள் தொண்டை கமறியது. பொங்கி வந்த கண்ணீரை அடக்க முடியாமல் தடுமாறினாள்.

அவள் அழுது ஓயட்டும் என்று காத்திருந்தாள் பிரபா.

கீதா, வீட்டில் ட்ரான்சிஸ்டரில் சத்தத்தைக் கூட்டினாள். இளையராஜாவின் குரல் கணீர் என்று ஒலிக்க ஆரம்பித்தது.

"பெண் மனசு ஆழம் என்று ஆம்பளைக்குத் தெரியும்.
அது பொம்பளைக்கும் தெரியும்
அந்த ஆழத்திலே என்ன உண்டு
யாருக்குத்தான் தெரியும்
அதில் முத்திருக்கா
முள்ளு குத்திருக்கா
அது யாருக்குத்தான் தெரியும்?"

லாவண்யா தன்னை இயல்பான நிலைக்குக் கொண்டு வரும்போது "வித் யுவர் பர்மிஷன்."

ஒன்றும் பேசாமல் தலையாட்டினாள் லாவண்யா.

"ஐ லவ் யூ." லாவண்யாவின் கையில் மென்மையாக முத்தமிட்டாள் பிரபா.

## 8

அந்த பார்க் ஓரமாக இருந்த புல்வெளியில் பிரபாவும், லாவண்யாவும் அமர்ந்திருந்தார்கள். இவர்கள் இருவரும்



கூட்டணி அமைத்துக் கிட்டத்தட்ட ஒரு மாதமாகப் போகிறது. எந்தவித மாற்றமும் மற்றவர்களிடத்தில் ஏற்படுத்த முடியாமல் கொஞ்சம் தடுமாறித்தான் போயிருந்தார்கள். முழங்காலை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு லாவண்யா அமர்ந்திருந்தாள்.

"நீ சொல்றது மாதிரி நடக்குமா?" ஏக்கம் குரலில் இழையோடியது.

"ஷ்யூர். நீங்க போட்ற சாப்பாட்ட சாப்பிடும் அளவு கீதா மாறியிருக்கா. அதுவே நமக்குக் கெடச்ச இருக்கிற பெரிய வெற்றிதான்."

"நிஜமாவா?"

"ஆமாண்ணி. கீதா ஒரு மாதிரியான டைப். இன்னும் சொல்லப் போனா அவ ஒரு கடல் மாதிரி. மூழ்கி முத்தெடுக்க உயிரைப் பணயம் வச்சிதான் ஆகணும். மூச்சு திணறத்தான் செய்யும். அவ ஒரு பாசக் கடல்."

"உங்கண்ணா?"

"அவனும் அப்படித்தான். அண்ணிய மறக்கறது ரொம்பக் கஷ்டம். அதே சமயம், உங்கள வெறுக்கறதையும் என்னாலப் பார்த்துக்கிட்டு இருக்க முடியாது. ஓ.கே."

"இல்ல பிரபா. விமலாவோட இரண்டறக் கலந்த உள்ளம் என்னைக் காதலிக்குமா?"

"கண்டிப்பா காதலிக்கணும். விமலாண்ணியை மறக்கறது கஷ்டமா இருக்கலாம். உங்களைக் காதலிக்கிறது ஒண்ணும் கஷ்டம் இல்ல. எங்கண்ணன் உங்களை வெறுக்கிறார் என்றெல்லாம் நெனச்சி மனசைப் போட்டுக் குழப்பிக்கிறது. உங்களை நீங்களே ஏமாத்திக்கிறது பத்தாம்பசலித்தனம்."

"பிரபா, இப்படி ஓர் ஆதரவு எனக்கு இருக்கும்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல." பிரபாவின் கைபிடித்து அழுத்தினாள்.



"ஒரு நல்ல தங்கச்சி அண்ணன் அண்ணி சந்தோஷமா இருக்கணும்னுதான் ஆசைப்படுவா."

"ஐ'ம் ப்ரவுட் ஆஃப் யூ."

"தேவையில்லாத பாராட்டு. இது என்னோட கடமை. ஒரு சின்ன அட்வைஸ்."

"சொல்லுங்க பாட்டி."

"இந்தக் கிண்டல்தானே வேணாங்கிறது. பெத்தவங்களுக்குத்தான் பொண்ணு, மடியில கட்டிக்கிட்ட நெருப்பு. எந்த நேரம் சுடுமோ என்ன ஆகுமோ என்ற கவலை. ஆனா அதே பொண்ணு புகுந்த வீட்டுக்கு குத்து விளக்கு. இங்க மடியில கட்ற நெருப்பு, அங்க குத்து விளக்கு ஏத்தற ஜோதி." கள்ளமாகச் சிரித்தாள் லாவண்யா.

"இருட்டுது. எந்திரி. ஏற்கெனவே உங்கம்மா பொட பொடன்னு திட்டி இருக்காங்க."

லாவண்யா எழுந்து கை கொடுக்க, பிரபா எழுந்தாள். பின்புறம் தூசி தட்டிவிட்டுக் கொண்டு பஸ் ஸ்டாப் நோக்கி நகர்ந்தனர்.

வீட்டிற்கு அருகே வந்ததும்,

"அண்ணி."

"ம்."

"நான் பாட்டுக்கு கன்னா பின்னான்னு திட்டுவேன். எதையும் கண்டுக்காதீங்க. முடிஞ்சா லேசா கண்ணக் கசக்குங்க. போனதும் அண்ணனுக்கு வெடி வைப்போம்."

"பாத்து."

"யூ டோண்ட் வொர்ரி."

எல்லோரும் சாப்பிட அமர்ந்தாலும் மௌன விரதத்திற்கு வேலை செய்வது போல் அப்படி ஓர் அமைதியாகச் சாப்பிடு

வதில் கவனமாக இருந்தார்கள். கீதா பாட்டுக்குக் கீதாவும், அரவிந்தன் பாட்டுக்கு அரவிந்தனும் ஒவ்வொரு திசையில் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். பிரபாதான் பேச்சை ஆரம்பித்தாள்.

"அண்ணே."

"என்ன பிரபா?"

"எனக்கு தனியா ரூம் வேணும்."

"எதுக்கும்மா?"

"படிக்கணும். கீதாகூட படுத்து லைட் போடும்போது அவளுக்குத் தூங்க முடியல. அவ கைகால மேலத் தூக்கிப் போட்றா. அம்மாகூட இருந்த கௌதம் அடிக்கடி பால் கேட்டு நைட்ல எந்திரிக்கிறான். தூக்கம் கெடுது. படிக்கவும் முடியல."

"சரி என்ன பண்ணனும்? என்னோட ரூம் வேணுமா?"

"வேணாம் உங்க ரூம் எனக்குச் சரி வராது. அண்ணி ரூம் தான் வேணும்."

லாவண்யா புரியாமல் ஒருமுறை திரும்பிப் பார்த்தாள்.

அரவிந்தன் சங்கடமாக நெளிந்தான்.

"அதை நீ அந்தப் பொண்ணுக்கிட்டயே கேட்டுக்கோ." மெலிதாக முனகினான்.

"அவங்க ரூம் தரேன்னு சொல்லிட்டாங்க. ஆனா அவங்க எங்க இருப்பாங்க? அம்மாகிட்டக் கேட்கவே வேணாம். கீதா தரமாட்டேன்னுட்டா. அவங்க என்ன ஹால்ல இருக்கறதா?"

மௌனமாக அவளையே பார்த்தான்.

"அவங்க உன்னோட ரூம்ல தங்கிக்கட்டுமே... மனச தான் ஷேர் பண்ண மாட்டீங்க. ரூமக்கூடவா?"

"பிரபா என்ன இது?" லாவண்யா பதறினாள்.



"நீங்க ஏன் பயப்படறீங்க? எங்கண்ணா சம்மதிச்சா உங்க ரூம்ல நான் இருந்துக்கிறேன். இல்லன்னா வேணாம். நான் படிச்சா என்ன படிக்காட்டி என்ன?"

"பிரபா."

"உஷ்." உதட்டில் கை வைத்தாள். அரவிந்தனைப் பார்த்துக் கொண்டே "போங்க... போயி உங்க புக்கை எல்லாம் எடுத்துக் கொண்டு ரூம் காலி பண்ணிக் கொடுங்க."

முதுகைப் பிடித்துத் தள்ளினாள்.

"அண்ணே. நாளைக்கு ஹாஸ்பிடல் போகணுமா?"

"பேச்ச மாத்துறியா?"

"இல்லையே கரெக்டாதான் சொன்னேன்."

"உன்னாலப் பெரிய தலைவலி பிரபா... நீ பண்றது எல்லாமே அதிகப் பிரசங்கித் தனமா இருக்கு. கொஞ்சம்கூட டீசன்டாவே இல்ல."

"எது டீசண்ட்? தாலி கட்டினவளை எதிரி மாதிரி பாக்கறதா? உங்களுக்கு தாங்க அம்மா, பையன் எல்லாம் உண்டு. ஆனா, அனாதையா ஆதரவு தேடி வந்தவளை... திரும்பவும் அனாதையாக்குறதா? பெண் பாவம் பொல்லாதது. அவங்க மனசு நொந்தாங்கன்னா நாம நல்லா இருக்க மாட்டோம்."

கலங்கினான் அரவிந்தன். பிரபாவின் கண்கள் லேசாகக் கலங்குவதையும் கவனிக்கத் தவறவில்லை.

"சரி இந்தப் பேச்ச இத்தோடு விடு."

அம்மாவும், கீதாவும், மௌனமாகவே எரிச்சலோடு இவர்கள் பேசுவதைப் பார்த்தார்கள். பின்பு இருவரும் விருட் என்று அவர்கள் ரூமிற்குள் சென்று அடைத்துக் கொண்டனர். லாவண்யா, அரவிந்தன் ரூமிற்குப் போவதைக் காண சகிக்க முடியாமல் ஏதாவது பேசி விடுவோமோ என்ற பயம்.





"பிரபா இப்ப எதுக்கு அழுவற?"

அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

"உன்னை நான் திட்டக்கூடாதா? இம் சொல்லும்மா... நீ சங்கடப்பட்டா என்னாலத் தாங்கிக்க முடியும்னு நெனைக்கிறியா? ப்ளீஸ் டோண்ட் க்ரை. ஆமாம், நீ என்ன கேட்ட ஹாஸ்பிடல் போகணும்னா? ஆபரேஷன் டேட் இன்னும் பிக்ஸ் பண்ணல. உன்னையும் நான் இழந்திட மாட்டேன்."

அவள் தலையைக் கோதினான்.

மெல்ல அவன் கைகளை எடுத்து விட்டவள், "சாகப் போகிறவகிட்ட இருந்த பரிவையும், பாசத்தையும் வாழ வந்தவகிட்டேயும் காட்டலாமே?"

தலையைப் பிடித்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் இருதலைக் கொள்ளி எறும்பைப் போல் துடித்தாள் லாவண்யா. இவ என்ன இப்படிப் பண்ணிட்டா. இதனால எம் மேல இருக்கிற வெறுப்பு அதிகமாயிட்டா... வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்தில் தாழி உடைஞ்ச கதையா மாறிடாதா?

அதே நேரம் ஹாலில் இருந்து சத்தம் கேட்கவும் வெளியே வந்து பார்த்தாள்.

"பிரபா, நீ பண்றது எதுவும் சரியில்ல." கீதாதான் கத்தினாள்.

"என்னடி சரியில்ல?"

"நான் ஹால்ல படுத்துக்கிறேன். என்னோட ரூமிற்கு நீ போ."

"தேவையில்ல."

"இதுக்கெல்லாம் அவதானே காரணம்."

"நாக்க அடக்கிப் பேசு. யாருகிட்டப் பேசறோம், யாரப்பத்திப் பேசறோம்னு தெரிஞ்சா பேசற?"



"ஏய் சும்மா நிறுத்துடி. நீ யாருன்னு தெரிஞ்சிதான் பேசறேன். முறையோட வந்தவளா இருந்தா நீ சொல்றது சரி, இன்னைக்கு உனக்கு பிடிச்சி இருந்தா கட்டிப் புடிச்சிக்கிட்டு கொஞ்சு. இவ்வளவு சீக்கிரம் அண்ணியை நீ எப்படித்தான் மறந்தேன்னு தெரியல. ச்சீ."

"சும்மா அலட்டிக்காதடி. உன்னைப் பத்தி உனக்குத் தெரியறதவிட உன்னப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். நல்லாவே நடிக்கிற."

"கொஞ்சம் இருடி..." என்று கீதாவின் ரூமிற்குள் நுழைந்து அதே வேகத்தில் ஒரு பச்சை நிற டைரியோட வெளியே வந்தாள்.

கீதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"இது என்னோட டைரி."

"தெரியும்."

"எங்கிட்டக் குடு."

"தரேன்."

"படிக்காமக் குடு."

"எடுத்ததே படிக்கத்தானே." பக்கங்களைப் புரட்டிக் கொண்டு வந்தவள், ஒரு பக்கத்தில் புரட்டுவதை நிறுத்தி கொஞ்சம் சத்தமாகவே படிக்க ஆரம்பித்தாள்.

"இன்று ஏனோ தெரியவில்லை. மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. உலகத்தைப் புரிந்து கொள்ளும் வயது எனக்கு இல்லையென்றாலும், விமலாண்ணி இடத்தில் இந்த அண்ணியை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அது மட்டுமில்லை. நான் சுயநலக்காரி. இப்பவே ஈகோ பார்க்க ஆரம்பிச்சிட்டேன். லாவண்யாண்ணிக்கிட்ட தினமும் பேசணும்னு நான் நினைக்கிறேன். ஆனா முடியல. அவங்களா வந்து பேச

னும்னு எதிர்பார்க்க ஆரம்பிச்சிட்டேன். பேசுவாங்களா? இதே எதிர்பார்ப்பு அவங்க கிட்டேயும் இருந்தால், நான் சின்னப் பெண்தானே இறங்கிப் போய் பேசிவிட்டால் என்ன?"

அதற்கு மேல் படிக்கவிடாமல் டைரியைப் பிடுங்கிக் கொண்டு திரும்பினாள் கீதா.

லாவண்யாவும் அவள் அறைவாயிலில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பதைப் பிரபா பார்த்தாள். வேகமாக அவள் அருகில் வந்து கைகளைப் பிடித்துக் கொண்டு,

"நீங்க எதுக்கும் பயப்படாதீங்கண்ணி... அவ டைரியில எழுதியிருந்ததைக் கேட்டீங்கல்ல. எல்லாருக்குமே உங்ககிட்ட பாசமிருக்கண்ணி. நடிக்கிறாங்க. இறங்கி வர ஈகோ தடுக்குது. நமக்கு அது வேண்டாண்ணி!"

"இல்ல பிரபா. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு."

"எதுக்கு பயம், திருடவா போறீங்க? உங்க உரிமையைத் தானே கேக்கறீங்க?"

"அதெல்லாம் சரி. ஆனா கொஞ்சம் யோசிச்சிப் பார்த்தா கொச்சையாப் படுது."

"நான் இருக்கேன். எதுக்கும் மனசப் போட்டுக் குழப்பிக்க வேண்டாம்."

அப்படியே பிரபாவை இழுத்து அணைத்துக் கொண்டாள் லாவண்யா. "உன்னோட தங்கச்சிக்குக்கூட எம்மேல இப்படி ஒரு பாசம் இருக்கும்னு நான் நினைக்கல. இங்க இருக்கறவங்க எல்லாருமே நல்லவங்கதான். ஆனா, காட்டிக்கிற தைரியம் இல்லங்கறதைவிட அடுத்தவங்க என்ன நினைப்பாங்களோங்கற பயம். சரி. இடத்தைக் காலி பண்ணுங்க."

"ஏன்?"

"அண்ணன் ரூமிற்கு."



"வேண்டாம்."

"மொரண்டு பிடிக்காதீங்க. சந்தோசமாப் போங்க. ஆல் த பெஸ்ட்." கன்னம் குழி விழ சிரித்தாள்.

லாவண்யாவிற்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தோழிகள் புடைசூழ சந்தோஷமாக கணவன் அறைக்குள் தள்ளப்பட வேண்டியவள். மூத்த நாத்தியின் மூலம் வலுக்கட்டாயமாக அத்தனை பேரின் வெறுப்பைச் சுமந்து கொண்டு தள்ளப்படும் நிலை. ஒரு பக்கம் வேதனையாகவும், மற்றொரு பக்கம் வேண்டும் போலவும் தோன்றியது. விமலாவை நினைக்கும்போது ஆத்திரம்கூட வந்தது. 'சண்டாளி, அவள் பண்ணிய காரியம்தான். ஏன்... அடுத்த நாளே பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விடுவது தானே... நீ ஏன் வரிந்து கட்டிக் கொண்டு இங்கே இருக்கிறாய்?' அவள் மனம் அவளுக்கே எதிராகக் குரல் கொடுத்தது.

10 நிமிடத்திற்கு ஓர் அடி என்ற ரீதியில் அரவிந்தனின் ரூமை நோக்கி நடந்தாள் லாவண்யா.

## 9

எங்கே எரிமலையாக வெடித்துச் சிதறப் போகிறதோ, அக்னிக் குழம்பாகக் கக்கப் போகிறதோ என்று பயந்தவளுக்கு, அரவிந்தனின் அமைதி அவன் மேல் மதிப்பை ஏற்படுத்தியது. ஒன்றும் பேசாமல் ஓர் ஓரமாகப் போர்வையை விரித்தாள்.

ஒன்பது மாதமாகப் போட்டிருந்த வாய்ப்பூட்டை 'எக்ஸ்க்யூஸ்மீ' என்ற சாவி கொண்டு திறந்தான் அரவிந்தன்.



"நீங்க ஒரு பி.ஜி. அஸிஸ்டெண்ட் சைக்காலஜி படிச்சிருப்பீங்க. சைக்காலஜி ஸ்டூடண்ட்சுக்கு மட்டும் இல்ல, ஆட்னரி லைட்க்கும் பொருந்தும். நான் பண்ணினது மன்னிக்க முடியாத தப்புதான். அதற்காக எந்தத் தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கிறேன். விமலாவோட பிடிவாதத்திலேயும் டாக்டரோட வற்புறுத்தலினாலும்தான் உங்க கழுத்துல தாலி கட்டிட்டேனே தவிர, மனசாலக்கூட உங்களத் தப்பா நினைச்சிப் பார்த்தது இல்ல. உப்பு சப்பில்லாத இந்த வாழ்க்கை உங்களுக்குத் தேவைதானா?"

அமைதியாக அவன் லெக்சருக்கு செவிமடுத்தாள்.

"நான் உப்பு சப்பில்லாத வாழப் போறேன்னு எனக்குத் தாலி கட்டும்போது உங்களுக்குத் தெரியாமப் போச்சா?"

"அப்ப இருந்த சூழ்நிலையில எனக்கு வேறு ஒன்றும் தோணல."

"இத ஆரம்பத்திலேயே நீங்க சொல்லியிருந்தாலாவது நான் ஒரு முடிவிற்கு வந்திருக்கலாம். இவ்வளவு நாள் யோசிச்சீங்களா? இங்க நான் வாழ்ந்துகிட்டு இருக்கேனா, வாழா வெட்டியா இருக்கேனான்னு வெளியில இருக்கிறவங்களுக்குத் தெரியாதே."

மௌனமாகத் தலை குனிந்து இருந்தான்.

"இன்னொருத்தனை நான் கல்யாணம் பண்ணினாலும் அரவிந்தோட முன்னாள் மனைவி. இப்ப இந்த ஆளு மனைவின்னுதானே உலகம் சொல்லும். நான் வாழ்ந்தாலும் செத்தாலும் என்னோட பெயருக்குப் பின்னால உங்க பேரை நிழல் போல சேத்துத்தானே ஆகணும்."

"அதுக்கு நான் என்ன பரிகாரம் பண்ணணும்?"

"விமலாவை மறந்திட்டு என்னோட பின்னாலதான் நீங்க அலையணும்னு நான் சொல்லலை. அதுல எனக்கே விருப்



பம் இல்ல. இந்த வீட்டுல ஒரு மூலையில நான் இருக்க இடம் கொடுங்க போதும். எந்த வகையிலும் உங்களுக்கு நான் தொந்தரவா இருக்க மாட்டேன். இந்த வீட்டை விட்டு வெளியே அவமானமான பார்வைகளைத் தாங்கிக் கொண்டு உயிர்வாழ மனத்திலும் தெம்பு இல்லை... உடம்பிலும் தெம்பு இல்லை."

தர்மசங்கடமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அரவிந்தன்.

"இந்த ரூமிற்கு வந்ததுகூட பிரபாவோட கட்டாயத்தில் தான். என்னைத் தப்பாக நினைக்க வேண்டாம். ஓர் ஓரத்துல நான் படுத்துக்கிறேன். இங்க இருந்து வெளியே போகச் சொல்லிடாதீங்க. இதுவரைக்கும் நான் பட்ட அவமானம் போதும்." அவள் கண்களில் கருகருவென கண்ணீர் சுரந்தது.

அரவிந்தனுக்கு லாவண்யாவைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், காலையில் அம்மாவின் முகத்திலும் கீதாவின் முகத்திலும் விழிக்க வேண்டுமே என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

"உங்ககூட வாழத்தான் எனக்குத் தகுதியில்லைன்னு போயிருச்சி. என்னிடம் பேசக்கூடாது என்று நினைக்கும் அளவுக்கு என்ன தப்பு செய்தேன்?"

"உங்ககிட்ட பேச எனக்கு யோக்கியதை இல்ல." குற்ற உணர்வுடன் கூறினான். லாவண்யாவால் பேச முடியவில்லை. குழல் போன்ற குரல் வளையில் இசைவாக வெளிவந்த குரல், திடீர் என்று முகாரிக்குத் தாவி முரண்டு பிடித்தது.

"உங்க மேல எனக்குக் கோபமில்லை லாவண்யா. என் மேலேயே எனக்குக் கோபம். உங்கள நான் வெறுக்கல. ஆனா மனைவியா ஏத்துக்கப் பக்குவம் இல்ல. பேசினா எங்க நான் விமலாவிற்குத் துரோகம் பண்ணிடுவேனோன்னு பயம்." கோணலான சிரிப்பை உதிர்த்தான்.

''இந்த சிக்கல் எல்லாத்துக்கும் காரணம் அவதான். உங்க கிட்ட எனக்கு ஒன்னே ஒன்னுதான் கேக்கணும்னு தோணுது.''

''சொல்லுங்க.''

''தயவு செய்து என்னை வாங்க போங்கன்னு கூப்பிடாதீங்க. என்னை ஒரு ப்ரண்டாவாவது ட்ரீட் பண்ணக் கூடாதா?''

''நட்புக்கும் காதலுக்கும் நூலிழைதானே வேறுபாடு? ஒரு பேச்சுக்காகத்தான் கேக்கிறேன். என்னை முழு மனசா நீங்க ஏத்துப்பீங்களா? இன்னொருத்தியோட குடித்தனம் நடத்தினவன் என்று தோணலையா?''

சிறிது நேரம் அவனை உற்றுப் பார்த்தாள்.

''நீங்க வேற ஒரு பெண்ணுக்குக் கணவனா இருந்திருந்தா ஒருவேளை நீங்க நினைத்தது போல, நான் நினைக்க வாய்ப்பு இருக்கு. ஆனா, விமலா விஷயத்துல என்னால அப்படி நினைக்க முடியல. சின்ன வயசிலேயே ட்ரஸ், டிபன், எக்ஸ்ட்ரா திங்க்ஸ் எல்லாத்தையுமே ரெண்டு பேரும் பங்கு போட்டுக்கிட்டவங்க. அதனால எனக்கு எதுவும் தோணல. கதையை எழுதி என் கையில கொடுத்து முடிவு எழுதுடின்னு போய்ட்டா. முடிவு சந்தோஷமா இருக்கணுமா? ட்ராஜடியா இருக்கணுமா என்பது உங்க விருப்பம்.''

அதற்குப் பின் அரவிந்தன் ஒன்றும் பேசவில்லை. என்ன பேசுவான். பேச முடியாமல்தான் லாவண்யா பேசிவிட்டாளே...

''கீழே படுத்துப் பழக்கம் இல்ல. இந்த பெட்டில் ஒரு ஓரமாக நான் படுத்துக் கொள்ளட்டா... தாராளமா இதில் நாலு பேர் கூடப் படுக்கலாம்'' தயங்கினாள்.

''ம்.'' தலையசைத்துவிட்டு ஓரமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

மறு ஓரத்தில் தன் உடம்பைச் சுருட்டிக் கொண்ட லாவண்யா பெட்டில் இடம் பிடித்தாயிற்று. விரைவில் மனதில் இடம்



பிடித்துவிட வேண்டும் என்ற கனவுகளோடு உறங்க சிரமப் பட்டுக் கொண்டிருந்தாள்.

அதே நேரம்...

ஹாலில் பெரிய சட்டசபை வாக்குவாதமே நடந்து கொண்டு இருந்தது.

''ஏ... பிரபா. உங்களுக்காக ஒவ்வொரு நிமிஷமும் வாழ்ந்த விமலாவை மறந்து போற அளவு அந்தச் சிறுக்கி என்னடி சொக்குப் பொடி போட்டா?''

''எந்தப் பொடி போட்டா உனக்கென்ன? வீடு வந்த பொண்ண வாழ வைக்கிற வழியப் பாரு. கலங்கடிக்காத. விமலாண்ணி உயிரோட இருக்கும்போது இவங்களுக்கு சப்போர்ட் பண்ணின மாதிரியில்ல பேசற... உன்னோட அருமை மருமகள் பண்ணிட்டுப் போன வேலதானே இது?''

''பிரபா.'' கமலத்தம்மாள் கத்தினாள்.

''சும்மா கத்தாதம்மா. பெண் பாவம் பொல்லாதது. நம்மால ஒரு பொண்ணு கண்ணு கசக்கக் கூடாது. புடிக்கல புடிக்கலன்னாளே உன்னோட சின்ன மகன். டைரியில எப்படிக் கொஞ்சி உருகியிருக்கான்னு பார்த்தல்ல. மனசுக்குள்ளேயே வச்சிக்காதீங்க. வெளியில கொஞ்சமாவது காட்டுங்க. இப்ப கௌதமை நீ தூக்கி வளர்ப்ப. உனக்குப் பின்னால லாவண்யா தான் அம்மா. நாளையில இருந்து கௌதமை அவங்ககிட்ட விடு.''

''விடலன்னா?''

''புடுங்கிக் குடுத்துடுவேன்.''

''பிரபா.''

''நடிக்காதம்மா. இத்தனை நாளா நடிச்சது போதும். கீதாவும் நானும் எத்தனை நாளைக்கு இங்க இருப்போம். உன்னை



யும் பார்த்துக்க ஒரு பொண்ணு வேணும். அந்த நல்ல மனசு இவங்ககிட்டேயும் இருக்கு'' சொல்லிவிட்டு கீதாவின் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டான்.

அழுது அழுது ஓய்ந்து இருக்க வேண்டும். கண்கள் சிவந்து கன்னங்கள் வீங்கி கொஞ்சம் உப்பலாகக் காணப்பட்டது.

கீதாவின் தோள் தொட்டுத் தூக்கினான்.

அவன் பிடிக்குள் வராமல் தளர்ந்து படுத்துக் கொண்டாள் கீதா.

''எம்மேலே கோபமா?''

''.........''

''சொல்லு கீதா. எம்மேல கோபமா?''

''.........''

''உன்னோட டைரியைப் படிக்கக் கூடாதுதான். உன்ன வெளிப்படுத்த எனக்கு வேறு வழி தெரியலடி. அவங்க பாவம் கீதா... இனிமேலயும் நீ அவங்கள நோகடிக்கக் கூடாது.''

''எங்கிட்டப் பேசுவாங்களா?'' காற்றுக்கு வலிக்குமோ என்று மெதுவாக முனகினாள்.

''அதுக்கு அவங்க காத்துக்கிட்டு இருக்காங்கடி. நீ பேசமாட்டியான்னு ஏங்கிகிட்டு இருக்காங்க. நீ மட்டும் போயி அண்ணீன்னா வாரியணைச்சிக்குவாங்க. இதுல என்ன கொடுமைன்னா எல்லாருமே ஒரே மாதிரி பாசத்த வச்சிக்கிட்டு இறங்கி வர மனமில்லாம நீயா நானான்னு மௌனமாவே போராட்டம் நடத்திகிட்டு இருந்தீங்க. பாசத்துக்கு மத்தியில் ஈகோ வந்தா இப்படித்தான்...''

''காலையில நான் பேசட்டா.'' ஆர்வமானாள்.



''அதைச் செய்டா.'' தங்கையின் உச்சியில் முத்தமிட்டு உற்சாகமாக வெளி வந்தான். நாளை விடியல் விபரீதமாக விடியப் போவதை உணராமல்.

## 10

**கா**லை 4.30

லாவண்யா கதவைத் திறந்து வெளியே வரும் நேரம். கீதாவும் சோம்பல் முறித்தபடி வெளியே ஹாலுக்கு வந்தாள். இவளைப் பார்த்ததும் வரவிருந்த கொட்டாவியைக்கூட வர விடாமல்,

''குட்மார்னிங்.'' என்றாள் கீதா.

லாவண்யாவிற்குத் தாங்க முடியாத அதிர்ச்சி. தூக்கம் சரியாகக் கலையவில்லையா? இன்னும் கனவுலகில்தான் இருக்கிறோமா? சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் விழித்தவளுக்கு இது நிஜம்... இது உண்மை... ஒவ்வொரு உறவாக உன்னை நோக்கி வர இருக்கிறது. நீ பாக்கியசாலி என்று புரிந்தது. சன்னமாகச் சிரித்து ''குட்மார்னிங்'' என்றாள்.

ஒரு நிமிஷம் சொல்லிவிட்டு கமலத்தம்மாள் அறைக்குள் நுழைந்து தூக்கக் கலக்கத்தோடு தலை துவண்டு விழ கௌதமை அள்ளிக் கொண்டு வந்தாள்.

''கௌதம்... டேய் கௌதம்... மம்மிக்கு விஷ் பண்ணு.''

லாவண்யாவிற்கு உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது.

கௌதமை அவள் கைகளில் திணித்துவிட்டு தூக்கத்தைத் தொடர அறைக்குள் போய் விட்டாள். அவள் தூங்க மாட்டாள் என்பது வேறு விஷயம்.

தூங்கி வழிந்து கொண்டு இருந்தான் கௌதம். கைகளில் அவனை ஏந்திக் கொண்டு அசையாமல் ஓர் இரவுக்குள் நடக்கும் அதிசயத்தை எண்ணிக்கூடப் பார்க்க முடியாமல், குழம்பிப் போய், அதிசயித்துப் போய், சிலிர்த்துப் போய், துவண்டு போய் இருந்தாள். இந்தக் கௌதம் குட்டியை இதுவரை தொட்டுக்கூட பார்த்ததில்லை. தவறி அவர்கள் யாரும் தொடக்கூட விட்டதில்லை என்பதுதான் உண்மை.

விமலாவின் ரத்தத்தில் ஊறி உதித்த பிஞ்சு. இதற்கு இனி நான்தான் அம்மா... கௌதமின் தலையைக் கோதி விட்டாள். அவன் முதுகை வருடி விட்டாள். கைகால் விரல்களைத் தொட்டுப் பார்த்தாள். பிஞ்சு விரல்களின் மென்மை புதிய உணர்வைக் கொடுத்தது. மார்பு கட்டி, விண் விண் என்று வலி தெறிக்க அலறிக் கொண்டிருக்கும் தாயின் மார்பில் வாய் வைத்து உறிஞ்சி, முட்டிக் குடிக்கும் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டு வலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவதை எப்படி அந்தத் தாய் அனுபவித்து மெய்மறப்பாளோ அந்தச் சுகத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக லாவண்யா, அந்த கௌதம் என்ற ரோஜாக் குவியலைச் சுமந்து கொண்டு நின்றாள். அவனைக் கீழே விட மனம் இல்லாமல் அப்படியே அவனை மார்பில் போட்டுக் கொண்டு சோபாவில் சரிந்தாள்.

பிரபா எழுந்தபோது, தலையணையில் திட்டுத் திட்டாக இரத்தம் உறைந்து போய் இருந்தது. மனதிற்குள் பயம் லேசாகக் கவ்வியது. எழுந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். மூக்கில் இருந்து காதுவரை ரத்தம் கோடு போட்டுக் காய்ந்து இருந்தது. காய்ந்து போயிருந்த ரத்தத் துகள்களைப் பேர்த்து எடுத்தபடி பாத்ரூம் நோக்கி ஓடினாள். முகத்தை நன்றாக வாஷ் பண்ணினாள். ஊசி வைத்துக் குத்துவது போல் நெஞ்சில் வலி சுருக்... சுருக் என்று எதிரொலித்தது. இடது பக்க மார்பில் கை வைத்து அழுத்திக் கொண்டாள். வாயின் வழியாக 'ப்ளக்' என ரத்தம் எட்டிப் பார்த்தது.



''த்தூ... த்தூ...'' துப்பிவிட்டு வாஷ்பேஷினில் கொஞ்சம் முகத்தைக் குனிந்து கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்தாள். பிறகு கழுவிக் கொண்டாள். நீ கழுவினால் நான் விட்டு விடுவேனா என்பது போல மதிப்பிற்குரிய ரத்தம் எட்டிப் பார்த்தது. கூடவே கோலிக் குண்டு அளவில் சிறிதும் பெரிதுமாக கருமை நிறம் அதிகம் கலந்த ரத்தம் உறைந்து போய் கடைவாய் வழியே வழிந்தது. எல்லாம் ஒன்றாக எம்பி வாந்தி வருவது போல் குமட்டியது. கண்கள் இருட்ட ஆரம்பித்தது.

கொஞ்சம் கொஞ்சமாக நினைவு குறைந்து அப்படியே மடங்கிக் கீழே விழுந்தாள்.

பேஸ்ட்டையும் பிரஷ்ஷையும் வாயில் வைத்துக் குதப்பிக் கொண்டு அந்தப் பக்கமாக வந்த அரவிந்தனின் இதயம் பிரேக் அடித்து நின்றது. பிரஷ்ஷை தூக்கி எறிந்து பிரபாவைத் தாங்கிப் பிடித்துத் தூக்கினான்.

''பிரபா, பிரபா... என்னடா ஆச்சி...''

தாடையைப் பிடித்து ஆட்டினான். தலை துவண்டு விழுந்தது.

''அம்மா!'' குரலெடுத்துக் கத்தினான்.

அந்தக் கத்தலில் வீடே அதிர்ந்தது. கீதா, கமலத்தம்மாள், லாவண்யா எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

லாவண்யா தன்னிடம் இருந்த கௌதமை கமலத்தம்மாளிடம் கொடுத்துவிட்டு பிரபாவின் தலையைப் பற்றினாள். என்ன நடக்கிறது என்று தெரியாமல் தூக்கம் கலைந்த கௌதம் அழ ஆரம்பித்தான்.

''பிரபா... பிரபா... இங்க பாரும்மா...'' அவன் கைகால்களை உள்ளங்கையால் அழுத்தித் தேய்த்துச் சூடேற்றினான்.



''பிரபா...''

''.....''

''பிரபா... பிரபாவிற்கு என்ன?''

''ஹார்ட் பேஷண்ட்.''

லாவண்யாவின் ரத்த நாளங்கள் எல்லாம் வெடித்துச் சிதறின.

''ஹார்ட் பேஷண்ட்டா...''

''ஆமா லாவண்யா... நாலு வருஷமாவே ஹார்ட்ல ஓட்டை. உடம்புல சக்தி இல்லாததினால ஆபரேஷன் பண்ண முடியல...''

''அண்ணா! முதல்ல ஹாஸ்பிடலுக்கு அவளக் கொண்டு போங்க'' கீதா வீறிட்டாள்.

வாழைக் குருத்தாகத் துவண்டிருந்தாள் பிரபா.

**ம**னோஜ்குமார் நர்ஸிங் ஹோம்.

பிரபா, இன்டன்சிவ் கேரியோ நெட்டில் அட்மிட் பண்ணப் பட்டாள். அந்த அறைக்கு முன்பு லாவண்யா, கௌதம், கீதா, கமலத்தம்மாள் எல்லோரும் அழுகையை அடக்க முடியாமல் திணறிக் கொண்டு படபடப்போடு அமர்ந்திருந்தனர். அரவிந்தன் ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் மனோஜ்குமாரின் எதிரே கவலையோடு அமர்ந்திருந்தான்.

''லுக் மிஸ்டர் அரவிந்த்... உங்க சிஸ்டர் எந்த நேரத்திலும் டென்ஷனாகக் கூடாது. அழக்கூடாது. அதிகமா எதப்பத்தியும் நினைக்கக் கூடாது. எந்த பீலிங்ஸூம் வராம பாத்துக்கணும்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?'' மனோஜ்குமார் வார்த்தையில் கடுமை தாண்டவமாடியது.

''இல்ல டாக்டர். அவளுக்கு எந்தக் குறையும் இல்ல.''

''இவ்வளவு டேஞ்சரான சமயத்துல கொண்டு வந்து இருக்கீங்க. நீங்க படிச்சவர்தானே... ஜாக்கிரதையா இருக்க வேண்டாமா?''



''டாக்டர்.''

''என்னால முடிஞ்ச அளவு ட்ரை பண்றேன். ரொம்ப மோசமான நிலை. எதுக்கும் கடவுளை ப்ரே பண்ணிக்குங்க. ஆபரேஷனுக்கு அரேஞ்ச் பண்ணியிருக்கேன்.''

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

''எஸ்... கமின்...''

வெள்ளைச் சீருடையில் சுத்தமாக ஒரு நர்ஸ் உள்ளே வந்து நின்றாள்.

''எஸ்...''

''மிஸ் பிரபாவிற்கு நினைவு திரும்பிக்கிட்டு இருக்கு.''

சடாரென எழுந்த மனோஜ்குமார், அரவிந்தனை லட்சியம் செய்யாமல் கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியேறி இன்டன்ஸிவ் கேரில் நுழைந்தான்.

மருத்துவ விஞ்ஞான சாதனங்கள் பிரபாவோடு போராடிக் கொண்டு இருந்தன. மெல்லக் கண்ணிமைகள் அசைந்தன. உதடுகளைப் பிரிக்க கஷ்டப்பட்டாள்.

மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

மனோஜ்குமாரின் உள்ளமும் அவரின் பின்னால் இருந்த நர்ஸ்களின் உருவமும் பிம்பமாகத் தெரிந்தன.

மனோஜ்குமார் மட்டும் கொஞ்சம் முன்னால் சென்று புன்முறுவலித்தான். ''தைரியமா இரும்மா. ஆபரேஷன் முடிஞ்சி ஒரு வாரத்தில் வீட்டுக்குப் போகலாம். ஓ.கே.''

''அண்ணாவைப் பார்க்க...'' கண்கள் கெஞ்சின. மனோஜ்குமார் ஒரு நர்ஸைப் பார்த்துக் கண் அசைத்தார்.

கதவைத் திறந்துகொண்டு வெளி வந்த நர்ஸ், ''மிஸ்டர் அரவிந்த் உள்ளே வாங்க...'' எல்லோருமே எதிர்பார்ப்போடு எழுந்தார்கள்.

''நீங்க எல்லாம் உட்காருங்க.'' அதட்டிவிட்டு அரவிந்த னோடு உள்ளே நுழைந்து கொண்டாள்.

லாவண்யாவிடம் இருந்த கௌதம் அவள் தாடையைச் சுரண்ட ஆரம்பித்தான்.

''அத்தைக்கு என்ன?''

''.........''

''அத்தைக்கு என்ன?''

''ஒண்ணுமில்லைப்பா.''

''அத்தையைப் பார்க்கணும்.''

''வந்திடுவா...''

அதே நேரம் இன்டென்சிவ் கேரியரின் உள்ளே...

கண்களில் கண்ணீர் பொங்கப் பொங்க அரவிந்தன் பிர பாவை பார்த்தபடி நின்றிருந்தான்.

பிரபாவின் கண்கள் மட்டும் இவன் நிற்கும் புறம் சுழன்று பார்த்தது.

''அ...ண்..ணா...''

''சொல்லுடா...''

''அ...ண்...''

''என்னம்மா?''

''அ...ண்...ணி..ய.. பா...த்..து...க்...'' திணறினாள்.

''சரிடா.''

''எ..ல்..லா...த்..தை...யு...ம்... நீ..தா...ன்... க...ன்... வி...ன்...ஸ்...''

''நான் பார்த்துக்கிறேன். நீ தைரியமா இரு'' விரக்தியாக ஒரு புன்னகை கோடாக விழுந்தது.



''இ..ல்...ல.. நா... விமலாண்ணிகிட்ட...''

''நோ... இல்லடா... உனக்கு ஒண்ணும் ஆகாது'' அழ விடமாட்டார்களா? என்பதுபோல் மனோஜ்குமாரைப் பார்த் தான் அரவிந்தன்.

அரவிந்தன் தோளில் ஆதரவாக கைபோட்டார் மனோஜ் குமார். சிறிது நேரம் இமைக்காமல் அண்ணனையே பார்த் தாள் பிரபா. அப்படியே அவனைப் பார்த்தபடியே விழிகள் நிலைகுத்தி நின்றது.

அவள் உயிர் உடல் விட்டுப் பிரிந்த சில விநாடிகளுக்குப் பின்புதான் விபரீதம் புரிய ஆரம்பித்தது.

அரவிந்தனை வெளியே அனுப்பும்படி நர்ஸைப் பார்த்துக் கண்ணசைத்தார் டாக்டர்.

ஜடமாக வெளியே வந்தவன், சுவர் பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டு கதற ஆரம்பித்தான். எல்லோருக்கும் வெடித்து வந்த அழுகை, கிலியை உண்டு பண்ணியது.

கௌதமைக் கீழே விட்டு அரவிந்தன் அருகில் வந்தாள் லாவண்யா.

''என்னாச்சி?'' அழ அவள் குரல் ஆயத்தமானது.

எதுவும் பேசாமல், பேச முடியாமல் குலுங்கிக் குலுங்கி கதறினாள். கமலத்தம்மாள் ஓடிவந்து, ''என்னய்யா ஆச்சி? எம்புள்ளைக்கி என்னாச்சி?'' வீறிட்டு அரவிந்தனின் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

''பிரபா... நம்ம விட்டுப் போயிட்டா...''

''ப்ரபா...'' லாவண்யாவின் அலறலில் ஹாஸ்பிடலே அதிர்ந்தது.

**கொ**ஞ்ச நாட்களில் அரவிந்தன் அந்த வீட்டில் இருக்கப் பிடிக்காமல் கேட்ட விலைக்கு விற்று விட்டான். கமலத்தம்





மாளுக்குப் பூஜையறையே உலகமாயிற்று. மருமகளையும், மகளையும் ஒன்றாக போட்டோவுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கீதாவிடம் முன்பிருந்த துள்ளல் கிடை யாது. கௌதம் இரண்டாவது படிக்கிறான். அரவிந்தனும் லாவண்யாவும் வலுக்கட்டாயமாக ட்ரான்ஸ்பர் வாங்கிக் கோவைக்கு எல்லோரும் போயாயிற்று. அந்த வீட்டில் இருக் கும் நான்கு குழந்தைக்கும் லாவண்யா ஒருத்தி தான் தாய். மீண்டும் அந்த வீட்டில் கலகலப்பு வரும் என்ற நம்பிக்கையில் பிரபா, தன் வயிற்றிலேயே பிறப்பாள் என்ற ஆசையில் வளைய வருகிறாள் லாவண்யா.

# மறக்கத்தான் நினைக்கிறேன்

## 1

''**வெ**ளிய போடீ... சொல்றேன்ல, போடீ...'' காட்டுக் கத்தல் கத்தினான் குணசீலன். ஜிவ்வென முகமெல்லாம் சிவந்து போயிருந்தது. கடவாய் வழியாக வழிந்த எச்சிலைக் கூடத் துடைக்கத் தோன்றாமல், திரும்பவும் அதே அதிரடிச் சத்தம்... ''வெளிய போடீ... போ...''

கொத்தாகக் காயத்ரியின் முடியைப் பற்றி இழுத்த போது... சுரீர் என்று வலி பாதம் வரை பரவி, அவள் உடலை ஒருமுறை தூக்கிப் போட்டது.

''உன்னால் என்னடி பண்ண முடியும்?'' திமிர் தாண்டவ மாடியது. ''என்னடி மொறைக்கிற? நீ பெத்த மூணையும் இழுத்துக்கிட்டு போறியா?'' அவன் கை இன்னும் கொஞ்சம்

அழுத்தமாகப் பற்றி இழுத்தது. அவள் முகத்துக்கு நேராக இவன் கடுகடுத்ததால்... அந்த சாராய நெடி குப்பென்று வயிற்றைப் புரட்டிப் போட்டது... தொண்டை வரை வந்த வாந்தியை முழுங்கலாமா? துப்பலாமா? என்று காயத்ரி முழி பிதுங்குவதற்குள்... கட்டுப்பாட்டையும் மீறி... ''வ்வாக்'' கடகடவென எடுக்க ஆரம்பித்தாள்.

''சீ... சனியனே!...'' வேகமாக உதறித் தள்ளினான்.

''அம்மா!'' சுவரில் நங்கென்று மோதி கீழே சரிந்தாள். அதுவரை பருந்துக்குப் பயந்து, கோழிக் குஞ்சாக ஒதுங்கியிருந்த மூன்று குழந்தைகளும் காயத்ரி பக்கம் கதறலோடு வந்தன.

''யாராவது பக்கத்துலே போனீங்க... கால வெட்டிடுவேன்...'' அடிபட்ட புலியின் கர்ஜனையாக வெலவெலத்து நின்றன.

பெரியவள் சுமதிக்குப் பத்து வயது இருக்கும்... அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். அடுத்தவள் கீதாவிற்கு ஒன்பது வயது... அவள் மட்டும் கண்களைக் கசக்கிக் கொண்டு 'ஓவென' அழ ஆரம்பித்தாள். சின்னவள் ஜனனிக்கு ஆறு வயது... அவளுக்கு மட்டும் எந்த அளவிற்கு அழுகை வந்ததோ... அதை விடப் பன்மடங்கு ஆத்திரம் குணசீலன் மேல் வந்தது. தாயைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தாள் காயத்ரி... இரண்டு நாட்களாகத் தொடர்ந்த சண்டையால்... சாப்பிடாமல் தன்னையே வருத்திக் கொண்டதன் பலனாக... கண்ணின் அடியே கருவளையம் படர்ந்து 'பளிச்' என்று தெரிந்தது. அவள் நல்ல நிறம் என்பதால், அவன் கைபட்ட இடம் எல்லாம் கன்னிப் போய் ரத்தம் கட்டியிருந்தது. உதடு பிளவுபட்டு... இரத்தம் கருப்பாய் உறைந்து.... வீக்கமெடுத்து இருந்தது.... கண்ணீர்... உமிழ்நீர்... கசிந்து கொண்டிருந்த



இரத்தம் எல்லாம் ஒன்றாகக் கலந்து... அவள் குடலை மேலும் குமட்டியது.... சுவரைப் பிடித்துக் கொண்டு இரண்டு முறை தடுமாறிக் கலைந்து கிடந்த தலைமுடியை ஒரு கையால் கஷ்டப்பட்டு ஒதுக்கிக் கொண்டு பலகீனமாக எழுந்து நின்றாள்...

''இப்ப எனக்கு அறுபது ரூபாய் வேணும்...''

''எதுக்கு?'' குரல் பிசிறு தட்டியது.

''ஏன்? மகாராணிக்குச் சொல்லணுமோ? குடிக்கத் தாண்டி கேக்றேன்... குடுடி...''

''எங்கிட்ட பணம் இல்ல...''

''இருக்காதுடி... எப்படி இருக்கும்? எனக்கு குடுக்காம எவனுக்குடி குடுக்கப் போறே? வரேன்... நான் போயிட்டு திரும்ப வரேன்.... அதுக்குள்ள பணத்தை எடுத்து எனக்கு நீ குடுக்கல கொலை விழும்... உம்புள்ள எல்லாம் தெருவில நாதியில்லாம நிக்கும்... நல்லா யோசிச்சிக்கோ...''

கண்கள் திறக்கமுடியாத அளவிற்குப் போதை... தள்ளாடி... தள்ளாடி வாசலுக்கு வரும்போது... அதுவரை பக்கத்து வீடுகளில் இருந்து சுவாரஸ்யமாக ஒலியை மட்டும் வாங்கிக் கொண்டிருந்த தலைகள் எல்லாம் சரக்கென்று உள்ளே இழுத்துக் கொண்டன.

''எவனுக்காவது தில்லு இருக்கா? பாரு அவனவன் உள்ள இழுத்துகிட்டான். மோசமான பசங்க...'' வாயில் வந்ததை எல்லாம் வார்த்தையாகக் கொட்டிக் கொண்டு போனவனின் தலை மறைந்ததும்...

மூன்று பெண் குழந்தைகளும் காயத்ரிக்கு அருகில் வந்து நின்றன... சுமதியின் கையை ஆதரவாய்ப் பிடித்துக் கொண்டு நின்ற காயத்ரி...



''போங்கடா... போய் சாப்பிடுங்க...''

''எங்களுக்கு வேண்டாம்'' கீதாவின் குரல் உடைந்தது.

''என்னம்மா உங்கப்பாதான்... ஒவ்வொரு நாளும் என்னைக் கொல்றாருன்னா... நீங்களும் சாப்பிடாம ஏன் என்னோட உயிரை எடுக்குறீங்க... போங்க... போய் சாப்புடுங்க...''

''நீம்மா...'' ஜனனி அழ ஆரம்பிக்க...

''எனக்கு பசியில்ல... நீங்க போங்க'' வலுக்கட்டாயமாக அவர்களைத் தள்ளிவிட்டு ஒன்றுமே நடக்காதது போல்... எழுந்து... வீட்டை சுத்தம் பண்ண ஆயத்தமானாள்.

'இந்த அம்மா ஏன் இப்படி அடங்கிப் போறா? அப்பா எவ்வளவு அடிச்சாலும்... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறா...' இந்தக் கேள்வி தான் மூணு புள்ளைங்களோட மனசிலேயும் தோணும்... ஆனா யாரும் இதுவரைக்கும் கேட்டதில்லை... குணசீலனைப் பார்த்தாலே... ஏதோ ஓர் அருவருக்கக் கூடிய மிருகத்தைப் பார்ப்பது போல் ஓர் உணர்வு... சுமதியும்... ஜனனியும் அவங்க இரண்டு பேருக்கும் எவ்வளவு சண்டை நடந்தாலும் சரி... காயத்ரி எவ்வளவு அடிப்பட்டாலும் சரி... ஒதுங்கி நின்று... மனசு பொறும பொறும... பயத்தோட பாக்கறதுதான் வழக்கம். ஆனால் கீதா மட்டும் ஒதுங்கி நின்று பார்ப்பதே இல்லை. இரண்டு பேருக்கும் நடுவில் போய் விழுந்து... அடிபட்டு... 'வேணாம்பா... அம்மாவ அடிக்காதீங்க... அம்மா பாவம்பா... அம்மாவ அடிக்காதீங்க... வேணாம்பா...' ஈனக் குரலில் அவள் கதறினாலும் செவிடன் காதில் ஊதிய சங்குதான்.... காயத்ரியின் மேல் விழவேண்டிய பல அடிகள் கீதா மேலும் விழும்... ஆனாலும் சண்டை நடக்கும் ஒவ்வொரு முறையும் அவள் நடுவே போய் விழுந்து அடிபடத் தவறுவதில்லை. அது ஏனோ தெரியவில்லை. சுமதிக்கும் ஜனனிக்கும் போய்த் தடுக்கணும் என்ற உணர்வே தோன்றுவதில்லை. எப்பவும் இப்படித்தான்...



அப்பா அடிப்பார்... அம்மா அழுவா, என்று ஸ்ட்ராங்கா பதிஞ்சிபோயிடுச்சி... அவங்க ரெண்டு பேரும் புருஷன் பொண்டாட்டி... அப்படித்தான் சண்டை போடுவாங்க... என்னும் எண்ணம் தலைதூக்கி நின்றது. அதுவே எட்டி நின்றே வேடிக்கை பார்க்கச் செய்தது...

சுமதிதான் தட்டைப் போட்டு... சாப்பிட அழைத்தாள்.

''அம்மாவும் வரட்டும்...'' முனகினாள் கீதா...

''அம்மா ஒண்ணும் இப்போ வரமாட்டா... அப்பா சாப்டாத்தான் சாப்புடுவா...''

''ஆமாண்டி... ஜனனி சொல்றதுதான் சரி... அப்பா இனிமே எப்ப வருவாரோ... அதுவரைக்கும் நாம பட்டினி கிடக்கணுமா? வா கீதா... சாப்புடுடி...''

''எனக்கு வேண்டாம்... வேண்ணா நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க... எனக்கு அழுகை அழுகையா வருது...''

ஜனனிக்கு கீதாவைப் பார்க்க பாவமாக இருந்தது.

இரவு மணி ஒன்பது அடித்து ஓய்ந்தபோது...

கூடத்தில் பாய் விரித்து ஆளுக்கொரு தலையணையைக் கொடுத்து படுக்கச் சொன்னாள் காயத்ரி... படுத்த மூன்று பேருக்கும் பெட்ஷீட்டைப் போர்த்தி விட்டுத் திரும்பும்போது... முந்தானையைப் பிடித்து இழுத்தாள் ஜனனி...

''என்னடா?''

''தூக்கம் வரலமா...''

''கண்ணரெண்டையும் மூடிக்கோ... தூக்கம் தானா வரும்...''

''ம்கூம்... நீயும் பக்கத்துல வந்து படு...''

''அம்மாவுக்கு வேலை இருக்குடா...''

''என்ன வேல?''

"பரிச்ச பேப்பர எல்லாம் திருத்தணும்... அப்பா வந்தா சாப்பாடு வேற போடணும்ல..."

"வேண்டாம்மா... அவருக்கு சோறு போடாத..."

"அப்படில்லாம் சொல்லக் கூடாது... பேசாம தூங்கு..."

"நீ பக்கத்துல வந்து படு... அப்பத்தான் தூங்குவேன்."

எத்தனை முறை சொன்னாலும் ஜனனிக்கு ஏறாது என்பதால் வெளிக் கதவை தாழ் போட்டு விட்டு... அவளுக்கு அருகில் வந்து படுத்தாள் காயத்ரி...

ஜனனியின் நெஞ்சில் ஒரு கையும்.... தலையை கோதிக் கொண்டு ஒரு கையும் இருக்குமாறு... அவள் புறம் ஒருக்களித்துப் படுத்து... "தூங்குமா..."

"எனக்கு தூக்கமே வரமாட்டேங்குது... கண்ண மூடினா... அப்பா உன்ன அடிக்கறாப்லேயே இருக்கு... எனக்கு ரொம்ப பயமா இருக்கு... இப்படியே தினமும் அப்பா உன்ன அடிச்சா நீ செத்துத்தானே போய்டுவ"

கள்ளமில்லாமல் கேட்டவளை... "இல்லம்மா உங்களையெல்லாம் விட்டுட்டு நா எங்கடா போவேன். எப்படி சாவேன்? செத்தாலும் பேயால்ல சுத்துவேன்." கரை புரண்டு வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு மார்போடு இறுக அணைத்தாள்.

"வலிக்குதாம்மா?"

"இல்ல..."

"நீ பொய் சொல்ற... முள்ளு குத்துனதுக்கே எனக்கு காலெல்லாம் வீங்கிப் போய்டுச்சே... உனக்கு உதடு எல்லாம் ரத்தம். கன்னமெல்லாம் வீங்கியிருக்கு... உனக்கு மட்டும் எப்படி வலிக்காம இருக்கும்? பொய் தானே சொல்றே?"

மௌனத்தைத் தவிர மறுவார்த்தை தெரியாமல் மௌனமானாள்.



தலையை காயத்ரியின் நெஞ்சில் உரசிக் கொண்டே...

"ஏம்மா... இந்த அப்பால எங்க இருந்து புடிச்சிகிட்டு வந்த?"

"புடிச்சிகிட்டு வரல... கட்டிக் குடுத்துட்டாங்க..."

"போயும் போயும் இந்த அப்பாவா உனக்கு கெடச்சாரு... வேற நல்ல அப்பா கிடைக்கலையா? எனக்கு புடிக்கவேயில்லம்மா... வேற அப்பாவா... நல்ல அப்பாவா பாத்து வாங்கிக்கலாம்... இவரு வேணாம்மா. பாத்தாலே பயம்மா இருக்கு..."

"சீ கழுதை... அப்படி எல்லாம் சொல்லாத... ஆறு வயசில என்ன பேச்சு இதெல்லாம்... நம்ம அப்பா நல்லவருதான்... எல்லாந்தெரிஞ்ச பெரிய மனுஷி மாதிரி பேசாத..."

"ம்கூம். அப்பால சொன்னா மட்டும் உனக்கு கோவம் வருது... உன்ன சொன்னா மட்டும் அவருக்கு ஏன் கோபம் வல்ல?"

அந்த வார்த்தை சுருக்கென்று நெஞ்சுக்குள் வலியைத் தூண்டியது...

"நம்ம அப்பா கெட்டவருதானே?"

"ஒரு வகையில அப்படித்தான்..." அந்த சின்னக் குழந்தை தெரிஞ்சி கேட்குதோ தெரியாத கேட்குதோ... ஆனால் சிரத்தையாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் காயத்ரி...

"அம்மா, நாம எங்காச்சும் போயிடலாம்மா... இங்க இருக்க வேணாம்.... இந்த அப்பாவையும் பிடிக்கலை. இந்த வீட்டையும் புடிக்கல... அவுங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு... நாம ரெண்டு பேரும் போயிடலாமா?"

"ஏன்?"

"நேத்து நீ ஐம்பது காசு குடுத்து... முட்டாய் வாங்கிக்க சொன்னல்ல... அவங்க ரெண்டு பேரும் எனக்கு குடுக்காம தின்னுட்டாங்க... அதனால அவங்க ரெண்டு பேரும் இங்



கேயே கெடக்கட்டும்... நாம போயிடலாம்... போலாமா? சொல்லுமா... போலாமா?"

"போலாம்... கண்ண மூடித் தூங்கு..." ஜனனியின் முதுகைத் தடவிக் கொடுத்தபடி... ஊமையாக அழுதாள்... 'நெனச்ச நேரத்திற்கு கிளம்ப இது என்ன சினிமாவா? அதுக்கு கூட டைம் சிஸ்டம் உண்டு.... மூணும் பொண்ணா வச்சிகிட்டு... அடிதாங்காம நா போனாலும், அனுசரிச்சி நடக்கத் தெரியுதா, அதுவும் ஸ்கூல் வாத்தியாரம்மா வேற... அறுத்துகிட்டு எவனோட ஓடிட்டாளேன்னு இல்ல ஊர் பேசும்... இந்த சின்னப் புள்ள மனசில் எவ்வளவு வெறுப்பு? தினமும் அடியும் உதையுமா வாங்கிகிட்டு... வாழ்வதை விட பேசாம மூணையும் இழுத்துக்கிட்டு ஓடிடலாமா?... இல்ல... ஏதாவது மருந்த வாங்கி, ஆளுக்குக் கொஞ்சம் ஊத்திவிட்டு... ஒன்னாவே போயி சேர்ந்திடலாமா? எத்தனை முறை யோசித்தாலும்... தெளிவான பதிலே கிடைப்பதில்லை... வாழணும்னும் இருக்கு... தூக்கில தொங்கணும்னும் இருக்கு...

'இந்த ஆளுகிட்டே வாழ்ந்து என்ன சுகத்தைக் கண்டோம்... தினமும் முள்மேல நடக்கும் வேதனை... நெருப்பில் நடக்கும் சோதனை... இது எனக்குத் தேவையா? சூடாக கண்களில் கண்ணீர் கன்னங்களின் வழியே இறங்கியது. அது ஜனனியின் கையிலோ... கன்னத்திலோ... பட்டு விழித்துக் கொள்ளப் போகிறாள் என்று தோன்றியதும்... அவசரமாக கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஜனனியின் கைகள்... ஒவ்வொன்றாக மெல்ல மெல்ல இறுக்கம் தளர்ந்து... விடுபட்டு... மார்பில் இருந்து நழுவி... கீழே பாயில் விழுந்தது. நளினமாக அவளை ஒதுக்கி விட்டு... எழுந்து உட்கார்ந்தாள். மற்ற இருவரும் எப்போதோ தூங்கியிருந்தனர்.

கீதாவிடம் இருந்துமட்டும் உறக்கத்தையும் மீறி... தேம்பல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. தனக்குத் தானே அவள்



ஆயிரம் முறை கேட்டுப் பார்த்து விட்டாள்.... 'நீ படிச்சவ தானே? ஒரு ஸ்கூல் டீச்சர் தானே? புருசன் பண்றது தப்புன்னு நல்லாவே தெரியும். பின்ன ஏண்டி தட்டிக் கேட்க மாட்டேங்கற? பாரதியைப் பற்றியும்... ஜான்சியைப் பற்றியும் நீ வாய் கிழிய சொல்லிக் கொடுப்பது... ஏட்டிற்கும்... உன்னிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டும்தானா? சம்மட்டியால் அடிப்பது போல் தனக்குத்தானே எத்தனை முறை கேட்டாலும்... எப்படிக் கேட்டாலும்... தான் இப்படி அடங்கிக் கிடப்பது தவறென்று தோன்றினாலும்... அடங்கித்தான் கிடக்கின்றாள்.

நாள் முழுவதும்... நினைவெல்லாம் குழந்தைகளைப் பற்றியே இருப்பதால்... இவங்களை நல்லா படிக்க வைக்கணும்... நல்ல நிலைமைக்கு கொண்டு வரணும் என்பதையே தன் லட்சியமாகக் கொண்டு... உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள்.

குடலைப் புரட்டியது... வயிற்றை யாரோ இறுக்கிப் பிடிப்பது போல் இருக்கவும்... சாய்ந்தபடியே எழுந்து உட்கார்ந்தாள்...

அடிவயிற்றில் இருந்து... அதீத குமட்டல் நெஞ்சு வரை வந்து... வந்து... இறங்கியது. எடுக்கலாம் என்றாலும்... வயிற்றில் என்ன இருக்கின்றது என்றும் அவளுக்குத் தோன்றியது.

ஆனால் அடக்க முடியாத உந்துதல் ஏற்பட்டதும்... கொல்லைப் புறம் போய் தண்ணீர் தொட்டிக்கு அருகில் தலை கவிழ்த்தாள்.

பித்த வாந்தி போல் மஞ்சள்... மஞ்சளாக இருந்தது... பத்து நிமிடங்கள் அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தாள். நீண்ட பெருமூச்சை உள்ளிழுத்தபடியே வாய் கொப்பளித்து எழுந்த போது... தலைதானாக கீழே விழுவது போல் பிரமை. 'விர்' என்று சுற்றியது... கரண்டில் கை வைத்தது போல் அதிர்ந்தது. கால்கள் தரையில் பரவாமல்

தள்ளாடியது... கைகள் சக்தி இழந்தன. உறுதியான பிடிப்பில்லாமல் சுவரைப் பற்றி அப்படியே சாய்ந்து உட்கார்ந்தாள்.

பார்வை வாழை மரத்தின் பக்கமாகப் போய் விழுந்தது... அந்த செவ்வாழையின் கீழ் ஏற்கனவே மூன்று கன்று வந்திருந்தன. வாழை சீப்புகளுக்கு வழிவிட்டு... மட்டை உதிர்ந்த பூ ஒன்று தாரோடு தொங்கிக் கொண்டிருந்தது.... பெரிய கன்றுக்குப் பக்கத்தில் பூமியை முட்டிக் கொண்டு சிவப்பு நிறத்தில் முளை விட்டு, எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. நீல ஒளியும் பளிச்சென்று அதன் புடைப்பைப் பயமுறுத்தியது. காயத்ரிக்குள் பகீர் என்று பய உணர்வு சுழன்றது. இது அதுவாக இருக்குமோ? இந்தத் தடவை இருபத்து ஏழு நாள் தள்ளிப் போயிடுச்சே... இது அந்த வாந்தியா? ஐயோ கடவுளே! இன்னும் ஒன்னா? நாங்க நாலு பேரும் படும் அவஸ்தை போதாதா? அஞ்சாவதா ஒரு ஜீவன் வரப் போவுதா முருகா! இது அதுவா இருக்கக் கூடாதே... உடல் தளர்ந்த போது சுவர் முட்டுக் கொடுத்தது... மனம் தளர்ந்து... சின்ன மண் சுவர் கூட ஆதரவாக சாயக் கிடைக்காமல் அல்லாடியது.

## 2

"உள்ள வா தாயி, வா..." நடுங்கும் குரலுடன்... தும்பைப் பூ போன்ற வெளுத்த தலைமுடியும்... ஏகப்பட்ட சுருக்கங்களோடு முகமும்... பல்லில்லாத டொக்கு விழுந்த கன்னத்தோடும்... பச்சை பச்சையாக... சுருக்கமாக... கையில் நரம்பு தெரிய... ஆறு கஜபுடவை... சின்ன சின்ன கட்டம் போட்டது... கால்களை நீட்டி... தூணுக்கு முட்டுக் கொடுத்தபடியே... திரும்பவும் அழைத்தாள் பார்வதி பாட்டி... அவள் நடுநெற்றியில் கம்பீரமாக நாமம் போட்டது போல் பச்சை



குத்து... எப்போதாவது காயத்ரிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தால்... பார்வதி பாட்டிகிட்ட மட்டும் வந்து சொல்லி அழுவது கொஞ்ச நாளாகப் பழக்கமாகிவிட்டது.

"பக்கத்துல உட்காரு..." அருகில் இருந்த பலகை கட்டையைச் சுட்டிக் காட்டினாள்.

ஒரு காலை மடித்துப் போட்டு உட்கார்ந்தாள் காயத்ரி.

"நேத்து கூட உம்புருசன் உன்ன அடிச்சிட்டானாமே...?"

நிமிர்ந்து பார்த்து தலையை மட்டும் அசைத்தாள்.

"அவங் கையில கொள்ளிக் கட்டையை வைக்க... உருப்புடுவானா... நாசமாப் போவ..."

"அப்படி எல்லாம் சொல்லாத பாட்டி."

"நல்லா இருக்குடியம்மா... உத்நாயம்... தெனமும் துணிய வெளுக்குற மாதிரி வெளுக்குறானே..."

"அவரு சுபாவமே அப்படித் தானே..."

"இப்படியே காலம் பூரா நெனைச்சிக்கோ... பிஞ்சிலேயே பழுத்தவனாச்சே... இம்... இந்தக் காலத்திலேயே... இப்படி ஒன்னும் தெரியாம இருக்கியேம்மா... ஒன்னும் தெரியாதவளெல்லாம் இந்தக் காலத்துல எம்புட்டு ஆட்டு ஆட்டுறாளுக... படிச்ச புள்ள... பள்ளிக்கூட டீச்சரு... நீ கூடவா இப்படி இருக்கனும்..."

"தலைவிதி பாட்டி..."

பாட்டிக்கு சுர்ருன்னு கோபம் வந்தது... "ஆமாம் நீ இப்புடியே சொல்லிகிட்டு இரு... உன்ன அவன் அடிச்சே கொல்லப் போறான்..."

"அதான் தல எழுத்துன்னா அப்படியே நடக்கட்டும்... எனக்கு இப்ப ஒரு யோசனை சொல்லு..."

"சொல்லுமா..."



"தள்ளிப் போயிடுச்சி..." விட்டத்தை வெறித்துப் பார்த்தாள்.

பாட்டி புரியாமல் பார்ப்பது போல் அவளுக்குப் பட்டதும்... "உண்டாயிருக்கேனோன்னு பயம்மா இருக்கு..."

"டாக்டர்கிட்ட போனியா?"

"ம்கூம்... ஆனா... அதுதான்னு எனக்கு நல்லாத் தோணுது..."

"நா என்ன பண்ணனும்? உன்னோட வீட்டுக்காரனுக்கு தெரியுமா?"

"நா சொல்லலை... சொல்லத் தோணலை, கலச்சிடுறியா?"

"நானா?" ஜீவன் இழந்த வயதான கண்களில் திடீர் என்று அதிர்ச்சி பிரதிபலித்தது.

"ஆமா... நீதான் ஆரம்பத்தில் இதுக்கெல்லாம் மருந்து கொடுப்ப தானே?"

"உனக்கு யாரு சொன்னா?"

"யார் சொன்னா உனக்கென்னா? எனக்கு நீ மருந்து குடுப்பியா? குடுக்கமாட்டியா?"

"வேணாந் தாயி."

"உனக்கென்ன தெரியும். இன்னம் அதுவேற வந்து இங்க சின்னாபின்னப்படனுமா?"

"அது ஒரு பையனா இருந்தா?"

"ஆமா... அது ஒன்னுதான் கொறச்ச... இருக்கிற மூணையும், நல்லபடியா கர சேத்தா பத்தாதா?"

"ஏன் தாயி... இப்படி சலிப்பா பேசுற... எதுத்து வாழ்ந்து காட்டும்மா...அப்பதான் அந்த ஆம்பளைக்கு உறைக்கும். இது பையனா இருந்தா... கடைசி காலத்துல தண்ணி ஊத்துவான்ல..."



"போ பாட்டி... அப்பன மாதிரியே பிறந்திடுச்சினா?"

"இல்ல தாயி... உன்னோட நல்ல மனசுக்கு நல்லதுதான் நடக்கும்."

"வேண்டாம், கலைச்சிடுறேன்"

காயத்ரியை உற்றுப் பார்த்த பார்வதி பாட்டி... "நீ... நீ கலைக்கப் போறியா? உன்னால முடியாது... முன்னால சிரிச்சிட்டு... அதே வேகத்துல பின்னால உன்ன குத்தினாக் கூட... அவங்களுக்கும் ஏதாவது நல்லது செய்யனும்னு நினைக்கறவளாயிற்றே நீ... நீயா உன்னோட புள்ளைய அழிக்கப் போறங்கற? வேணாந் தாயி... உட்டுடு... அது வளரட்டும்..."

"ஏற்கெனவே மூணு பொம்பளப் புள்ளைங்க இருக்கு... எனக்கு ஆம்பள புள்ள வேணுங்கற ஆசை கொஞ்சம் கூட இல்ல... ஜனனிய கூட ஆம்பளப் புள்ளையா இருக்கும்னு... அவர் கட்டாயப் படுத்தினதாலதான் வச்சிகிட்டேன்... இது எனக்கு வேண்டாம்..."

"புடிவாதம் பிடிக்காத... ஆம்பளப் புள்ளன்னா... உன்னோட புருசனுக்கு புடிக்கும்ல... அது ஆம்பளப் புள்ளையா... நல்ல நேரத்தில பிறந்து... அவனோட அப்பன் மனச மாத்தலாமில்லையா?"

"ம்.." யோசிக்க ஆரம்பித்தாள்... எங்கோ மூலையில்... பயந்து போய் ஒடுங்கிக் கிடந்த நம்பிக்கை வேர்... லேசாக வேர் ஊன்ற ஆரம்பித்தன...

அன்று அதிசயமாக குணசீலன் குடிக்காமல் வந்தான். அவன் நடையில் நிதானம் இருந்தாலே ஒழிய, மற்ற நேரங்களில் அவனை யாரும் அண்டுவதில்லை... கல்யாணம் ஆவதற்கு முன்னால் மிலிட்ரியில் இருந்தவன்... என்பதை இத்தனை வருடம் குடித்தும் உடல் காட்டியது. நல்ல நிறம்... நல்ல உயரம்... நல்ல அழகு... நல்ல பர்ஸனாலிட்டி... அழகான

பெண்ணைக் கூட ஆபத்துன்னு சொல்ற இந்த உலகத்தில... அழகான ஆணை நினைத்துப் பார்த்தாலே ஆபத்து... அதுவும் நல்ல அழகாக இருந்து... ஒரு வேலையிலும் இருந்து... இரண்டு பெண்கள் திரும்பிப் பார்த்துவிட்டால் போதும்... அப்போ உருவாகும் திமிருக்கு அளவு என்பதே இல்லை... கல்யாண சந்தையில் ரேட் அதிகம். இந்த வகையறாக்களில் குணசீலன் நம்பர் ஒன் ஹீரோ... தன்னோட அழகிற்கு எல்லாரும் மண்டி போட்டுடுவா...' என்ற பலமான எண்ணம்... அதை உறுதிப்படுத்துவதைப் போல் பல தவறான பெண்களுடன் சகவாசம். ஏதோ சின்ன வயசில் அதிருஷ்டத்தில் மில்ட்ரிக்கு போய்விட்டானே தவிர... அதற்கு முன் காயத்ரியின் வீட்டில்தான் சில வருடங்கள் எடுபுடி வேலை செய்து கொண்டிருந்தான். ஒரு வகையில் தூரத்து சொந்தம்... அப்போ காயத்ரி வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு ஆபீஸர் புதியதாக குடித்தனம் வந்தார்...

போனா போகுது கவர்மெண்ட் உத்யோகஸ்தர் என்ற காரணத்தால்... அந்த வீட்டிற்கு எடுபுடி வேலை செய்யப் போக... அந்தம்மா... குணசீலனை தவறாகப் பயன்படுத்திக் கொண்டாள்... பிஞ்சிலேயே பழுக்க ஆரம்பித்தான். அன்று தப்பான வழிகளுக்கு விழுந்த அஸ்திவாரம்தான்... இன்று ஆலமரமா உருவெடுத்து... காயத்ரியை ஆட்டிப் படைக்குது... அவனோட குடும்பத்துப் பொண்ணுங்க... அவனுக்கு தெரிந்த வரை நல்ல பழக்கங்கள் உடையவரில்லை... அதனாலோ என்னமோ... எந்தப் பொம்பளையும்... புருசனுக்கு உண்மையா நடக்கறவ இல்ல... என்கிற அபிப்ராயம் பதிந்தது... காயத்ரி கறந்த பாலை விடத் தூய்மையானவளாக இருந்தாலும்... இன்னும் அவன் நம்பியதில்லை... ஸ்கூல்ல லேட்டாச்சின்னா... எவனோடடீ சுத்திட்டு வரன்னு கேக்கத் தவறுவதில்லை.

தான் செய்றது தப்புன்னு... அவனுக்கே தெரியும்... இருந்தாலும் அப்பிடித்தான் செய்வேங்கற பிடிவாதம். பொம்பள



திட்ட பணிஞ்சி போறதாங்கற ஈகோ... அவனோட குழந்தைகளே அவனை வெறுக்கும்படி ஆகிவிட்டது. அவனுக்கும் அந்த அக்கறை எல்லாம் கிடையாது. குடிக்க காயத்ரி பணம் குடுத்தா மட்டும் போதும்... இதுக்கும் இவன் ஒரு புகழ் வாய்ந்த கம்பெனியில் அக்கௌண்டெண்ட்.

அவன் முகத்தையே பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் காயத்ரி... எப்படிச் சொல்றது? அவன் குடிக்காமல் வந்திருப்பதே... அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தது...

''என்னங்க...''

''சொல்லு...'' முறைத்தான்...

''வந்து''

''வந்தாவது... போயாவது... சொல்லுடி...'' ஷர்ட்டைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிவிட்டு ஈஸி சேரில் சாய்ந்து... கைகளை முதுகுக்கு கொண்டு போய் தலைக்கு முட்டுக் கொடுத்தான்.

''நீ சொல்ல வந்ததை சொல்லங்காட்டியும்... இன்னொரு ஜென்மமே வந்திடும்... அதுக்குள்ள அந்த ஸ்டூலை இழுத்துப் போட்டு... ஆஷ்ட்ரேவை எடுத்து வை.''

ஸ்டூலை நகர்த்தி ஆஷ்ட்ரேவை எடுத்து வைத்தாள்.

''அந்த ஷர்ட்டில் சிகரெட் இருக்கான்னு பாரு.''

பார்த்துவிட்டு இல்லையென பதிலளித்தாள்...

காயத்ரியின் மேல் ஒரு வெறுப்பான பார்வையை வீசிவிட்டு...

''ஜனனி இங்க வா,'' அழைத்தான்.

ஹால் மூலையில், மடியில் சிலேட்டு பென்சிலோடு... உட்கார்ந்தபடி இவர்கள் இருவரையும் கவனித்தவள்... கூப்பிட்டதும்... சிலேட்டைக் கீழே வச்சிட்டு... ஈஸிசேருக்கு தலைப்புறமாக வந்து நின்றாள்.





''முன்னாலே வா...''

வெறுப்பை முகம் முழுவதும் அப்பிக் கொண்டு... கொஞ்சம் ரப்பாக காலைத் தேய்த்தபடி வந்து நின்றாள்...

கால் சட்டைப் பையில் இருந்து... அதிகமாக கசக்கப்பட்ட ஒரு பத்து ரூபாய் தாளை... அவளிடம் நீட்டி... ''தெருக் கோடியில் இருக்கிற பெட்டிக்கடைக்கு போய்... சிகரெட் பாக்கெட் வாங்கிகிட்டு வா...''

போமாட்டேன்னு சொல்ல முடியாது என்பதால்... வெடுக்கென்று வாங்கிக் கொண்டு... பெட்டிக் கடையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

'ச்சே... மோசமான அப்பா... என்னையே தெனந்தெனம் சிகரெட் வாங்கிகிட்டு வரச் சொல்றார்... ரொம்பவும் மோசம்... அம்மாதான் பாவம்... இந்த ஆள எங்கயாவது கொண்டு போய் வித்துப்புடணும்... அப்பாவ எந்த கடயில விக்கலாம்' என்ற மாஸ்டர் பிளான் பண்ணிகிட்டே... நடந்தாள்...

சிகரெட் பாக்கெட்டோடு திரும்பும் போது... குணசீலனின் காலடியில் சம்மணமிட்டு அமர்ந்திருந்தாள் காயத்ரி... பார்த்தால்... மிகப் பெரிய முதலாளி முன்... கடைநிலை வேலைக்காரன் கைகட்டி, வாய்பொத்தி நிற்பது போல் தோன்றும்...

இது அன்றாடம் நடக்கும் கூத்துதான்.

ஒன்றும் பேசாமல் சிகரெட் பாக்கெட்டை நீட்டி... சில்லரையையும் அதோடு வைத்தாள்.

''போய் தீப்பெட்டி கொண்டா...''

கொண்டு வந்து கொடுத்தாள்.

''போ... போய்ப் படி...''

''நீ ஒன்னும் சொல்லவேண்டாம்...'' மனசு புழுங்கியது... தலையைத் தன்னிச்சையாக ஆட்டி... இடத்தைக் காலி செய்தாள்...



காயத்ரியின் பக்கம் திரும்பியவன்... '''ம்' இப்ப சொல்லு... என்ன சொல்ல வந்த?''

''வந்து,'' தயங்கினாள்... அடிவிழுமோ என்ற பயம்...

''அதான் சம்மணம் போட்டு உட்கார்ந்து இருக்கியே... அப்புறம் என்ன வந்து... போயி...''

ஜனனிக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது... தப்பும், சரியும் பிரிச்சி பார்க்க தெரியாத வயசுதான். ஆனாலும் அப்பா... கொடுமைப்படுத்துறார்... அம்மா அடங்கிப் போறா... என்பது மட்டும் எள்ளளவும் சந்தேகம் இல்லாமல் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. 'ஏம்மா அடங்கிப்போற? எதுத்துக் கேளு... சண்ட போடு...' கீதாவும், சுமதியும்... சமையல் கட்டு கதவின் நிலைப்படியில் ஆளுக்கொரு பக்கமாக சாய்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கொஞ்ச நேர அமைதி... படுபயங்கரமான அச்சத்தையும் பீதியையும் உண்டு பண்ணியது...

சிகரெட் புகையை உள்ளிழுத்து வெளியே விட்டபடி...

''சொல்லுடி,'' கர்ச்சித்தான்.

''தள்ளிப் போயிடுச்சி,'' சத்தமில்லாமல் உச்சரித்தாள்.

ஆனால் குணசீலனுக்கோ துல்லியமாகக் கேட்கும் காது... ''தள்ளிப் போயிடுச்சா?'' குரலில் ஏகத்தாளம் தாண்டவமாடியது... ''பள்ளிக் கூடமா? வீடா? எது எங்க இருந்து நகர்ந்தது?'' 'ம்' அதட்டலாக உறுமிவிட்டு... ''கையைக் கட்டுடி...''

ஒன்றும் சொல்லத் தோன்றாமல்... மெல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் தத்தளித்து கைகளைக் கட்டிக் கொண்டாள்.

''இப்படித்தானே கட்ட சொல்லிட்டு... நீ பாடம் நடத்துவ?''

''இல்ல...''

''இல்லியா? பின்ன முட்டிப் போடச் சொல்லுவியா''

''இல்ல.''

''அதுவும் இல்லயா பின்ன எப்பிடித்தாண்டி பாடம் நடத்துவ?''

மௌனமாக வெறித்துப் பார்த்தாள்.

''ச்சேச்சே, நல்ல நாள்லேயே நான் சொல்றது உனக்குப் புரியாது. இப்படில்லாம் கேட்டா நீ எப்படி பதில் சொல்வ? சரி, சரி... என்னடி சொல்ல வந்த.''

''நா... உண்டாயிருக்கேன்.''

நிமிட நேர சலனம் அவனுக்குள் எழுந்தது.

''வேண்டான்னு தோணுது.''

''வேண்டாமா? யாரக் கேட்டு இந்த முடிவுக்கு வந்த?'' அவனுக்கும் இந்தக் குழந்தை தேவையில்லைதான். ஆனாலும் காயத்ரி சொல்லி அதுக்கு அவன் தலையாட்டிட்டா தன் கௌரவமே பாதித்துவிடும் என்றெண்ணி... ''இந்தக் குழந்தை எனக்கு வேணும். இதாவது உன் ஜாதியில பிறக்காம என்னோட ஜாதியில பிறக்கட்டுமே... எனக்கு வாரிசு வேண்டாமா?''

''ஆமாம். பெரிய ராஜ பரம்பரை. இருக்கறதையும் குடிச்சி, கண்ட கண்ட செலவெல்லாம் பண்ணிட்டு, இருக்கிற இந்த கொஞ்ச நிலத்துக்கு ஆம்பள புள்ள வேணுமா? அதுக்கு தான் மூணு இருக்கே? வித்து செலவு பண்ணினா ஒருத்திக்குக் கூடத் தேறாது.'' கட்டுக்கடங்காத கோபம் அவளை உள்ளுக்குள்ளேயே பொறும வைத்தது.

''வேண்டான்னு தோணுது.'' அவள் சொல்லி முடிக்கும் முன் அவள் இடது கையை இழுத்து மணிக்கட்டில் கனிந்து கொண்டிருந்த சிகரெட்டால் அழுத்தமாக நசுக்கினான்.



''அம்மா!'' பலமிழந்து முனகினாள்.

''நா சொல்றதுதான் இந்த வீட்டுல நடக்கணும். எதுத்துப் பேசினா, ஊசி குத்த இடம் இல்லாத அளவுக்கு சிகரெட்டாலேயே சூடு வச்சிடுவேன். ஜாக்ரத. இந்தக் குழந்த எனக்கு வேணும். அவ்வளவுதான்.''

கண்ணில் கல் விழுந்ததுபோல் கரகரவென கண்ணீர் சுழன்று அணையை உடைத்துக் கொண்டு இறங்கியது.

''தட்டெடுத்துப் போடு. வரேன்.'' சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

''எங்க...''

ஒரு வில்லன் பார்வை பார்த்து... ''எத்தனை முற சொல்லியிருக்கேன்... வெளிய போறப்ப எங்க போறன்னு கேக்காதடின்னு... இதான் லாஸ்ட். இன்னொரு நாள் கேட்ட... தூக்கிப் போட்டு மிதிச்சிடுவேன்.''

ஓடி வந்து காயத்ரியின் இடுப்பைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் கீதா. கீதாவின் தலையைக் கோதிக் கொண்டே, ''இப்ப எதுக்குடா கண்ணா அழற?''

''உ...ங்... கையில... எதுக்கு அப்பா சிகரெட்டாலேயே சூடு வச்சார்?''

''தினமும் நடக்கறதுதானேடா... அழாத... நான் இவ்வள வையும் தாங்கிட்டு இருக்கறதே... உங்களாலதானேம்மா... அழக் கூடாது. அங்க பாரு... சுமதியும், ஜனனியும் சமத்தா நின்னுகிட்ட இருக்காங்க.''

அதுங்க இரண்டும் உள்ளுக்குள்ளேயே இரத்தக் கண்ணீர் வடிப்பது... காயத்ரிக்கு தெரியாமல் இல்லை.

''உனக்கு வலிக்கிலயாம்மா?''

''மறந்துப் போச்சுடா.'' திரும்பவும் கண்ணீர் மடை திறந்தது



''அப்பாகிட்ட என்னம்மா சொன்ன?''

''உனக்கு தம்பி பொறக்கப் போறான்னு...''

''நிஜம்மாவா?''

''ம்...'' தலையசைத்தாள்.

''அவனும் அப்பா மாதிரித்தானே இருப்பான்?''

''ம்கூம்...''

''இல்லம்மா... நீ பொய் சொல்ற...'' வீறிட்டு அவளை நோக்கி ஓடி வந்தாள் ஜனனி. ''உண்மையப் பேசு. பொய்யே பேசக்கூடாதுன்னு நீ சொல்லிக் கொடுத்துட்டு, நீயே பொய் பேசற. நேத்து ஆன்ட்டி வீட்டு டி.வி.ல கூட ஒரு ஆளு நம்ம அப்பா மாதிரியே குடிச்சிட்டு எல்லாத்தையும் அடிச்சான். மண்டல்லா ஒடஞ்சு ரத்தமெல்லாம் வந்தது தெரியுமா? எல்லா ஆம்பிளையும் அப்படித்தான்னு ஆன்ட்டி கூட சொன்னாங்க. வேண்டாம்மா, நமக்கு ஆம்பளப் புள்ளையே வேணாம். அவங்கள்லாம் கெட்டவங்க. எனக்கு அப்பாவும் வேண்டாம். தம்பியும் வேண்டாம்'' என்று கைகளைப் பிடித்து உலுக்கி எடுத்தாள்.

ஜனனியின் வயதிற்கு... அவள் பேசும் பேச்சு... அவள் மனப் போக்கு... அவள் முகத்தில் பிரதிபலிக்கும் உணர்ச்சி அலைகள் இவையெல்லாம் ஏதோ ஒரு விபரீத சிக்னலைக் கொடுத்தது.

''ஏண்டி, இப்படிப் பேசி கொஞ்ச நஞ்ச நிம்மதியையும் கெடுக்கறே? போங்க இங்கிருந்து... போய் ஹோம் ஒர்க் பண்ணுங்க...'' வலுக்கட்டாயமாக அவர்களைத் துரத்தினாள்.

''வெளிய போனவர் எந்த நேரத்திலும் திரும்பி வரலாம். சாப்பாடு எடுத்து வைக்கணுமே.'' தனக்குத் தானே சொல்லிக் கொண்டு திரும்பியவளைப் பார்த்த சுமதிக்கு...

இந்த அம்மாவிற்கு ரோசமே இல்லையா? கோபமே வராதா என்ற சந்தேகம் முதல் முறையாக எழுந்தது.



கூடவே நேற்றைக்கு முதல் நாள் லட்சுமி டீச்சர் கூப்பிட்டுப் பேசியது ஃப்ளாஷ்பேக் போல் மனக் கண் முன்னால் ஓடியது.

ஸ்டாஃப் ரூமில் யாருமே இல்லை. லட்சுமி டீச்சர் மட்டும் ஓர் சேரில் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு நோட்டைத் திருத்திக் கொண்டிருந்தார். சுமதி வந்து நிற்பதை இரண்டு நிமிட தாமதத்திற்குப் பின் கவனித்து... லேசான புன்முறுவலோடு உள்ளே வா என்பது போல் தலையசைத்தார்.

கைகளைக் கட்டிக் கொண்டு பணிவாக நின்றாள்.

''ரேங்க் ஷீட் குடுத்திட்டாங்களா?''

''குடுத்துட்டாங்க டீச்சர்''

''நீ என்ன ரேங்க்.''

''வெரி குட். நீ யூனியன் ஸ்கூல்ல வேலை பார்க்கற காயத்ரி டீச்சரோட பொண்ணு தானே?''

பெருமையாகத் தலையாட்டினாள்.

''உங்க அப்பா பேரு குணசீலன் தானே?''

எதுக்கு கேக்கறாங்கன்னு புரியாட்டியும், ''ஆமாம் டீச்சர்.'' தலையசைத்தாள்.

''நா சொல்றத போய் அப்படியே உங்கம்மா கிட்ட சொல்றியா?''

''ம்.''

''நா சொல்றது உனக்குப் புரியாது. இருந்தாலும் அத அப்படியே போய் சொல்லு. உங்கப்பா வேலை செய்யற கம்பெனியிலதான் என்னோட வீட்டுக்காரரும் வேலையில இருக்கார். அவர் உங்கப்பாவ பத்தி சொன்னத நினைக்கும் போது ரொம்ப மனக் கஷ்டமா இருக்கும்மா. கம்பெனிக்கு சரியான நேரத்தில வரதில்லை. அப்படி வந்தாலும் சுய நினைவோட வரதேயில்லை. ஒரு மிஸிட்சி மேன் இப்படி நடந்துக்கறது

ரொம்ப அசிங்கமா இருக்கு. அதுகூடப் பரவாயில்லை. உங்கம்மாவோட குணம் என்ன? படிப்பென்ன? பரம்பரை என்னன்னு எனக்கு ஓரளவு தெரியும்மா. அதனாலதான் தாங்க முடியாம உங்கிட்ட பேசக் கூடாததெல்லாம் பேசிகிட்டு இருக்கேன். கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலும் குரங்கு மாதிரி ஒரு சின்ன வீடு வேணும்பானாம். அது மாதிரி.'' நிறுத்திவிட்டு சுமதியின் முக மாற்றத்தை கவனித்தார்.

புரிந்தது போல் இருந்தது சுமதிக்கு.

''அடிக்கடி உங்கப்பா... ஒரு பொம்பள கூட வெளியில சுத்தறாராம்... அந்தப் பொம்பளகம்பெனிக்கு கூட வந்து உங்கப் பாவ கூட்டிகிட்டு போயிருக்காளாம்... அந்தப் பொம்பள ரொம்பவும் மோசமானவ... உங்கம்மாவ கொஞ்சம் ஜாக்ரதையாக இருக்கச் சொல்லு... உங்கப்பாவ கண்டிக்கச் சொல்லு...''

''என்ன டீச்சர் நான் போய் சொல்லணும்?''

''உங்கப்பா சின்ன வீடு செட்டப் பண்ணிருக்காருன்னு.... உங்கம்மா கிட்ட போய்ச் சொல்லு...'' அப்படி அவர் சொல்லி முடித்ததும்...

வெக்கத்தாலும்... அவமானத்தாலும் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் சுமதி. '*ச்சீ...* இந்த ஆளெல்லாம் நமக்கு அப்பாவா...? இந்த டீச்சரை இனிமே எப்படி நேருக்கு நேரா பாக்றது...? அவமானமா இருக்குமே... எங்கப்பா கெட்டவருன்னு எல்லாருக்குமே தெரியுமா?''

ஜடமாக வெளியேறியவரை சுமதிக்கு ஞாபகம் வந்தது.

ஆனா இரண்டு நாள் பலத்த சண்டை... இவளை இந்த விசயத்தை சொல்லக் கூடத் தோன்றாமல் செய்துவிட்டது..

முதல்ல இத அம்மாகிட்டே சொல்லணும்... எப்படி இதை மறந்தேன்?



''ம்மா.''

''என்னம்மா.''

''லட்சுமி டீச்சர் உங்ககிட்டே... ஒன்னு சொல்லச் சொன்னாங்க.''

''என்ன?''

''நம்ம அப்பா வைப்பாட்டி வைச்சிருக்காராம்.''

''இதானா? இது எனக்கு முன்னாலேயே தெரியுமே...'' சாதாரணமாக சொல்லிவிட்டு நகர்ந்தாள் காயத்ரி.

## 3

பொட்டைப் பார்த்து சுத்தியால் வேகமாகத் தட்டியதைப் போல்... உள்ளுக்குள் அதிர்வு ஏற்பட்டு... தாயையே வெறித்துப் பார்த்தாள் சுமதி. '*ச்ச...* இந்த அம்மா... பொம்பளையே இல்ல...

'சூடு... சொரணை என்பதே... கொஞ்சம் கூடக் கிடையாது... இப்படி ஒரு பொறுமையா?... கடவுளே... அப்பா மேல தப்போ இல்ல... எதற்கும் தலையை ஆட்டிக்கிட்டு... சரி... சரின்னு செஞ்சா... அவரு ஏன் தலையில ஏறி உட்காரமாட்டார்... இதுகூட ஏன் இந்த அம்மாவுக்குப் புரிய மாட்டேங்குது... நாளைக்கு அந்த டீச்சர் மூஞ்சில எப்படி முழிப்பேன்? எங்க அப்பா கெட்டவருன்னு இவங்களுக்கு எல்லாம் தெரிஞ்சி போச்சே... இந்த டீச்சர் எல்லா டீச்சர்கிட்டேயும் சொல்லிட்டா எல்லாருமே எங்கிட்ட வந்து கேட்பாங்களே?... நா எப்படி பதில் சொல்லுவேன்? இந்த அம்மா சரியா இருந்தா?... இந்தப் பேச்செல்லாம் நமக்கு வருமா?... எக்கேடோ கெட்டுப் போகட்டும்... எனக்கென்ன?...' கடுகடுப்பாக காயத்ரியை



ஏறிட்டுப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சுமதி...

அவள் போன வேகம்... ப்ரேக் ஃபெயிலியர் ஆன காரைப் போல் தறிகெட்டு ஓடியது... இந்த விஷயத்தைப் பற்றி இனிமே நாம பேசக் கூடாது... என்ற முடிவிற்கு தீர்மானமாக வந்தாள். ஆனால் அந்த வீட்டில் அதைத் தவிர பேச வேறு விஷயம் இல்லை என்பது வேறு விஷயம்...

தினமும்... அடி... உதை... குத்துதான்... பார்த்து பார்த்து... அழுத, புளித்து போன விஷயங்கள்... ஆனாலும் ஒவ்வொரு முறையும்... ஜனனியின் உள்ளம் விழித்து... உணர்வுகள் சூடேறி... மூளை செல்கள் எல்லாம் முறுக்கேறி... அடக்க முடியாமல் கண்கள் கலங்கி... கன்னங்களில் வழிந்து... வெள்ளை... வெள்ளையாக பாலம் போட்டதையும் மீறி... இந்த ஆள கொன்னுட்டா என்ன? என்ற விநோதமான நோக்கம்... ஜனனியின் மனதில் லேசாக படியத் துவங்கியது.

மெல்ல நாட்கள் உருண்டோடிய்து. வயிறு தெரியும் அளவிற்கு கரு வளர்ந்திருந்தது... சம்பிரதாயத்திற்காகவும்... பார்த்து விட்டுப் போகலாம் என்ற எண்ணத்திலும் குணசீலனின் தாய்.... கமலம் ஆறாவது மாதம் ஆரம்பிக்கும் போது வந்து சேர்ந்தாள்...

''ஏண்டி காயத்ரி... காலையில ஒரு தடவையும்... சாயந்தரம் ஒரு தடவையும்... ஒருத்தி வந்திட்டு போறாளே... என்னவாம்...''

''வீட்டு வேலைக்குத்தா...''

''உன்னால முடியலன்னா... ஒரு வயசானவளா பார்த்து வைக்க வேண்டியதுதானே? இவ என்னமோ தளுக்குற தளுக்கும்... குலுக்குற குலுக்கும் எனக்கென்னமோ... புளி கரைக்குது...''

வெளியே சிரித்துக் கொண்டே... ''நானா வேலைக்காரி கேட்டேன்... எல்லாம் உம் புள்ள ஏற்பாடுதான். வப்பாட்டி



யோட பொண்ண வாரிசா கூட்டி வந்திருக்கார்.'' மனசு மட்டும் குன்னிப் போனது...

''என்ன பேசமாட்டேங்கறே? அவ வாது எனக்கென்னமோ சரியா படல...'' நெட்டுரம் இழுத்தாள்... பற்றிக் கொண்டு வந்தது காயத்ரிக்கு.

''முதல்ல உன்னோட புலம்பல நிப்பாட்டு... எல்லாத்துக்குமே காரணம் நீதான்... உலகமே என்னான்னு தெரியாம இருப்ப. ஏதோ எட்டுப் படிப்ப மட்டும் படிச்சி... விழிச்சிகிட்டு இருந்தப்ப எம் மவன நீதான் கட்டிக்கணும்னு... என்னோட கால்ல நீ விழல... ஐய்யய்யோ பெரிய மனுஷி கால்ல விழுந்திட்டாளேன்னு... நா பதறிப் போய் வெலவெலத்து நிக்கல... என்ன இப்படிக் கெடுத்துட்டியே... நீ நல்லா இருப்பியா?...''

தன் தன்மானம் தாக்கப்பட்டதும்... சுர் என்று கோபம் உச்சிக்கு ஏறியது கமலத்திற்கு...

''ஆமாண்டி நான்தான் எம்மவனுக்கு கல்யாணம் ஆகணும்னு உங்கால்ல விழுந்தேன். உம் புத்தி எங்க போச்சி? அசிங்கம் திங்க போயிடுச்சா.... ஆளு அழகா இருக்கான்னு... பூம்பூம் மாடு கணக்கா தலையாடல...?''

''அப்ப எனக்கு உலகம் தெரியாது.''

''இப்பதான் தெரிஞ்சி போச்சே... என்ன பண்ணி கிழிச்ச?''

'சொடேர்' என்று எங்கோ காயத்ரிக்கு வலித்தது.

'ஆமாம்... நா என்ன பண்ணேன்? அந்த மேல காட்ன கோபத்த ஒரு நாளாவது நான் இவர்கிட்டே காட்டியிருக்கேனா... அத நான் செய்யலையே... ஏன் நான் கேக்கலின்னு எனக்கே தெரியலையே?...' மனம் புரண்டு... வலி கொடுத்தது. 'அவர் சொல்லுவதற்கு எல்லாம் தலையாட்டியே வாழ்ந்திட்டேனா... ஆமாம் வேறென்ன செஞ்ச?' மனசாட்சி குத்திக்

காட்டியது... 'எழுந்திரின்னா... எழுந்திரிக்கிறது... வான்னா... வரது.... போன்னா போறது. மண்டி போடுன்னா மண்டி போடுறது... கையைக் கட்டுன்னா கையைக் கட்றது... படுன்னா படுக்கறது... கட்டிப்புடின்னா புடிக்கிறது... இதத்தானே எந்திரமா செஞ்சிகிட்டு இருக்கே... குணசீலன்ற ரிங் மாஸ்டருக்கு... காயத்ரின்னு ஒரு அப்பாவிப் பூனை... ரிங் மாஸ்டர் எதச் சொன்னாலும் கேட்கும்...'

ஹாலில் நடக்கும் கொடுமையை விட... நாலு சுவருக்குள் அந்தரங்கமாக நடக்கும் கொடுமையை எண்ணினாலே... உடல் ஒரு முறை ஆடி அடங்கும்... இதெல்லாம் ஒரு வாழ்வான்னு? உடனே உடல் தளர்ச்சி, உள்ளத் தளர்ச்சி தோன்றும்... பெத்த மூன்றும் கண்ணுக்குள் தோன்றியதும்... ஊமையாக அலறுவதைவிட... வேறு வழி தெரியவில்லை...

ப்ரைன் வாஷ் பண்ணுவதில் குணசீலன் கில்லாடி.... அதுவும் திருமணமான புதிதில்... அப்படி ஒரு இனிமையான தமிழ்... பேச்சு... நுனிநாக்கில் புரளும் ஆங்கிலம்... இங்கிதத்தோடு இந்தியில் பேசும் பாங்கு... இதற்கும் மேலாக ஆண் அழகன்... இது போதாதா? காயத்ரியை வளைத்து போட... மகுடிக்கு மயங்கிய பாம்பின் கணக்காக அவனிடம் மயங்கிக் கிடந்தாள்... எந்த இடத்தில்... எந்த நேரத்தில்... எப்படித் தட்டினால்... என்ன தாளம் கிடைக்கும் என்ற தந்திரம் அறிந்தவன்... இவன் போதையில் அவள் மயங்கியிருக்கும் போது... இவன் தவறு செய்ய மாட்டான் என்று அவள் சத்தியம் செய்யும் அளவிற்கு துணிந்திருக்கும் போது... கொஞ்சம்... கொஞ்சமாக தன் விசப்பல்லால் தீண்டத்... தொடங்கினான்... நாகம் தன்னை அன்பினால் தீண்டுகின்றது என்று அந்தப் பைத்தியக்காரி நம்பினாள்... புரிய ஆரம்பித்தபோது... பலமுறை கொட்டி... உடல் எல்லாம் விசமான பின்னால்... தடுத்து என்ன பயன் என்று தண்ணீர் தெளித்து விட்டுவிட்டாள்... ஆனால் அது தண்ணி அடித்துக் கொண்டு... தடம் புரண்டு பார்க்கின்றது-



மீறிப் போனவனை... ஓடிப்போயா மறிக்க முடியும்... தான் என்ற அகந்தையோடு பேயலைச்சல் அலைபவனிடம்... அவள் பேசி என்ன பயன்?...

'இவள் ஏன்ய்யா விட்டா... மூக்கணாங்கயிற சரியா இருந்தா... மாடு தறிகெட்டு ஓடுமா... ஆட்ல சரியில்ல... அதான் ஊர் மேய ஆரம்பிச்சிட்டான்...' காதைப் பொத்தி சகித்துக் கொண்டாள்.. 'நான் என்ன என் புருசனை பொட்டுக் கட்டியா விட்டுவிட்டேன்... போறான்... போவட்டும்... எவ்வளவு தூரம் போகணுமோ... போகட்டும். போயி முட்டி மோதி திரும்பி வரட்டும். கையில விளக்கமாற எடுத்துக்குறேன்...' நினைவில் இருந்து விடுபடும் போது...

"என்னடி யோசிக்கிறே? எங்கிட்ட மோதினமாதிரி... அவங்கிட்டே மோதேன்"

"நீதான் அடங்காம வளத்து வச்சிருக்கியே... நான் என்ன பண்ணுவேன்."

"அடக்கத் தானேடி உன்னக் கட்டி வச்சேன்."

"நீ பெத்தது ரப்பர் இல்ல... முருங்க... வளைக்க முடியாது... வளைக்க நினைச்சி வளைச்சா ஒடிஞ்சி விழுந்திடும்..."

"விழுந்திட்டுப் போவுது ஒடி."

"மனசு வல்லியே..."

உடனே காயத்ரியின் கையை நீவி முத்தமிட்டாள் அந்த மாமியார்... "இங்க தாண்டி... இங்கதான்... நீ ஒசந்து நிக்கிற... யாருக்குமே இல்லாத மனசு உனக்கு இருக்கு... அதுல... அன்பு, கனிவு, பரிவத் தவிர வேற எதுவுமே பயிராவறது இல்ல... வேற ஒருத்திக்கிட்ட கொடுத்தா ஒடிச்சி போட்டுடுவான்னுதான்... உங்கிட்ட கொடுத்தேன்."

"அப்போ... அது ஒடியற முருங்கைன்னு தெரிஞ்சே தான் எங்கிட்டே கொடுத்தியா?"



"அது வந்து..." கிழவி தடுமாறியது.

"பள்ளத்துல விழ என்னப் போல பாவிங்க தயாரா இருக்கும் போது, குழி பறிக்க உனக்கென்ன வலிக்குதா?"

"வலி வந்ததினாலதான்... உங்கிட்ட கொடுத்தேன்."

"பேசினால் எப்படி வேணா பேசலாம்... என்னா பேசினாலும் எனக்கு விடிவேது?"

"அந்த வேலைக்காரி நடந்துக்கிற முறையே சரியில்ல.. உடனே நிப்பாட்டிடு... அவ ஒரு மாதிரி இவனப் பாத்து சிரிக்கிறா. இவனும் அவள ஒரு மாதிரியா பாத்து சிரிக்கிறான்... கையையும்... காலையும் ஆட்டி சைகையால பேசுதுங்க... அவன் வீட்டுக்கு வந்தாலே... இவ ஒரு மாதிரி ஆயிடுறா... எனக்கு என்னமோ ஒண்ணும் புடிக்கலை."

"உன்னோடா வாழ்க்கையிலேயே... இது ஒண்ணுதான் நல்லதா யோசிச்சிருக்கன்னு நினைக்கிறேன்."

"எனக்கென்னவோ தோனிச்சி. சொல்லிட்டேன். உம் புருஷன அடக்கறதும் அவுத்து விடறதும்... உன்னோட இஷ்டம்."

"அவுத்து விடுறதுக்கு இன்னும் என்ன இருக்கு?"

"இந்த விதண்டாவாதப் பேச்செல்லாம் வேண்டாம்... அந்த சிறுக்கி நேத்து என்ன பண்ணா தெரியுமா?... நீயும் பள்ளிக்கூடத்திற்கு போயிட்ட நா சாப்டறப்ப தயிர் வேணும்னு கேட்டேன்... இல்லன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி சொல்லிட்டா... சரின்னு நானும் வெறும் ரசத்திலேயே சாப்டுட்டேன். அப்புறம் அவ கொட்டிக்கறபோது மட்டும் எப்படி கட்டித் தயிரு வந்தது?"

"எனக்கு தலையெல்லாம் வெடிச்சிடும் போல இருக்கு... கொஞ்சம் கம்முன்னு இருக்கியா?..."

"ஆமாண்டி, உள்ளதச் சொன்னா... நொல்லனுக்கு நோப்பாளமாம்... எப்பிடியோ போ... உன்னோட புருசனப் பங்குடுக்க உனக்கு மனசு இருக்கலாம்... ஆனா எம்புள்ளய கண்டவ தொட்றது எனக்குப் பொறுக்கல..."



"பெரிய ராமனப் பெத்துட்ட மாதிரியில்ல அலட்ற..."

"ஆனா நீ சீதையா இருக்கியேடி..."

"ஏன் என்னையும்..."

காயத்ரி முடிக்கும் முன் [illegible] அவள் வாயில் கையை வைத்தாள் கிழவி. "[illegible] உனக்கேண்டி அந்த புத்தி வருது? கட்டுப் போட்டாலும் [illegible]"

"பின்ன என்ன? ஊருதான் [illegible] சொன்னா... நீயும் அதையே [illegible] எம்புருசனுக்கு பத்து பொம்பளையோட சகவாசம் இருக்குன்னு சொல்றது என்ன பெருமையா...? நானே [illegible] நாளும் செத்து செத்து பொழச்சிகிட்டு இருக்கேன்."

"நா நாளைக்கு ஊருக்குப் போறேன்."

ஏன் என்பது போலப் பார்த்தாள்.

"உங்கிட்டேயும் அவங்கிட்டேயும் மொத்துப்பட [illegible] ஆவாதும்மா... நா என் ஊருக்குப் போயி... [illegible] னேன்னு முனகிகிட்டு கால நீட்டுகிறேன்."

"அந்த கால இங்க நீட்ட முடியாதா?"

"நா போறேன்."

"போயேன், உன்னை கழுத்தப் புடிச்சிட்டா நிக்கறேன் எல்லாம் போய் ஒழிங்க."

"இந்த வக்கன பேச்ச புருசங்கிட்ட காட்ட வக்கில நவுரு" முகத்தில் மொத்திவிட்டு நகர்ந்தாள் கிழவி.

சொன்னபடியே அஞ்சறாள் [illegible] எல்லாம் கட்டிக் கொண்டாள். "[illegible] ஆண்டவன்தான் காப்பாத்தணும்" என்று [illegible] நடையைக் கட்டும் போது "அந்த சிறுக்கி [illegible] வாது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல [illegible] சொல்லிட்டேன் [illegible] அந்தப் பெரிசு, மவன் [illegible]

சொல்லக் கூடாதான்னு, நாலு பேரு எம்மூஞ்சிய பாத்து இடிக்கக் கூடாது பாரு. அதான் சொல்லிட்டேன்... வரேன் டியம்மா...''

அன்றிரவே சாப்பிடும் போது மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

''என்னங்க.''

''ம். கொஞ்சம் ரசம் ஊத்து.''

ரசத்தை ஊத்திக் கொண்டே, ''வேலக்காரிய நிப்பாட்டிட லாம்.''

நிமிர்ந்து பார்த்து வெறித்தான். அவன் மனம் முதல் நாள் சம்பவத்தை நினைக்க நழுவியது. என்னைக்குமே கம்பெனி யில் வேலை செய்வதில்லை. முன்னாள் மில்ட்ரி மேன் என்ற ஒரே ஒரு சலுகைக்காக அந்த நிர்வாகம் மேலும் கீழும் பார்த்தது. எல்லோரையும் வாடா... போடான்னு சகட்டு மேனிக்கும் சண்டை போட்டுக் கொண்டதால், யாரும் குணசீலன் விவ காரத்தில் தலையிடுவதில்லை.

லஞ்ச் அவர்.

விசிட்டர் ஹாலில் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்த போதுதான், ஜலஜா ஆட்டோவில் அவசர அவசரமாய் வந்து இறங்கினாள். தவறான நடத்தை உள்ளவள் என்பதை அவள் முகமே போஸ்டர் அடிச்சி ஒட்டியிருந்தது. அடர்ந்த சிகப்பில் லிப்ஸ்டிக். கன்னங்களில் ரோஸ் பவுடர். உடல் அசைவுகள் தெரியும் படியான மெல்லிய நைலான் சேரி. நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேல் இருக்கும். குணசீலனை விட வயதானவள் தான். நல்ல காதலுக்கே கண் இல்லை, கள்ளக் காதலுக்கா இருக்கப் போகிறது? ஜலஜாவைப் பார்த்ததும் சிகரெட்டை வீசிவிட்டு, அருகே ஓடிவந்தான்.

''வாம்மா ஜலஜா, எப்படி இருக்க? பாத்து ரொம்ப நாளாவுது.''



செயற்கையாக வெட்கப்பட்டாள் ஜலஜா. வெட்கப்படுபவள் அடங்கிக் கிடக்கின்றாள். வீதிக்கு வந்தவள் வெட்கப்படுகின் றாள், வேடிக்கைதான்.

''சொல்லு, என்ன விஷயம்?''

''எம் பொண்ணு நல்லா வேலை செய்றாளா?''

''அதுக்குத்தான் ஆட்டோ புடுச்சி வந்தியா?''

''அட சொல்லுய்யா, எப்டி செய்றா?''

''அவ வேல செய்றாளோ இல்லையோ, அவ என்ன சைட் அடிக்கிறா, நான் அவளை சைட் அடிக்கிறேன்.'' ஜோக் கனவே விற்றுவிட்டதால் பலமாகச் சிரித்தான். அந்த சிரிப் பில் அவளும் சேர்ந்து கொண்டாள்.

''ரூமெடுக்கலாமா?...'' கொழுப்பு அவனைப் பேச வைத்தது.

''அத இன்னொரு நாளைக்கு பாத்துக்கலாம். நான் சொல்றத முதல்ல கேளு.''

''சொல்லும்மா'' பவ்யமாக தலையாட்டினான்.

''எம் பொண்ணுக்கு உன்னப் புடிச்சி போச்சி. ரெண்டாந் தாரமா கட்டிக்கிறியா?'' நா கூசாமல் கேட்டாள். தனக்கு பழக்க மானவளை தன் பொண்ணுக்கே கேக்கற விவஸ்தை கெட்ட ஜென்மங்களும் இருக்கத்தானே செய்யுது?

குணசீலனின் வாய் தானாகப் பிளந்தது.

''சொல்லுய்யா...''

''கரும்பு தின்னக் கசக்குமா?...'' காயத்ரியை மறந்து... குழந் தைகளைப் பற்றி ஞாபகமே இல்லாமல், சந்தோஷமாகக் கூறினான்.

''அதுக்கு உம் பொண்டாட்டி சம்மதம் வேணுமே.''

''அவ கெடக்கறா கழுத. நா பாத்துகிறேன். பத்திரத்துல கையெழுத்து வாங்கணுமா?... சொல்லு, நாளைக்கே வாங்கித் தரேன்.''





''அப்பப்போ, நீ மொறடன்னு நிரூபிக்காதய்யா... நான் சொல்றபடி கேளு. ஆம்பளப்புள்ள வேணும். அதனால நான் ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கணும்னு கேளு....''

''அவ இப்போ முழுகாம இருக்காளே, பொறக்கறது ஆம்பிளைப் புள்ளையாக இருந்தா?''

''யோவ், அவசரக்குடுக்க. நான் சொல்றத கேளு. அவ கருவக் கலச்சிடு.''

''ஆறு மாசத்தில எப்படி முடியும்?'' ''ம்'' மோவாயைச் சொறிந்தவன், ''வயத்துல எட்டி உதச்சி கொன்னுடட்டுமா?'' ஈவு இரக்கம் இல்லாமல் கூறினான். இந்த உலகத்தில மனு ஷனை விட நஞ்சு நிறைந்த உருவம், ஜீவன் வேற எதுவும் இருக்க முடியாது என்பதற்கு உதாரணமானான் குணசீலன்.

''என் ராசா,'' விசிட்டர் ஹால் என்பதையும் மறந்து நெட்டி முறித்தாள் ஜலஜா. ''என்னுன்னா எண்ணெயாய் நிக்கிறியே, வரட்டா'' உடம்பு முழுவதையும் ஒரு ஆட்டு ஆட்டி விடை பெற்றுப் போனவரை நினைவுக்கு வந்தது.

இவளிடம் எப்படி வம்பிழுப்பது என்று பலமாகச் சிந்தித்த வனுக்கு, இவள் கேட்ட ஆலோசனை, கும்பிடப் போன தெய் வம் குறுக்கே வந்தது போல, வம்பிழுக்க வழியை அமைத்துக் கொடுத்தது.

வெறித்துப் பார்த்தவன், விருட்டென்று தட்டைத் தூக்கி அவள் முகத்தில் அடித்தான். காயத்திரியின் முகத்தில் மோதி கீழே உருண்ட தட்டு... உருண்டு கொண்டே போய், சுவர் ஓரமாக இரண்டு முறை சுற்றிக் கீழே விழுந்தது. தட்டு விழுந்த ஓசை கேட்க, அப்போது கூடத்தில் இருந்த ஜனனி ஓடி வந்து சமையல் ரூமை எட்டிப் பார்த்தாள். தட்டு விழுந்த ஓசை அடங்கி, நிசப்தம் ஆனது... ரசமும், சோறும் கலந்த பழுப்பு நிறக் கலவை... காயத்ரியின் முகத்தில் இருந்து வழிந்தது... தட்டின் முனை, இரண்டு புருவங்களுக்கு இடையே அழுத்த மாக தன் கைவரிசையைக் காட்டி இருந்ததால், நடுவே ரத்தக்



கசிவும் கலந்து வந்தது. ஒன்றும் பேசாமல், வழிந்த ரச சோற்றை துடைத்தாள் காயத்ரி. அலட்டிக் கொள்ளாமல், சாதாரணமாக நின்றான் குணசீலன். நெஞ்சு பொறுக்காமல் விம்மி... விம்மி இறங்கியது ஜனனிக்கு... கை நிலைப்படியை அழுத்தமாக... பற்றி... கனமாக அழுத்தியது... உணர்ச்சிக் கொந்தளிப்பு அடங்கவில்லை. உதடு மட்டும் துடித்தது... 'விடுடா எங்கம்மாவை... விடு எங்கம்மாவை...' ஓலமென்று கத்தணும் போல் தோன்றியது... இத்தனை உணர்வலைகளுக்கு நடுவே ஆரவாரம் கொடுக்காமல் அமைதியாய் நின்றது அந்தப் பிஞ்சு உள்ளம்.

''என்னக் கேக்காம முடிவெடுக்கிற அளவுக்கு நீ துணிஞ் சிட்டியா?''

''நா ஒன்னும் எதுத்துப் பேசலயே...''

''பேசுன, பல்லகில்ல உதுத்துடுவேன்...'' எகிறினான்.

''இந்த வேலக்காரிய நிப்பாட்டணும்...''

''என்ன சொன்ன?'' புஜத்தைப் பிடித்து இறுக்கி இழுத் தான்.... வலி பொறுக்க முடியாமல், கத்தவும் முடியாமல்... அவன் பக்கமே சாய்ந்தாள்.

''இங்க பாருடி, அவ இங்கதான் வேலை செய்வா? இன் னும் தெளிவா உன்னோட புத்தில உறைக்கிற மாதிரி சொல்ல ணும்னா... அவள நான் ரெண்டாந்தாரமா கல்யாணம் பண் ணிக்கப் போறேன். நீ சம்மதிக்கிறியான்னு கேட்கப் போறதில்லை... ஏன்னா அது எனக்குத் தேவையில்லை.'' மேலும் தெனா வெட்டாகக் கூறினான்... ''நான் கல்யாணம் பண்றதுக்கு ஒரு காரணம் வேணும். அதுக்காக இந்தக் கருவக் கலச்சிடு...''

வற்றிப் போய் இருந்த அந்தக் கண்ணுக்குள்... என்றுமே படாத சோகம்... திடீர் என்று சூழ்ந்து கொண்டது.

''மாட்டேன்'' தழுதழுத்தாள்.

''மாட்டே?'' அழுத்தமாகக் கேட்டான்.

"ஏண்டி கொஞ்சமாவது வெக்கம் இருக்கா?... ரெண்டு போதும்னு கவர்மெண்ட் காரன் காத அடச்சிகிட்டு கத்தறான். மூணும், பொம்பளயா பெத்துத் தள்ளிட்டு... இன்னொன்னா..." கேலி விளையாடியது.

'நீ தாண்டா காரணம்னு' எதுத்துக் கத்த முடியும்... ஆனா லும் கத்தாமல் நின்றாள்.

"இங்க பக்கத்துல வா..."

அவன் அருகில் போனாள்.

"நீயா கலைக்கிறியா?... இல்ல நானே அத செய்யட்டுமா..."

"வேண்டாம்..."

"என்ன, இந்தக் குழந்த தானே?"

"இல்ல..."

"பளார்" அவன் முஷ்டி பலம் முழுவதும் அவள் கன்னத்தில் இறங்கியது...

ஜனனிக்கு உடல் முழுவதும் சிலிர்த்து அடங்கியது.

அவள் அடிவயிற்றைப் பார்த்து ஓங்கி உதைத்தான்... "அம்ம்ம்...மா... ஆ...ஆ..." கத்தக் கூட திறன் இல்லாமல், அடிவயிற்றைக் குழந்தை போல் தாங்கிக் கொண்டு சுருண் டாள். இடுப்பில் எழுந்த வலி நாலாபக்கமும் பட்டுத் தெறித்தது. நெஞ்சக் கூடு துடிக்க மறந்தது.... தரையில் உருண்டு சுருண் டாள். சிறிது நேரத்தில் குப்பென்று வேர்த்து... வேர்வை ஆறா கப் பெருகியது... கண்ணுக்கு முன்னால் இருக்கும் பொருள் எல்லாம் அவளுக்கு ஜீபூம்பா காட்டியது.

"ஏன் இப்படி ஒவ்வொரு நாளும் சித்ரவதை பண்ண ணும்... பேசாம, கொன்னுட வேண்டியதுதானே..." வலி தாங்க முடியாமல் அரற்றினாள்.

"உன்னைக் கொல்ற பாவம் எனக்கேன்டி?"

'இப்ப மட்டும் புண்ணியமா பண்ணிகிட்டு இருக்க...' கேட் கத் துடித்தாள்.



யார் பண்ணிய புண்ணியமோ தெரியல... அது ஜனனி யோட பிரார்த்தனையாகக் கூட இருக்கலாம்... அடி உதைக்கு அசைந்து கொடுக்காமல், ஒரு குட்டி குணசீலன் உருவானான். அந்த நேரமோ என்னவோ தெரியவில்லை.. குணசீலனின் ஆட்டம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டம் காணத் தொடங்கியது.

4

"ஜனனீ..."

"ஜனனீ...

ஜனனீ..." காயத்ரியின் குரல் எதிரொலித்ததே தவிர... பதில் குரல் வரவில்லை. ஹால், கொல்லைப் பக்கம் எல்லாம் தேடிவிட்டு... திரும்ப வீட்டினுள் நுழையும் போது... இடது கோடியில் உள்ள பூஜை ரூமில்... குத்துக்காலிட்டு உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தாள் ஜனனி. அவளைப் பார்த்ததும்..

"என்னம்மா... நா பாட்டுக்கு கத்திகிட்டே இருக்கேன். நீ பாட்டுக்கு என்னமோ படிச்சிகிட்டு இருக்க...?"

அப்போதும் அவளிடம் இருந்து பதில் இல்லை. தீவிரமாக படிப்பதிலேயே இருந்தாள்.

"கேக்றன்ல..." தொட்டு உலுக்கினாள்.

நிமிர்ந்து பார்த்தாள்... "கத படிக்கிறேன்."

"கூப்டறது கூடத் தெரியாம அப்படி என்ன கத படிக்கிற?"

"கொலக் கத... துப்பறியும் கத..."

"இந்த வருஷம் நீ பத்தாவது தானே?"

"ஆமா."



"ஸ்டேட் ஃபஸ்ட் வாங்கற லட்சணமா இது?"

"இந்தக் கதைய நான் படிக்கிறதே, ஒரு பர்பஸுக்காகத் தான்."

"எதுக்கு..."

"நா அப்பாவக் கொல பண்ணப் போறேன்."

"என்னடி சொல்ற?"

"ஆமாம், நான் அப்பாவக் கொல பண்ணப் போறேன்... இந்த மாதிரி துப்பறியும் கதை படிச்சி... அதுபோலவே நான் செய்யப் போறேன்..." அவளின் தீவிரத்தைப் பார்த்து... காயத்ரிக்குப் பகீர் என்றது.

"என்னடா ஆச்சு உனக்கு..." தோள் மீது ஆதரவாகக் கையை வைத்தாள்.

"இந்த அப்பாவ எனக்கு சுத்தமா புடிக்கலம்மா... இந்த ஆளப் பாக்றப்பல்லாம் கொன்னுடனும்... கொன்னுடனும்னு தாம்மா தோணுது."

"வேண்டான்டா... இப்படி ஒரு எண்ணம் உம்மனசுல வரவே கூடாது. தம்பியெல்லாம் பாரு எவ்வளவு சமத்தா இருக்கான்..."

"அவனுக்கு என்ன? எனக்கில்ல வயிறெறியுது... உன்ன அந்தாளு அடிக்கிற போதெல்லாம் மனசு நொறுங்கிப் போகுதும்மா... அடக்க முடியாத அளவு கோபம் கோபமா வருது..."

"அவரு உன்னோட அப்பாடி..."

"ஆண்டவனாவே இருக்கட்டுமே... எனக்கென்னா... அப்பான்னா அன்பா இருக்கணும்... இந்தாளுக்கு கள்ளுக் கடையும்... கண்ட கண்ட கழுதைகளையும்தான் பழக்கம்."

"பொம்பள புள்ளைக்கு இவ்வளவு ஆங்காரம் வேணாம்."

"ஆமாம்... நீ இப்படியே போ... உன்னோட பொறு மைக்கு... உம்புருஷன் என்ன மதிப்பு கொடுத்திருக்கார்?"



காயத்ரிக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. சின்ன வயதில் இவள் பேசியபோதெல்லாம் ஏதோ சிறு பிள்ளைத்தனமா, விளையாட்டாச் சொல்றான்னு நினைச்சா... இன்னும் அப்படியேதான் இருக்கா.

"இங்க பாருடா... நீ பத்தாவது படிக்கிற... உன்னோட குறிக் கோளே நல்ல மார்க் ஸ்கோர் பண்றதுலதான் இருக்கனும்..."

"அட போம்மா... இந்த மாதிரி புத்தகத்தை இரண்டு வருசமா படிக்கிறேன்... இந்த ஆளப் ப்ளான் பண்ணி நான் கொல்லனும்... ஆனா எப்படித்தான் ப்ளான் பண்ணிக் கொலை பண்ணினாலும்... கடைசியில் வில்லன் மாட்டிக்கிறானே... அதான் பயமா இருக்கு..."

"ஜனனீ..."

"சும்மா அதட்டாதீங்க... இந்தாள கடுமணல்ல ஓட விட்டே சுடணும்... அப்பக்கூட என்னோட ஆத்திரம் தீராது. இப்படியே நீ பொறுமையா இரு. ஒரு நாளைக்கு பெரிய கல்லாத் தூக்கி உந்தலையிலப் போடத்தான் போறார்..."

"அதுக்குள்ள நீ பைத்தியகாரத்தனமா எதையாவது நெனச்சி என் தலையில கல்ல போட்டுடாதம்மா..." கைகூப்பி னாள் காயத்ரி...

"என்னம்மா இது?..." பதறிப் போய் தாயின் கைகளைப் பற்றி அவள் நெஞ்சில் தன் தலையை சாய்த்துக் கொண்டாள்.

ஜனனியின் கூந்தலை மெதுவாக வருடினாள் காயத்ரி. ஜனனியின் கண்ணீர், காயத்ரியின் சேலை, ஜாக்கெட்டை ஊடுருவி மார்பை நனைத்துச் சட்டபோது...

"அழறியாடா..."

"பின்ன என்னதாம்மா பண்ணச் சொல்ற? இந்த மாதிரி நீ பொறுமையா இருக்கறது எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கல... கொஞ்ச மாவது உணர்ச்சி உள்ள பொம்பளையா நடந்துக்கோ... எதுத்துப் பேசும்மா... அடிக்க வந்தா தடுத்துப் பாரு...

...ம்மா அவரு விஷயத்தில் மட்டும் ஜடமா இருக்க... இவரு எங்கடயான்னு சொல்லிக்கவே வெக்கமா இருக்கு தெரியுமா?...''

''ஆனா நான் வெக்கப்படலியே.''

''அதான் ஏங்கறேன்.''

''ஜனனி... உங்கிட்ட நான் நெறயப் பேசணும்...''

''எங்கிட்டேயா?''

''ஆமா.''

''அப்பால திட்டாதன்னு அட்வைஸ் பண்ணப் போறியா?...''

''இல்ல...''

''இல்லையா?'' அதிசயமாகப் பார்த்தாள்.

''ஒரு பொண்ணுகிட்ட ஒரு தாய் என்ன பேசணுமோ, அதத்தான் பேசணும்... எதச் சொல்லிக் கொடுக்கணுமோ அதத்தான் சொல்லிக் கொடுக்கணும்... யார் யார்கிட்ட என்ன பேசணும்... எப்படிப் பழகணும் என்று ஒரு வரைமுறை உண்டு. ஆனா உங்கிட்ட என்னப்பத்தி எல்லாமே சொல்றேன் கேளு. உன்ன என்னோட மகளா நினைச்சி சொல்லலை, ஒரு ப்ரெண்டா நினைச்சி சொல்றேன்.

''நம்ம தாத்தா பாட்டிய பத்தி உனக்கு ஓரளவுக்கு தெரியும்... வசதியான குடும்பத்தில பிறந்தவ நான்... ஏதோ படிச்சிட்டு டிகிரி வாங்கிட்டேனே தவிர அப்போ எல்லாம் நல்லது எது? கெட்டது எதுன்னு பிரிச்சி பாக்க எனக்கு தெரியாதும்மா... குடுத்தே பழக்கப்பட்ட கையிது... வாங்கிப் பழக்கமே இல்ல... என்னத்தேடி யாராவது வந்து, எதையாவது கேட்டா, எங்கிட்டே இல்லேன்னாக்கூட பக்கத்துல வாங்கியாவது குடுத்து பழக்கப்பட்டுப் போய்ட்டேன். என்னால யாருக்கும் எந்தக் கஷ்டமும் வரக்கூடாதுங்கறதுக்காக... ரொம்பவும் ஜாக்கிரதையாக இருந்தேன்... எனக்குன்னு எதையுமே நான் வச்சிகிட்டதில்ல...''

''அப்படியெல்லாம் இருந்ததினாலேதான்... நீதான் எம் மவளக் கட்டிக்கணும்னு உன்னோட பாட்டி என்னோட கால்ல



விழுந்ததுமே [illegible] ஒரு வருஷம் உங்கப்பா என்ன நல்லாத்தான் வச்சிருந்தாரு...''

''அதுக்கப்புறம் பைத்தியம் புடிச்சிருச்சா?''

''சொல்றதக் கேளுடா... எங்கிட்டே என்ன குறையக் கண்டாரோ...''

''இல்லம்மா... உங்கிட்ட எந்தக் குறையும் இல்ல... அந்தாளுதான் அந்தளவு [illegible]... உங்கிட்டே தன்னோட குறைய மறச்சி இருந்து இருக்கார்.''

''ஒவ்வொரு நாளும் எனக்கு நரவேதனைதான்... உங்கிட்டே சொல்லவே எனக்கு வெக்கமாயும் துக்கமாயும் இருக்கு... ஆனா நீ ஏதேனும் பைத்தியக்காரத்தனமா பண்ணிடுவியோன்னுதான் சொல்றேன்...'' என்றபடி... அந்தரங்கமாக நடந்த... நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளை அடுக்கினாள்.

''ஐயோ...'' காதைப் பொத்திக் கொண்டாள் ஜனனி.

''இவ்வளவு கொடுமையை நான் தாங்கிட்டு வெளியே இருக்கறபோது... உனக்கென்னடா... கொடுமை பண்ணிட்டா உனக்கேன்டா இந்த எண்ணம்?... இன்னும் சொல்லணும்னா... ஜனனிதான் அவரோட புள்ளன்னு வேற சொல்லிகிட்டு இருக்கார்.''

''வேண்டாம்மா... இந்தாளு புள்ளையா... எந்த ஜென்மத்திலும் நான் பிறக்கக் கூடாது. எங்க பொண்ணுங்கள அதிகமா படிக்க வச்சிட்டா... அதுக்கேத்த மாப்பிள்ளை தேடணும். அப்படி ஆபீஸரா பார்த்தா கால் நீட்டிப் போட்டுக்கிட்டு உட்கார்ந்துடுவான். நான்தான் வடிச்சி கொட்டணும்னு நினைச்சி... நல்லா படிக்கிற நம்ம அக்கா ரெண்டு பேரையும் எய்த் தோடவும்... டென்த்தோடவும் நிப்பாட்டி... [illegible]களுக்கு கட்டிக்கொடுத்து... மாமாங்க வந்தா... கொஞ்சம் கூட மரியாதைக் கொடுக்காம [illegible] வருதுன்னு... நக்கல் பண்ணும்போதே... இவரோட அல்பத்தனமான புத்தி உனக்குத் தெரியலை?''



''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்ற?''

''அடங்கிப் போகாத. ஆமாம் சாமி போடாத.''

''சரி, நீ போய்ப் படி.''

ஜனனி கரெக்டாக புத்தகத்தை எடுத்து வைக்கும் போது தான்... சர்... சர்... என்று இரண்டு போலீஸ் ஜீப் வாசலில் வந்து நின்றது... நின்று ஒரு செகண்ட் கூட ஆகியிருக்காது. வீட்டைச் சுற்றி திமுதிமுவென கூட்டமும் கூடியது... காயத்ரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஸ்டார் குத்திய தோளோடு இரண்டு காக்கிச் சட்டைக் காரர்கள் ஜீப்பில் இருந்து இறங்கி... புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க காயத்ரியை நோக்கி வந்தார்கள்.

''இது மிஸ்டர் குணசீலனோட வீடுதானேம்மா?''

''ஆமா ஸார்.''

''நீங்க?''

''அவரோட ஃவொய்ப்''

''ஐ.ஸீ....'' காயத்ரியின் பரிதாபமான முகத்தைப் பார்த்ததும் சொல்லலாமா? வேண்டாமா?... என்ற தயக்கத்தில் இருந்து மாறி... ''மனச கொஞ்சம் திடப்படுத்திக்கோம்மா...''

''ஐய்யய்யோ என்னாச்சி அவருக்கு...'' உள்ளம் பதை பதைத்தது.

அப்பா... செத்துப் போயிட்டாரோ?... ஜனனிக்கு இப்படித் தோன்றியபோதே... ஏதோ ஓர் இனம் அறியா சந்தோஷம் உள்ளுக்குள் பரவியது...

''மிஸ்டர் குணசீலனுக்கு கம்பெனி நிர்வாகம் அவரோட நடத்தை பிடிக்காமல்... சஸ்பெண்ட் பண்ணியிருக்கு... அந்தத் தகராறுல உங்க ஹஸ்பெண்ட்... மேனேஜரக் கத்தியால் குத்தியிருக்கார்.''

''கடவுளே!'' வீறிட்டாள் காயத்ரி.



காயத்ரியின் பக்கத்தில் வந்த ஜனனி, ''எந்தக் கடவுளுக்கு நீ அப்பாவுக்காக அப்ளிகேஷன் போட்டாலும்... சேங்ஷன் ஆகாம திரும்பி வந்திடும். உன்னோட கடவுள் போலீஸ் கஸ்டடியில இருக்கார். போய்ப் பாருங்க...'' அழுகையும்... ஆத்திரமும் கலந்து வந்தது... அதில் இனிமேல் அம்மாவோட சம்பளத்தில மட்டுமே எப்படிக் குடும்பம் நடத்துவது என்ற கவலையும் இருந்தது...

**நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலைகெட்ட**
**மனிதரை நினைந்துவிட்டால்**
**அஞ்சி அஞ்சி சாவார்**
**இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே...**

பாரதி எந்த அளவு பாதிக்கப்பட்டு இருந்திருப்பார் என்று அப்போது அவளுக்கு புரிய ஆரம்பித்தது. ''வீட்டைப் பார்த்துக்கோம்மா...'' படபடப்போடு சொல்லிவிட்டு வந்து நின்ற ஜீப்பிலேயே ஏறிக் கொண்டாள் காயத்ரி.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலும், கலங்காமல் கல்லு மாதிரி நின்று கொண்டிருந்தான்... கோபத்தில் கண்கள் சிவந்து, நாசி சிவந்து விடைத்துக் கொண்டிருந்தது.

அவனைப் பார்த்ததுமே... பேச முடியாமல் விம்மினாள்.

''என்னாங்க இது?''

''உன்ன யாருடி வரச் சொன்னது?'

''எப்படீங்க?... ஏன்?... உங்க கோபத்த எங்கிட்ட காட்னா பத்தாதா? கம்பெனியில காட்டணுமா?''

''அவன் ஏண்டி எனக்கு மெமோவும், டிஸ்மிஸ் ஆர்டரும் கொடுக்கணும்?... நானே வாலண்டரி ரிடையர்மெண்டிற்கு எழுதிக் கொடுத்திட்டேன்.''

பகீர் என்று பற்றிக் கொண்டது காயத்ரிக்கு. ''வாலண்டரி ரிடையர்மெண்டா?... கையெழுத்துப் போட்டு குடுத்துட்டீங்களா?''

"ஆமாண்டி... கொடுத்துட்டேன்... எவனுக்கும் பணிஞ்சி போகணும் என்ற அவசியம் எனக்கில்லை... அவனுக்கு கீழே வேல பாக்கணும் என்று எனக்கென்ன தலையெழுத்தா...?"

"முருகா! தலையெழுத்தே மாறிடுச்சே..." கம்பியில் மோதிக் கொண்டு கதறினாள்.

"நீ... போடி வெளிய... இங்க வந்தும் உன்னோட அழு மூஞ்சைக் காட்டணுமா?..." துரத்தினான்.

நெஞ்சுக்குள் சோகம் தாக்கவும்... துவண்டாள். 'இவர எப்படி வெளியில கொண்டு வரது?... கம்பெனி ஏதாவது பணம் கொடுத்தாலும்... இவர வெளியே கொண்டு வரவே பத்தாதே. என்னோட சம்பளத்தை வைத்துக் கொண்டு, படிக்கிற ரெண்டு பேரையும் கவனிச்சி இவருக்கு குடிக்க பைசா கொடுத்து... எப்படி சமாளிக்கப் போறேன்... அவனை வெளியே கொண்டு வர வேண்டுமே என்ற நினைவை விட இனிமேல் எப்படி சமாளிக்கப் போகிறோம்' என்ற நினைவே அவளுக்கு ஒவ்வொரு நரம்பையும் பிடித்து இழுத்து வலி கொடுத்தது.

பதறிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் போனவள், பலமிழந்து, அறிவிழந்து, சொல்லிழந்து... இனிமேல் என்ன செய்யப்போகிறோம் என்ற துக்கத்தில் துவண்டு வெளியே வந்தாள்.

காயத்ரி போலீஸ் ஸ்டேஷன் போனதுமே, தம்பி மனோஜ் குமாரைக் கூட்டிக் கொண்டு, வீட்டைப் பூட்டிவிட்டு, தபால் ஆபீஸிற்கு வந்து இரண்டு அக்காவிற்கும் தந்தி கொடுத்தாள். தந்தி கிடைத்த மறுநிமிடமே அடுத்த பஸ்ஸிலேயே சுமதியும், கீதாவும், அவங்க அவங்க வீட்டுக்காரர்களோடு வந்து சேர்ந்தார்கள். அந்த கைநாட்டு மருமகன்கள் இரண்டு பேரும் தான், இந்த ஆபீஸர் மாமனாரை வெளியே கொண்டு வந்தது. முதல் முதலாக குணசீலனின் ஈகோ தாக்கப்பட்டதும், கொஞ்சம் தளர்ந்தான். தன்டுவடத்தை வெட்டி எடுத்தது போல் அவமானம் தாங்காமல் துடித்தான். மாப்பிள்ளைகள்



வந்தாலே ஈஸி சேரில் அமர்ந்து கால் மேல் போட்டு அலட்சியப் படுத்துபவன்... வேறு வழியில்லாமல் அவர்கள் வந்தால் 'வாங்க' என்று கூறும் அளவிற்கு மாறியிருந்தான். அவன் குடித்த சாராயம், சிகரெட், கள்ளத் தொடர்பு எல்லாம் மெல்ல தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தன. அவனை வெளியே கொண்டு வருவதற்கே கையில் இருந்த பணம், கம்பெனி கொடுத்த பணம் எல்லாம் போட்டும் போதும் என்றாகி விட்டது. தினமும் முப்பது ரூபா குடிக்க அவனுக்கு வேணும்... தினமும் முப்பது ரூபாய்க்கு அவள் எங்கே போவாள்? மல்லுக்கு நிற்பான். தினமும் பாரத யுத்தம் தான். கடைசியில் தோற்று, அவனிடம் அடி, உதை பட்டு பணம் கொடுப்பது காயத்ரிக்கு புதிய வாடிக்கையாகி விட்டது.

கொடுக்கவில்லை என்றால், ஒவ்வொரு அசிங்கமான சொல்லும் அம்பாய்ப் பாயும். அவள் இதயத்தைக் கீறி ரணத்தை உண்டு பண்ணும்... அப்படியும் அவள் கொடுக்கவில்லை என்றால், உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துவிடுவான். இருபது வருடமாக ஏமாற்றிக் கைகண்டவன் ஆயிற்றே. சாப்பிடுங்க... சாப்பிடுங்க... உடம்பு என்னத்துக்கு ஆகிறது?... என்று கெஞ்சுவாள், கெஞ்சுவாள். அவனுக்கு உள்ளுக்குள் அகோரப் பசி ஆட்டி வைக்கும். இருந்தாலும் கெஞ்சட்டும் என்றே உட்கார்ந்திருப்பான். அவன் சாப்பிடவில்லையே என்பதற்காக இவளும் உட்கார்ந்து இருப்பாள். ஒருசில நாள் இரவு ஒருமணி கூட ஆகிவிடும். இதையெல்லாம் பார்க்கும் போது ஜனனிக்கு தலை சுக்குநூறாக வெடித்துச் சிதறும். திரும்ப அவள் மனதை ஒரு நிலைக்கு கொண்டு வருவதற்குள் சோர்ந்து போய் விடுவாள்.

"ஏம்மா இப்படி இருக்க... அந்தாளு சாப்டாட்டி என்ன? நீ சாப்பிடேன்."



"இருபது வருசமா, அவர உட்டுட்டு நா சாப்டதில்ல."

"பெரிய காவியத் தலைவன், தலைவி... இந்தாளுக்கு இப்படி பயந்து சாகுறே? சாப்பிடலனா உட்டுடு... எவ்வளவு நேரம் பட்டினியா இருப்பார். அவரவிட நீ குண்டாதானே இருக்க?... அவரவிட கூட இரண்டு வேளை உன்னால சாப்டாம இருக்க முடியும். அவரா வந்து உன்ன சோறு போடுடீன்னு கேட்காத வரைக்கும்... நீ ஏன் போய்க் கெஞ்சற... அவர விட்டுட்டு உனக்கு சாப்ட புடிக்கலன்னா... நீயும் ஒரு மூலையில உட்கார்ந்துட்டு பட்டினியா இரு... நா வேணாங்கல, ஆனா நீ தாழ்ந்து போகாதம்மா.... ப்ளீஸ்... நீங்க இப்படி இருக்கறது எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கல..."

ரொம்ப நாளைக்கு பிறகு... லேசாக உறைக்க ஆரம்பித்தது காயத்ரிக்கு. அவரோட அத்தனைத் தேவைக்கும் எங்கிட்டே தானே அவர் வரணும். நான் ஏன் நிமிர்ந்து நிக்கக் கூடாது. அதிசயமாக இந்த அடிபோட்டது.

குணசீலன் இப்போது வீட்டோடுதான் இருந்தான். நேரத்திற்கு நேரம் தவறாமல் குடிக்க மட்டும் பைசா கொடுத்திடணும்.

அந்த ஞாயிற்றுக்கிழமை, மனோஜை கூட்டிக் கொண்டு காயத்ரி தன்னோட வேல பாக்ற குணவதி டீச்சர் வீட்டு பங்ஷனுக்கு காலையிலேயே கிளம்பிப் போய் விட்டாள்.

ஜனனியும், குணசீலனும் தான் வீட்டில்... இருவரும் பார்வையால் கர்ஜித்துக் கொண்டனர். கடித்துக் கொண்டனர். சீறிக் கொண்டனர்.

ஒவ்வொரு வேலை செய்யும் போதும்... டம்டும்ன்னு சாமானைத் தூக்கிப் போட்டு வேகத்தைக் காட்டினாள்.

சாப்பிட ஜனனி கூப்பிடுவாள் என்று 8.30ல் இருந்தே எதிர் பார்த்தான். பசிக்குதுன்னா தானாக் கேட்கட்டும் என்று ஜனனி கண்டு கொள்ளாமலேயே இருந்தாள். அவன் முன்னாடியே தனக்கு போட்டு சாப்பிட்டு... மதியம் இரண்டு மணிக்கெல்



லாம், பாயை விரித்துப் போட்டு... இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள். மனசுக்குள்ள சின்னதா ஒரு சந்தோஷம். அடிபட்ட வேங்கையாக காத்திருந்தான் குணசீலன்.

காயத்ரி வந்ததுமே...

"இந்த புள்ள என்ன பண்ணிச்சி தெரியுமா?"

"என்ன பண்ணிச்சி..." சாவகாசமாக கேட்டாள்.

"இன்னும் எனக்கு சோறு போடல... சோறு போட்டான்னு ஒரு வார்த்த கூட கேட்கல..."

"அதனால என்ன பசிச்சா நீங்க கேட்க வேண்டியது தானே? உங்க பொண்ணு தானே? உங்க ரெண்டு பேருக்குள்ள அப்படி என்ன தன்மானப் பிரச்சினை?" முதன்முதலாக அவனிடம் எதிர்த்துப் பேசினாள்.

குணசீலன் ஒன்றும் பேசாமல் போய் அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் தட்டில் சாதம் போட்டுக் கொண்டு அவன் அருகில் வந்தாள்.

"சாப்பிடுங்க..."

அவன் கை கழுவிவிட்டு... தட்டில் கை வைக்கும் போது...

"என்னை என்ன பண்ணாலும்... சோறு போட்டு வைக்கப் போறவ நான்தான். என்னை விட்டா வேற நாதியில்ல..."

குணசேகரனுக்கு சோறு தொண்டையில் சிக்கி, புரையேறியது.

தட்டிவிட்டாள்.

வெடுக்கென்று அவள் கையைத் தட்டிவிட்டான்.

ஜனனி டென்த் முடிச்சி மார்க் சர்ட்டிபிகேட் வாங்கும் போதும் அம்மாவத்தான் கூப்பிட்டாள். குணசீலன் வேண்டாம் என்று அடம் பண்ண ஆரம்பித்ததும்...

குணசீலன் கத்த ஆரம்பித்தான்.

"எல்லாம் உன்னால வருது... நான் வீட்ல உட்கார்ந்துட்டேன்னு அசைக்கப் பாக்குறியா?... மாட்டேன்டீ... மாட்டேன்னு

எளைச்சாலும் கொம்பு எளைக்காது... எனக்கு எதிரா எல்லோரையும் உருவாக்கப் பாக்குறியா?''

''நான் எதுக்கு உருவாக்குறேன். அதுக்கே வெவரம் தெரியற வயசு, தப்புன்னு அதுங்களுக்கு தெரியுது, தட்டிக் கேட்குது... இதுக்கு நான் என்ன க்ளாஸா நடத்தணும்?''

''உன்ன...'' நறநறவென பற்களைக் கடித்துக் கொண்டு, கையை ஓங்கியவனை... உள்ளுக்குள் எங்கே தன்னையும் அடிச்சுடுவாரோன்னு பயம் இருந்தாலும்... வீம்பாக... தெனாவெட்டாக முறைத்துப் பார்த்தாள்.

''வரவர இந்த வீடு நரகமா இருக்கு...'' முனகிவிட்டு நகர்ந்தான்.

## 5

கீதா தலைப் பிரசவத்திற்காக வீட்டிற்கு வந்திருந்தாள். ஆனா குணசீலனுக்கு எந்தக் கவலையும் இல்லை. மிரட்டி காயத்ரியிடம் இருந்து பணத்தைக் கறக்க ஆரம்பித்தான்... அரிசி சோறைப் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டன... 'குழந்த பெத்த உடம்புக்காரிய வீட்டில் வச்சிக்கிட்டு... வெறும் கோதுமை தோசையை எப்படி நான் சுட்டுப் போடுவேன்... மருந்துக்கு கூட கையில பைசா இல்லையே' கலங்கித் தவித்தாள். கீதாவை சாப்பிடக் கூப்பிட வெட்கமாக இருந்தது. 'எப்படி வெறும் தோசைய நான் போடுறது...' தயக்கமாக அடுப்பைப் பற்ற வைக்கக் கூடத் தோன்றாமல்... மாவைக் கரைத்தபடியே சிலையாக உட்கார்ந்திருந்தாள். கூடத்தில் எழும் பேச்சு வார்த்தையும் காதில் விழுந்தது.

''இன்னும் எத்தனை நாள் இருக்கு ஜனனி?''



''பப்ளிக்காக்கா!''

''ம்.''

''இன்னும் பத்தே நாள்தான் இருக்கு.''

''நல்லா ப்ரிப்பேர் பண்ணியிருக்கியா?''

''என்னக்கா என்னைப் பாத்து அப்படிக் கேக்கற... காயத்ரி டீச்சர் பொண்ணாக்கும் நான்... எல்லாந் தரவ்... கண்டிப்பா மெரிட்டோட மெடிகல் காலேஜில எனக்கு சீட் கிடைக்கும்.''

திடீரென்று சுமதியின் முகத்தில் கருமை படர்ந்தது.

''என்னக்கா ஆச்சி.''

''ஸ்கூல்ல ஃபஸ்ட் வந்தும்... என்னால படிக்க முடியல பாத்தியா?.. இன்னைக்கு நான் நல்லாவே இருக்கேன். உங்கத் தான் என்ன உள்ளங்கையில வச்சி தாங்கறார்... என்னோட வீட்ல எல்லாமே நான்தான். ஆனாலும் உள்ளுக்குள்ள நம்மால படிக்க முடியலியேன்னு ஏக்கம் இருக்குடி. அம்மா உன்ன காலேஜிக்கு அனுப்பப் போறேன்னு சொல்லும் போது... எனக்கு உம்மேல பொறாமையாக்கூட இருக்கு... அதுக்காக உம்மேல எனக்குப் பாசம் இல்லன்னு அர்த்தம் இல்ல... நான் படிக்கலையேங்கற ஏக்கம்தான். என்னைப் பார்த்து காப்பி அடிச்சவளுங்க, பத்தும், இருபதும் மார்க் வாங்கினவங்க எல்லாம்... இன்னைக்கு வேலையில இருக்காங்க... அழகா ஒரு ஹேண்ட் பேக்கை மாட்டிகிட்டு 'ஹாய்'ன்னு' கையை ஆட்டிட்டு போறாங்க... அப்போ எல்லாம் வயிறு எரியுது ஜனனி.'' ஆற்றாமையை வெளிப்படுத்தினாள்.

இதுக்கெல்லாம் அப்பாதான் காரணம்னு தோனிய போதே குணசீலனின் போட்டோவை முறைத்தாள் ஜனனி.

''சரி வா... அம்மா மொதல்லியே மாவு கரைச்சிக்கிட்டு இருந்தாங்க.'' சுமதி மெதுவாக எழுந்து, ஜனனியின் தோளைப் பற்றிக் கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

''நீ ஏண்டா இங்கே வரே... நான் கூடத்தில் கொண்டு வந்து தரமாட்டேனா...'' அன்போடு கடிந்து கொண்டாள் காயத்ரி.





''பசிக்குதும்மா...'' ஒரு குழந்தைக்குத் தாயானாலும்... காயத்ரிக்கு சுமதி குழந்தைதானே... கொஞ்சினாள்.

''குழந்த?''

''இப்பத்தானேம்மா குளுப்பாட்டிப் போட்ட.... நல்லாத் தூங்கறான்.''

அடுப்பை சுற்றி ஜனனி, சுமதி, மனோஜ் மூன்று பேரும் ஆளுக்கு ஒரு தட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள். மனோஜிற்கும், ஜனனிக்கும் பசி...

''வெறும் தோசையை எப்படிம்மா சாப்பிடறது...'' தயங்கினாள். ''கொஞ்சம் பூண்டு வச்சோ, வெங்காயம் வச்சோ அரைச்சிருக்கலாம்ல'' எதார்த்தமாகக் கூறினாள். பின் ஒன்றும் பேசாமல், ''சூடா இருக்கும் போது இதுகூட நல்லாத் தான் இருக்கு...'' தன்னையே சமாதானமும் செய்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள் சுமதி.

காயத்ரிக்கு அடிவயிறு கலங்கியது... சுமதியைத் தாங்கியிருந்த மணிவயிறு சுருட்டிப் பிடித்து இழுத்தது. 'எம்பொண்ணு வாய்விட்டுக் கேட்கும் அளவிற்கு இப்படி நான் வச்சிட்டேனே? உள்ளுக்குள்ளே கதறி கண்ணீர் வடித்தாள். பிரசவத்திற்கு வந்த பொண்ணை நான் எப்படியெல்லாம் கவனிச்சிருக்கணும்?... குழந்தை பிறந்த உடம்பாச்சே... அதிகமா பசிக்குமே... இப்படி நான் செஞ்சிப்போட்டா, அவ எப்படி சாப்பிடுவா? இந்த சமயத்தில் நல்லது பொல்லாதால்ல நான் செஞ்சிப் போடணும்... கறி, மீனால்ல சமைச்சிப் போடணும்... ஆனா ஒரு வெங்காயத்தை நசுக்கி குடுக்கக் கூட வழியில்லாமல் போய்ட்டேன்.' சுமதி எதார்த்தமாகக் கேட்டிருந்தாலும், பெற்ற வயிறால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை... 'ஐய்யோ கடவுளே இப்படிக் கையாலாகாதவளாகப் போயிட்டேனே... எவ்வளவு நான் சம்பாரிச்சாலும் யாருக்கு லாபம்?... எல்லாம் சாராயக்கடைக்கில்ல போகுது குடுக்கமாட்டேன்னு சொல்லி எங்கிட்டயே இருத்தி வைத்திருந்தேன்னா, வந்தது வரட்



டும்னு நினைச்சிருந்தேன்னா?... எம் புள்ளைக்கிட்ட இருந்து இப்படி ஒரு வார்த்தையை நான் கேக்க வழியில்லாமல் பண்ணியிருப்பேனே?...' மனசு அவளையே குத்திக் காட்டியது...

'உங்கிட்ட எச்சிப்பால குடிச்சி வளர்ந்தவதானே உம் பொண்ணு ஜனனி... அவளுக்கு இருக்கிற தைரியம், மனோபக்குவம் உனக்கிருக்கா?... எத்தனை முறை உங்கிட்ட அவ கெஞ்சியிருப்பா. கதறியிருப்பா... அம்மா, எதிர்த்து பேசம்மா... குனிஞ்சி குனிஞ்சி குட்டுப்படாத... அவரு உன்னக் குட்டியே பழக்கப்பட்டு போயிட்டாரும்மான்னு சொல்லியிருப்பா... ஆனா நான்தானே... போனாப் போகுது போனாப் போகுதுன்னு இழுத்துப் பிடிச்சேன்... அது என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டுச்சே...' யோசிக்க யோசிக்க... குழம்பித் தவித்தாள்... சரியான முடிவுக்கு வரமுடியாமல் தத்தளித்தாள். சாவுற வரைக்கும் எந்த டெசிஷனும் எடுக்க மாட்டோம்னு அவளுக்குள் தோன்றியது. என்னதான் தனக்குத் தானே சமாதானப்படுத்திக்கிட்டாலும், சுமதி கேட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''ஏம்மா கண்ணு கலங்குது?'' என்று கேட்டவளுக்கு,

மனப் புகைச்சலைப் பற்றிச் சொல்லாமல், ''நெருப்புப் புகைச்சல் கண் எரியுது...'' என்று நெருடலாகக் கூறிச் சமாளித்தாள்.

பொதுவா தலைச்சன் பிள்ளைமேல், தாய்க்கும் இளைய பிள்ளை மேல் தகப்பனுக்கும் பாசம் அதிகமாக இருக்குமாம். தலைச்சன் தனக்குத் தாய்மைத் தகுதியைக் கொடுத்ததால், தலைச்சன் பிள்ளை மேல் தாய்க்குப் பெருமை. தன் ஆண்மையை நிரூபித்ததால் கடைக்குட்டி மேல் தகப்பனுக்குப் பெருமை. தனி இருந்தாலும் மூன்றாவதாகப் பிறந்த ஜனனிமேல் தனி அட்டாச்மெண்ட் ஆரம்பத்தில் இருந்தே காயத்ரிக்கு இருந்தது. தன்னோட ஆசையெல்லாம் அவளிடம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற வெறியே இவளுக்கு இருந்தது. தன்னோட

மனசுக்குள் இருப்பதையெல்லாம், ஜனனி வெளிப்படுத்து கிறாள் என்ற நம்பிக்கை இருந்தது. அவளைப் பார்க்கும் போதெல்லாம் குட்டி பாரதியைப் பார்த்த மாதிரி திருப்தி தோன்றும்...அவளிடம் இருந்து வரும் பாரதி பாடல் ஜம் மிங்கை நின்று கேட்பாள்.

**மோகத்தைக் கொன்று விடு - அல்லால்**

**என்றன் மூச்சை நிறுத்தி விடு...** என்று அவள் பாடும் போது படுக்கையறை சிறையாக அவளுக்கு காட்சி தரும்...

**சிந்தனை தெளிவாக்கு - அல்லால்**

**இதை செத்த உடலாக்கு** - என்னும் போது மானசீகமாக தூக்கில் தொங்கிப் பார்ப்பாள்-

**பந்தத்தை நீக்கிவிடு - அல்லால்**

**உயிர் பாரத்தைப் போக்கி விடு** - அவள் கருதி மாறாமல் பாடும் போது... காதைப் பொத்திக் கொண்டு கதறுவாள். இந்த குட்டி பாரதியை, நல்லா உருவாக்கணும்... மனோ எதற்குமே பட்டும் படாமல் இருப்பதால், அவனைப் பற்றி எந்த குறிக்கோளும் அவளிடம் முளைவிடவில்லை.

"அம்மா, மெடிக்கல் காலேஜில் எனக்கு சீட் கிடச்சிடுச்சி..." அவள் புள்ளி மான் போல துள்ளி வந்த போது... வாரி அணைத்து உச்சி முகர்ந்தாள்... குணசீலனுக்குக் கூட பெருமை யாகத் தான் இருந்தது.... காசநோய் வந்து கட்டிலை விட்டு நகராத அளவிற்கு அவனை ஆட்டிப் படைத்த போதும் அந்த திமிர் தனத்தை விடாமலேயே இருந்தான். அவனோட உடலே அவனுக்கு எமனாகி அணு அணுவாக அவனைக் கொன்றது. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டான்.

"காயத்ரி டீச்சர் வீட்ல இருக்காங்களா?" யாரோ வெளியே விசாரிப்பது தெரிந்து எட்டிப் பார்த்தாள் ஜனனி.

"பாப்பா... நான் ஆசிரியர் சங்கத்துல இருந்து வரேன்... அம்மா இருக்காங்களா?"



"இருக்காங்க உள்ள வாங்க." உள்ளே கூட்டிச் சென்றாள்.

குணசீலனுக்கு முகமெல்லாம் எள் வெடித்தது. 'ஒரு ஆம்பள வீட்ல குத்துக்கல்லாட்டம் இருக்கேன்.. என்ன விசாரித் தாம... காயத்ரி டீச்சரைப் பார்க்கணுமா?' வெம்பினான்.

"அம்மா.. உங்க பொண்ணு நம்ம ஸ்கூலிலேயே நிறைய மார்க் எடுத்து இருப்பதால், ஆசிரியர் சங்கத்தில் எல்லாம் பேசி... ஒரு விழா எடுத்து கொஞ்சம் பணமுடிப்பு கொடுக்க லாம்னு இருக்கோம். ஹெட்மாஸ்டர் இத உங்கிட்ட சொல்லி... பாப்பாவையும் உங்களையும் கூட்டிவரச் சொன் னார்.." சொல்லும்போதே அவருக்குப் பெருமையாக இருந்தது.

ஜனனியால் சந்தோஷத்தைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. காயத்ரியின் தோள் பிடித்து தொங்கினாள் குணசீலன் மட்டும் 'உர்' என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்தப் புண்ல சீல் வடியுது.. துடைச்சி விடணும். அம் மாவைக் கூப்பிடு..."

"அம்மா வெளிய போய் இருக்காங்க. அம்மா எப்படி துடச்சி விடுவாங்கன்னு சொல்லுங்க, நான் துடைச்சிவிடு றேன்.." கடமைக்காக கூறினாள்.

வாடை எடுத்து.. மஞ்சள் கலரில் வழிந்த சீழை. மூச்சை அடக்கிக் கொண்டு.. மெல்லத் துடைத்தெடுத்தாள். ஒவ்வொரு நாளும் அம்மா இந்த நாத்தத்தைத் தாங்கி எப்படி முகச்சு ளிக்காம துடைக்கிறாங்க? அப்படிப்பட்ட அம்மாவ. ஏன் கொஞ்சம்கூட இவர் மதிக்கமாட்டேங்றார். கேள்வி எழுந்தது. விடை கிடைக்காமல் முழித்தாள்.

அம்மன் கோவில் படியில் காயத்ரியின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள் ஜனனி.

"ம்மா."

"என்னடா?"

"எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு."



"கோயிலுக்கு வந்ததினாலா?"

"இல்லம்மா. நா படிச்சி, அதுக்குக் கெடச்ச காசிலேயே எனக்கு வளையம் வாங்கிக் கொடுப்பதாக நீயும், அப்பாவும் பேசனதக் கேட்டேன். எப்போ வளையம் போட்டுக்கு வோம்னு தோணுது."

"சரி, ஹாஸ்டல் போனா.. எல்லாரோடையும் நல்லா பழ கணும். மெடிக்கல் காலேஜ் போற, நல்ல டாக்டரா உருவாகணும்."

"கண்டிப்பாம்மா."

இரண்டு நாள்களாக ஜனனிக்குத் தூக்கமே இல்லை. ஒன்று மெடிக்கல் காலேஜ் பற்றிய கனவு. மற்றொன்று பரிசாகக் கிடைக்கப் போகும் தங்க வளையம்.. காலையில் கிளம்பிப் போன குணசீலன் மாலை ஏழு மணியாகியும் திரும்பவே இல்லை. வாசற்படியிலேயே உட்கார்ந்திருந்தாள் ஜனனி. ஊதக்காற்று வேறு. கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு ஒன்பது மணி வரை எதிர்பார்த்தாள். ம் குணசீலன் வரவே யில்லை. பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"அப்பா வந்தா நம்ம வீட்டுக்குத்தானே வருவார், வாக்கா உள்ள" மனோஜ் கையைப் பிடித்து இழுத்தான்.

"நீ போடா."

"வா, உள்ள வா... டாக்டராகங் காட்டியும்.. பனியில உட் கார்ந்து படுத்துக்காத... உள்ள வாக்கா.. நீ வந்தாத்தான் நான் சாப்பிடுவேன்."

மனமில்லாமல் எழுந்து உள்ளே சென்றாள். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள், குணசீலனைக் காணவில்லை. காயத்ரிக்கு ஜனனியைப் பார்க்கவே முடியவில்லை. எல்லாத் துக்குமே எதிர்த்துப் பேசியவள், இந்த மூன்று நாட்களாகச் சரி யாகச் சாப்பிடுவதில்லை. யாரிடமும் பேசுவதில்லை, மௌனச் சாமியார் ஆனாள். விட்டத்தையும், சுவரையும் வெறித்துப் பார்த்தாள்.



ஜனனி சென்னை கிளம்புவதற்கு முதல் நாள் மாலை ஆறு மணிக்கு வந்தான் குணசீலன், வெறுங்கையோடு. நடையில், உடையில், பார்வையில் அப்பட்டமான மாற்றம்.. அலட்சிய மாகக் கைகளை வீசிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

குணசீலனைப் பார்த்ததும் ஓடி வந்தாள் ஜனனி. மனம் சலங்கை கட்டிக் கொண்டு பரத நாட்டியம் ஆடியது.. முகத் தில் பெரிய புன்னகை.

"ம்மா அப்பா வந்திட்டாங்க." பெரியதாகச் சத்தம் போட்டு விட்டு குணசீலன் அருகில் ஓடி வந்தாள்.

"வளையம் வாங்கிட்டீங்களாப்பா?"

"இல்ல."

பலூனில் ஊசி குத்தியது போல் அத்தனை உற்சாகமும் வடிந்தது.

அழுகை வெடித்துச் சிதறியது.. சமையல் ரூமிற்குப் போய் காயத்ரியின் தோளைப் பற்றி அழுத்தி.. குணசீலனை நோக்கிக் கைகாட்டினாள்.

"பொறுமையா இரு" அவளைச் சமாதானம் பண்ணி விட்டு குணசீலனிடம் வந்தாள்.

"என்னங்க.. எப்ப வந்தீங்க?"

"இப்பத்தான்" அவன் குரலே வித்தியாசமாக இருந்தது.

"ஜனனிக்கு... வளையம்?"

"வாங்கல."

"ஏன்."

"பணம் இல்ல."

"பணம் இல்லையா?"

"ஆமாம். போறப்ப ஜலஜா வீட்டிற்கு போயிட்டு போலான்னு போனேன். அங்க அவ பொண்ணு லிப்ஸ்டிக், பவுடர், சென்ட் வாங்க பணம் இல்லன்னு சொன்னாளா? நா இந்தப் பணத்த எடுத்துக் கொடுத்திட்டேன்."

"அடப்பாவி!" விக்கித்து நின்றாள் காயத்ரி.

"வெள்ளி வை குளிக்கணும்..." சொல்லிவிட்டு நகர்ந்தான்.

"அம்மா!" ஓங்கிக் கத்தினாள் ஜனனி.

"இந்தாளுக்கு மனசே இல்லாம கடவுள் படைச்சிட்டானா? "இந்தாளுக்கு மனசே இல்லாம கடவுள் படைச்சிட்டானா? இன்னும் அணு அணுவா இந்தாளு துடிக்கத் துடிக்க சாகணும்" கடைசி வரி குணசீலன் காதுகளில் ஈயம் காய்ச்சி ஊத்தியது போல் விழுந்தது.

"நடிக் கழுத" கையை ஓங்கிக் கொண்டு ஓடி வந்தான்.

ஜனனியின் முடியைக் கொத்தாகப் பற்றி முன்னால் இழுத்து, ஓங்கி ஒரு அறை விட்டான். அவனுடைய ஐந்து விரலும்.. அந்த சிவந்த கன்னத்தில் வார்ப்படம் போல் அச்சாகப் பதிந்து இருந்தது. கரகரவென கண்ணீர் சுழன்றது.

"இனிமே ஏதாவது பேசுன, நாக்க அறுத்துப்புடுவேன்." மிரட்டிவிட்டு.. காயத்ரியைப் பார்த்து துப்பிவிட்டு நகர்ந்தான்.

ஜனனியின் முதுகை ஆதரவாகத் தடவிக் கொடுத்தாள் தாய். "கலங்காதம்மா, கடவுள் இருக்கார், உன்ன நல்ல நிலைமைக்கு படிக்க வைக்க நான் இருக்கேன். நீ எதப் பத்தியும் கவலைப்படாம நாளைக்கு மெட்ராஸ் போ... படிக்கிறத தவிர வேற எதுவும் உம்மனசுல நினைக்கக் கூடாது..." சிவந்து போய் இருந்த கன்னத்தைத் தாங்கிப் பிடித்து, காய்ந்து போய், சொரசொரப்பாய்.. ஜீவன் இழந்திருந்த உதட்டால் முத்தமிட்டாள்.

"காதல், கீதல்ன்னு எதுவும் பண்ணக் கூடாது. எப்போதும் என்னோட ஜனனியாகத்தான் இருக்கணும். நல்ல பிள்ளையா நடந்துக்கோ."

தலையாட்டினாள் ஜனனி.

"நல்ல டாக்டரா வரணும்."

"வருவேம்மா, கண்டிப்பா வருவேன், நான் போட்ற முதல் ஊசி உன்னோட புருசனுக்குத் தான், அதுவும் விஷ ஊசி."



சொல்லிவிட்டு தன்னோட சூட்கேஸில் தன் துணிமணிகளை அடுக்க ஆரம்பித்தாள்.

## 6

சென்னை மெடிக்கல் காலேஜ் வளாகம்.

"எக்ஸ்க்யூஸ் மி மிஸ் ஜனனி."

நின்று திரும்பிப் பார்த்தாள் ஜனனி.

பைனல் இயர் ஸ்டூடண்ட் ரஞ்சித், கையில் ஸ்டெதஸ் கோப், ஒய்ட் சர்ட்டோடு நின்று கொண்டிருந்தான். கருமை படராத ஆரஞ்சு இதழ். அளவாக நறுக்கப்பட்ட அழகான மீசை. ஜனனியைவிட கலர் கொஞ்சம் கம்மி. மீசையை எடுத்துவிட்டு, கலரைக் கொஞ்சம் கூட்டிப் பார்த்தால் இந்தி நடிகர் அமீர்கானின் சாயல் அப்படியே இருந்தது. மென்மையாகச் சிரித்தான்.

"எஸ்."

"பர்ஸனலாக உங்ககிட்டே கொஞ்சம் மூவ் பண்ணலாமா?"

"ஸாரி... நான் யார்கிட்டேயும் பர்சனல் இண்ட்ரஸ்ட் வைத்துக் கொள்வதில்லை."

"நீங்க செகண்ட் இயர் ஸ்டூடண்ட் தானே?"

"எஸ்."

"உங்களுக்குப் பிரண்ட்ஸ் இல்லையா... எப்பவுமே தனியாவே போறீங்க... தனியாவே வரீங்க? ஹாஸ்டலில் கூட ப்ரண்ட்ஸ் இல்லையா?" என்னும்போது மதுஸ்ரீயின் ஞாபகம் மின்னி மறைந்தது.



"மைண்ட் யுவர் ஓன் பிஸினஸ்." முகத்தில் அடித்தார் போல் கூறினாள்.

ரூமில் நுழைந்ததும் ஏதோ எழுதிக் கொண்டிருந்த மதுஸ்ரீ நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

"என்ன எழுதுற?" புக்ஸ், ஸ்டெதஸ் கோப், ஒய்ட் சர்ட் எல்லாவற்றையும் கட்டிலின் மேல் போட்டுவிட்டு ஆடையைக் களைந்தாள். நைட்டியில் தன்னைத் திணித்துக் கொண்டு, திரும்பியபோது, "வீட்டுக்குக் கடிதம்" என்று பதில் சொன்னாள் மதுஸ்ரீ.

"அண்ணிக்கா? அம்மாக்கா?"

"இரண்டு பேருக்குமே தான்."

சுவரை ஒட்டித் திரும்பும்போது, முகம் கழுவி விட்டு டவலால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

"இன்னைக்கு என்ன லேட்?"

"லேப் விட்டு வரதுக்கு லேட்டாயிடுச்சி."

மெடிக்கல் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, படுக்கையில் சாய்ந்தாள் மதுஸ்ரீ. அவள் அருகில் சென்று படுத்தாள் ஜனனி.

"மது."

"ம்."

"நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே?"

"அது நீ சொல்றதப் பொருத்து இருக்கு."

"என்னப் பத்தி எனக்கே மட்டமாத் தோணுது மது."

"ஏண்டா?"

"ப்ளீஸ் மது.. டா போட்டு பேசாத, உரிமையுள்ள இடத்திலத்தான் டா வரும்.. நீ டா போடும் போதெல்லாம்.. உன்னைக் கட்டி புடிச்சிகிட்டு அழணும் போலத் தோணும்.. பாசமாப் பேசிப் பேசி என்ன எதுக்காக சித்ரவதை பண்ற?"



"ஸாரி ஜனனி." எழுந்து உட்கார்ந்தாள் மது. "சொல்லு. ஏன் உனக்கே உன்னைப் பத்தி தப்பான அபிப்ராயம்."

"சின்ன வயசில் நான் ரொம்ப நல்லவளா இருந்தேன். ஆனா இப்போ அப்படி இல்லையோன்னு தோணுது."

"ம் எதவச்சி சொல்ற?"

"அங்க நான் ப்ளஸ்டூ படிக்கிற வரைக்கும், குனிஞ்ச தலைய நிமிர மாட்டேன். யார் முன்னால வராங்க, யார் பின்னால வராங்கன்னு எல்லாம் தெரியாது. க்ளாஸ்ல என்னோட படிக்கிற பொண்ணுங்க, கமெண்ட் பாஸ் பண்ணாலே, அவங்கள எல்லாம் அருவருப்பா பார்ப்பேன். இதெல்லாம் ஜென்மங்களான்னு தோணும். எந்த நேரமும் கத புக்தான், எந்த நேரமும் பாட புக் தான். கதை புக்கே படிக்க மாட்டேன்னு சொல்றவங்கள ரொம்ப இளக்காரமாப் பார்ப்பேன்... நான்தான் ரொம்ப நல்ல பொண்ணுன்னு நினைச்சேன். இப்போல்லாம் நான் அப்படி இல்ல மது."

"இப்பவும் அப்படியே தானே இருக்க?" சந்தேகமாகக் கேட்டாள்.

"இல்ல, நிச்சயமா இல்ல. யாரையும் லவ் பண்ணக் கூடாதுன்னுதான் எங்கம்மா சொல்லி அனுப்புனாங்க. அவங்க விருப்பத்துக்கு மாறாவும் நான் நடந்துக்க மாட்டேன். ஆனா அப்போ ஆம்பளைங்க மேலே இருந்த வெறுப்பு இப்போ இல்ல."

"ஏன்?"

"தெரியல, அழகான ஜென்ஸப் பாத்தா திரும்பிப் பார்க்கணும்னு தோணுது. படத்துல காதல் காட்சி வந்தா கண்ண மூடிக்கிற நான் இப்போ ரசிக்க ஆரம்பிச்சிட்டேன்."

"அதனால என்ன?"

"அடிக்கடி ரஞ்சிதப் பார்க்கணும் போல இருக்கு மது."

"நான் எதிர்பார்த்தேன்."

"தேஜமாவா?"

"என், ரஞ்சித்தோட பார்வை படாதான்னு, இந்த மெடிக்கல் காலேஜில் படிக்கும் எத்தனை பொண்ணுங்க ஏங்கி இருப் பாங்கன்னு.. என்னால லிஸ்ட் போட முடியும். அதே சமயம் அவன் உன்ன விரும்புறான்னும் எனக்குத் தெரியும். பிரின்ஸி யோட பையனாச்சே."

"மது..."

"இது என்ன சிதம்பர ரகசியமா என்ன? பிரின்சிபாலுக்குக் கூடத் தெரியும். அவருக்கு உம்மேல் நல்ல அபிப்ராயம் இருப்பதால், அவர் ரஞ்சித்துக்கு பச்சக் கொடி காட்டிட் டாருன்னும் எனக்குத் தெரியும்."

"ஏய் என்ன சொல்ற?"

"இது அத்தனையும் உம்மேல சத்யமா உண்மை.. நீயா வந்து எங்கிட்ட சொல்லாதவரை.. நானா சொல்றதில்லன்னு என்னைக்கோ முடிவிற்கு வந்துட்டேன். சோ, நான் எதுவும் சொல்லலை."

"நான் ரஞ்சித்த லவ் பண்ணல."

"ஆனா திரும்பிப் பார்க்கனும்னு தோணுது..?"

ஒன்றும் பேசவில்லை ஜனனி.

"லவ் பண்றது ஒன்றும் உலகமகா குற்றம் இல்ல.. தப்பான ஆள லவ் பண்ணாதான் தப்பு.. எனிவே ஆல் த பெஸ்ட்."

"மது என்னோட வீட்டப் பத்தி உங்கிட்டே சொல்லட்டா."

"எங்கிட்டே உனக்குச் சொல்லனும்னு தோனினா, சொல்ல லாம்... ஆனா சொல்லித்தான் ஆகனும் என்று கட்டாயம் இல்லை."

"இல்ல மது உங்கிட்ட.. நான் சொல்லனும்."

"ம்.. சொல்லு..."

முதல் அத்தியாயத்தில் இருந்து தொடங்கி.. அத்தனையை யும் ஒன்று விடாமல் மனப்பாடம் பண்ணியவளைப் போல் ஒப்பித்தாள்.



அவள் சொல்லுவதையெல்லாம் மிகவும் பொறுமையாகவும், அவளுக்கு எப்படி ஆறுதல் சொல்லலாம் என்றும் யோசித்த படியே ஜனனியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுஸ்ரீ.

"எனக்கு எங்கப்பா மேல இருக்கிற ஆத்திரம், வெறுப்பு.. நாளுக்கு நாள் அதிகமாய்கிட்டே இருக்கு மது. எங்க ஊர்ல இருக்கறப்பல்லாம் அவரைக் கொன்னுடுவேனோன்னு எனக்கே பயமா இருக்கு.. அவரைக் கொலை பண்ணிடனும் என்று நினைக்கும்போதே, சந்தோஷமா இருக்கும். ஆனா இப்போ அந்த சந்தோஷம் இல்ல. ஆனாலும் அவர்மேல உள்ள வெறுப்பு கொஞ்சம்கூட குறையல."

"உன்ன நெனச்சா எனக்குப் பாவமா இருக்கு."

"ப்ளீஸ் மது.. என்னைப் பாத்து நீ பரிதாபப்படணுங் கறதுக்காக இதெல்லாம் நான் உங்கிட்ட சொல்லல.. என்னைப் பார்த்து யாரும் பரிதாபப்பட வேண்டாம். என்னோட உணர்ச்சிகளை நீ புரிஞ்சிக்குவேங்கற நம்பிக்கையில. ஒரு வடிகால் தேடிக்கத்தான்.. நானா இத உங்கிட்ட சொல்றேன். என்னோட மனக் கொந்தளிப்ப, சுமைதாங்கியா உன்ன நினைச்சி சொல்றேன்."

"ஸாரி ஜனனி, ஏதோ.."

"எனக்கே தெரியாம ரஞ்சித்த லவ் பண்றோமோன்னு தோணுது."

"நான் ஏதாவது ஹெல்ப் பண்ணனுமா?"

"உன்னால முடியுமா?"

"முடியுமான்னு கேக்கறதை விட்டுடு.. ஒரு வழியில் நான் ரஞ்சித்துக்குத் தூரத்து சொந்தம்."

"தூரத்து சொந்தமா?" ஆச்சரியப்பட்டாள்.

"பயப்படாத... அண்ணா முறைதான் வேணும் ஜனனி நான் ஒண்ணு கேக்கறன்னு தப்பா நினைக்காதே... ரெண்டு வருசமா நல்லாத்தானேடி பேசிக்கிட்டு இருந்த... அப்ப



எல்லாம் ஏன் இத எங்கிட்ட சொல்லனும்னு தோணல.. நம்பிக்கை வரலையா? இப்பத்தான் தோனிச்சா... ஏன் இன்னைக்கு இப்படி மனசுவிட்டு பேசிட்ட?"

"உங்கிட்ட எம் மனசு சொல்லுன்னு சொல்லிச்சி சொல் லிட்டேன். ஐய்யோ இவகிட்டே சொல்லிட்டோமோன்னு எனக்குத் தோணல மது. சரியான ஆளுகிட்டேதான் சுமையை இறக்கி வைத்திருக்கோம்ன்னு சந்தோஷமா இருக்கு."

"ம்."

"நீ சொல்றது எனக்குப் புரியுது மது... ஆனாலும் ஒரே குழப்பம். என்னோட அப்பாவ கொல்லட்டா."

"யார்கிட்டேயும் ஐடியா கேக்காத, உனக்கு சரின்னு பட்டா சரி, தப்புன்னு பட்டா தப்பு."

"அந்த ஆளக் கொன்னாதான்.. நேர்த்திக் கடனை முடிச்ச திருப்தி வரும்."

"அப்ப கொன்னுடு.." சத்தமில்லாமல் சொல்லி விட்டு.. திரும்பிப் படுத்துக் கொண்டாள் மது. தன்னிடம் இருந்து இப்படி ஒரு பதிலை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள் என்று தெரியும். செய்யாதேன்னாத்தான் செய்யத் தோணும்.. தொடாதேன்னாத்தான் தொடத் தோணும். தொட்டுப் பாத்து சுட்டுக்கோன்னும் போது... அவமனசே தடுப்பு சுவர் கண்டிப்பா எழுப்பும். இப்படி எண்ணிக் கொண்டே மெல்லத் தூங்கிப் போனாள்.

## 7

அம்மாகிட்டேயிருந்து அன்று வந்ததும் அப்பா புரா ணம் பாடிய கடிதம்தான் என்றெண்ணும்போது வெறுப்பாக



இருப்பதை உணர்ந்தாள் ஜனனி. 'நான் நல்லா இருக்கேன், அக்கா எல்லாம் வந்தா இல்ல வரல... தம்பி எப்படிப் படிக்கிறான், என்றெல்லாம் எழுதினால் இந்த அம்மாவிற்கு என்ன குறைந்தா போயிடும்? எப்ப பாரு, அப்பாவுக்கு இப்போ உடம்பு சரியில்ல. இப்போ நல்லா இருக்கார். உன்னைப் பார்க்கனும்னு ரொம்ப ஆசைப்படுகிறார். ஒரு தடவை யாவது ஊருக்கு வந்திட்டுப் போம்மா... அப்பா ரொம்பவும் மாறிப் போயிட்டார். இவ்வளவு நல்ல மனுசன் ஏன் இப்படி நடந்துகிட்டார் என்று எண்ணும்போது புதிராக இருக்கு' என்று எழுதுவதையே இரண்டு மூன்று கடிதங்களில் வாடிக் கையான வரிகளாக எழுதியிருந்தாள் காயத்ரி. அதைப் படிக்கும்போது.. கிழித்துப் போட்டுவிடலாமா என்று தோன் றும்.. அம்மாவோட கையெழுத்து என்று நினைக்கும் போது... கிழிக்கும் எண்ணம் வாபஸ் வாங்கிக் கொள்ளும்.

'நான் இப்போ வல்ல. எனக்கு டெஸ்ட் இருக்கு. ப்ராக்டிகல் இருக்கு' என்று ஒவ்வொரு முறையும் மறுத்தே கடிதம் எழுதி வந்தாள். இந்த முறை காயத்ரி மிகவும் வருந்தி வருந்தி அழைத்திருந்தாள். அப்பாவுக்கு மிகவும் சரியில்லாமல் இருக்கு. உன்னைப் பார்க்கனும்னு துடிக்கிறார் என்று வருத் தத்தோடு எழுதியிருந்தாள்.

'சாகட்டும், நான் ஏன் போய்ப் பார்க்கனும். அக்கறையாப் பவுடரும், லிப்ஸ்டிக்கும் வாங்கிக் கொடுத்தார்ல, அவளுங்க வந்து பாக்கட்டும்.. செத்துப் பேயா அலஞ்சி மெடிக்கல் காலேஜ் வரட்டும்... சாமி போட்டோவ பக்கத்துல வச்சி நாம படுத்துக்கலாம்... நெருங்க முடியாம அலறி அடிச்சி ஓட் டும்..' விபரீதமாக எண்ணிப் பார்த்தாள்.

அன்று மாலையே மதுவிடம் அந்தக் கடிதத்தை நீட்டினாள். படித்துப் பார்த்துவிட்டு.. திரும்ப அவளிடமே திணித்தாள் மது.

"என்ன ஒண்ணும் பேசமாட்டேங்கற?"

''என்ன பண்ணச் சொல்ற?''

''ஒரு ஐடியா சொல்லு...''

ஜனனியை உற்றுப் பார்த்துவிட்டு, ''ஊருக்குப் போய்ட்டு வா...''

''அவரைப் பார்க்க எனக்குப் புடிக்கல.''

''உங்கம்மாவப் பார்த்துட்டு வா.''

''கோயிலுக்குப் பக்கத்திலேயே சுடுகாடு இருக்கற மாதிரி... அவரு கூடயே இருப்பாரே...''

''கொல பண்ணனும்.. கொல பண்ணனும்னு சொல்லிகிட்டு இருப்பியே.. போய் அத செஞ்சிடேன்.''

''எப்படி?''

''ஊசி போட்டு!''

''கொலை பண்ணித்தான் ஆகணுமா?''

உள்ளுக்குள் சிரித்தாள் மது. ''தடுமாற ஆரம்பிச்ச இல்ல ரொம்ப சந்தோசம்.''

சங்கடமாக நெளிந்தாள் ஜனனி.

''உங்கிட்ட உரிமையிருக்குங்கற நம்பிக்கையில தான் சொல்றேன்.. உங்கப்பாவ நீ கொன்னுடுறதனால யாருக்கு லாபம்?''

''எனக்குத் திருப்தி.. அவரை நினைக்கும்போது, பார்க்கும்போது எங்கம்மா வயத்துல எட்டி உதச்சது, கைல சூடு வச்சது.. ப்ளேட்ட தூக்கி அடிச்சதெல்லாம் கண நேரத்துல மனசு எண்ணிப் பார்த்துடுது. அதனால அவர் மேல எனக்கு ஒரு நல்ல அபிப்ராயமே வரமாட்டேங்குது. ஏன் வரவே வராது. என்னால அவரை எப்படி ஃபேஸ் பண்ண முடியும். இன்னைக்கு அவர் நல்லவராவே இருக்கலாம். ஆனால் என்னால ஒத்துக்க முடியாது. அவரைப் பாக்கறப்பல்லாம் ஓடிப் போய் கத்தியால குத்தணும்னு தோணுதே தவிர... அப்பான்னு பாசத்தோட ஓடி கழுத்தைக் கட்டிகிட்டு தொங்கணும்னு தோணவே இல்லை.''



''பின்பு நானும் உங்கூட வரட்டா...''

''நீயா?''

''ஆமா, ஏன் என்னைக் கூட்டிக்கிட்டுப் போகமாட்டியா?''

''நாங்க ஏழை.''

''நீ என்னோட ப்ரண்டு...''

''அந்த ஊரும், எங்க வீடும் உனக்குப் பிடிக்குமா?''

''உன்னைப் பிடிச்சிருக்கே. உங்க வீடும் பிடிக்கும், உங்க ஊரும் பிடிக்கும், உங்க அப்பாவையும் பிடிக்கும்.''

''ஏய்.''

''உங்கப்பா இப்படி வில்லனா இல்லாட்டி, மனசு விட்டு பேசணும்னு மதுன்னு நீ வந்திருப்பியா என்ன? ஏய், காலையிலேயே உங்கிட்ட சொல்லணும்னு நினைச்சேன். ஆனா மறந்தே போயிட்டேன். உனக்கு ஒரு குட் நியூஸ்.''

''குட் நியூஸா?''

''எஸ், மேடம்.. இந்த மகாராணி ஜனனிய, ரஞ்சித்ங்கற மகாராஜா சந்திக்கணுமாம். அடையார் உட்லண்ட்ஸ்க்குப் போறியா...''

''போயி...''

''ஆங்... டேயட்டா பாடச் சொல்றேன். ரெண்டு பேரும் பேசி ஒரு முடிவுக்கு வாங்க.''

''எனக்குப் பயமா இருக்கு.. அம்மாவ நினைச்சா கஷ்டமாவும் இருக்கு.''

''ஏய்... இந்தக் காதலுக்குத் தூது போயெல்லாம் எனக்குப் பழக்கம் இல்ல. இன்னும் சொல்லணும்னா.. அடுத்தவங்க காதலிச்சா என்க்ரேஜ் பண்ணுவேன். என்னைப் பொறுத்தவரை மூச்... ஏதோ ரஞ்சித் தூரத்துச் சொந்தம்.. நீ ஃப்ரண்ட் அதனாலதான்.. ப்ளீஸ் மது ஜனனிகிட்ட எப்படியாவது கன்வின்ஸ் பண்ணி வரச் சொல்லுன்னு கேட்டப்ப பேசாம தலையாட்





டிட்டு வந்தேன். ஈவினிங் சிக்ஸ் ஓ க்ளாக் அடையார் உட்லண்ட்ஸ். போறதும் போகாததும் உன் விருப்பம்.. மெசேஜ் பாஸ் பண்ணிட்டேன். தட்ஸ் ஆல்.''

ஓட்டல் வாசலில் மெதுவாக அவள் அருகில் யமஹாவை ஆஃப் பண்ணாமல் கொண்டு வந்து நிறுத்தினான்.

''நான் எதிர்பார்க்கவே இல்லை.''

தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

''உங்ககிட்டே இங்க நான் பேச விரும்பல. வேற எடத்துக்குப் போகலாம். உட்காருங்க!''

தயக்கமாகவும் வேறு வழியில்லாமலும் அவன் பின்னால் தொற்றிக் கொண்டாள். மௌனமாகவே சீரான வேகத்தில் யமஹாவை ஓட விட்டான். கணபதிராம் தியேட்டரைத் தாண்டியபோதுதான், எங்கே கூட்டிக்கிட்டுப் போகிறான் என்ற கேள்வி எழுந்தது. ஆனாலும் கேட்கவில்லை, அவனோடு போகும் இந்த ஸ்கூட்டர் பயணம் இனிமையாக வானத்தில் பறப்பது போல் இருந்தது.

பெரிய பாளையத்தம்மன் கோயில் வாசலில் யமஹாவை ஆஃப் செய்தான்.

படக்கென்று ஜனனி இறங்கிக் கொண்டாள்.

தேங்காய், பழம், பூ.. எல்லாம் வாங்கிக் கொண்டான். ஷூவைக் கழற்றி அதற்கு டோக்கனையும் பெற்றுக்கொண்டு, அவளிடம் திரும்பி ''உள்ளே வா'' என்று ஒருமையில் விளித்தான்.

அவன் கோவிலுக்குக் கூட்டி வந்தபோதே கோபுரமாக அவள் மனதில் அவன் உயர்ந்து விட்டான் என்பது அவனுக்குத் தெரியாது.

அர்ச்சனை முடிந்து பழத்தட்டை வாங்கிக் கொண்டு, அருகே வெறுமையாக இருந்த இடத்தில் ஹேண்ட் கர்ச்சிப்பைக் கீழே போட்டு, அதன் மேல் உட்கார்ந்தான்.



''ம்.. உட்கார்.''

உட்கார்ந்தாள்.

''எங்க குடும்பத்த பத்தி.''

''நல்லாத் தெரியும், எல்லாத்தையுமே மது சொல்லிட்டா''

''எங்கப்பாவ பத்தி...''

''ஓ அதுகூடத் தெரியும்... கோயில்ல பேசக்கூடாது இருந்தாலும் சொல்றேன். உங்கப்பாவைக் கொலை பண்ணணும் என்று நீ நினைச்சதுகூட தெரியும். மது எங்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டாளேன்னு தப்பா நினைக்காதே. அவ ரொம்ப ஃபிராங்க், இத்தனையும் சொல்லிட்டு, ஜனனி என்னைப் பொறுத்தவரை தங்கமானவ, உங்களுக்கே தெரியாதா? அவ மனசுக்குள் இருக்கும் வெறுப்பு ஒரு சின்ன சைக்காலஜி ப்ராப்ளம்தான் ரஞ்சித். நினைச்சா கூடிய சீக்கிரம் அதையும் ரிமூவ் பண்ண முடியும்னு. ரொம்ப கான்பிடன்டாச் சொன்னா... அவ சொல்லித்தான் உன்னை எனக்குத் தெரியும் என்பதில்லை... ஆரம்பத்திலேயே உன்னோட ஹேபிட் எனக்குப் பிடிச்சுப் போச்சு... என்ன நானே பேசிகிட்டு இருக்கேன். நீ ஒன்றுமே பேச மாட்டேங்கற? ஏதாவது பேசு...''

அது கோயில் என்பதையும் மறந்து.. அவன் கைகளைப் பற்றி மென்மையாக அழுத்தினாள். ''ஐ லவ் யூ வெரி மச்.'' உதடு விரிந்து மூடியது. அப்பாவை உதாரணமாக வைத்து ஆண்களையே வெறுத்த அவள் உள்ளம் அவனைத் தலைமேல் வைத்து ஆராதித்தது.

''சோ, கமிங் ஸண்டே, உங்க ஊருக்கு நான், நீ, என்னோடாடி, மது வந்தால் மது எல்லோரும் போறோம் என்ன சொல்றே?'' என்றான்.

''சரி.'' என்று தலையசைத்தாள்.

## 8

அந்த வீடே மயான நிசப்தத்தில் இருந்தது. குணசீலன் அந்தக் கயிற்றுக் கட்டிலின் நடுவில் அமர்ந்திருந்தான், தலை கலைந்து கிடந்தது. காயத்ரி ஓரமாக நின்று கொண்டிருந்தாள். கட்டிலுக்கு நேராகக் கிடந்த இரண்டு சேரில் ரஞ்சித்தும், அவன் அப்பா ப்ரின்ஸிபால் கோபிநாத்தும் அமர்ந்திருந்தார்கள்.

சமையல் கட்டுக்குப் பக்கத்தில் உள்ள கதவுக்கு அருகில் ஜனனியும் மதுவும் அதைப் பிடித்தபடியே நின்றார்கள்.

மனோஜ் கூல்ட்ரிங் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். உடைத்து, புன்சிரிப்போடு நீட்டினான்.

''ஜனனி கொஞ்சம் உள்ள வரியா?'' காயத்ரி சொல்லி விட்டு சமையல் அறைக்குள் நுழைந்தாள். பின்னாலேயே ஜனனி உள்ளே நுழைந்தாள்.

''என்னம்மா இதெல்லாம்?''

தலையைக் குனிந்து கொண்டாள்.

''மொதல்ல நிமிர்ந்து பார். என்ன இதெல்லாம்? உன்ன நான் எதுக்கு மெட்ராஸ் அனுப்பினேன்?... நீ என்ன பண்ணிட்டு வந்திருக்க?''

''அவங்க நல்லவங்கம்மா.''

''பேசாதடி.. ஆம்பளைங்களையே புடிக்கல.. பாத்தாவே ஆத்திரமா வருதுன்னு புலம்பிட்டு, சாமியாராப் போறேன், சன்யாசியா போறேன்னு சொல்லிட்டு, எவனோ ஒருத்தனக் காதலிக்கிறேன்னு சொல்லுறியே, தெரிஞ்சுதான் பேசறியா? நல்லவனா, கெட்டவனான்னு பெரியவங்க பாத்து வைக்கிற கல்யாணமே புதிராப் போயிடுது.. நீ என்னன்னா?''



''நல்ல எழுத்து தலையில இருந்தா காதலிச்சா என்ன, பெரியவங்க பார்த்தா என்ன? வாழ்க்கை நல்லாத்தான் இருக்கும்.''

''உங்கப்பா சம்மதிக்க வேண்டாமா?''

''என்னைப் பொறுத்தவரை தேவையில்லாத விஷயம். அவரு உண்மையிலேயே திருந்திக்கூட இருக்கலாம். ஆனா என்னால அவருகிட்ட சம்மதம் கேட்க முடியாது.''

''எத வச்சிடி இந்தப் பையனை நம்புற?''

''நல்ல மனசு இருக்கு. அது எனக்கு நல்லாத் தெரியும். அடுத்தவங்களை மதிக்கிற குணம் இருக்கு. நிச்சயமா உன்னோட புருசன் போல இல்லை.''

''வாய மூடுடி கழுத. ஆயிரம்தான் இருந்தாலும் அவர் உங்கப்பா.''

''வேற ஏதாவது பேசும்மா.''

''கல்யாணம் பண்ணிக் குடுக்க எடுபடாம, இவன நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறேன்னு, அவ பொண்ணு கையைக் காட்டியதும் தலையை ஆட்டிட்டாளாம் காயத்ரி டீச்சர்னு என்ன ஊர்ல காறித் துப்ப வைக்கப் போற அல்லவளவுதானே?''

''ப்ளீஸ்ம்மா என்னைப் புரிஞ்சுக்கோ, கையைக் காட்டியவனை கட்டிக்கோன்னு சொல்லவும் மனசு வேணும். அது உங்கிட்டே இருக்கு. உன்னைப் போல கோழையாவோ, பத்தாம் பசலித்தனமாவோ நான் இருக்க மாட்டேன். மூலையில முடங்கிக் கிடக்க மாட்டேன். என்ன வந்தாலும் சமாளிக்கணும் என்கிற திடமே உன்னப் பாத்துப் பாத்துதான் எனக்கு வந்தது. அம்மா போல கோழையா இருக்கக் கூடாது. அம்மா போல கோழையா இருக்கக்கூடாதுன்னு ஸ்ரீராமஜெயம் சொல்ற மாதிரி சொல்லிக் கொண்டிருந்தேன்'' புலம்பினாள் ஜனனி.



''அம்மா, அப்பா உன்னைக் கூப்பிடுறார்'' மனோஜ் வந்து அழைத்தான். ''சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

''காயத்ரி, அந்த பழத் தட்ட அம்மனை நினைச்சி வாங்கிக்க.''

ரஞ்சித்தின் தந்தை எழுந்து பழத் தட்டை நீட்டினார்.

என்ன முடிவு எடுத்தார்கள் என்று தெரியாமல் நடுங்கும் கரங்களோடு பழத்தட்டைப் பெற்றுக் கொண்டாள்.

''காயத்ரி, நம்ம ஜனனிய இவங்க பையனுக்குக் கொடுக்கறதா முடிவு பண்ணிட்டேன். வர்ற தை மாசம் கல்யாணத்தப் பண்ணிடுவோம். வேற ஜாதிதான். ஆனா ஜனனி அந்தப் பையன விரும்புறாளாம். அதனாலதான் ஏத்துக்கிட்டேன். ஏன்னா இந்தப் புள்ளைக்குன்னு நான் எதையும் செஞ்சதில்ல பாரு. நான் சாவறதுக்குள்ள, அவ விருப்பத்துக்கு இந்த நல்லது ஒன்னையாவது செஞ்சிப் பார்க்கணும்னு ஆசைப்படுறேன். இதுவரைக்கும் உன்னோட விருப்பத்த நான் கேட்டதில்ல காயத்ரி.. மன்னிச்சிக்கோ, இதுக்கும் நான் உங்கிட்ட கேட்கப் போறதில்ல... வர்ற தை மாசத்தில கல்யாணத்தப் பண்ணிடுவோம். அதுக்குப் பிறகு அவ எப்பையும் போல் காலேஜ் போகட்டும்.'' கலங்காத அவன் கண்கள் கலங்கியது...

காயத்ரிக்கு நெஞ்சை யாரோ பிடித்துப் பிசைவது போல் இருந்தது. ஓடிப்போய் புருஷனின் முகவாயை மார்போடு தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்தது... கட்டுப் படுத்திக் கொண்டாள்.

''ரொம்ப சந்தோஷங்க.'' கை கூப்பினார் ரஞ்சித்தின் தகப்பனார். எழ முடியாமல் எழுந்து நின்று பதிலுக்கு கை கூப்பினான் குணசீலன்.

''அப்போ நாங்க வரட்டுங்களா?''



''இவ்வளவு சீக்கிரம் இப்படி ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கல..'' உணர்ச்சி வசப்பட்டு தடுமாறினான்.

''ஜனனீ எங்களோட வரியா? இல்ல ரெண்டு நாள் இருந்திட்டு வரியா?'' மது கேட்டாள்.

''நாளைக்கு எக்ஸாம் இருக்கே! நானும் வரேன்.'' காயத்ரி பக்கம் திரும்பி...'' என்ன மன்னிச்சிக்கோம்மா.. நான் தப்பு பண்ண மாட்டேன். நானும் இவங்களோட போகட்டா.''

''போய்ட்டு வாடா... உம்மேல நம்பிக்கை இருக்கு.'' தலையைக் கோதி விட்டாள். ''அப்பாட்ட சொல்லிட்டுப் போ.''

''மாட்டேன். அவரைப் பார்க்கவே எனக்குப் புடிக்கல.'' வெறுப்போடு பேசினாள்.

''கட்டாயப்படுத்தாத காயத்ரி, அவளுக்கு என்னைக்குத் தோணுதோ அன்னைக்குச் சொல்லட்டும். ஜனனீ இந்த அப்பாவ உனக்குப் புடிக்கலையாமா?''

''புடிக்கல.''

''நான் வேண்டாமா?''

''வேண்டாம்'' முகத்தில் அடித்தாற் போல் பதில் சொன்னாள். ரஞ்சித்திற்கு என்னவோ போல் ஆகிவிட்டது. இருந்தாலும் மது சொன்னது அத்தனையும் நினைவிற்கு வந்தது. 'இது சின்ன ப்ராப்ளம் தான், நிச்சயம் ஜனனி மாறுவா.'

காயத்ரியிடமும், மனோவிடமும் பிரிய முடியாமல் விடை பெற்றுக் கொண்டு சூட்கேஸைக் கையில் எடுத்த ஜனனியை, ஆர்வத்தோடு எதிர்பார்த்தான் குணசீலன். திரும்பிக் கூடப் பார்க்காமல் வெளியே நின்ற காரை நோக்கிப் போனாள். அவள் பின்னாடியே ரஞ்சித்தும் பிரின்சிபாலும் வந்தார்கள்.

சிறிது நேரம் யோசித்த மதுஸ்ரீ, குணசீலன் பக்கத்தில் வந்து அவன் தளர்ந்த கைகளை தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு, ''ஜனனி நல்லவ ஸார். சின்ன வயசில நீங்க பண்ண

தப்பு, அவ மனசுல ஆழமா பதிஞ்சி போச்சி. அந்த வடு மாற ரொம்ப நாளாகும். அப்போ அவளுக்கு உங்க மேல இருந்த வெறுப்பு இப்போ இல்ல, மாறுவா. காத்திருங்க.''

பேச முடியாமல், மதுவின் கைகளைப் பற்றி காத்திருக் கிறேன் என்பதுபோல் அழுத்தம் கொடுத்தான். அதுவே அவன் தவறை உணர்ந்தவன் என்பதையும், ஏக்கத்தையும், இயலாமையையும் மதுவிற்கு உணர்த்தியது.

''பத்திரமா பார்த்துக்கோம்மா.''

சந்தோஷமாக தலையசைத்தாள்.

மது காருக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்டதும் கார் சீரான வேகம் எடுத்தது. ஜனனி கர்ச்சீப்பால் கண்களை இறுக்கிக் கொண்டிருந்தாள். 'அப்பா பாவமோ?' மெல்ல மெல்ல எட்டிப் பார்த்தது அந்த எண்ணம். மதுவின் மடியில் தலை கவிழ்ந்தாள்.

காயத்ரியும், குணசீலனும் வாசல்படியில் நின்று கைகளை ஆட்டினர். கார் கொஞ்சம் கொஞ்சமாக சிறு புள்ளியாகிப் போனது. ''ஜனனி என்னைப் போலவே இல்ல?'' கேட்ட குண சீலனைப் பரிதாபமாகப் பார்த்தாள் காயத்ரி.